
# ஒரு பூவின் நிழல்!!




**-நிவேதா ஜெயாநந்தன்.**

# அத்தியாயம் - 1

"நமக்கு என்னக் கல்யாணமாகி 10 வருஷமா ஆயிடுச்சு?,1 வருஷம் தானடி முடிஞ்சிருக்கு?,அதுக்குள்ள ஏன் குழந்தை வரலன்னு இவ்ளோ ஃபீல் பண்ற?" - முழு எரிச்சலுடன் அவன்! "ஆறு மாசமா ட்ரை பண்ணியும் ஏன் டா செட் ஆகல?" -பாவமா நான்! "ஒரு மாசத்துல குழந்தை உண்டாகுறதுக்கான சக்ஸஸ் ரேட் வெறும் 10% தான்! கூகுள் கிட்டக் கேளு! ப்ச்!, நீ சரிப்பட மாட்ட! நான் பாண்டிச்சேரி ப்ளான் பண்ணிட்டேன்! ஹோட்டல்,பஸ் டிக்கெட்ன்னு எல்லாம் ரெடி! ட்ரிப் போறோம்! எஞ்சாய் பண்றோம்!- குஷியோட சொன்னவனோட சந்தோசம் எனக்கும் ஒட்டிக்கிச்சு! சரின்னு தலையாட்டி, "கிளம்புறதுக்கு முன்னாடி ஒரு தடவை செக் பண்ணுவோமாடா?, இந்த தடவை 35 டேஸ் க்ராஸ் பண்ணிடுச்சு" -தயங்கி நான் சொன்னதும் அவனும் ஒத்துக்கிட்டான்! ஆறு மாசமா, மாசம் தவறாம செக் பண்ணி ஏமாந்து போறது தான்! அன்னைக்குக் காலைல ப்ரெக்-கார்டோட பாத்ரூமில் நான்! ரெண்டு நிமிஷத்துல அவன் கைல கொடுத்துட்டு மறுபடி உள்ளேயே செட்டில் ஆயிட்டேன்! எப்படியும் நெகட்டிவா தான் வரும்ன்னு நினைச்சு எரிச்சலோட நான் கதவைத் திறந்தப்போ மகிழ்ச்சி,பதற்றம் நிறைஞ்சக் கலவர முகத்தோட அவன்! "இந்தத் தடவை பாசிட்டிவ் போலடி! ரெண்டு கோடு வந்துடுச்சு"-அவன் சொன்னப்போ சந்தோசம்,பயம் எல்லாம் கலந்தக் கலவை உணர்ச்சி எனக்குள்ள! அடுத்த ஒரு மணி நேரத்துல டாக்டர் முன்னாடி நாங்க! இப்போ எதுவும் சொல்ல முடியாது, 1 வீக் அப்பறம் வாங்க,ஸ்கேன் பண்ணிக் கன்ஃபார்ம் பண்ணுறோம்ன்னு அனுப்பிட்டாங்க! ட்ரிப் கேன்சல்ட்! ஒன் வீக் ரெண்டு பேரும் பெருசா எக்ஸைட் ஆயிடாம, அமைதியா நாளைக் கடத்துனோம்! ஒன் வீக் முடிஞ்சது! ஸ்கேன் பார்க்குற இடத்துலக் கண்ணை மூடி இறந்து போன எங்கப்பாவைக் கும்பிட்டிட்டு இருந்தேன்! "Yes, I can see the sac" -ன்னு டாக்டர் சொன்னதும் "வாஆஆவ்வ்வ்" -ன்னு கத்துன எனக்கு அவ்ளோ அழுகை! ரிலேக்ஸ் நிவேதா-ன்னு சொன்ன டாக்டர்க்கும் ரொம்பவும் சந்தோசம்! என் ஹஸ்பண்டைக் கூப்பிடுங்க ப்ளீஸ்ன்னு சொன்னதும், அவனும் வந்தான்! அவன் கிட்டயும் விசயத்தைச் சொல்லி கம்ப்யூட்டரைக் காட்டுனாங்க! உள்ளே என்ன தெரிஞ்சதுன்னு கேட்டா, இப்போ வரைக்கும் எங்களுக்குத் தெரியாது! நான் கம்ப்யூட்டரைப் பார்க்கல! அவனைத் தான் பார்த்தேன்! அவன் கண்ணு ஃபுல்லா தண்ணி தேங்கி நின்னது! அதைத் தாண்டி ஒரு சிரிப்பு! அந்த முகத்தை வாழ்நாள் முழுக்க மறக்கவே மாட்டேன்! நான் வெளிய வரும் போது சமாளிச்சுக்கிட்டான்! என்னைப் பார்த்ததும் "என்ன நிவேதா, அம்மா ஆயிட்டீங்க போல!" - அப்படின்னான்! "ஹாப்பியா டாடி?"-ன்னு நான் கேட்டதுக்கு பதில் சொல்லாம சிரிச்சான்!

வார்த்தைகளால வரையறுக்க முடியாத ஆயிரம்,லட்சம்,கோடி சந்தோஷம் அவன் முகத்துல தெரிஞ்சது!

ஒரு பூவின் நிழல்..........

**“நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொன்னும் தான்..**

**பேரு விளங்க இங்கு வாழனும்..”**

**ஜா**தி,மதம்,ஏழை,பணக்காரன்,உயர்ந்தோர்,தாழ்ந்தோர் என்கிற பெயரில் இத்தாய்த் தமிழ்நாட்டை வேற்றுமைகள் பல சூழ்ந்திருந்தாலும், நம் மக்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் விதமாக, பாரபட்சம் பார்க்காமல் வழி,வழியாக அனைத்துத் தரப்பு மக்களும் கடைபிடிக்கும் பழக்கம் ஒன்றுண்டு! அது என்னவெனில்.. நம் தமிழ்நாட்டுத் திருமணங்கள் அத்தனையிலும் விடாது ஒலித்து நம் காதுகளைக் களைப்படையச் செய்யும் மேற்கூரியப் பாடல் வரிகள் தான்! என்ன தான் காலம் மாறி,மக்களின் ரசனையில் புதுமை புகுந்திருந்தாலும், இன்றும் கூடப் பல திருமணங்களில் பெண் அழைப்பின் போது “வாராயோ தோழி,வாராயோ” என்ற பாடலும், திருமணத்தன்று “நூறு வருஷம்” என்றப் பாடலையும் ஒலிக்கச் சொல்லிக் கேட்டுத் தொந்தரவு செய்ய ஒரு கூட்டமே உள்ளதென்பதை மறுக்க முடியாது!

அப்பேர்ப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பாடலை ஒலிக்க விட்டிருந்த அந்தத் திருமண மண்டபம் முழுதிலும் வழக்கமான பரபரப்பு நிறைந்திருந்தது. கால் காசுக்குப் பிரயோஜனமில்லாவிட்டாலும், நானில்லையெனில் இந்தத் திருமணமே நடக்காது என்ற ரீதியில் அங்குமிங்கும் கெத்து குறையாமல் நடமாடிக் கொண்டிருக்கும் 4 பெருசுகள்! திருமணம் எந்தக் குறையுமின்றி நடந்து முடிந்திட வேண்டுமென்கிற டென்ஷனுடன் மணமக்களின் குடும்பத்தார்! மேடை அலங்காரத்தில் செருகப்பட்டிருக்கும் பூவைப் பிடுங்குவதற்காகவே வருகை தந்திருப்பதைப் போல் மேடையை மட்டுமேச் சுற்றி ஓடும் குட்டிப் பிசாசுகள்! அந்த ராமன் வளைத்த வில் கூட இத்தனை முறுக்குடன் இருந்திருக்காது! ஆனால் இந்தக் காளையர்கள் வளைக்க நினைக்கும் கன்னியரிடம் தான் எத்தனை விறைப்பு! பல்வகைப்பட்ட மனிதர்களை ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் குழுமச் செய்யும் சிறப்பு திருமணங்களுக்கு மட்டுமே உண்டு!

**மெ**ட்ராசுக்கே உரித்தான மே மாத வெயில் அம்மண்டபத்திலும் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்க, நெற்றியில் வழிந்தோடிய வியர்வையைத் தன் வெண்பட்டுச் சட்டையில் துடைத்தபடிக் கையிலிருந்தக் கூடையிலிருந்து ஒவ்வொரு ஜிலேபியாக

எடுத்துப் பந்தியில் அமர்ந்திருந்தவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தான் வெற்றி என்கிற வெற்றிச் செல்வன்.

“மாமா.. எனக்கு இன்னொரு ஜிலேபி வைங்க..”

வரிசையாக வைத்தபடி நகர்ந்து கொண்டிருந்தவன் அச்சிறுமியின் குரலில் நின்று சிரித்து “உனக்கு இல்லாததா பாப்பா?, எத்தனை வேணும்?, ஒன்னா?,ரெண்டா? இந்தா வாங்கிக்க!” என்றபடி கை நிறைய ஜிலேபிகளை அள்ளி அவள் இலையில் வைத்தான்.

“நீ இந்தக் கூடையவேக் கேட்டாலும் கொடுப்பான்டி இவன்! ஏன்னா.. இந்த சுத்துவட்டாரத்துலேயே இவனை மாமான்னு கூப்பிட்ட ஒரே பொன்னு நீ தான்! அந்த சந்தோசத்துலயே அள்ளிக் கொடுப்பான்!

சிரிப்புடன் சிறுமியை நோக்கிக் கொண்டிருந்தவன், எதிர்வரிசையிலிருந்து வந்த நக்கல் குரலைக் கேட்டுக் கடுப்புடன் திரும்பினான்.

அவன் வீட்டுக்கு எதிர்வீட்டில் குடியிருக்கும் மாலதி அமர்ந்திருந்தாள்! வாயில் ஜிலேபியை அடைத்தபடி!

“இப்போ இன்னாத்துக்கு என்னைய வம்பிழுக்கிற?” - வெற்றி

“ஆமா! இவரு பெரிய ஆணழகன்! இவரை நாங்க வம்பிழுத்திட்டாலும்! உண்மையைத் தான சொன்னேன்!, இந்த ஏரியாவுல வேற எவ உன்னை மாமான்னு கூப்பிடப் போறா?”

“அது என் பிரச்சனை!, நீ ஏன் அநாவசியமா பேசுற?”

“அப்டித் தான் டா பேசுவேன்! போன வாரம் என் தங்கச்சிக் கையப் புடிச்சு இழுத்து ‘நீ உங்கக்கா மாறி இல்ல! ரொம்ப அழகுன்னு சொன்னயாமா?, எவ்ளோ திமிரு இருக்கனும் உனக்கு?”

“அதை உன்ட்ட அப்டியே வந்து சொல்லிட்டாளாக்கும்! உன் தங்கச்சி உன்னை மாறி இல்ல மாலதி! பெரிய லூசு!” - நக்கலுடன் அவன்.

“டேய்.... வெறி ஆயிருவேன் நானு!”

“ஏய், இப்போ என்னான்ற?, உன் மூஞ்சியை விட உன் தங்கச்சி மூஞ்சி அழகா இருந்தா, அழகா இருக்குன்னு சொல்லத் தான் செய்வாங்க! இதுல உனக்கென்ன காண்டு?”

“அடேய்!!!!!!” என்று பொங்கிய மாலதி “ராசி கெட்டவனே! நீ எப்பேர்ப்பட்ட அழகனா இருந்தாலும், எவளும் உன்னைத் திரும்பிப் பார்க்க மாட்டா! நீ சைட் அடிச்சாக் கூட குஷ்டம் வந்துடும்ன்னு நம்ம ஏரியாப் பொன்னுங்க உன்னைக் கண்டாலே ஓடுறாளுக! நீ.. நீ.. என் தங்கச்சியைப் பார்த்து அழகா இருக்கன்னு சொல்லுவியா?, நீ தொட்டதால, நாளைக்கே அவளுக்குக் கை,கால் விளங்காம போயிட்டா, என்னடா பண்ணுவ?” - என்று கத்தத் துவங்க.. அது வரை அவளை வம்பு செய்யும் நோக்கத்துடன் மட்டுமே உரையாடிக் கொண்டிருந்தவன், முகம் மாறக் கடுங்கோபத்தில் கொதித்தெழுந்து விட்டான்.

“அடிங்*********! யாரைப் பார்த்து இன்னாடி சொன்ன?” என்று இண்ஸ்டண்டாகக் கெட்ட வார்த்தையை உதிர்த்தவன் அவளை அடிக்கக் கை ஓங்க.. “டேய்,வெற்றி,” என்றபடி ஓடி வந்துத் தடுத்தான் அவனது நண்பன் கதிர்.

“கைய விட்றா! ஒரே அறைல இவ வாயை ஒடைச்சு மூஞ்சியப் பேக்கல, என் பேரு வெற்றி இல்ல! இன்னாடி சொன்ன?, என் கைப்பட்டா, உன் தங்கச்சிக்குக் கை,கால் விளங்காம போயிடுமா!, இப்ப நான் அடிக்கிற அடில உனக்குப் பக்கவாதம் கன்ஃபார்ம்டி!” என்றபடி மீண்டும் பாய்ந்தவனை இழுத்து நிறுத்திய கதிர் “டேய்... டேய்... இப்போ இவ கூட சண்டை போடுறது ரொம்ப முக்கியமா?” என்று எரிச்சலுடன் வினவினான்.

அவன் இழுத்ததில் விலகியிருந்த சட்டைக் காலரை சரி செய்தவன் “இன்னாப் பேச்சுப் பேசுறா பார்த்தியாடா?, நான்.. நான் ராசிகெட்டவனாம்! என் கைப்பட்டாலேக் குஷ்டம் வந்துடும்ன்னு சொல்றாடா மாப்ள!” என்று மீண்டும் பொங்க..

“சரி, விட்றா மச்சி! உண்மையைத் தான சொல்லுச்சு அது?” என்றவனைப் பல்லைக் கடித்து முறைத்தவன் காது கூசுமளவிற்குச் சில,பலக் கெட்ட வார்த்தைகளை அவனை நோக்கி உச்சரிக்க... “டேய்,விட்றா,விட்றா!” என்ற கதிர் “ஏய் அவளை விடுடா!, நம்ம அறிவு இப்போ பெரிய பிரச்சனைல மாட்டிருக்கான் டா மாப்ள!, முதல்ல வா கீழே போவோம்” என்று அவனை அழைத்துக் கொண்டு சென்றான்.

கோபம் மாறாத முகத்துடன் மாலதியைத் திரும்பி நோக்கியவன் “உன் தங்கச்சிய என் கண்ல படாம வச்சுக்கடி! என் கண் முன்னாடி, அவ வந்தான்னா.. தூக்கிட்டுப்

போய் ரேப் பண்ணிடுவேன்!" என்று உறுமி விட்டுச் செல்ல... "அடேய்.... ********" என்று கத்திய மாலதியின் வாயிலும் நாக்கூசும் கெட்ட வார்த்தைகள்!

"என்னாவாம் டா அவனுக்கு?, என்னப் பிரச்சனை?, எதுவாயிருந்தாலும் கல்யாணம் முடிஞ்சதும் பேசித் தீர்த்துக்க முடியாதா?" - எரிச்சல் மாறாத குரலுடன் வினவிய வெற்றியிடம்..

"இந்தக் கல்யாணமே நடக்காது போல மச்சி!" என்றான் கதிர்.

"என்னடா சொல்ற?"

"மாப்ள எஸ் ஆயிட்டான் டா! வேற யாரோ ஒரு பொன்னை லவ்வுறானாம்! அவளை இழுத்துட்டு ஓடிட்டான் போல! விடிஞ்சதுல இருந்து ஒரே சலசலப்பு மச்சி! இதைக் கூடக் கவனிக்காம நீ என்னடா பந்தி பரிமாறக் கிளம்பிட்ட?"

"இப்போ அறிவு எங்கடா இருக்கான்?" - அவன் வினவிக் கொண்டிருக்கையிலேயே அவர்களை நோக்கி ஓடி வந்த பிரசாத் "டேய், மாப்ள வீட்டாளுங்களோட அறிவு பிரச்சனை பண்ணிட்டிருக்கான் டா! வாங்க டா சீக்கிரம்" என்று பதறியபடி இருவரையும் அழைத்துச் சென்றான்.

"ஏன்ய்யா உன் மகன் இன்னொருத்தியைக் காதலிக்கிறது தெரிஞ்சும், எதுக்குய்யா என் பொன்னு கூடக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுன?, உன் குடும்பப் பிரச்சனைக்கு நாங்க பலிகடாவா?, இப்போ என் பொன்னு வாழ்க்கைக்கு யாரு பதில் சொல்லுவா?, கல்யாணம் நின்னு போனா, என் பொன்னைத் தானய்யா ஊர் குறை சொல்லும்?"

-பெண்ணின் தந்தை,அதாவது வெற்றியின் தோழன் அறிவழகனின் தந்தை மாப்பிள்ளையின் தகப்பனை நோக்கி ஆதங்கத்துடன் கத்திக் கொண்டிருக்க... விசயம் கேள்விப்பட்டு பாதி முடிந்திருந்த அலங்காரத்துடன் ஓடி வந்து மூச்சு வாங்க அழுகையும்,கோபமுமாய் அவர்கள் முன் நின்றாள் மணப்பெண் மைதிலி.

தங்கையின் கண்ணில் கண்ணீரைக் கண்டதும் கோபம் கொப்பளிக்க, தலை குனிந்து நின்றிருந்த மணமகனின் தந்தையுடையச் சட்டையைக் கொத்தாகப் பற்றிய அறிவு "உன்னையெல்லாம் சும்மா விட்றதே தப்புய்யா! உன் மகன் வேற ஜாதிப் பொன்னை லவ் பண்றது உனக்குப் பிடிக்கலைன்னா, நீ அவனை தண்டிச்சிருக்கனும்! என் தங்கச்சி என்ன பாவம் பண்ணுனா?, எங்களை நம்பி கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டப் பொன்னை, இப்படி ஒரு நிலைமைல நிக்க வைச்சுட்டியே! உன்னைச் சொல்லித் தப்பில்ல! நீ இந்தக் கல்யாணத்தை முடிக்க அவசரப்பட்டப்பவே நாங்க

சுதாரிச்சிருந்திருக்கனும்! ச்சி! நீயெல்லாம் மனுஷனா?, எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு" என்று அவர் முகத்தை நோக்கிக் கைகளை உயர்த்தியவனை "அறிவு!" என்று அடக்கிய அவன் தந்தை "இந்தாளு கூட சண்டை போட்டு ஒரு பிரயோஜனமும் இல்ல!, இப்போ நம்ம பொன்னு வாழ்க்கைக் கேள்விக் குறியா நிக்குது! அதைச் சரி பண்ண, என்ன செய்யலாம்ன்னு யோசிப்போம்! இவங்க முகத்துல முழிக்கிறது கூடப் பாவம்! முதல்ல, இந்த இடத்தைக் காலி பண்ணுவோம்! வா" என்று அவனது கையைப் பற்றித் தன் புறம் இழுத்தார்.

அனைத்தையும் வேடிக்கைப் பார்த்தபடி நின்றிருந்த அறிவழகனின் நண்பர்களும் உச்சக்கட்டக் கோபத்தில் இருந்தனர்.

அறிவழகனின் தந்தையைப் பின்பற்றி அனைவரும் வெளியேற.... வெற்றியின் பார்வை மட்டும் மைதிலியைச் சுற்றி வந்தது.

பாவம்! இந்தப் பொன்னு என்ன பாவம் பண்ணுச்சு! விடிஞ்சதும் கல்யாணம்ன்னு ஆசையோட தூங்கி எழுந்திருஞ்சிருந்திருக்கும்! காலங்கார்த்தால இப்படிக் குண்டைத் தூக்கிப் போடுவாங்கன்னு கனவா கண்டிருக்கும்! ப்ச்! என்ன மனுஷங்களோ! என்று சிந்தித்தவனின் கண்ணில் மாலதி விழ.. தன்னைப் பார்ததும் ஏதோ முணுமுணுத்தவளைக் கண்டு கொள்ளாமல் திரும்பியவனின் விழிகள் மீண்டும் மைதிலியின் மீது!

ரொம்ம்ம்ம்ம்ம்பவும் சுமாரான முகம் தான்! ஏரியாவில் சுற்றித் திரியும் வயசுப் பையன்கள் ஒருவரும் ஒரு முறை கூடத் திரும்பிப் பார்த்திராத மொக்கை ஃபிகர்! ஆனால் நல்ல குணம் என்று கதிர் கூறியிருக்கிறான்! முக்கியமாக இந்த மாலதி மற்றும் அவளது தங்கையைப் போலல்லாதுக் கொஞ்சம் அடக்கமான பெண் தான்!

பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஒரு யோசனை தோன்றியது அவனுக்கு! பேசாம இவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன?,

வாழ்க்கை வீணாகி விட்டதே எனக் கவலையுடன் நிற்கும் பெண்ணிற்கு, இவன் தாலி கட்டி வாழ்வு கொடுக்கலாமே! ஒரு ஆபத்பாந்தவனாக, மைதிலியின் சிரிப்பை மீட்டெடுக்க வந்த ரட்சகனாக அவன் தன்னை உருவகப்படுத்திக் கொள்ள நினைத்தாலும், அவனது அடி மனது, அவன் மூஞ்சி மீதே காறித் துப்பி 'டேய் கசுமாலம்,கம்னாட்டி! ஏரியா பூரா.. ராசிகெட்டவன்னு பேர் வாங்கி வைச்சிருக்கிற உனக்கெல்லாம் இப்டிக் கல்யாணம் ஆனாத் தான் உண்டு! கிடைச்ச சான்ஸை வுடாம, நல்லா கெட்டியாப் புடிச்சுக்க! பொன்னு மூஞ்சி சுமார்ன்னுலாம் பார்க்காத!

உனக்காக எந்த அழகியும் தவம் கெடக்கல! வாழ்நாள் பூரா உங்கப்பனை மாறி ஒண்டிக்கட்டையா வாழ்ந்து சாவுறதுக்கு, கிடைச்சதை வைச்சு அனுபவிக்கப் பாரு!' என்று அறிவுரை வழங்க.. "ம்க்கும்" என்று தொண்டையைக் கனைத்து அனைவரது கவனத்தையும் தன் புறம் திருப்பினான்.

இப்போது அவர்கள் நின்றிருந்தது மணமகள் அறை. அறிவு,மைதிலியின் அன்னை,தந்தை மற்றும் அவனது நண்பர்கள் மூவர் மட்டுமே அந்த அறையிலிருந்தனர்.

"அறிவு.... அப்பா...." என்று இருவரையும் அழைத்து அவர்கள் முன்னே சென்று நின்றவன் "உ...உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா.. மைதிலியை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்றான்.

'தம்பி! தெய்வம் மாதிரி வந்து என் பொன்னு வாழ்க்கையைக் காப்பாத்திட்டப்பா!' - என்கிற வாக்கியத்தை அறிவின் தந்தையிடமும் "நீ செய்ற காரியத்துக்கு நன்றின்னு ஒரு வார்த்தை சொன்னாப் பத்தாதுப்பா" - என்கிற வாக்கியத்தை அறிவின் அன்னையிடமும் எதிர்பார்த்து நின்றவனுக்குக் கிடைத்ததோ அவர்களது கேவலமான பார்வை தான்!

'இன்னாத்துக்கு இந்தக் கெய்வி இப்டிப் பார்க்குது!, இன்னா சொல்ட்டேன் இப்போ!' - அவனது மனசாட்சி சுத்த மெட்ராஸ் பாஷைக்குத் தாவியிருக்க, 'இன்னாடா ரியாக்ஷன் இது' என்றக் கேள்வியுடன் கதிரை நோக்கினான் வெற்றி.

பொங்கி வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்திய கதிர் அறையை விட்டு வெளியேறி விட "அறிவு, உன் ஃப்ரண்டைக் கூட்டிட்டு வெளியே போ-ப்பா" -என்று அடிக்குரலில் சீறினார் அறிவின் தந்தை.

சந்தோஷமான சேதியைத் தான சொன்னேன்!, மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கிட்டுக் குடும்பமா எழவு வூட்ல நிற்கிற மாதிரி நிற்குறானுங்க!, நம்மால இவன் வீட்ல ஒரு நல்லது நடக்கட்டும்ன்னு பெரிய மனசு பண்ணி, இந்த சொரி புடிச்சவளைக் கட்டிக்க ஒத்துக்கிட்டா, என்னைய ஏதோ பிச்சக்காரனைத் தொரத்துறா மாதிரி, விரட்டுறானுங்க!

வெடுக்கென நண்பனின் கையை உதறியவன் "இப்போ எதுக்கு என்னை வெளிய அனுப்புறீங்க?, பெரிய மனுஷத்தன்மையோட நான் ஒரு கேள்வி கேட்டேனே! அதுக்கு எந்தப் பதிலுமே கிடையாதா?" என்று கத்தினான்.

“எதுடா பெரிய மனுஷத்தனம்?, சந்துல சிந்து பாடப் பார்க்குறியோ! உனக்கு என் மக கேக்குதா?, அறிவோட ஃப்ரண்டாச்சே! கல்யாணத்துல கூடமாட இருந்து உதவி செய்வியேன்னு உன்னை உள்ள விட்டா, நீ என் பொன்னையே கட்டிக்கச் சொல்லிக் கேப்பியோ!” - அள்ளி முடிந்தக் கூந்தலுடன் அறிவழகனின் அன்னை.

“ஆமா, உன் பொன்னு பெரிய உலக அழகி! ஆசைப்பட்டு நான் கட்டிக்கக் கேட்டுட்டேன்! பருவுக்குள்ள இது மூஞ்சி எங்க இருக்குன்னுத் தேடி தான் கண்டுபிடிக்கனும்! இந்த மூஞ்சிக்காக நான் கேப்-ல கெடா வெட்டுறேனாக்கும்”

“டேய், வெற்றி… என்னடா ரொம்பப் பேசுற?” - அறிவு

“பின்ன என்னடா?, நண்பன் குடும்பம் கதி கலங்கி நிக்குதேன்னு, நான் இந்தப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர நினைச்சா.. உங்கம்மா இப்டிப் பேசுது?”

“அறிவு! நீ முதல்ல அவனை வெளியே கூட்டிட்டுப் போ” - அறிவின் தந்தை.

“நான் எதுக்கு சார் வெளிய போகனும்?, இப்ப என்னக் கேட்டுட்டேன்னு அவமானப்படுத்துறீங்க!, இஷ்டமிருந்தா சரின்னு சொல்லுங்க!, இல்லையா முடியாதுன்னு சொல்லுங்க! அதை விட்டுட்டு சில்றத்தனமா நடந்துக்கிறீங்க?”

“டேய்… வெளியே போடா நாயே!” - இப்போது கோபத்தில் பொங்கி விட்டார் அவர்.

“யோவ்! மரியாதையில்லாம பேசுனேனா, மூஞ்சியைப் பேத்துறுவேன்!” - தானும் பதிலுக்குக் கொதித்தெழுந்தான் வெற்றி.

“டேய் வெற்றி, நீ யார்க்கிட்டப் பேசிட்டிருக்கன்னு தெரியுதா?” - அறிவு

“ஏய், பெரிய மனுஷனாட்டமா டா பேசுறான் உங்கப்பன்!, இவனுக்கெல்லாம் என்ன மரியாதை?”

“டேய் வெற்றி” - அதட்டியபடி கதிரும்,பிரசாத்தும் வெற்றியின் கரத்தைப் பற்ற..

“கைய வுடுங்கடா!, ஆமா, இல்லன்னு ஒரு பதிலைச் சொல்லச் சொல்லுங்க இந்தாளை!, அதை விட்டுட்டு அநாவசியமாப் பேசுறாரு”

“பதில் தான?, சொல்றேன் கேட்டுக்கடா! பொறந்ததும் பெத்தவளைக் காவு வாங்கிட்ட உனக்கு என் மகளைக் கட்டிக் கொடுத்து, அவளைப் பாதிலயே எமன் கிட்ட அனுப்புறதுக்கு, கடைசி வரை என் வீட்ல ஒண்டியாவே வைச்சுக்குவேன்! ராசிகெட்டப் பயலே! போடா இங்கிருந்து” - அறிவின் தாய் உச்சஸ்தாதியில் கத்தியதும்,

பொங்கியெழும் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அருகிலிருந்தத் தாம்பாளத் தட்டை விசிறியடித்து விட்டு விறு,விறுவென மண்டபத்தை விட்டு வெளியேறினான் வெற்றி.

மண்டப வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தத் தனது பைக்கில் அமர்ந்து ஒட்டு மொத்த ஆத்திரத்தையும் அதன் மீது காட்டி உதைத்து, ஆக்ஸிலரேட்டரை முறுக்கியவன், வாசலுக்கு ஓடி வந்த கதிரைத் திரும்பியும் பாராமல் விர்ரென வண்டியைச் செலுத்தினான்,

ராசி! ராசி! ராசி! இந்த ராசிப் பிரச்சனை பெண்களுக்கு மட்டுமல்ல! ஆண்களுக்கும் கூட உண்டு என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு தான் நம் வெற்றிச்செல்வன்! அவன் பிறந்த போது பிரசவத்திலேயே அவனது அன்னை இறந்து விட, அன்று துவங்கியது இந்தப் பிரச்சனை! அத்தோடு நிற்காமல்,அப்போது அவனது தாத்தாவும்,தந்தையும் சேர்ந்து நடத்தி வந்த ப்ளாஸ்டிக் தொழிற்சாலை கடனில் மூழ்கியதும் இவன் பிறந்த ராசியால் தான் என்று குடும்பத்தினரால் பேசப்பட்டது!

வளர்ந்த பின்புப் பத்தாவது படித்துக் கொண்டிருக்கையில், உடன் பயிலும் மாணவியிடம் அவன் லவ் லெட்டரை நீட்ட.. அதை வாங்கிய அன்று மாலையே அந்தப் பெண்ணின் சைக்கிள் மரத்தில் மோதிக் கால் உடைந்துக் கடைசியில் அவளால் அந்த வருடப்படிப்பையேத் தொடர முடியாமல் போனதற்கு அவனும்,அவனது ராசியும் காரணமென்று அவன் இன்று வரை நம்பவில்லை தான்.

அதன் பின்பு அவன் பார்த்த,பேசத் துணிந்த, கைப்பிடித்துக் காதல் பேச முனைந்த அத்தனைப் பெண்களும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட, ஏரியா முழுதிலும் அவன் ஒரு ராசியில்லாதவன் என்கிற பெயர் பரவ ஆரம்பித்துவிட்டது!

அவனை ஒரு ஆந்த்ராக்ஸ் பவுடரைப் போல் ட்ரீட் செய்யும் தனது ஏரியா பெண்களை அவன் பெரிதாகக் கண்டு கொண்டதில்லை! ஏனெனில் அனைவரும் இந்த மைதிலியைப் போல் அட்ட்ட்ட்டுப்பீசுகள்!

அப்படிப்பட்ட கலீஜ் பீஸ் ஒருத்தியின் திருமணம் நின்று போன நிலையிலும் கூட, அடுத்து ஏதேனும் செய்து சூழ்நிலையைச் சரிசெய்ய வேண்டுமென்கிறப் பரபரப்பிலும் கூட, சுற்றியிருப்போர் அவனது ராசியைக் குறையாகச் சொல்வது அவனை மிகுந்த எரிச்சலுக்குள்ளாக்கியது. அதிலும் அந்தப் பரு மூஞ்சி மைதிலி, அவனை நோக்கிக் கேவலமானப் பார்வையை வீசி அவமானப்படுத்தியதை அவனால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

கோபமும்,விரக்தியுமாய் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தவனை "ண்ணா,ண்ணா,ண்ணா.. நிறுத்துங்க,நிறுத்துங்க,நிறுத்துங்க" என்றுக் கூவியபடி மூன்று சிறுவர்கள் வழி மறிக்க... தடுமாறியபடி வண்டியை நிறுத்தியவன் தன்னைச் சமன் செய்வதற்குள், அம்மூவரும் படபடவென அவன் வண்டியில் ஏறியிருந்தனர் "லிஃப்ட் கொடுங்கண்ணா, ப்ளீஸ்ண்ணா,ப்ளீஸ்ண்ணா" என்றபடி.

"டேய், இன்னாங்கடா நீங்க வேற, நேர,காலம் தெரியாம! அண்ணன் உங்களுக்கெல்லாம் லிஃப்ட் கொடுக்கிற மனநிலைல இல்லடா,இறங்குங்கடா" - விரக்தியுடன் புலம்பலாக வெளிவந்த அவனது குரலைக் கண்டு கொள்ளாமல் "லிஃப்ட் குடுக்க வண்டி இருந்தா போதும்ங்கண்ணா, உங்க மனசெல்லாம் வேண்டாம்!, வண்டி எடுங்கண்ணா, ப்ளீஸ்,ப்ளீஸ்ங்கண்ணா" என்று நச்சரித்தவர்களிடம் மறுக்க முடியாமல் வண்டியைக் கிளப்பினான்.

"வாழ்க்கையே அலை போலே!, நாமெல்லாம் அதன் மேலே!" - அவன் முதுகில் தபேலா வாசித்த படி பாடிய சிறுவனிடம் "கடல் அலையா?, அடப் போடா! என் வாழ்க்கை வரண்ட பாலைவனத்துல ட்ராவல் பண்ணிட்டிருக்குன்னு நானே சோகத்துல இருக்கேன்!"" என்று மீண்டும் புலம்பியவன் "ஏன் டா பசங்களா, இத்தினி பேரு என் வண்டில ஏறியிருக்கீங்களே!, ட்ராஃபிக் போலீஸ் புடிச்சா, என்னாடா பண்ணுறது?" - என்று வினவினான்.

"இங்க போலீஸெல்லாம் நிக்காதுங்கண்ணா, நீங்க பயப்படாம ஓட்டுங்க!"

"யாரு, நான் பயப்பட்றேனா?, நேரம்டா!, சரி, நீங்கல்லாம் எங்கடா இறங்கனும்?"

"நீங்க அப்டியே போயின்னே இருங்கண்ணா!,நாங்க இறங்க வேண்டிய இடத்துல இறங்கிக்குவோம்" - என்றவர்கள், அவன் ஒரு இருபதடியைக் கூட கடந்திராத நிலையில் "ண்ணா,ண்ணா... நிறுத்துங்கண்ணா,நிறுத்துங்கண்ணா" என்றுக் கத்தி வண்டியில் இருந்துக் குதித்து, மீண்டும் அவன் தடுமாறி நிறுத்தியதும் "தேங்க்ஸ்ங்கண்ணா" என்று கூவி விட்டு, ரோட்டைக் கடந்து எதிர்ப்புறம் சென்று, அங்கு வந்து கொண்டிருந்த வண்டியை நிறுத்தி "ண்ணா,ண்ணா லிஃப்ட்ண்ணா,லிஃப்ட்ண்ணா" என்று கத்தியதைக் கண்டுப் பல்லைக் கடித்தான் வெற்றி.

"டேய்ய்ய் கம்னாட்டிங்களா! பரதேசி நாய்ங்களா! நீங்க விளையாடுறதுக்கு என் வண்டி தான் கிடைச்சதாடா! சின்னப் பசங்கன்னு உங்களை நம்பி ஏத்துனேன் பாரு, சல்லிப்பீசுங்களா!" - விடாமல் கத்திக் கொண்டிருந்தவனைக் கண்டு கொள்ளாமல்

“ஊஊஊஊஊஊ” என்றபடி வண்டியில் பறந்தனர் அச்சிறுவர்கள். அடுத்தப் பத்தடியில் அவர்கள் மீண்டும் அந்த வண்டியை விட்டு இறங்குவது தெரிந்தது.

“போற,வர்றவனுங்க வண்டியை நிப்பாட்டி லிஃப்ட் கேட்டு விளையாட்றதெல்லாம் ஒரு விளையாட்டா டா! கடுப்பேத்துறானுவளே!” என்று புலம்பியபடி வண்டியைக் கிளப்பியவனுக்கு அந்த நாள் இன்னும் சில,பலத் தலைவலிகளை மிச்சம் வைத்திருந்தது.

நேராக வீட்டுக்குச் சென்று வண்டியை நிறுத்தியவன், நெற்றியைத் தேய்த்தபடி திறந்திருந்த கேட்டைக் கடந்து உள்ளே நுழைகையில், வீட்டு வாசற்படியில் ஜிப்பாவும்,கண்ணாடியுமாய் ஈஈஈ-யென இளித்த வாயுடன் நின்றிருந்தான் ஒருவன்.

அவனைக் கண்டதும் “அப்பா இல்லீங்களா தம்பி?” என்று வினவியவனை முறைத்த வெற்றி, “உன்னை இங்க வராதன்னு நான் அடிச்சு விரட்டியும் உனக்குப் புத்தி வரல பார்த்தியா?, உன் கண்ணாடியை உடைச்சு, நான் உன் கண்ணை நோண்டுறதுக்குள்ள மரியாதையா இங்கயிருந்து போயிடு! நான் ஏகக் காண்டுல இருக்கேன் ஏற்கனவே” - அடிக்குரலில் சீறினான்.

இதெல்லாம் எனக்கு அசால்ட்டு என்பது போல் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்த ஷண்முகம் “தம்பி, உன்னை மாதிரி ஆளுங்களைச் சமாளிக்கத் தெரியாமலா நான் தொழில் நடத்துறேன்?,“ திமிருடன் பதில் கூறினான்.

“ஓஹோ” என்று தாடியைத் தடவிய வெற்றி “கற்பகம் லாட்ஜ் தான உன் தொழில் நடக்குற இடம்?, இந்த வாரம் போலீஸ் ரைட்-க்கு ஏற்பாடு பண்றேன்!,” எனக் கூற..

“வாரம் தவறாம மாமூல் அள்ளி வீசுறேன் தம்பி! என்னைய எந்தப் போலீஸூம் ஒன்னும் செய்ய முடியாது” - என்றான் அவன்.

“அதையும் பார்ப்போம்” என்ற வெற்றி அவனைக் கடந்து உள்ளே செல்ல முயல.. அவன் கைப் பற்றி நிறுத்தியவன் தன் ஜோல்னா பையிலிருந்து ஒரு கட்டுப் புகைப்படங்களை எடுத்து நீட்டி “உங்கப்பாவுக்காகக் கொண்டாந்தேன்! ஆனா.. உங்களுக்குக் காட்டுறேன்! நல்ல ஐட்டமாப் பார்த்து செலக்ட் பண்ணுங்க தம்பி! உடனே ஏற்பாடு பண்ணுறேன்! இதுல ஒன்னு,ரெண்டு தொழிலுக்குப் புதுசு! உங்களை மாதிரி இளசுகளுக்காகவே ஸ்பெஷல் ஏற்பாடு” என்று அவன் கண்ணைச் சிமிட்டியதும், ஒரு நொடி இடுப்பில் கை வைத்துப் பெருமூச்சை வெளியிட்டபடி வேறு புறம் நோக்கிய வெற்றி, மறு நொடி திரும்பிய போது, அந்த ஜிப்பாக்காரன் அணிந்திருந்தக் கண்ணாடி பறந்து வாசலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

கையை உதறியபடித் திரும்பியவன் “அந்தாளைக் கெடுக்குறதே நீ தான் டா! பரதேசி நாயே! இனி உன்னை அந்தாளோட (அவனது தந்தை) பார்த்தேன்! கை,கால் ரெண்டுல ஒன்னைக் கழட்டிருவேன்!” என்று எச்சரிக்க.. உதட்டில் வழிந்த ரத்தத்தைத் துடைத்தபடி “என்னையே அடிச்சுட்டேல்ல!, இருக்குடா உனக்கு” என்று கொக்கரித்து விட்டுச் சென்றான் ஜிப்பா.

அவன் சென்றதும் முன்னுச்சி முடியை அழுந்தக் கோதி வேக,வேகமாக மூச்சை வெளியிட்டவனுக்கு விண்,விண்ணென்று தலை வலிக்கத் துவங்கியது.

அவன் அடித்த போது கீழே விழுந்த ஃபோட்டோக்களை அள்ளி எடுத்தவன் “இவனை அடிச்சு என்னப் பிரயோஜனம்?, அந்தாளை அடிக்க முடியுதா?, பாடைல படுக்க வேண்டிய வயசுல பொம்பள சகவாசம் கேக்குது! கட்டுனவப் போய்ச் சேர்ந்ததும், மறுகல்யாணம் பண்ணிக்கிட்டா, எங்க வர்றவ, பையனைக் கொடுமைப் படுத்திடுவாளோன்னு பயந்து, ஒண்டியாவே புள்ளைய வளர்க்கக் கிளம்புனப் பெரிய மனுஷன் பார்க்குற வேலையா இது! இதுக்கு சித்தின்ற பேர்ல ஒருத்தி வந்துக் கொடுமை பண்ணியிருந்தாக் கூடச் சகிச்சிட்டு வாழ்ந்திருப்பேன்”- என்று புலம்பியபடி உள்ளே சென்று, அந்தப் புகைப்படங்களைப் ஷெல்ஃபில் கிடாசி விட்டு அக்கடாவெனக் கட்டிலில் விழுந்தான்.

மீசை முளைக்கத் துவங்கிய வயதில், உடன் பயிலும் மாணவன் ஒருவனின் மூலமாகத் தான் தந்தையின் இந்தப் போக்கை அவன் கண்டுகொண்டது! வாழ வேண்டிய வயதில் மனைவியை இழந்து விட்டுத் தவிக்கும் மனிதர், உணர்வுகளை அடக்கி வாழுமளவிற்கு மகான் இல்லையென்பது அவனுக்குப் புரிந்து தானிருந்தது. ஆனால்.. முறையாக ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து வாழ்நாளைக் கடத்துவதை விட்டு விட்டு, விபச்சாரியிடம் சென்று நிற்பதா?, சற்று அவமானமாகத் தானிருந்தது.

தந்தையின் இந்தப் பழக்கவழக்கம் அடிக்கடி வீட்டுக்கு வந்து போகும் ஷண்முகத்தினால் உண்டானதென்பதை அறிந்து கொண்ட போது, அந்த வயதிலும் அவனை அடித்துத் துவைத்து விட்டான் வெற்றி.

அவனும்,அவனது தந்தை சதாசிவமும் பெரிதாக அன்பு,பாசத்துடன் ஒட்டி உறவாடும் தந்தை,மகன் கிடையாது! ப்ளாஸ்டிக் தொழிற்சாலை ஊத்திக் கொண்ட பிறகு, சதாசிவத்தின் தந்தையும் இறைவனடி சேர்ந்து விட, அதன் பின் அவருக்கு மிகவும் பிடித்தத் தொழிலான ஹோட்டல் தொழிலை ஆர்வத்துடன் எடுத்து நடத்தி வந்தார்.

சில வருடங்களிலேயே அவருடைய முதலியார் மெஸ் அந்த ஏரியா மக்களிடையே பிரசித்தி பெற்று விட,சென்னையில் இன்னும் இரண்டு இடங்களில் கிளைகளைத் திறந்து இன்று வரை வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறார்.

பணம்,காசுக்குக் குறையே கிடையாது வெற்றிக்கு! ஆனால் அவனுக்குத் தான் எதிலுமே பிடிப்பிருந்ததில்லை. பத்தாவது வரை நன்றாகத் தான் படித்து வந்தான்! என்று, தந்தையுடைய இந்தப் போக்கைக் கண்டுகொண்டானோ, அன்றிலிருந்து மொத்தமாய் மாறிப் போனான்! தன்னுடைய இந்தப் பழக்கத்தை மகன் அறிந்து கொண்டானென்பதை, அவன் ஷண்முகத்தின் கையை உடைத்த போதே தெரிந்து கொண்ட சதாசிவம், கொஞ்சமும் அதைச் சட்டை செய்யாமல் தன் போக்கில் இருந்தது அவனை மிகுந்த வருத்தத்திற்குள்ளாக்கியது.

அதுமட்டுமின்றி, சிறு வயதிலிருந்துத் தொடங்கி அவனை உயிருக்கு உயிராய் வளர்த்த அவனது பாட்டி தாட்சாயிணி வேறு, அவனது 16-வது வயதில் இயற்கை எய்தி விட, எதிலுமே பிடிப்பின்றி வாழ்க்கையையே வெறுக்கத் தொடங்கி விட்டான் அவன்! போதாதற்கு போகுமிடமெல்லாம் இந்த ராசிப் பிரச்சனை வேறு!

இங்க்லீஷ் மீடியத்தில் முதல் மார்க் வாங்குமளவிற்கு நன்றாகப் படித்துக் கொண்டிருந்தவன், படிப்பைப் பாதியில் விட்டான்! தந்தையுடனான பேச்சை மொத்தமாகத் தவிர்த்தான். ஒரே வீட்டிலிருந்தும் அவரது இருப்பைக் கண்டு கொள்ளாமல் இருந்தான்! எப்போதும் 4 நண்பர்களை உடன் வைத்துக் கொண்டு ஏரியாவிற்குள் வெட்டிப் பையனாக வலம் வரத் தொடங்கினான்.

அவனுக்கும், அவன் தந்தையைப் போல் சமையலில் மிகுந்த ஈடுபாடுண்டு. அவனுக்குள்ளிருந்த ஒரே உருப்படியான விஷயம் இது மட்டுமே! அவ்வப்போது தந்தையின் மெஸ்-க்குச் சென்று ஏதேனும் புதுவிதமாக வெரைட்டியாக சமைத்து வைப்பான். வாடிக்கையாளர்களிடம் அவன் செய்தது ரீச் ஆகி விட்டால், அந்த டிஷ் அவர்களது மெனு கார்டில் சேர்ந்து விடும்.

இதைக் கவனித்த சதாசிவத்திற்கு அவன் தினம் வருகை புரிந்து பொறுப்பாகத் தொழிலைக் கவனித்துக் கொள்ள வேண்டுமெங்கிற ஆசை இருந்தது. தனது தோழனும்,தனது மெஸ்ஸில் வேலை செய்பவருமானப் புகழேந்தியிடம் சொல்லித் தன் ஆசையை மகனிடம் தெரிவித்தார்.

படிப்பையும் பாதியில் விட்டு, இப்படியே வெட்டியாகத் திரிந்து எதை சாதிக்கப் போகிறானாம்?, பொறுப்பாகக் கடைக்கு வந்து தொழிலை கவனித்துக்

கொள்ளலாமில்லையா?, என்று தந்தை கேட்டதற்காக.. அந்த ஒரு சொல்லுக்காக மட்டுமே, எப்பேர்ப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும், சத்தியமாகத் தப்பித் தவறி கூட இந்தக் கடையைத் தான் முன்னின்று நிர்வகிக்கும் நிலைமை வந்து விடக் கூடாது என்றுக் கடவுளிடம் ஒரு இன்ஸ்டண்ட் வேண்டுதலை வைத்து விட்டு, கடைப்பக்கம் செல்வதை முற்றிலுமாகத் தவிர்த்து விட்டான்.

'உங்கப்பனோட காசுல திங்குற,தூங்குற!, அவன் கடையை மட்டும் எடுத்து நடத்த மாட்டியாடா?' என்று புகழேந்திக் கேட்டதும், அதற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டுத் தனக்கென்று ஒரு வேலையைத் தேடிக் கொண்டான்.

போகிற போக்கில் சில,பல ஹோட்டல்களில் சமைத்து வயித்துப்பாட்டைப் பார்த்துக் கொண்டாலும், எப்படியேனும் இந்த ஊரை விட்டுச் சென்று வேறு ஊரிலோ,நாட்டிலோ வேலை செய்து வாழ்க்கையைக் கழித்து விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். கடைசி வரைத் தந்தையின் முகத்தில் விழிக்காமலேயேப் போய்ச் சேர்ந்து விட வேண்டுமென்பது தான் அவனது ஆசை.

அதன்படி அவன் துபாயில் புகழ்பெற்ற ஹோட்டல் ஒன்றில் வேலைக்கு முயற்சிக்கையில், கேட்டரிங் முடித்திருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்த படியால், விட்ட படிப்பை மீண்டும் தொடர முயன்றான்.

குறைந்தபட்சம் பத்தாவது பாஸ் செய்திருந்தால் மட்டுமே கேட்டரிங்கில் டிப்ளமோவேனும் வாங்க முடியும் என்பதால், டுடோரியல் காலேஜ் ஒன்றில் சேர்ந்து படிக்கவும் முயற்சித்தான்.

முயற்சிக்க மட்டுமே முடிந்தது அவனால்! 27-வயதில் புத்தகத்தைத் தூக்கிப் பொறுப்பாகப் படிக்க அமர்வதெல்லாம் முடிகிற காரியமா?, அத்தனை எளிதாக இருக்கவில்லை!

வாரத்தில் மூன்று நாட்கள் கிளாஸ் இருந்தது! வயது வித்தியாசமின்றி, அவனோடு சேர்ந்து 20-க்கும் மேற்ப்பட்ட மாணவர்கள் அவன் வகுப்பிலிருந்தனர். தலையெழுத்தேவெனப் பாடம் நடத்தும் ஆசிரியர்களை வைத்துக் கொண்டுக் கல்வி பயில்வதென்பது எத்தனைக் கஷ்டமான விசயம்! கடைசியில் இரண்டு வருடமாகப் பத்தாவது பரீட்சை எழுதியும் அவனால் பாஸ்-ஆக முடியவில்லை!

இப்படியாகச் சோகமும்,விரக்தியும் மட்டுமே நிறைந்தத் தன் வாழ்க்கை ஓடத்தை நினைத்து அவன் மருகிக் கொண்டிருந்த சமயம், அவனது செல்ஃபோன் அழைத்து,

அதன் இருப்பை அவனுக்கு உணர்த்தியது. அவனுடன் பயிலும் 35 வயதான பாண்டியன் என்பவர் தான் அழைத்துக் கொண்டிருந்தார்.

“சொல்லுங்க பாண்டியன் சார்” - வெற்றி.

“தம்பி,இன்னிக்குக் க்ளாஸ் இருக்குறது தெரியும் தான?, இன்னிக்கும் நீ அட்டெண்ட் பண்ணாட்டி, இந்த வருஷமும் பரீட்சை ஊத்திக்கும்ப்பா”

“ப்ச், அட்டெண்ட் பண்ணா மட்டும் பாஸ் ஆகிடவாப் போறேன்?, நீங்க வேற ஏன் சார்?”

“ஏன்ப்பா ரொம்ப விரக்தியாப் பேசுறா?, நண்பன் தங்கச்சிக் கல்யாணத்துல அடிச்ச போதை இன்னும் தெளியலையா?”

“கல்யாணமே நின்னு போச்சு சார்”

“அய்யய்யோ!, என்னப்பா சொல்ற?”

“எல்லாம் நேர்ல வந்து சொல்றேன் சார்” -என்று கால்-ஐக் கட் செய்தவன், ‘வெட்டியா இப்டி உட்கார்ந்து புலம்புறதுக்குக் க்ளாஸூக்காவது போகலாம்’ என்று முடிவெடுத்து உடைமாற்றிக் கொண்டுத் தன் பைக்கில் டுடோரியல் காலேஜை நோக்கிப் பறந்தான்.

**அ**டையாறை நோக்கி சீரான வேகத்தில் பயணப்பட்டுக் கொண்டிருந்தவனின் காதில் பாந்தமாய் ஒரு ஹெட்செட்! ஹெட்செட்டுக்குள் இளையராஜா! இதமாய் அவனது செவிகளைத் தீண்டியபடி!

**“பார்க்கும் பார்வை நீ! என் வாழ்வும் நீ! என் கவிதை நீ!**

**பாடும் ராகம் நீ! என் நாதம் நீ! என் உயிரும் நீ!”**

இசையைப் பொறுத்தவரை என்னை மாதிரி சில பேருடைய வாழ்க்கை 80-களோடயே முடிஞ்சு போச்சு! நாட்காட்டி, கடிகார முள்ளிலிருந்துத் தொடங்கி, நிலம்,நீர்,காற்று,நெருப்பு,ஆகாயம்ன்னு பஞ்சபூதங்கள் வரை அத்தனையும் இளையராஜான்ற அரிய வகை இசை-மிருகத்தால மொத்தமா 80-கள்லயே உறைஞ்சு போய்ட்டதாத் தான் நம்புறோம்! என்ன இல்லை அந்த இசைல? ஒரு சாதாரண விடியலை அழகானதா உணரனுமா நீங்க?, அது எப்பேர்ப்பட்ட விடியலா இருந்தாலும் சரி! கார்காலத்துல, விடாம அடிச்சுப் பெய்யுற மழைக்கிடைல சோம்பலா உதிக்கிற சூரியனோடத் தொடங்குதா உங்க காலை?, இல்ல! பனிபொழியுற மார்கழி மாதத்துல வரலாமா,வேணாமான்னு தயங்கி எட்டிப் பார்க்குறக் கதிரவனின் விசிறியா நீங்க?,

ரொம்பவும் கவிதையா வேண்டாம்! கொஞ்சம் கூட மனசாட்சியில்லாம அதிகாலை எட்டு மணிக்கே (?!) ஜன்னல் வழியாக் கை நீட்டிக் கூச்சநாச்சம் பார்க்காம உங்களை அங்க,இங்கத் தொட்டுப்பார்க்குற ஆதவனுடனான ரொம்ம்ம்பவும் சாதாரணமானக் காலை நேரம் உங்களோடதா? எதுவாயிருந்தாலும் பரவாயில்ல! எல்லா வகையான விடியலையும் அழகே உருவா... நிமிஷத்துல மாத்திக் காட்டுற வித்தை நம்மாளுக்கிட்ட இருக்கு! சர்வலோக நிவாரணி அவரு! நிறைய்ய்ய்ய்ய்ய இளையராஜா! கொஞ்சமா எஸ்.பி.பி, கொஞ்சமா எஸ்.ஜானகி! A perfect combo ever! எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும், இனி வரும் அத்தனை மனுஷப்பிறவிக்கும் கிடைக்கப் போகிறத் தெவிட்டாதப் பேரின்பம் - ராஜா!

**செ**விப்பறைக்குள் சட்டமாய் அமர்ந்து இனிய கீதம் வாசித்த இளையராஜாவுடன் போட்டி போட்டுக் கொண்டு, தங்களது காந்தக் குரலால் அவன் இதயத்தைக் கொஞ்சிக் கொண்டிருந்த எஸ்.பி.பியும்,சுசீலாவும் அவனது மனநிலையை சீராக்கி அவன் உதட்டில் புன்னகையைத் தோற்றுவித்தனர்.

சிரிப்புடன் வண்டியின் வேகத்தை அதிகரித்தவன், அந்த ஏகாந்த மனநிலையைக் குலைப்பதற்கென்றே வீட்டிலிருந்து புறப்பட்டு வந்ததைப் போல், அவனுக்கு ஐந்தடி முன்னால், படு ஸ்லோவாகத் தனது ஸ்கூட்டியை செலுத்தியபடி அவனதுப் பொறுமையை வெகுவாக பரிசோதித்துக் கொண்டிருந்த பெண்ணைக் கண்டு மீண்டும் எரிச்சலுற்றான்.

அவளைக் கடந்து செல்லவும் வழி விடாமல், ஒழுங்காக ஓட்டவும் தெரியாமல், ஜிக்-ஜாக் விளையாடிக் கொண்டிருந்தவளால் அவனது பற்கள் ஒன்றையொன்று நற,நறவெனக் கடிக்கத் துவங்க... 'இவளுங்க வண்டியை எடுத்துக்கிட்டு வீதிக்கு வந்தா, ரோடே இவளுங்களுக்கு சொந்தம்ன்ற மாதிரி தான் ஓட்டுவாளுங்க!, பின்னாடி, முன்னாடி வந்து போறவனைப் பத்தியெல்லாம் யோசனையே பண்றதில்ல! இது என்ன இவ அப்பன் வீட்டு ரோடா?' - என ஏகத்துக்கும் வாய் விட்டுப் புலம்பியவன்... கடும் எரிச்சலில் அவளை முந்த நினைத்து முன்னே நகர்கையில். அவள் சரியாக நேரே வர, டமாஆஆஆஆல் - என இரண்டு வண்டியும் உரசிக் கொண்டதில் தடுமாறி.. வண்டியுடன் பொத்தெனக் கீழே விழுந்தாள் அந்தப் பெண்.

'ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்.. இந்தத் தலைவலி வேறா?!' என்றெண்ணியபடி அவசரமாக வண்டியை விட்டுக் கீழே இறங்கியவன் "ரியர்வியூ மிர்ரரைக் கூடப் பார்க்காம என்னாத்துக்கும்மா வண்டி ஓட்டுற நீ?" என்று கோபமாக அவளை நோக்கி வினவினான்.

அவன் வண்டியை நிறுத்தி விட்டு அவளருகே வருவதற்குள் சுதாரித்து எழுந்தவள், வண்டியைத் தூக்கி நிறுத்திக் கை முட்டியருகே இருந்த சிராய்ப்பை ஊதியபடி நின்று கொண்டிருந்தாள்.

அதற்குள் அவளைச் சுற்றி 4,5 பேர் சேர்ந்தக் கூட்டமொன்றுக் கூடி விட.. "எனக்கு ஒன்னும் ஆகல, ஒன்னும் ஆகல சார்" என்றபடி நின்றவள் அவனது கேள்வியில் வெடுக்கென நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

"இடிச்சுக் கீழ தள்ளி விட்டுட்டு என்னையே கேள்வி கேட்குறீங்களா?" - கோபமாய்க் கண்களை விரித்தாள் அவள்.

"பின்ன?., நீ நாளான்னைக்கு வூடு போய்ச் சேர்ற வரைக்கும் நானும் உன் பின்னாடியே வண்டியை தள்ளின்னு வரனுமா?, ஏம்மா நீ வண்டி ஓட்டிப் பழகுறதுக்கு நான் போற ரோடு தான் கிடைச்சதா?"

"அப்போ வேணும்ன்னு தான் இடிச்சிருக்க நீ?" - கையை நீட்டிக் கொண்டு சண்டைக்குத் தயாரானாள் அவள்.

"ஏய், என்னா ரொம்பப் பேசுற?. நீ என்னிக்கு வழி விட்டு, நான் என்னிக்குப் போற வேண்டிய இடத்துக்கு போய்ச் சேர்றதுன்னு தான், உன்னைக் க்ராஸ் பண்ணிப் போக ட்ரை பண்ணுனேன்! நிமிஷத்துக்கொரு தடவை கண்ணாடியைப் பார்த்து லிப்ஸ்டிக்கை மட்டும் சரி பண்ணிக்கத் தெரிஞ்ச உங்களுக்குப் பின்னாடி வர்றவனைக் கவனிச்சுப் பார்க்கத் தெரியாதாக்கும்?" - எரிச்சலில் பொங்கினான் அவன்.

"நான் லிப்ஸ்டிக் போட்டிருக்கேன்னு நீ பார்த்தியா?"

"ஏம்மா இப்போ அதுவாப் பிரச்சனை?"

"நானும் வந்ததுல இருந்துப் பார்க்குறேன், அம்மா,அம்மான்ற?. நான் என்ன உன் அப்பனுக்குப் பொண்டாட்டியா? இல்ல, என் வயித்துல நீ பொறந்தியா?"

"ஏய், அதெல்லாம் ஒரு ஃப்ளோல வர்றது! இன்னாத்துக்கு இப்போ நீ கலீஜ்-ஆ பேசுற?"

"இடிச்சுக் கீழத் தள்ளுனதுக்கு மன்னிப்புக் கூடக் கேட்காம எவ்ளோ தெனாவட்டாப் பேசுற?, நியாயமாப் பார்த்தா, என் கைல பட்டிருக்கிறக் காயத்துக்கு நான் ஆஸ்பத்திரில படுத்துக் கட்டு,கட்டா உன்னைப் பணம் செலவழிக்க வைச்சிருக்கனும், எதுவும் செய்யாம நிற்குறேன் பாரு! என் தப்பு தான்!"

“அடேங்கப்பா! தம்மதூண்டு காயம் இது, 2ரூபா ப்ளாஸ்திரி வாங்கி ஒட்டுனா சரியாப் போயிடப் போகுது! இதுக்கு நீ என்னைய ஆஸ்பத்திரிக்கு இழுப்பியா?, அதுக்குப் பதிலா நான் உன் பல்லை உடைச்சு ஸ்ட்ரச்சர்ல ஏத்திட்டு மொத்தமா செலவழிச்சிக்கிறேன். வர்றியா?” - கை முஷ்டியை இறுக்கினான் அவன்.

“என்னாங்க சார்?, இடிச்சுக் கீழத் தள்ளுனதுமில்லாம, பல்லை உடைப்பேன் அது,இதுன்னு தனியா இருக்கிற ஒரு பொன்னைப் பார்த்து இந்தாளு பேசுறான், நீங்களும் பார்த்துட்டிருக்கீங்க?, பொன்னுங்களுக்கு எதிரா நடக்குற அநியாயத்துக்கு முக்கியக் காரணமே உங்களை மாதிரி வேடிக்கைப் பார்க்குறக் கூட்டம் தான்” - டபாலெனத் திரும்பிச் சுற்றியிருப்போரைப் பார்த்து அவள் கேட்டதும் “அதானே?, என்னாய்யா நீ ரொம்பப் பேசுற?, நீ வாய்யா போலீஸ் ஸ்டேஷனுக்கு, அங்க வைச்சு எதுன்னாலும் பேசிக்கலாம்! பொம்பளப்புள்ளைட்ட கையை நீட்டப் பார்க்குற நீ?” - என்று கூட்டமும் அவனை நோக்கிக் குரல் கொடுக்க.. எதிரே நின்றிருந்த ட்ராஃபிக் போலீஸ் இவர்களை நோக்கி விரைந்து வந்தார்.

“என்னப் பிரச்சனை இங்க?” என்று விசாரித்தவர் கூட்டத்திலிருந்தோரை விரட்டி விட்டு இவர்களிருவரை மட்டும் தனியே தள்ளி, ட்ராஃபிக்கை க்ளியர் செய்து விட.. ரோட்டோரமாய்த் தன்னையே முறைத்தபடி எரிச்சலுடன் நின்றவளை ஓரக்கண்ணால் நோக்கினான் வெற்றி.

**“கட்டுத்தறிக் காளை நாே□ , கன்னுக்குட்டி ஆே□ ே□ !**

**தொட்டுத் தொட்டுத் தென்றல் பேச, தூக்கம் கெட்டுப் போே□ ே□ !**

**சொல் பொன்மாே□** !!!!!!”

-காதுக்குள் சன்னக்குரலில் இளையராஜா வேறு! ‘ப்ச், நீங்க வேற சிச்சுவேஷன் தெரியாம உள்ள வராதீங்க ராஜா சார்’ என்று முணுமுணுத்தபடி அதை அணைத்து வைத்தான்.

“என்னப் பிரச்சனை ரெண்டு பேருக்கும்?” - ட்ராஃபிக் போலீஸின் முன்பு இருவரும் நின்றிருந்தனர்.

“சார், என் வண்டியை இடிச்சு என்னையக் கீழ தள்ளி விட்டதுமில்லாம, பல்லை உடைப்பேன்னு சொல்லி மிரட்டுறான் சார்!” - பள்ளி சிறுமியைப் போல் புகார் கொடுத்தாள் அவள்.

“ஏய்ய்ய் அவன்,இவன்னு சொன்னேனா, நிஜமாவே பல்லை உடைச்சுடுவேன்” - கோபத்துடன் வெற்றி.

“பார்த்தீங்களா, பார்த்தீங்களா சார்?. உங்க முன்னாடியே எப்புடிப் பேசுறான்னு?”

“சார், கொஞ்சம் மரியாதையா பேசச் சொல்லுங்க! நான் என்னமோ இந்தம்மாவை இடிச்சுத் தள்ளுறதுக்காகவே வூட்ல இருந்து கிளம்பி வந்த மாதிரி பேசுது!, பார்க்கத் தான் சார் சேலை கட்டி அடக்க,ஒடுக்கமாத் தெரியுது! வாயைத் தொறந்தா கூவம் தான்! ஆறா ஓடுது!”

“இதோ பாரு, இந்தக் கமெண்ட் அடிக்கிற வேலையெல்லாம் வேற எவக்கிட்டயாவது வச்சுக்க”

“ஆமா, எனக்கு அதான் பொழப்பு”

“அடச்சீ! வாயை மூடுங்க ரெண்டு பேரும்!, கொஞ்ச நேரம் அமைதியா இல்ல, ரெண்டு பேர் வண்டியையும் ஸ்டேஷனுக்குத் தூக்கிட்டுப் போயிடுவேன்!” - போலீஸ் மிரட்டவும், பல்லைக் கடித்தபடி அமைதி காத்தனர் இருவரும்.

“உன் பேர் என்ன?”

“ஜமுனா” - விரல்களைப் பிசைந்தபடிப் பதலளித்தவளுக்குள் லேசான பதற்றம்.

“எந்த ஏரியா?”

“வேளச்சேரி”

“உன் பேரு?”

“வெற்றி”

“எந்த ஏரியா?”

“வளசரவாக்கம்”

“சரி, வண்டியை இடிச்சதுக்கு அந்தப் பொன்னுக்கிட்ட மன்னிப்புக் கேட்டுட்டு சட்டுன்னு கிளம்பு நீ!” - வெற்றியிடம் கூறினார் அவர்.

“நான் ஏன் சார் மன்னிப்புக் கேட்கனும்?, பத்து நிமிஷமா இந்தப் பொன்னு பின்னாடி தான் சார் வந்தேன்!, சின்னப்புள்ள வண்டி ஓட்டுற மாதிரி தட்டுத் தடுமாறி இந்தப்பக்கமும்,அந்தப்பக்கமும் போயிட்டிருக்கு! நான் எவ்ளோ நேரம் தான் சார்

பொறுமையா வர முடியும்?, இந்த மாதிரி எல் போர்டுகளுங்களால நாட்டுல எவ்ளோ பிரச்சனை தெரியும்ங்களா சார்?”

“இதுக்கு என்னம்மா பதில் சொல்ற?”

“என் தப்பு தான் சார்! இன்னிக்குத் தான் முதன்முதலா இவ்ளோ பெரிய ரோட்ல வண்டி ஓட்டுறேன்!” - தலை குனிந்துக் கன்றிய முகத்துடன் கம்மிய குரலில் கூறியவள் “அப்டிப் பார்த்தாலும், கீழ விழுந்தது நான் தான சார்?, எனக்கு ஒன்னும் ஆகலன்னு சொல்லிட்டு விலகிப் போயிரலாம்ன்னு தான் நினைச்சேன்! ஆனா.. இந்தாளு பல்லை உடைப்பேன் அது,இதுன்னு ரொம்பப் பேசுனான்” என்றாள் கோபத்துடன்.

அவளது முதல் வாக்கியத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அடுத்துக் கூறியதை டீலில் விட்ட வெற்றி போலீசிடம் “அதோட தப்பு தான்னு அந்தம்மாவே ஒத்துக்கிச்சு சார்!, பிரச்சனை முடிஞ்சது! நான் கிளம்பட்டுமா?” என்றான்.

‘எவ்ளோ திமிரு! கீழ விழுந்தவக் கிட்ட கடைசி வரை மன்னிப்புக் கேட்கல! ஏன்?, அய்யோ விழுந்துட்டாளேன்னு ஒரு கரிசனமானப் பார்வை கூட இல்ல! என்ன ஜென்மம் இவன்?, ஆத்திரத்துடன் அவனை முறைத்தவள்...

“சார், தப்பு என் மேல மட்டும் தான் இருக்கா?, அவர் மேல இல்லையா?, பிஸியான ரோட்ல, பீக் அவர்ஸ்ல ஹெல்மெட் போடாம வண்டி ஓட்டுறார்! அது தப்பில்லையா?, முதல்ல இந்தாளோட லைசென்ஸ்,ஆர்.சி புக்கெல்லாம் செக் பண்ணுங்க சார்” என்று கிறீச்சிட்டாள்.

“அதான?, ஏய் ஏன் ஹெல்மெட் போடல நீ?, உங்கப் பிரச்சனைல என் வேலையைப் பார்க்காம விட்ட்டுட்டேன் பாரு! தேங்ஸ்சும்மா! யோவ்.. நீ லைசென்ஸை வெளிய எடு முதல்ல” என்று போலீஸூம் அவனை மிரட்ட... அவரை சங்கடமாக ஒரு பார்வை பார்த்தவன்..

“அ..அ..அது வந்து சார், காலைல இருந்துக் கொஞ்சம் மனசு சரியில்ல! அதான் ஹெல்மெட் போடனும்ன்றது மைண்ட்ல இல்லாம போச்சு! லைசென்ஸ் என் கிட்ட இருக்கு சார்! ஆ...ஆனா... பர்ஸை வீட்ல வைச்சுட்டு வந்துட்டேன் சார்! சொ..சொன்னேன் இல்லையா, மைண்ட் அப்செட்ன்னு! அதான்ன்ன்ன்ன்” என்று இழுத்தான்.

“ம்ம்ம்ம், மைண்ட் அப்செட்டா இருந்தாலும் கையில செல்ஃபோன் மறக்காம எடுத்துட்டு வந்திருக்காரு! பத்தாதுக்கு ஹெட்செட் வேற! ஆனா.. ஹெல்மெட்டை மட்டும் மறந்துடுவாரா?, என்ன மாதிரியான அம்னீஷியா இது?, சார்! நாட்டுல நடக்குற பாதி விபத்துல ஹெல்மெட் போடாத ஆளுங்க தான் உயிரை விட்றாங்க! உங்களுக்குத் தெரியாததா?. இவங்க புத்தில உறைக்குற மாதிரி 4 அட்வைஸ் கொடுத்து,நானூறு ரூபா ஃபைனையும் வாங்கிட்டு விடுங்க சார்! நான் கிளம்புறேன்” - என்று விட்டு, அவனிடம் திரும்பி நாக்கைத் துருத்திக் காட்டிக் கோபமாய் முறைத்து விட்டு நகர்ந்தாள் அவள்.

“சார்,சார்! என் கிட்ட பர்ஸ் இல்லன்னு சொன்னேனே சார்! ஃபைன் கட்டக் காசு இல்ல சார்!” - என்று அவன் கெஞ்சிக் கொண்டிருப்பதைக் கேட்டபடி சிரிப்புடன் வண்டியை எடுத்துக் கொண்டு பறந்தாள்.. ம்ஹூம்ம்ம்.. ஊர்ந்தாள் ஜமுனா.

அதன் பிறகு அவன் எவ்வளவோ கெஞ்சியும் ட்ராஃபிக் போலீஸ் ஒப்புக் கொள்ளாததால் கடைசியில் பாண்டியனை ஃபோனில் அழைத்து, அவர் வந்த பின்பு ஃபைனைக் கட்டி விட்டு அவருடன் அவன் க்ளாஸூக்குள் நுழைகையில் அரைமணி நேரம் தாமதமாகியிருந்தது.

“எக்ஸ்யூஸ்மீ மேம்” - என்றுப் பாண்டியன் அழைத்ததும் கரும்பலகையிலிருந்துத் திரும்பி வாசலில் நின்றிருந்த இருவரையும் நோக்கியவளைக் கண்டு மட்டுப்பட்ட சினம் மீண்டும் கொப்பளிக்கப் பல்லைக் கடித்தான் வெற்றி.

உள்ளே வரச் சொல்லி அனுமதி கிடைப்பதற்கு முன்பாகவே விறுவிறுவென உள் நுழைந்துக் கடைசி பெஞ்சில் அமர்ந்தவன் கோபம் குறையாமல் அவளையே நோக்கினான்.

ஜமுனாவிற்கும் இவனாஆஆஆஆ என்கிற அதிர்ச்சி தான்! ஆனாலும் நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு போர்டின் புறம் திரும்பி விட்டாள்.

“வெற்றி” - பாண்டியன்.

“ம்ம்”

“ஏன் மேடத்தையே வைச்சக் கண் வாங்காமப் பார்க்குற?”

“ம்ம்ம் வேண்டுதல்”

“செம்ம ஃபிகர் இல்ல?, மேடம் புதுசா சேர்ந்திருக்கிறாங்க. பேரு...”

“ஜமுனா.” - வெற்றி

“எப்படித் தெரியும்?”

“மொட்ட வெயில்ல என்னை ட்ரா்ஃபிக் போலீஸ் கிட்டக் கெஞ்ச விட்டு 400ரூபா ஃபைன் கட்ட வைச்சதே இந்த ராட்சசி தான் சார்!” - ஆதங்கத்துடன் அவன் கூறியதைக் கேட்டு களுக்கெனச் சிரித்தார் பாண்டியன்.

பாண்டியனின் சிரிப்பைக் கண்டு கொள்ளாமல் அவளிடமிருந்துப் பார்வையைத் திருப்பாது வெறித்துக் கொண்டிருந்தவனை மெல்லச் சுரண்டினான் லோகேஷ் - சக மாணவன்.

“வெற்றிண்ணா.. மிஸ் எப்புடி??”

“ஷ்ஷ்ஷ்ச்... நீயுமா டா?” என்று காண்டான வெற்றி, தொடர்ந்து “அவ வெளித்தோற்றத்தை வைச்சு எந்த முடிவுக்கும் வராதீங்க டா தயவு செஞ்சு! இவளைப் பார்த்தா.. எங்க ஏரியாவுல தண்ணி லாரி வரும் போது, எல்லாரையும் அடிச்சு விரட்டிட்டு 4 குடத்தோட முதல் ஆளா முன்னாடி போய் நிக்குற குருவம்மா அக்கா தான் டா ஞாபகத்துக்கு வருது! கைல இருக்குற குடத்தைச் சும்மா கடாயுதம் மாதிரி வைச்சுக்கிட்டு, சுத்தி இருக்குற எல்லாத்தையும் சுழட்டி,சுழட்டி அடிக்கும் பாரு.....”

“ண்ணா... இப்போ உங்க ஏரியா குருவம்மாக்காத் தண்ணி புடிக்கிற அழகை யாரு வர்ணிக்கச் சொன்னா?, மிஸ்ஸைப் பத்திக் கேட்டா... ச்ச”

“இல்லடா, இவளும் அந்த மாதிரி, அவ ஏரியாவுல பெரிய தாதாவா இருக்கலாம்” -

“அது எப்புடி உங்களுக்குத் தெரியும்?”

“நான் தான் பார்த்தேனே! என் ரெண்டு கண்ணால பார்த்தேனே!” - எரிச்சல் மிகுந்த குரலில் வெற்றி கூறிக் கொண்டிருக்கையிலேயேத் தன் கையிலிருந்த டஸ்டரால் மேஜையை டொக்.டொக் எனத் தட்டியவள் “க்ளாஸ்க்கு லேட்டா வந்ததுமில்லாம, என்ன நொய்,நொய்ன்னு அங்கப் பேச்சு வேண்டிக் கிடக்கு?, பாடத்தைக் கவனிக்கிறவங்களையும் கெடுத்துட்டிருக்கீங்க?” என்று கோபமாய் வினவினாள்.

உதட்டை வளைத்து “யாரு? இவனுங்க?” என்றபடிக் கையை நீட்டி அனைவரையும் சுட்டிக் காட்டியவன் “இவனுங்க நீங்க நடத்துற பாடத்தைக் கவனிக்கிறானுங்களாக்கும்?” என்று வினவ... பல்லைக் கடித்தவள் “அவங்கக்

கவனிக்கிறாங்களோ இல்லையோ! நீங்க க்ளாஸை டிஸ்டர்ப் பண்ணாம இருங்க போதும்" என்று சீற... அவளை நன்றாக முறைத்தபடிக் கையைக் கட்டிக் கொண்டு சாய்ந்து அமர்ந்து விட்டான் வெற்றி.

இருவருக்கும் வெளிப்படையாக நடக்கும் தகராறைக் கண்டு ஜெர்க்காகி க்ளாஸ் முழுதும் அமைதியாகி விட.. அவளது குரல் மட்டும் கோபத்தில் அடுத்த பத்து நிமிடங்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

மறுபடி தன்னைச் சுரண்டிய லோகேஷைத் திரும்பி நோக்கினான் வெற்றி.

"என்னடா?"

"ண்ணா, உங்களுக்கு மிஸ்ஸை ஏற்கனவேத் தெரியுமா?"

"தெரியும்ன்னு சொன்னா என்ன செய்யப் போற?"

"ஃபோன் நம்பர் கிடைக்குமா?"

"ப்ச், டேய் இவளுக்குப் போய் நீங்க இவ்ளோ ஹைப் கொடுக்கிறதெல்லாம் ரொம்ப ஓவர் டா"

"ண்ணா.. உங்களுக்குக் கண்ணு சரியில்ல. இதை விட அழகான பொன்னை நீங்க இந்த ஏரியாவுலேயே பார்க்க முடியாது. க்ளாஸை ஒரு தடவை சுத்திப் பாருங்க... பெருசு,பொடுசு அத்தனையும் வசியத்துக்கு ஆட்பட்ட மாதிரி எப்புடி கண் சிமிட்டாம உட்கார்ந்திருக்கானுங்கன்னு"

அனைவரையும் ஒரு முறை நோக்கியவன் "ஆமா... இன்னாடா ஆச்சு இவனுங்களுக்கு?. இவ்ளோ நேரம் நல்லாத் தான டா இருந்தானுங்க?, அவ சொன்ன மாதிரி பாடமா டா கவனிக்கிறானுங்க?" என்று ஆச்சரியத்துடன் வினவ... மெல்லச் சிரித்த லோகேஷ்,

"இவனுங்கக் கவனிக்கிறது பாடத்தை இல்ல! மேடத்தை!" என்றான்.

"ப்ச், இவ மூஞ்சில அப்டியொன்னும் அழகு வடியலன்னு நான் ஏற்கனவே சொல்லிட்டேன்"

"முகத்தை யாருண்ணா பார்த்தா?"

"டேய், நாதாரிங்களா..." - கோபம் காட்டிய வெற்றியிடம் "ச்சி,ச்சி தப்பா நினைக்காதீங்க! மேடத்தோட ஹிப்-ஐ பார்த்துத் தான் நம்ம பசங்க ஹிப்னாடிசம் ஆன

மாதிரி உட்கார்ந்திருக்கிறானுங்க" - என்று லோகேஷ் கூற... ஏனென்றே புரியாமல் எரிச்சல் மண்டியது வெற்றிக்கு.

'என்ன பொன்னு இவ! நடு ரோடுன்னு கூடப் பார்க்காம, அத்தனை பேர் முன்னாடி பெரிய உத்தம புத்திரி மாதிரி வரிஞ்சு கட்டிக்கிட்டு சண்டைக்கு வந்தா! இப்போ.. எல்லாரும் ஆ-ன்னு பார்க்குற அளவுக்கு இப்பிடி சீன் காட்டிட்டு நிற்கிறா!' - மனம் விடாது வசை மாரி பொழிந்தாலும், சத்தியமாக அவனால் அவளது முகத்தை தாண்டிப் பார்வையை கீழ் இறக்கி.. வேறு எங்கும் நோக்கத் துணிவு வரவேயில்லை! அது ஏனென்றும் புரியவில்லை!

ஏனோ லோகேஷ் கூறியதைக் கேட்டப் பிறகு, அந்த அறை முழுதும் வெப்பம் கூடி விட்ட உணர்வு அவனுக்கு! ஹெல்மெட் அணியாமலே, தலை முழுக்க வியர்த்துப் போய் விட... நெற்றியோரத்தைத் துடைத்துக் கொண்டவனுக்குத் திடீரென அமர்ந்திருந்த இருக்கை அன்-கம்ஃபர்ட்டபிளாகத் தோன்றியது.

என்ன என்ன என்ன இப்போ?, ஒட்டுமொத்த க்ளாஸ்க்கும் அவ ஃப்ரீ ஷோ காட்டுறா! ஒருத்தன் விடாம எல்லாரும் வாய்ல கொசு போறது தெரியாம ஆ-ன்னு பார்க்குறானுங்க! நான்... நான் ஒருத்தன் பார்க்குறது பெரியக் குற்றம் ஆயிடுமா?, ஏன் இதுக்கு முன்னாடி நான் எந்தப் பொன்னையும் அப்படிப் பார்த்ததில்லையா என்ன?

ஒருவேளை அவ கண்டுபிடிச்சா, செருப்பால அடிச்சுடுவாளோன்றப் பயமா?, ச்ச,ச்ச வெற்றி! இந்த ஃபீடிங் பாட்டிலைப் பார்த்து நீ பயப்பட்றதா?, சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தவன், முன் வரிசையிலிருந்தவனைப் பார்த்தபடி விடாது ஏதோ கூறிக் கொண்டிருப்பவளின் முகத்தை நோக்கினான்.

பெரிய விழிகளின் மேலே அகன்ற நெற்றி! தற்போது அந்த விழி முழுதும் கோபக் கனல் தெறித்துக் கொண்டிருந்தது. காரணம் - நிச்சயம் அவனாகத் தான் இருக்க முடியும்! நேர் வகிடெடுத்து சீவப்பட்டிருந்தத் தலை முடி இடை வரை நீண்டிருந்தது. முகத்தில் மூக்கைத் தேட வேண்டும் போல! வடிவான இதழ்கள்.. ஒரு முறை திறந்தால்.. அத்தனை சீக்கிரம் மூடாதென்பது அவள் லொட.லொடப்பதிலேயேத் தெரிந்தது. Not much impressive! But better than mythili! என்று எண்ணியவனின் மனசாட்சி அடப்பாவி என்பது போல் வாயில் விரல் வைப்பது அவனுக்குப் புரிந்தது.

கத்திரி வெயிலை, உச்சந்தலைல ஒரு பக்கம் வாங்கிக்கிட்டு, ட்ராஃபிக் போலீஸ் முன்னாடி லைசன்ஸ் இல்லன்னு நின்னு கெஞ்சிப் பாரு! அப்போப் புரியும் உனக்கு!

எல்லாஆஆஆம் இவளால! இவளுக்கு இந்தக் கமெண்ட் போதும் என்று உறுமி, மனசாட்சியைத் தூர அனுப்பி விட்டு மீண்டும் அவளை நோக்கினான் அவன்.

ஒற்றைச் செயின் தழுவியிருந்தக் கழுத்திலேயேத் தெரிந்தது அவளது பால் நிறம்! அதைத் தாண்டிச் செல்ல அவனது பார்வைத் தயங்கி விடக் குனிந்து மூச்சை உள் இழுத்து "இன்னா தான் டா ஆச்சு உனக்கு" என்று தன்னைத் தானேத் திட்டிக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தான்.

இது போல் அவன் தொடர்ந்து இரண்டு,மூன்று முறை குனிந்து,நிமிர்ந்து அமர.. அவனை ஓரக்கண்ணில் கவனித்த ஜமுனாவின் பார்வை முழுதும் இப்போது வெற்றியின் மீது!

தயங்கித் தடுமாறியப் பார்வையைப் பிடிவாதமாக நிறுத்தி, நெற்றியில் இடது கையை வைத்தபடி மெல்ல இமை உயர்த்தி அவள் இடையை நோக்கினான் அவன்.

அவள் அணிந்திருந்த கரும்பச்சை நிறச் சேலையின் அடர்நிறத்தோடுப் போட்டிப் போட்டுக் கொண்டு பளீரென எட்டிப் பார்த்த அந்த இரண்டே இஞ்ச் போர்ஷனை அவன் அரை நொடிக் கூடப் பார்த்திருக்க மாட்டான், சட்டெனத் தன் இடது கையால் சேலையை இழுத்துச் செருகிக் கொண்டவளைக் கண்டு வகுப்பே உச்சுக் கொட்டியது.

அய்யோ! போச்சு! நான் பார்த்ததைப் பார்த்துட்டா! - இடித்துரைத்த மனசாட்சி மேலும்,கீழுமாய்க் குதிக்கத் தொடங்க, இப்போது அலட்டிக் கொள்ளாமல் நிமிர்ந்து ப்ளாக் போர்டில் பார்வையைச் செலுத்தினான் அவன்.

"ஹலோ, சிகப்பு சட்டை! எக்ஸ்யூஸ்மி உங்களைத் தான்!" - அவள் தன்னைத் தான் அழைக்கிறாள் என்று தெரிந்தும், கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்தவன், அசிரத்தையாக அவளை நோக்கி என்ன என்றபடி தாடையை உயர்த்தினான்.

"உங்க பேர் என்ன?"

"ஏன் உங்களுக்குத் தெரியாதா?"

"உங்க பேர் என்னன்னுக் கேட்டேன்" - நறநறக்கும் அவளது பற்களின் நடுவே ஒரு முறுக்கைத் திணித்திருந்தால், இந்நேரம் மாவாகி அவள் நாவில் இறங்கியிருக்கும். அத்தனை கடுப்பும்,எரிச்சலும் அவளிடத்தில்!

"வெற்றி"

“மிஸ்டர்.வெற்றி! க்ளாஸ் முடிஞ்சதும் என்னை மீட் பண்ணுங்க” - என்று விட்டு மீதி பாடத்தைத் தொடர்ந்தாள் அவள்.

மிளகாய்ப் பழ சிவப்பாய் மாறிப் போயிருந்த அவளது முகம், அவள் மிதமிஞ்சிய கோபத்தில் இருக்கிறாள் என்பதைப் பறைசாற்றியது. ஆனாலும் சோ வாட்! என்ற ரீதியில் அமைதியாக அமர்ந்திருந்தான் அவன்.

வகுப்பு முடிந்து அனைவரும் காலி செய்த பிறகு பாண்டியனும்,லோகேஷூம் அவனிடம் ‘ஆல் த பெஸ்ட்’ சொல்லி விட்டு நகர்ந்து விட்டனர்.

காலியான வகுப்பறையில், அவன் அதே கடைசி வரிசையில் இன்னமும் அமர்ந்திருக்க, கையைக் கட்டிக் கொண்டு அவனை முறைத்துக் கொண்டிருந்த ஜமுனா இன்னும் மேடையிலேயே நின்றிருந்தாள்.

“என்ன விஷயம்ன்னு சட்டுன்னு சொன்னேனா, நான் வீட்டுக்குக் கிளம்புவேன்” - அலட்டிக் கொள்ளாதக் குரலில் வெற்றி.

“என்னமோ நீயும் நானும் வருஷக்கணக்கா பழகின மாதிரி, வா,போன்னு ரொம்ப உரிமையா கூப்பிட்ற?”

“கிவ் ரெஸ்பெக்ட்! டேக் ரெஸ்பெக்ட்”

“..................” - கண்ணை மூடி எரிச்சலைக் கட்டுப்படுத்தினாள் அவள்.

“நடுரோட்டுல நீ என் பல்லை உடைச்சுடுவேன்னு கை ஓங்குனப்ப உன்னை வெறும் ரௌடின்னு தான் நினைச்சுருந்தேன்! ஆனா.. இப்போ தெரியுது நீ ரௌடி மட்டுமில்ல, பெரிய பொம்பளப் பொறுக்கின்னு” - ஜமுனா

“ஓஹோ! மேடம் எதை வைச்சு இந்த முடிவுக்கு வந்தீங்க?”

“குரு ஸ்தானம்ன்றது மாதா,பிதா வரிசைல அடுத்து வர்றது! பாடம் சொல்லிக் கொடுக்கிறக் குருவை இப்படி அசிங்கமா பார்க்குறியே உனக்கெல்லாம் வெட்கமா இல்ல?”

“என்ன நான் அப்படி அசிங்கமாப் பார்த்துட்டேன்?”

“ஒன்னும் தெரியாத மாதிரி நடிக்காத! பொறுக்கி ராஸ்கல்...”

“ஏய்ய் என்னடி?, 5-அடி உயரத்தோட பார்க்கப் பச்சப்புள்ளையாட்டம் தெரியுறியேன்னு நானும் பொறுமையாப் பேசுனா, ரொம்பப் பேசுற நீ?, ஆமா டி பார்த்தேன்! அதுக்கு என்னான்ற இப்போ?”

“டேய்ய்ய்ய்”

“நான் பார்த்தது மட்டும் தான் உன் கண்ணுக்குத் தெரிஞ்சதா?, ஒட்டுமொத்தக் க்ளாஸூம் அமைதியா இருக்குன்னதும், எல்லாம் பாடம் கவனிக்கிறானுங்கன்னு நினைச்சுட்டியோ?, இன்னிக்கு இங்க உட்கார்ந்திருந்த ஒவ்வொருத்தனும் உன் ரெண்டு இஞ்ச் இடுப்பை வைச்சு 4 பக்கத்துக்குத் தியரியே எழுதுவானுங்க!, வேணும்ன்னா கூப்பிட்டுக் கேட்டுப் பாரு!”

அவன் முடித்ததும் மூச்சு வாங்கக் கோபமும்,ஆத்திரமுமாய் அவனை நோக்கியவளின் முகம் அவமானத்தில் கன்றிச் சிவந்து போயிருந்தது.

“இப்டிப் பார்த்தா?, இப்டிப் பார்த்தா நான் பயந்துடனுமா?, ஏன் டி இழுத்து மூடிட்டுப் போறப் பொன்னுங்களையே சோலிக்கே பீச்சே க்யா ஹேன்னு யோசிக்கிற நாதாரிங்க இவனுங்க! அப்பேர்ப்பட்டவனுங்க முன்னாடி ஷோ காட்டிட்டு, இப்போ வந்து பெருசா கண்ணகி மாதிரி என் முன்னாடி அவதாரம் எடுக்கிற?”

“......................” - அறையில் அடிக்கும் அனல் காற்றுக் கூட அவள் விடும் உஷ்ண மூச்சின் முன்புத் தோற்று விடும் போலும்!.

“ஆமா, உங்களை மாதிரிப் பொன்னுங்களுக்கு என்ன தான் டி பிரச்சனை?, பசங்க பார்க்கனும்ன்னு தான காட்டுறீங்க!, நீங்களே தூண்டி விட்டுட்டு கய்யோ,முய்யோன்னு குதிக்குறது எந்த விதத்துலடி நியாயம்?” - மேலும் என்னவெல்லாம் கூறியிருப்பானோ...

அவன் சற்றும் எதிர்பாராத விதமாக, அவன் அசந்த நொடி பார்த்துத் தன் காலில் அணிந்திருந்த செருப்பைக் கழட்டி அவனை நோக்கி படாரென வீசியிருந்தாள் அவள்.

அவள் குனிந்ததும் திகைத்துப் பேச்சை நிறுத்திய வெற்றி அரை நொடியில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, பட்டென நகர்ந்து அவளது செருப்புத் தாக்குதலிருந்துத் தப்பித்திருந்தான்.

தன்னைக் கடந்து சென்றுக் கீழே விழுந்த செருப்பை நோக்கியவன், ஆத்திரம் தலைக்கேற, உச்சக்கட்டக் கோபத்தில் விறுவிறுவென எழுந்து சென்று மேடையில் நின்றிருந்தவளின் கையைப் பற்றித் தன் புறம் இழுத்து, பின்னோடு வளைத்து..

“காலைல உன் பல்லை உடைப்பேன்னு வாய்ல சொன்னதுக்கே, அந்தக் குதி குதிச்சியே! இப்போ உன் கையை உடைச்சு வீட்டுக்கு அனுப்புறேன், உன்னால முடிஞ்சதைப் பாரு டி! யார் மேல செருப்பைக் கழட்டி வீசுற?, திமிர்ப்பிடிச்ச ராங்கி” என்று கண்கள் சிவக்கக் கர்ஜித்தான் வெற்றி.

# அத்தியாயம் - 2

அன்னிக்குக் காலைல 11.15க்கு ஆபரேஷன். முழு நீள ப்ளூ கலர் கவுன், ஹெட் கவரெல்லாம் போட்டுப் பீதியான மனநிலையோட நான்! அப்பக் கூட நம்மாளு கொஞ்சம் கூட அறிவில்லாம, அவன் செல்ஃபோன்ல என் தோற்றத்தை வேகமாக் க்ளிக் பண்ணிக்கிட்டான். அடங்காதவன்! 'பயப்படாம சிரிடி,இன்னும் 1 மணி நேரத்துல பாப்பா வெளிய வந்துடும்'ன்னு அவன் சொன்னதும் சிரிச்சு, ரெண்டு விரலை நீட்டி நானும் 'V' போஸ் கொடுத்தேன். "தியேட்டருக்கு வெளிய வரைக்கும் தான் நாங்க! உள்ள சமாளிக்கப் போறது நீ தான்!" - சமாதானமா அவன் பேசத் தொடங்கினதும், அவன் மேல சாய்ஞ்சு அழ ஆரம்பிச்சுட்டேன்! என் தோளை கெட்டியாப் பிடிச்சுக்கிட்டவனுக்கும் லைட்டா பயம் வந்துடுச்சுப் போல! எதுவுமே பேசல அவன். ஆபரேஷன் தொடங்குச்சு! அடுத்தப் பத்தாவது நிமிஷம் வீல்ல்ல்ன்னு குழந்தை அழற சத்தம்!!! 'ஆஹா.... வந்துட்டா டா! வந்துட்டா!!'-ன்னு நினைச்சு என் முகத்துல ஒரு இன்ஸ்டண்ட் ஸ்மைல் ஸ்டார்ட் ஆயிடுச்சு! பெண் குழந்தை தான்! நான் முதல் மாசத்துலயே கெஸ் பண்ணிட்டேன்! அடுத்தக் கொஞ்ச நேரத்துல "நிவேதா, குழந்தையைப் பாருங்க"-ன்னு சொல்லிக் கண் கட்டை எடுத்தாங்க. வெள்ளையும்,பிங்க்குமா புத்தம் புதுசா மலர்ந்த ரோஜாப்பூ மாதிரி பொடட்டோ சைஸ்ல என் பட்டுக்குட்டி! சர,சர,சரன்னு கண்ல இருந்துத் தண்ணி இறங்கிடுச்சு எனக்கு! இந்த நொடிக்காகத் தான் பிறவி எடுத்த மாதிரி அப்படி ஒரு நிறைவு மனசுல! "வெல்கம் டூ த வேர்ல்ட் பேபி"-ன்னு சொல்லி "உம்ம்மாஆஆஆ"-ன்னு நான் பதிச்ச முதல் முத்தத்தை அவ கன்னத்துல அழகா வாங்கிக்கிட்டா!

ஒரு பூவின் நிழல்.............................

**அ**க்காலை வேளையில், ஊரே 'ப்ரேக் ஃபாஸ்ட்' உண்ணும் உன்னத நேரத்தில் தானும் எதையேனும் தின்றே ஆக வேண்டுமென்கிறக் கட்டாயத்துடன், வான் 'டேபிளில்' ஜம்மென்று அமர்ந்து விட்ட சூரியநாராயணன், அத்தெருவில் சென்று,வந்து கொண்டிருந்த மனிதத் தலைகள் ஒவ்வொன்றிலும் ஸ்ட்ரா போட்டு அனைவரது எனர்ஜியையும் நொடியில் உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தார்.

'இந்தப் பம்மாத்தெல்லாம் என்னாண்ட பலிக்காது மகராசா' - என்று சூரியனுக்கே சவால் விட்டபடி. சுட்டெரிக்கும் கடும் வெயிலைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது அந்த டீக்கடை வாசலில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு ஒரு கையில் டீயுடனும், மறு கையில் பேப்பருடனும் அமர்ந்திருந்தான் வெற்றி.

“பத்தாவது கூடத் தேறல! ஆனா, படிக்கிறது மட்டும் இங்க்லீஷ் பேப்பரு” - மெதுவாக முணுமுணுத்த டீக்கடைக்காரரை நிமிர்ந்து முறைத்தான்.

“யோவ்! மழைக்காகக் கூடப் பள்ளிக்கூடத்துப் பக்கம் ஒதுங்காத ஆளு நீ! நீ.. என்னைக் கேலி செய்வியா?, ஏ,பி,சி,டி 26 எழுத்தையும் கரைச்சுக் குடிச்சவங்க நாங்க! அதான் இங்க்லீஷ் பேப்பர் படிக்கிறோம்! நீ சாத்திட்டுப் போய்... அந்த ரேடியோவை ஆன் பண்ணு”

“தம்பி, கடை என்னோடதுன்ற நினைப்பு இருக்கட்டும்”

“அடேங்கப்பா! அப்போ இந்தா... நீ போடுற டீயை நீயேக் குடி!, கருமம் டீயாய்யா இது?, மாட்டுக்கு வைக்குறக் கழனித் தண்ணியைக் கொதிக்க வைச்சு க்ளாஸ்ல ஊத்தி வித்துக்கிட்டு, வக்கணையானப் பேச்சு வேற?”

“தம்பி, எஃப்.எம்-ல எந்த ஸ்டேஷன் போடடட்டும்?” - விறைப்புடன் அவர்.

“ம்ம்ம்ம், அந்தப் பயம் இருக்கட்டும்! 93.5 போடு” - தோரணையாகக் கூறியவன்...

**‘பாசம் இருக்குது பக்கம் வந்து அணைச்சுக்க...**

**பாவை தவிக்குது.. பக்குவமாப் புடி...**

**அடியேய்... மனம் நில்லுன்னா நிக்காதடி!’**

-‘அப்புடி போட்டுத் தாக்கு’ ரீதியில் எஸ்.பி,பி ஒருபுறம், சில்க் ஸ்மிதாவைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும் செக்ஸி வாய்ஸூடன் எஸ்.ஜானகி ஒருபுறம்! போதாதா?, பாடலோடு சேர்ந்து உதட்டைக் கடித்துக் கொண்டுத் தலையை ஆட்டியபடி மீண்டும் பேப்பரில் கவனம் செலுத்தினான் வெற்றி.

அச்சமயம் “மிஸ்டர்.மீசை! எனக்கொரு டீ! சுகர் தூக்கலா!!” - என்று குரல் கொடுத்தபடியே வெற்றியின் எதிரே வந்தமர்ந்தான் கதிர்.

அவன் குரலைக் கேட்டதும், நிமிர்ந்தும் பார்க்காமல் புருவத்தைச் சுருக்கிக் கொண்டுத் தீவிரமாகப் பேப்பரை நோக்கினான் வெற்றி.

“என்ன வெற்றி சார்! பேப்பர் படிக்கிறீங்க போல?”

“ஆமா டா பே-பயலே!”

“எனக்கொரு உதவி செய்யுங்களேன்! மணமகன் கம்பி நீட்டியதால் பாதியில் நின்ற திருமணம்ன்னு எதுவும் நியூஸ் போட்டிருக்கான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்றீங்களா?”

“....................” -நிமிர்ந்து முறைத்தான் அவன்.

“இ..இல்ல, நம்மக் கைவசம் திடீர் மாப்பிள்ளை ஒருத்தன் இருக்கான்! ஊர்ல எந்தக் கல்யாணம் நின்னாலும், நான் இந்தப் பொன்னுக்கு வாழ்க்கைக் கொடுக்கிறேன்னு உடனே கிளம்பிருவான்” - அவன் கூறியதும் பட்டெனப் பேப்பரைக் கீழிறக்கினான் வெற்றி.

“இன்னாடா கலாய்க்கிறியா?”

“ஹாஹாஹா.... ஆனா மச்சி, என்னில இருந்துடா உனக்கு இந்தக் கல்யாண ஆசை வந்துச்சு?, ஏரியாக்குள்ள ஒருத்தியும் உன்னை நம்பிக் கழுத்தை நீட்ட மாட்டான்னு இப்டி இறங்கிட்டியோ!”

“டேய் கதிரு! மூடிட்டுப் போயிர்றா! இல்ல, மூஞ்சியை உடைச்சுறுவேன்”

“ஹாஹாஹா.. யோவ் மீசை! சேதி தெரியுமா உனக்கு?” - என்றபடி டீக்கடைக்காரரிடம் விசயத்தைச் சொல்லி அவன் சத்தமாகச் சிரித்துக் கொண்டிருக்க.. எரிச்சல் மண்டிப் போய், அவமானத்தில் கருத்து விட்ட முகத்துடன் பல்லைக் கடித்தபடி அமர்ந்திருந்தான் அவன்.

அமர்ந்திருந்த பெஞ்ச்சை இறுகப் பற்றியிருந்தவனின் பார்வை நேர் வெறித்திருக்க, எதிர் வீட்டிலிருந்து வெளி வந்த மாமியைக் கண்ட கதிர் “அம்புஜம் மாமி, அம்புஜம் மாமி! விஷயம் தெரியுமா உங்களுக்கு?” என்றபடி அவரிடமும் சொல்லிச் சிரிக்க.. கடுப்புடன் எழுந்து நின்றவன்... “டேய் அண்ணா.. ரேஷன் கடைல சுகர் வாங்கினு வரச் சொல்லி உன்னை வெளிய அனுப்புனா, நீ டீக்கடை வாசல்ல என்னாடா பண்ணினு இருக்குற?” என்றப் பெண் குரல் கேட்டு இடது புறம் திரும்பினான்.

கதிரின் தங்கை செல்வித் தன் சோடாபுட்டியைத் தூக்கிக் கோபத்துடன் கதிரை முறைத்துப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

‘வாயைப் பாரு! மூதேவி! தங்கச்சியா இது! என்று போகிற போக்கில் ஒரு கமெண்ட்டை உதிர்த்த வெற்றி, அவளைத் தொடர்ந்து, அருகே நின்றிருந்தவளைக் கண்டு விழிகளைப் பெரிதாக விரித்தான். ஏனெனில் அங்கே நின்றிருந்தது அவனது டீச்சரும், ஹிப்-பியூட்டியுமான மிஸ்.ஜமுனா.

**“வானெங்கும் ஊர்வலம்.. வாவென்னும் உன் முகம்..**

**கண்டால்... மயக்கம்! கலந்தால்.. இனிக்கும்!**

**செனோரீட்டா ஐ லவ் யூ.. மை ஸ்வீட் ஹார்ட் யூ லவ் மீ...”**

-‘ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்..... இவளைப் பார்க்கும் போதெல்லாம் நீங்க நான்-சிங்க்ல உள்ள வர்றீங்க ராஜா சார்!’ என்று முணுமுணுத்தபடி அவன் அவளை நோக்குகையில், அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பார்வையில் பெரிதாக அலட்டலில்லை. ஏன், குறைந்தபட்சம், இவன் எப்படி இங்கே என்கிறத் திகைப்புக் கூட இல்லை! லேசாகத் தலை சாய்த்துக் கொண்டு, கைகளைக் கட்டியபடி மிகப் பொறுமையாக மேலிருந்துக் கீழ் வரை அவனை அளவெடுத்தாள்.

‘என்னாடா இவ! கொஞ்சம் கூடக் கூச்சநாச்சமில்லாம இப்புடிப் பார்க்குறா!’ - கைகள் தானாக, அணிந்திருந்த டீ-ஷர்ட்டை இழுத்து விட்டுக் கொள்ள, பரபரவெனத் தலை முடியையும் கோதி விட்டுக் கொண்டான் வெற்றி.

‘நீ என்னாத்துக்கு டா இந்த ராங்கியைப் பார்த்து இப்பிடிப் பதறுற?’ - என்றுத் திட்டிய அவன் மனசாட்சி ‘அன்னைக்கு அவ இடுப்பைப் பார்க்குறதுக்கு அவ்ளோ யோசிச்ச நீ! ஆனா.. இவளைப் பாரு, உத்துப் பார்த்தே உன் உள் பனியன் சைஸைக் கண்டுபிடிச்சுடுவா போல” என்று கலாய்க்க... முசுட்டு முகத்துடன் உதட்டை வளைத்தவன் ‘இன்னும் இன்னாடி பார்க்குற?, நான் பல்லு விளக்கிட்டேனா இல்லையான்னு தெரியனுமா?, கிட்ட வா! ஊதிக் காட்டுறேன்!’ என்ற ரீதியில் முறைத்து வைத்தான்.

-விடாது லொட,லொடத்த அவன் மனதின் நக்கல்கள் அனைத்தும் அவனது விழி வழியே ட்ராவல் செய்து, சரியாக அவள் செவிகளை அடைந்து விட்டது போலும்! பல்லைக் கடித்தபடி அவனை முறைத்தவள் தானும் முணுமுணுக்கத் தொடங்கினாள்.

இவன் வூட்ல ட்யூப்-லைட் மாட்ட ஸ்டூலே தேவப்படாது! கம்னாட்டி, எப்புடி வளர்ந்து நிக்குது பாரு! நெத்தியை மறைக்குற அளவுக்கு என்னாத்துக்கு இவ்ளோ முடி! சீக்கிரமே சொட்டை விழுந்துடும்ன்னு சாபம் விட்டாக் கூடப் பலிக்காது போலயே! ‘பாட்டி சொல்லைத் தட்டாதே’ பாண்டியராஜனுக்கு அப்புறம் நான் பார்க்குற முதல் ஆந்தை முழிக்காரன் நீ தான் டா-ப்பா ராசா! மூக்கு ஒன்னு தான் அந்த முகத்துலயே உருப்படி! வாயைப் பாரு! அக்கிரமமாப் பேசுறதுக்காகவே செதுக்கி வைச்ச மாதிரி!

மகாமட்டமான வார்த்தைகளால் அவனை மனதுக்குள் வர்ணித்துக் கொண்டிருந்தவள் அருகிலிருந்தக் குப்பைத் தொட்டியில் எச்சில் இலையை நுகர்ந்து கொண்டிருந்தத் தெரு நாயை ஒரு பார்வை பார்த்து விட்டு,மீண்டும் அவனை நோக்கினாள்.

அவள் பார்வையில் வெகுண்டெழுந்தவன் 'அடி ராட்சசி! என்னைத் தெரு நாய்ன்னு சிம்பாலிக்கா சொல்லிக் காட்டுறியா?, வைச்சுக்கிறேன் டி உன்னை!' - என்று கறுவிக் கொண்டு... "ஏய்ய்ய் புல்டோசரு!, அண்ணன்ற மரியாதை இல்லாம, அவனை வாடா,போடான்ற?. கொழுப்புக் கூடிடுச்சாடி உனக்கு?" என்று செல்வியிடம் பாய்ந்தான் வெற்றி.

உதட்டைச் சுழித்தபடி வேறு புறம் திரும்பிய செல்வியைக் கண்டு எரிச்சலுற்று "ஏன் டி கோத்ரேஜ் பீரோ சைஸ்ல இருந்துக்கிட்டுப் பாதித் தெருவை அடைச்சுட்டு நடக்குறியே! உன்னையெல்லாம் உங்கப்பன் சோறு போட்டு வளர்க்குறானா?, இல்ல தவிடு,புண்ணாக்குன்னு எதையும் தின்னு வளர்றியா?" என்று மேலும் கலாய்க்க.... கோபத்தில் மூச்சு வாங்கக் கதிரை முறைத்தாள் அவள்.

"டேய்,டேய்,டேய்... அவ என் தங்கச்சி டா" - முணுமுணுத்தக் கதிரிடம் "அவ எனக்கும் தங்கச்சி தான் டா! ஏன், அவளைக் கலாய்க்க எனக்கு உரிமையில்லயா?" என்று அவன் கேட்டு வைக்க... பரிதாபமாகத் தங்கையை நோக்கினான் அவன்.

செல்வியை அவன் அதட்டியதில் சற்றுத் திகைத்துக் கலவர முகத்துடன் அவனை நோக்கிய ஜமுனாவைக் கண்டுத் திருப்தியுற்றவன், செல்வியிடம் "யார்றி இவ?, உன் ஃப்ரண்டா?, ரெடிமேட் கடை வாசல்ல நிக்கிற பொம்மை மாதிரி இருக்குறா?, என்ன, ஏரியாவுக்குப் புதுசா?" என்று வினவினான்.

அவன் தன்னைப் பற்றிப் பேசியதும் வெடுக்கென நிமிர்ந்து "ஏய்ய்" என்று ஒரு விரலை நீட்டி உறுமியவளைத் தடுத்து அவள் கையைப் பற்றிய செல்வி, அவளை இழுத்துக் கொண்டு விறுவிறுவென நகரப் பார்க்க... அடுத்த நொடி "ஆஆஆஆஆஆஆ" என்கிற கதிரின் சத்தத்தில் திகைத்து.. நின்று.. திரும்பி அவனை நோக்கினாள்.

கதிரின் வலது கை வெற்றியிடம் சிக்கியிருக்க, அதை அசால்ட்டாக வளைத்தபடி "அண்ணன் கேட்டா பதில் சொல்றப் பழக்கம் இல்லையா தங்கச்சி?" என்று வினவினான் வெற்றி.

"மரியாதையா அவன் கைய விடு! இல்ல, நான் போய் எங்கப்பாவைக் கூட்டி வருவேன்" - செல்வி

“அய்யய்யயோ நான் பயந்துட்டேன்! உங்கப்பன் என்ன இந்த ஏரியா தாதாவா?, 2 பாக்கெட் மிச்சரை வாங்கிக் கொடுத்தா, நொறுக்க்க்கினே சாதுவா உட்கார்ந்து கிடப்பான்!, அவனைக் கண்டு நான் பயப்படப் போறேனா?, ஆனாலும், சரியான தின்னிப் பரம்பரைடி நீங்க!”

“டேய் வெற்றி நீ ரொம்பப் பேசுறடா” - கதிர்

“கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ பேசுன? ஹாஹா,ஹாஹான்னு! நீ மாமி கூட மஜா பண்றதுக்கு, நான் தான் கிடைச்சேனா?, ஏன் டா நாயே!”

அவன் தனதுக் கையை மேலும் முறுக்கியதில் துடித்தக் கதிர் “மச்சான், மன்னிச்சுர்றா, மன்னிச்சுர்றா!, என்னைப் பார்த்தாப் பாவமா இல்லையா டா?” எனக் கூற..

“அப்போ நான் கேட்டக் கேள்விக்கு உன் தங்கச்சியைப் பதில் சொல்லச் சொல்லு” என்றான்.

“இப்ப என்ன தெரியனும் உனக்கு?, தைரியமிருந்தா, என் முகத்தைப் பார்த்துப் பேசுடா! சாவுகிராக்கி” - முழுத் தொண்டையில் கத்திய ஜமுனாவைக் கண்டு அவன் கதிரின் கையைக் கொஞ்சம் கூடுதலாய்த் திருக...

“ஆஆஆஆஆஆஆஆஆஆஆ” -வென அங்கு நின்றிருந்தோர் அனைவரும் திரும்பிப் பார்க்குமளவிற்குப் பெருங்குரல் எடுத்துக் கத்திய கதிர் “நீ வேற வாயைத் தொறந்து ஏம்மா அவனை ஏத்தி விட்ற?, டேய், கைய விட்றா... அய்யோ! சர்க்கரையை வாங்கிட்டு வீடு போய்ச் சேராம, வாண்டட்-ஆ வந்து வாயைக் கொடுத்து.. சாரி, கையைக் கொடுத்து மாட்டிக்கிட்டேனே!” என்று புலம்பி விட்டு “அடியேய் செல்வி!, அவன் கேட்டதுக்குப் பதிலைச் சொல்லித் தொலையேன் டி” எனக் கெஞ்சினான்.

“இவ பேரு ஜமுனா. ஏரியாவுக்குப் புதுசு. எங்க வீட்டுக்கு எதிர்ல புதுசா குடி வந்திருக்கிறா! அப்பா இல்ல. அம்மா மட்டும் தான்! அவங்களுக்கும் கை,கால் விளங்காது.. அவ எல்.கே.ஜி படிக்கிறப்ப.......” - மடை திறந்த வெள்ளமாக, ஃபுல் ஸ்டாப் இன்றி வார்த்தைகளைக் கொட்டிய செல்வியை இடைமறைத்தக் கதிர் “மச்சான்,மச்சான்! அவ 5-ங்க்ளாஸ் படிக்கிறப்ப பாவாடைல ஒன்னுக்குப் போனது, எட்டாங்க்ளாஸ் படிக்கிறப்ப வயசுக்கு வந்ததுன்னு அவளைப் பத்தின.. மீதி வரலாறை நான் சொல்றேன் டா! கைய விட்றா.. ப்ளீஸ் டா” என்று கெஞ்ச.. “ம்ம்ம்ம்” என்றபடி பட்டெனக் கையை விட்டான் வெற்றி.

வளைந்திருந்தக் கையை நீவிக் கொண்டு “மனுஷனா டா நீ! காண்டாமிருகம்” என்று கதிர் ஒருபுறம் திட்ட.. செல்வி ஒரு படி மேலே சென்றுத் தன் கையிலிருந்தக் காய்,கறி பையால் அவன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டு விட்டு… தன் கனத்த சரீரத்தை உருட்டிக் கொண்டு ஓடியே விட்டாள்.

உச்சகட்ட எரிச்சலில் அவனை முறைத்துப் பார்த்த ஜமுனாவைக் கண்டு நக்கலாய்ச் சிரித்த வெற்றி “ஏன் டா இந்த ஏரியாவுக்கு வந்தோம்ன்னு உன்னை ஃபீல் பண்ண வைக்கல! என் பேரு வெற்றி இல்ல டி!” என்று முணுமுணுத்தான்.

“என்ன டா சொன்ன?” - கதிர்.

“கை எப்பிடியிருக்கு மச்சான்?, தேறுமா?, இல்ல மாவுக் கட்டு எதுவும் போடனுமா?”

“அடிங்******!!! பரதேசி நாயே! உன்னைப் பார்த்தாலே, ஏரியாக்காரிங்க விழுந்தடிச்சு ஓடுறதுலத் தப்பே இல்லடா”

“சரி சரி வுடு வுடு!, விசயத்துக்கு வா!, அந்த ராங்கிக்குப் பின்னாடி ஏதோ ஹிஸ்ட்ரி இருக்குன்னியே! அதைச் சொல்லு முதல்ல”

“தெரிஞ்சுக்கிட்டு என்னடா பண்ணப் போற?, மச்சான், இந்தப் பில்லி,சூனியம்,ஏவல் மாதிரி நீ ஒரு கெட்ட்ட்ட்ட்ட வஸ்து டா!, இந்த ஏரியால.. நீ கண் பார்த்துக் காதல் சொன்ன பொன்னுங்க நிலைமையெல்லாம் மனசுல வைச்சுக்கிட்டுத் தயவு செஞ்சு இந்தப் பொன்னை விட்ரு டா”

நண்பனை சந்தேகத்துடன் நோக்கியவன் “உனக்கு என்ன அவ மேல அவ்ளோ கரிசனம்?” என்று வினவினான்.

“இது பேரு மனிதாபிமானம் டா மாப்ள!, அந்தப் பொன்னாவது பொழச்சுப் போகட்டுமே-ன்ற நல்ல எண்ணம்”

“அந்த மனிதாபிமானத்தை நீ காட்ட வேண்டியது அவ கிட்ட இல்ல. என் கிட்ட” என்றவன் தொடர்ந்து அவளால் ட்ராஃபிக் போலீஸிடம் கத்திரி வெயிலில் கைக் கட்டி நின்ற கதையையும், டுடோரியல் க்ளாஸில் செருப்பால் டுமீல் வாங்கியக் கதையையும் பொறுமையாய் விவரித்தான்.

“எப்படிப் பார்த்தாலும், ரெண்டு சம்பவத்துலயும் தப்பு உன் மேல தான மச்சி இருக்கு?” -கதிர்

“என்ன டா இன்னொரு கை நல்லா இருக்குன்ற தைரியத்துல வாயை விட்றியா?”

“அ..அ...அப்படியில்ல மச்சி! நியாய,தர்மம்ன்னு ஒன்னு இருக்குல்ல?” - கிட்டத்தட்டப் பம்மினான்.

“நீ நியாய,தர்மம் பார்த்து எந்த ம****யும் புடுங்க வேணாம்!, நான் கேட்டதுக்குப் பதிலைச் சொல்லுடா!, டீச்சருக்கு நம்ம ஏரியால என்ன வேலை?”

“டேய் வெற்றி! நீ நினைக்குற மாதிரி இல்ல டா!, ரொம்பப் பாவம் டா!, அந்தப் பொன்னுக்கு அப்பா இல்ல! இருக்கிற அம்மாவும் பக்கவாதம் வந்துப் படுத்த படுக்கையா இருக்காங்க!, உறவுக்காரங்க யாரையோ அந்தம்மாவுக்குத் துணைக்கு வைச்சுக்கிட்டு இந்தப் பொன்னு சம்பாதிச்சுத் தான் டா குடும்பத்தைக் காப்பாத்துது!”

“அவளுக்கு இருக்கிற வாய்க்கு ஒரு குடும்பம் என்ன, விட்டா... 9 குடும்பத்தைக் கூட ஒண்டியா நின்னுக் காப்பாத்துவா!, டேய்... வெள்ளிக் கிழமையான கோவிலுக்கு வருவா, சனிக்கிழமையான ஷாப்பிங் போவான்ற மாதிரி இன்ட்ரெஸ்ட்டிங்கா எதையாச்சும் சொல்வன்னு பார்த்தா.. இழுத்துனு கிடக்குற அவங்கம்மாவைப் பத்தி இன்ஃபர்மேஷன் சொல்லின்னு இருக்குற?, சாவுகிராக்கி”

“டேய் வெற்றி, சொல்றேனேன்னு தப்பா நினைச்சுக்காத! நீயெல்லாம் இந்த உலகத்துல மனுஷனா வாழ்றதுக்குத் தகுதியே இல்லாதவன் டா! இங்கப் பொறுக்கித் தின்னுட்டிருக்க நாய், மேல பறந்துட்டிருக்கிற காக்கா, இதோ.. இந்தக் கடைல டீ ஆத்திட்டிருக்கிற மீசை, இதுங்களைப் போல நீயொரு ஐந்தறிவு ஜீவியா பிறப்பெடுத்துருக்கனும் டா”

“மூடிட்டுப் போடா வெண்ணை!”

“டேய், அந்தப் பொன்னு நீ நினைக்குற மாதிரி இல்ல!, ஒழுங்கா உன் வாலைச் சுருட்டி வை” -என்று எச்சரித்த கதிரை அவன் கண்டு கொள்ளவேயில்லை.

இந்த அளவிற்கு அவன் அவள் மீது வெறியேறிப் போய் திரிவதற்கானக் காரணம், அந்த செருப்பு சம்பவமும்,அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வும் தான்!

அன்று அவனுக்கிருந்தக் கோபத்தில் அவளை என்ன செய்திருப்பானோ! வாசலருகே அவனுக்காகக் காத்திருந்த லோகேஷும்,பாண்டியனும் பதறி ஓடி வந்துத் தடுத்து சூழ்நிலையின் சூட்டைக் குறைக்க, பயமும்,ஆத்திரமும் கொண்ட ஜமுனாவோ, உடனே கல்லூரி நிர்வாகத்திடம் அவனைப் பற்றி வத்தி வைத்தாள்.

நிர்வாக அதிகாரி அவனை அழைத்து எச்சரிக்கத் துவங்க, அவன் எப்போதும் போல் எகத்தாளமாய்ப் பேசி எகிறிக் கொண்டு நின்றதில் கடுப்பாகிப் போய் அவன் மீது ஈவ்-

டீசிங் கேஸ் பதிவு செய்யப் போவதாக அவர் மிரட்ட... அதற்கும் அசராமல் நின்றவனைப் பாண்டியன் முன் வந்து பேசி மன்னிப்புக் கேட்க வைத்து வெளியே அழைத்து வந்தார்.

நிர்வாகம் முழுதிலும் கெட்ட பெயர் ஏற்பட்டு விட்ட எரிச்சலில் ஜமுனாவின் மீது ஏகக் காண்டுடன் அவன் வலம் வர, அவளோ அன்றைய நாளுக்குப் பிறகு காலேஜிற்கு வருகை தரவேயில்லை.

எப்போது சிக்குவாளெனக் காத்துக் கொண்டிருந்தவனின் கண் எதிரேயே அவளைக் குடி வைத்த விதியை எண்ணி வெற்றிப் புன்னகை பூத்தான் அவன். "****** இருக்குடி உனக்கு!, இந்த வெற்றி யாருன்னு காட்டுறேன்" என்று சூளுரைத்துக் கொண்டான்.

**அ**ன்றிலிருந்து ஜமுனாவை விடாது பின் தொடர்வதை சாப்பிடுவது,துங்குவது போல் அன்றாட வேலையாகவே மாற்றிக் கொண்டான்.

மிஸ்டர்.மீசையின் டீக்கடையிலிருந்துத் தொடங்கி 20,30 வீடுகள் கொண்ட அந்தத் தெரு கதிர்,வெற்றி.ஜமுனா ஆகியோரின் இல்லங்களையும் உள்ளடக்கியிருந்தது, அவனுக்கு ரொம்பவும் வசதியாய்ப் போயிற்று.

ஒவ்வொரு முறையும் ஜமுனா அவனது வீட்டைக் கடக்கையில் ஓடி வந்துத் தெருவில் இறங்கி அவளைத் தொடர்ந்து செல்வதை இந்தப் பத்து நாட்களாக வழக்கமாக்கியிருந்தான்.

அன்றும் அப்படித் தான் கையில் ஒரு டீ க்ளாஸூடன் அவன் மிஸ்டர்.மீசையின் டீக்கடை பெஞ்சில் அமர்ந்திருந்த சமயம், காலை நேர பரபரப்பை முகத்தில் தேக்கியபடி பஸ் ஸ்டாப்பை நோக்கி விறுவிறுவென நடந்து கொண்டிருந்தாள் ஜமுனா.

அவள் சரியாகக் கடையை நோக்கி வரும் வேளை, இளையராஜா வழக்கம் போல நான்-சிங்கில் "தும்ச்சு,தும்ச்சாக்..." என்றபடி 'ஏசுதாஸ்-ஸ்வர்ணலதா'-வைக் கையோடு அழைத்து வர.....

பத்தடி தூரத்தில் பச்சை சேலையில் வியர்த்து விறுவிறுக்க நடந்து வருபவளைக் கண்கள் பளிச்சிட நோக்கியவனுக்கு, அதுவரையிருந்தத் தூக்கத்தோடு கூடிய சோம்பல் 'போயே போச்சு' ரீதியில் ஓடி ஒளிந்து விட்டது!.

இரு கையால் கைலியைத் தூக்கிக் கட்டியபடி எழுந்து நின்றவன் 'என்னா சொல்லு, நம்ம டீச்சர் மாதிரி ஒரு கும்க்கா ஃபிகரை ஏரியாலயேப் பார்க்க முடியாது!' என்று

முணுமுணுத்து விட்டு “போடுய்யா, போடுய்யா! அப்புடிப் போடுய்யா மீச!” என்றுக் கத்தினான்.

“யோவ் மீச! காலங்கார்த்தாலயே எங்களை இப்புடி உசுப்பேத்துறியேய்யா? வெள்ளிக்கிழமையானாலே ஆளு ஒரு டைப்-ஆ மாறிட்ற? ஷாம்பூ போட்டத் தலையும்,மல்லிப் பூவுமா.... அப்ப்ப்பாப்பாபாஆஆஆஆ” - என்ற படி மறைமுகமாக அவளைத் தாக்கியவன்.. தொடர்ந்து....

**“ஆசை நான் கொண்டு வந்தால்.. அள்ளித் தேன் கொள்ள வந்தால்...**

**மயங்கிக் கிறங்க... கிறங்கி உறங்க.... ஓஹோஹோஓஓஓஓஓஓ....”** - எனத் தன் முழுத் தொண்டைக்கும் கத்திப் பாட..... கோபத்தில் உள்ளங்கையை அழுந்த மூடினாள் ஜமுனா.

முதலில் கண்டு கொள்ளாமல் கடந்து சென்று விடத் தீர்மானித்தவள் பின் மனதை மாற்றிக் கொண்டு அவனை நோக்கி விடுவிடுவென நடந்து வந்தாள்.

**“பூவோடு... ஆஆஆஆ.. தேனாட...”** - அவள் மீதிருந்தப் பார்வையை அகற்றிக் கொள்ளாமல்! கொஞ்சமும் அசராமல் இன்னமும் பாடிக் கொண்டிருந்தான் அவன்.

“வாயை மூட்றா கெரகத்துக்குப் பொறந்தவனே!” - ஜமுனா.

“குட்ட்ட்ட்ட்ட்ட்மார்னிங்ங்ங் மிஸ்ஸ்ஸ்ஸ்” - கையைத் தூக்கி நெற்றியில் வைத்து சிறுபிள்ளைத்தனமாய் அவன்.

“என்னடா கடுப்பேத்திப் பார்க்குறியா?”

“என்னைப் பெத்தவ கெரகம்ன்னா, நீ நரகம் டி!”

“இருந்துட்டுப் போறேன்!, எதுக்குப் பின்னாடியே வந்து டார்ச்சர் கொடுக்குற?, என்ன தான் டா பிரச்சனை உனக்கு?, என்னக் கண்டதும் காதலா?, அதெல்லாம் உன்னை மாதிரி வெட்டிப் பசங்களுக்கு வர்றது! எனக்கு அதுக்கெல்லாம் நேரமில்ல. புரிஞ்சதா?”

-இல்லாத மூக்கை விடைக்க முயன்றபடிக் கோபமாய் அவள் பேசியது, அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. உதட்டின் மீது பூத்துப் படர்ந்திருந்த வியர்வைத் துளிகளைக் கண்டு, அவனது ‘லப்டப்’ இதயம் திடீரென ‘திக்திக்’ எனத் துடிக்கத் துவங்க... சட்டெனப் பார்வையைத் திருப்பியவன் அவள் கூறியதை எண்ணிச் சிரித்தான்.

“என்ன டா இளிப்பு?” - ஜமுனா

“இல்ல, பார்க்குறதுக்குக் கில்மா பட போஸ்டர்ல இருக்கிற ஐட்டம் மாறி இருக்குற! உன்னைப் பார்த்து எனக்கு லவ் *** வேற வரனுமாக்கும்?”

“டேய்ய்ய்ய், தெருப் பொறுக்கி”

“பொறுக்கி தான் டி! பச்சைப் பொறுக்கி! சொல்லிருப்பாளுவளே! இந்த ஏரியாக்காரிக! அதனால, பார்த்துப் பதமா நடந்துக்க! இன்னொரு தடவை இப்டி கிட்ட வந்து எகிறுனா, எக்குத்தப்பா எதாவது பண்ணிடுவேன். புரிஞ்சதா?”

-அடிக்குரலில் மிரட்டியவனை இமைக்காமல் முறைத்துப் பார்த்தவள் சட்டெனக் குனிந்து கீழே கிடந்தக் கல்லை எடுத்து அருகிலிருந்தக் குப்பை மேட்டில் ‘சிவனே’-என நின்று கொண்டிருந்த நாயின் மீது விட்டெறிந்தாள்.

வீல்,வீல் எனக் கத்தியபடி அது ஓடி விட, திகைப்புடன் தன்னையே பார்ப்பவனைக் கண்டு நக்கலாய்ச் சிரித்தபடி “யோவ் மீசை” என்று டீக்கடைக்காரரைக் கத்தியழைத்து “சொரி நாயெல்லாம் தெருவுக்குள்ள நடமாடுனா, அடிச்சு விரட்டுறதை விட்டுட்டுப் பால் ஊத்திக் கொடுப்பியா நீ?, உனக்குப் பயமா இருக்குன்னா சொல்லு!, நான் துரத்துறேன்” என்று விட்டு... கெத்தாகத் திரும்பி நடந்தாள்.

அவள் விட்டெறிந்தக் கல்லையும், தூரத்தில் நின்றிருந்த நாயையும் கண்டு விட்டு எச்சில் விழுங்கிய வெற்றி, அசராது தன்னையே பார்த்தபடி வசனம் பேசியவளின் துணிச்சலை எண்ணி வியந்து போனான்.

“என்ன டா வெற்றி?, பேயறைஞ்ச மாதிரி நிக்குற?, நம்ம மணி ஏன் டா அப்பிடிக் கத்துச்சு?” - கதிர்.

“பேய் தான் டா அடிச்சிருச்சு” - வெற்றி

“என்ன டா சொல்ற?”

“அந்தத் திமிர்ப் பிடிச்ச ராங்கி தான் டா மணி மேலக் கல்லை விட்டெறிஞ்சுட்டா”

“யாரு ஜமுனாவா?, ஏன் அப்பிடி செஞ்சுச்சு?”

“ம்ம்ம், என்னை அடிக்க முடியலன்றதால, நாயை அடிச்சு விரட்டுறா!, மச்சி, அவளை எதாவது செய்யனும் டா”

“ஏதாவது-ன்னா?”

“ஏதாவதுன்னா.. ஏதாவது..! என்னைப் பார்த்தாலே, அவ பயப்படனும் டா! அந்த மாதிரி!”

“உனக்கு ஏன் டா அவ மேல இவ்ளோ காண்டு?”

“அவ கண்ணுல ஒரு கெத்து இருக்கு மச்சி!, அது என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுது டா!, பயம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேப்பா போல! கையைப் புடிச்சு இழுத்தும் கூட அசர மாட்டேங்குறா”

“மச்சான், முன்ன,பின்ன போலீஸ் ஸ்டேஷன் போய்ப் பழக்கமிருக்கா டா உனக்கு?”

“இல்லையே! ஏன்?”

“இனிமே கண்டிப்பாப் போவ டா!”

“ப்ச், டேய்ய்ய்”

“நீ சரியில்ல மச்சி, சரியில்ல!, ரொம்ப ஓவராப் போயிட்டிருக்க! ஏரியாக்காரிங்களோட நீ ரெகுலராப் போடுற வாய்ச்சண்டை மாதிரி தெரியல இது!”

“எதை வைச்சு சொல்ற?”

“அந்தப் பொன்னு, காலைல 8 மணிக்கு அது வீட்டு பால்கனில துணி காயப்போட வரும்! நீ சரியா அந்த நேரத்துல உன் வீட்டு பால்கனில தோள்-ல டவலும், வாய்ல டூத் ப்ரஷ்ஷூமா நிற்கிற தான?”

“தப்பு மச்சி! நான் பல்லு விளக்குற நேரமாப் பார்த்து தான் அவ துணி காயப் போட வர்றா!”

“ரெண்டு ஸ்டாப் தள்ளியிருக்கிற லிங்கா மெட்ரிக்குலேஷன்ல அந்தப் பொன்னு வேலை பார்க்குறதைத் தெரிஞ்சு வைச்சுக்கிட்டு நீ தினம் காலைலயும்,மாலைலயும் அவ பின்னாடியே போய் பிக்-அப்,டிராப் பண்ணிட்டிருக்கிற விவரம் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா?”

“ச்ச! லிங்கா ஸ்கூல் பக்கத்துல இருக்கிற ஜெய்குமார் மெஸ்ல தான் நான் வேலை பார்க்குறேன் மச்சி!, அதைப் போய் நீ தப்பா நினைச்சுட்டியே டா”

“டேய் டேய் நடிக்காத டா! அந்தப் பொன்னு மளிகைக் கடைல மல்லிப் பொடி வாங்கப் போனாக் கூட நீ பின்னாடியே போய் பிஸ்கட் வாங்கித் திங்குறன்னு கேள்விப்பட்டேன் நான்! என் கிட்டயே சீன் போட்றியா?”

“ப்ச், ஆமா. நான் அவ பின்னாடி சுத்துறது உண்மை தான். அதுக்கென்ன இப்போ?”

“எதுக்குடா சுத்துற? காதல்,கண்றாவின்னு எதுவும் சொல்லிடாத டா! அதுக்கு பதிலா.. இந்தா.. என் இடுப்பு, இங்க ஒருதடவை கிச்சு,கிச்சு மூட்டி விடு! நல்லா சிரிச்சுப்பேன்”

“டேய்.. அவ மூஞ்சிக்கெல்லாம் அவ்ளோ வர்த் இல்ல”

“பின்ன?”

“தப்பே பண்ணாத என்னைப் பேசியே தூண்டி விட்டுக் கடைசில காலேஜ் ஓனர் போலீஸ்ல கேஸ் போட்ருவேன்னு சொல்லி மிரட்டுற அளவுக்குக் கொண்டு வந்து விட்டாள்-ல?, இவளை.. இவளை நான் சும்மா விட்றதா?, நான் குடுக்குற டார்ச்சர்ல அவ நேரா மகளிர் காவல் நிலையத்துல போய் நிக்கனும் மச்சி! விசயமில்லாதப்பவே கம்ப்ளைண்ட் பண்ணுவேன்னு மிரட்டுனவ, என்னால.. நிஜமாவே கம்ப்ளைண்ட் கொடுக்கனும்! நான் உள்ள போகனும்!”

“அட நாதாரிப்பய மவனே! ஏன் டா அன்னிக்கு நீ அந்தப் பொன்னை எக்குத்தப்பாப் பார்த்தது உனக்குத் தப்பாவே தோணலையா?”

“நான் மட்டுமா டா பார்த்தேன்?, நியாயமாப் பார்த்தா அவ அன்னைக்குக் க்ளாஸ்ல உட்கார்ந்திருந்த 20 பேர் மேலயும் தான் கேஸ் போடனும். அதென்ன என்னை மட்டும் அவமானப்படுத்துறது?,”

“ம்ம், நியாயம் தான்”

“அவ்ளோ இருக்குறவ, மேல இருந்துக் கீழ வரைக்கும் முழுசா மூடிட்டு சுத்தனும் மச்சி! அதை விட்டுட்டு ஃப்ரியா போன தண்ணியை மொண்டு குடிச்சப் பாவத்துக்கு என் மேல கேஸ் போடுவாளோ!”

“உன் உவமைல நான் செத்துட்டேன் மச்சி”

“அதை விடு! முதல்ல அவளை என்ன பண்ணலாம்ன்னு சொல்லு!”

“சொல்றேன் மச்சி! ஆனா.. கொஞ்சம் செலவாகுமே டா!”

“என்ன?”

“நைட் 7 மணிக்கு. டாஸ்மாக்ல சரக்கு வாங்கித் தர்றியா?”

“சாரி மச்சி, அப்போ நான் பிஸி”

“ஏன்?, என்ன பண்ணப் போற?”

“இன்னிக்கு வெள்ளிக்கிழமைல்ல?, நம்மாளு அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு நெய்விளக்கு ஏத்த, அந்த டைம்ல தான் கோயிலுக்கு வருவா மச்சி. என் ப்ரசன்ஸ் அங்க முக்கியம்ல?”

“அ...ர..சமரத்துப் பிள்ளையாரா????? யார்றா அவுரு?” - என்று வாயைப் பிளந்தக் கதிரையும் சேர்த்து அழைத்துக் கொண்டே அன்று மாலை கோவிலுக்குச் சென்றான் வெற்றி.

கோவில் வாசலிலேயே அமர்ந்து விட்டக் கதிரிடம் ‘சாமி,கண்ணை நோண்டப் போவுது’ என்று பழித்து விட்டு ஜமுனாவுடன் இணைந்து கொண்டான்.

“ரெண்டு நெய் விளக்கு கொடுங்க” - கோவில் வாசலிலிருந்தக் கடையில் நின்றிருந்த ஜமுனாவின் அருகேத் தானும் சென்று நின்றான்.

“அது வேணாம், அது வேணாம், இதோ.. அந்த ரெண்டு விளக்கை எடுக்கா, அதுல தான் நிறைய நெய் இருக்கு” - வெற்றியிடமிருந்து வந்தக் குரலில் நிமிர்ந்து அவனை முறைத்தாள் அவள்.

அவளை டீலில் விட்டு “நமக்குத் தெரிஞ்ச ஆளு தான்-க்கா!, விவரம் தெரியாத பொன்னு பாவம்!” என்று கூற..

“ஏய்ய், என்ன தான் டா வேணும் உனக்கு?, எதுக்கு என் பின்னாடியே வர்ற?” - சீறிய ஜமுனாவிடம் “எரிச்சல் வருதா டீச்சர்?, அப்போ போலீஸ் ஸ்டேஷன் போலாமா?. ஈவ்-டீசிங்ன்னு கம்ப்ளைண்ட் கொடுங்க! நான் வேணாம்ன்னா சொல்லப் போறேன்?” - அசால்ட்டாகக் கூறினான் அவன்.

‘வேணாம் ஜம்மு!, இவன் நம்மளத் தூண்டி விட்டு வேலை பார்க்குறான்! இந்தத் திடப்பொருளை ஜடப்பொருளா நினைச்சுக்கிட்டு கண்டுக்காம நட!’ -எனத் தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டு முன்னே நடந்தாள்.

தன்னையே நோக்கியபடிப் பின்னால் நின்றவனைக் கண்டு கொள்ளாது, அவள் விளக்கை ஏற்ற... மேலிருந்துக் கீழ் வரை அவளை ஒரு பார்வை பார்த்தவன்,

“ஏன் டீச்சர் நீங்க இன்னிக்குப் புடவை கட்டல?” - என்றான்.

“……………”

“சுடிதாரெல்லாம் உங்களுக்கு செட்-ஏ ஆவல”

“................”

“நேத்து ஈவ்னிங் உங்க ஸ்கூல் பஸ் ஸ்டாப்ல நின்னு ஒரு மலமாடு கூட சிரிச்சு,சிரிச்சுப் பேசின்னு இருந்தீங்களே! யாரு அவன்?, உங்க லவ்வரா?”

“.............”

“லவ்வெல்லாம் பண்ணாதீங்க டீச்சர்!, நீங்கப் பாட்டுக்கக் கல்யாணம் பண்ணிப் போயிட்டீங்கன்னா, பாவம் உங்கம்மாவை யாரு பார்த்துக்குவா?”

‘அவ்ளோ நல்லவனா டா நீயியியி’ -ரீதியில், நிமிர்ந்து அவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள் அவள்.

லேசாகப் புன்னகைத்தவன் “இல்ல, அதுவே இன்னிக்கோ,நாளைக்கோன்னு இழுத்துன்னு கிடக்கிறதாக் கதிர் சொன்னான்! அந்தத் தைரியத்துல நீங்க லவ் பண்ணிடக் கூடாதேன்னு பயத்துல அப்டி சொன்னேன்!” எனக் கூற பல்லைக் கடித்துக் காதைச் சொறிந்தாள் அவள்.

‘ஹாஹாஹாஹா! நான் பிறப்பெடுத்ததே உன்னை வெறுப்பேத்த மட்டும் தான் டி என் டீச்சரு!’

அவன் கொக்கரித்துக் கொண்டிருக்கையில், அவள் ஏதோ ஸ்லோகத்தை உச்சரித்தபடி விறுவிறுவெனப் பிள்ளையாரைச் சுற்றத் தொடங்கினாள்.

தானும் அவள் பின்னேயே சென்றவன் கையில் வைத்திருந்தப் பூவைப் பிய்த்து ஒவ்வொன்றாக அவள் மீதெறிந்தபடி, அவளோடு சேர்ந்து மரத்தைச் சுற்றினான்.

சகித்துக் கொண்டு 2 சுற்றுக்களை முடித்தவள், மூன்றாவது சுற்றில் நின்று அவன் கையிலிருந்தப் பூக்களைப் பறிக்க முயல.. அது அவள் கைக்குச் சிக்கி விடாத வண்ணம் இறுகப் பற்றிக் கொண்டு நக்கல் சிரிப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“சிரிக்காத டா! பார்க்க சகிக்கல!”

“நீ ஏன் டுடோரியல் காலேஜ்க்கு வர்றதில்ல?”

“..............”

“எனக்குப் பயந்துக்கிட்டு வராம இருந்ததா சொல்லிடாத!, நெஞ்சடைத்து செத்துடுவேன்”

“ச்சி! மொல்லமாரி! என்னைப் பார்த்தா... உனக்கெல்லாம் பயப்பட்ற ஆள் மாதிரி தெரியுதா?”

“அதானே?, நீ பொம்பள தாதாவாச்சே!, பின்ன ஏன் வர்றதில்ல?”

“உங்களுக்கு க்ளாஸ் எடுத்திட்டிருந்த ரமணி சார் 1 மாசம் லீவ்ல போனதால, நான் வந்தேன்! டெம்ப்ரரி-ஆ!”

“வந்து... என் கூடத் தகராறு பண்ணி, காலேஜ்ல என் பேரைக் கெடுத்துட்டு சைலண்ட்-ஆ எஸ் ஆய்ட்ட?”

“என்ன உன் பேரைக் கெடுத்தேன்?”

“மேனேஜ்மெண்ட் வரைக்கும் போய் எதுக்குடி என்னைப் பத்தி கம்ப்ளைண்ட் கொடுத்த?”

“பின்ன?, பட்டப்பகல்ல, நடு வகுப்புல வைச்சு நீ என் கையைப் புடிச்சு இழுப்ப!, நான் அமைதியா போயிடனுமா?”

“நான் என்ன ஆசைப்பட்டா உன் கையைப் புடிச்சு இழுத்தேன்! நீ ஓவர்-ஆ பேசுன, நான் கோவப்பட்டேன்!”

“அப்போ நீ தப்பே பண்ணலையா?, தப்பும் பண்ணிட்டுத் தெனாவெட்டாப் பேசுறது தான் உன் இயல்பு போல”

“என் இயல்பைப் பத்தி விமர்சனம் பண்ண உனக்கு என்னடி உரிமை இருக்கு?”

“ஏய், இப்போ என்ன பண்ணனும்ன்ற?, நீ ரொம்ப நல்லவன்னு உன் காலேஜ்ல உன்னைப் பத்தி ஒரு லெட்டர் எழுதிக் கொடுக்கவா?”

“நீ ஒரு ****-ம் புடுங்க வேணாம்”

“பின்ன?”

“ஏய், எனக்குத் தெரியாது டி! எனக்குக் கோபம் போற வரைக்கும் இப்பிடித் தான் உன் பின்னாடி வருவேன்” - புருவத்தைச் சுருக்கியபடி முசுட்டு முகத்துடன் கூறியவனைக் கண்டு வாயைப் பிளந்த ஜமுனா “சரியான சைக்கோ” என்று முணுமுணுத்து விட்டு..

“300 ரூபா போதுமா உனக்கு?” - என்றாள் சம்பந்தமில்லாமல்.

“எதுக்கு?”

“ம்ம்ம், நீ பார்க்குற பாடி-கார்ட் வேலைக்குத் தான்”

“ம்ஹ்ம்... கூட 200 போட்டு 500-ஆ குடு”

“மானம் கெட்டப் பரதேசி”

“சரி,சரி நகரு நகரு! இன்னும் 4 சுத்து பாக்கியிருக்குல்ல?” - என்று அவளை இடித்துக் கொண்டு முன்னே சென்றவனை எந்த வகையில் சேர்ப்பதென்றேப் புரியவில்லை அவளுக்கு.

தானாகப் பூத்த முறுவலை அடக்கியபடி பின்னே வந்தவளைத் திரும்பி நோக்கியவன் “பரவாயில்லையே! டீச்சருக்கு சிரிக்கவெல்லாம் தெரியுது” என்று முணுமுணுக்கையில்.... வெளியிலிருந்தப் பூக்கடை ரேடியோவில் வழக்கம் போல் இளையராஜா! இம்முறை ஜெயச்சந்திரன் மற்றும் எஸ்.ஜானகியோடு!

‘வந்துட்டாருய்யா!, இவ கூட இருக்கும் போது மட்டும் மனுஷன் எங்க இருந்து தான் என்ட்ரி கொடுப்பாரோ! - என்றெண்ணிக் கொண்டாலும், அடக்கப்பட்ட சிரிப்புடன் தன்னைக் கடந்து செல்லும் ஐமுனாவைக் கண்ட போது இந்த முறை அவரது இசை அவனோடு ‘சிங்க்’-ல் இருப்பதாகவே தோன்றியது அவனுக்கு.

**‘நிலை மீறி ஆடும் மீன்கள் ரெண்டும்... ஒரே கோலம்..**

**மேல் வானத்தில் ஒரு நட்சத்திரம்... கீழ் வானத்தில் ஒரு பெண் சித்திரம்!**

**எண்ணம் ஒரு வேகம்! அதில் உள்ளம் தரும் நாதம்...**

**தாலாட்டுதே..............................................................’**

# அத்தியாயம் - 3

**ஆர்**.பொன்னி,

பூப்புனித நீராட்டு விழா.

02.10.2013.

- தெர்மாகோலினால் பொறிக்கப்பட்டிருந்த அந்த பேனரைக் கடந்துத் தன் தோளில் பெரிய வாழைத் தாரைச் சுமந்தபடி அந்தப் பெரிய வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான் வெற்றி.

“டேய் வெற்றி, பந்தி பரிமாற ஆள் பத்தலையாம்!, ஒட்டகச் சிவிங்கி மாதிரி உயரமும், காட்டெருமை மாதிரி பாடியையும் வெச்சுக்கிட்டு வெட்டியாத் தான சுத்துற நீ?, போய் ஒரு கை கொடுத்து உதவக் கூடாதா?” - நக்கல் குரலில் நண்பன் பிரசாத்.

“ஆமா டா! வேலை செய்ய ஆள் இல்லன்றப்போ மட்டும் என்னையக் கூப்பிடுங்க! மத்த நேரமெல்லாம் தீண்டத்தகாதவன் மாதிரி ஒதுக்கி வைச்சுடுங்க”

“அது...... உன் ராசி அப்டி மச்சி”

“டேய் பரதேசி”

“ம்க்க்க்கும்!, டென்ஷன் ஆகாத டா!, என் தங்கச்சி விசேஷத்துல நீ வேலை பார்க்காம, யாரு டா வேலை பார்ப்பா?”

“பின்ன ஏன் டா போன வாரம் கதிர்க் கிட்ட, என் தங்கச்சிக்குக் கல்யாணம்ன்னு ஒன்னு வைச்சா கண்டிப்பா வெற்றியைக் கூப்பிட மாட்டேன்னு சொல்லிருக்க?”

“உளறிடுச்சா அந்த நாய்?, அவன் உனக்கு ரொம்ப நேர்மையா இருக்கான் மச்சி, அதெல்லாம் சும்மா ஒரு பேச்சுக்குச் சொல்றது தான் டா!, நீ இப்ப பரிமாறப் போவியா மாட்டியா?. அதைச் சொல்லு முதல்ல”

“போறேன் டா போறேன்! போய்த் தொலையுறேன்” - எரிச்சலுடன் மொழிந்தவன் நேராக பந்தி நடக்குமிடத்திற்குச் சென்றான்.

சாம்பார் வாளியுடன் பிஸியாகச் சுற்றி வந்தவனைக் கலாய்க்கவென்றே பந்தியில் அமர்ந்திருந்தனர் மாலதி மற்றும் குழுவினர்.

“வந்துட்டான் டி! ஆந்த்ராக்ஸ்” - ரேகா

“அவன் ஊத்துற குழம்பைத் தின்னா.. நாம குடல் வெந்து சாகுறதுக்கு நிறைய வாய்ப்பிருக்கு. பார்த்து சாப்பிடுங்க!, ஏன்னா../ நம்மாளு கை ராசி அப்பிடி” - அவன் காது படக் கத்திக் கூறினாள் மாலதி.

“மூடின்னு தின்னுங்கடி! கோபம் வந்து உங்க மூஞ்சிகளையெல்லாம் சாம்பார்ல முக்கி எடுத்துடப் போறேன்” - என்ற வெற்றி, தொடர்ந்து அடுத்த இலைக்கு நகர்கையில்... திடீரென இளையராஜா ஒலிக்கத் தொடங்கினார்.

**‘போதும் இனிப் பேச்சு! அனல் வீசுது மூச்சு...**

**ஒரு மாதிரி ஆச்சுது! ஆஜா.. ஆஜா...’**

‘காரணமில்லாம மனுஷன் வர மாட்டாரே என்றெண்ணியவன், ஒரு உள்ளுணர்வில் திரும்பிப் பார்க்க... எதிர் வரிசையில் கடைசி ஆளாக அமர்ந்திருந்த ஜமுனா நக்கல் சிரிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதுவரை மனதில் மண்டிக் கிடந்த எரிச்சல் மறைந்து விட முழுப் புன்னகையுடன் அவளை நெருங்கினான் வெற்றி.

“டீச்சர்ர்ர்ர்ர், சாம்பார் ஊத்தட்டுமா???” - ஏகத்துக்கும் புன்னகை நிறைந்தக் குரலுடன் ஹை-பிட்சில் கத்திக் கேட்டவனைக் கண்டு பல்லைக் கடித்தாள் ஜமுனா.

“ஏன் டா கத்துற?” - ஜமுனா.

“எல்லாம் உங்களைப் பார்த்த எக்ஸைட்மெண்ட் தான்!”

“சரி அடங்கு!”

“ஈஈஈஈஈஈஈ... சாம்பார் ஊத்தட்டுமா வேணாமா?, சொல்லுங்க டீச்சர்” - சிணுங்கிக் கொண்டு வழிந்தான்.

“ஊத்துறது சாம்பார், இதுல ஊ,ஊன்னு இளிப்பு வேற?, ஒன்னும் வேணாம், போடா”

-அவள் துரத்தியடித்தாலும் அசராமல் “டீச்சர், லட்டு!, டீச்சர், பூரி!, டீச்சர், சட்னி!” என்று அந்தப் பந்தியில் அமர்ந்திருந்தோர் அத்தனை பேரும் காண்டாகி முறைக்குமளவிற்கு அவளை ஏகத்துக்கும் கடுப்பேற்றினான் வெற்றி.

“என்ன ஆந்த்ராக்ஸூ!, அந்தப் பொன்னு ஏரியாவுக்குப் புதுசுன்னதும் கவனிப்பெல்லாம் பலமா இருக்கு!” - மாலதி அண்ட் கோ.

“ஆமாடி! இன்னான்ற அதுக்கு?” - வெற்றி

“அம்மாடி ஜமுனா!, இந்த ஏரியாக்குள்ள உயிரோட நடமாடிட்டு இருக்குற கெட்ட்ட்ட்ட ஆத்மா இவன்! இப்போ உன் பின்னால சுத்தின்னு திரியுறான்! பார்த்து கேர்ஃபுல்-ஆ இருந்துக்க! அப்புறம், இந்த ஏரியாவுக்கு வந்ததால தான், என் வாழ்க்கை இப்பிடி ஆயிடுச்சுன்னு இந்தப் புனித ஸ்தலத்து மேல பழி போடக் கூடாது, புரிஞ்சதா?” - ஜமுனாவைக் கை நீட்டி அழைத்து, மாலதி கிண்டலடிக்க.. அவளோ பொறுமையாக வாயிலிருந்த வடையை மென்று முழுங்கி விட்டுப் பின்...

“ண்ணா... ஒரு பூரி” - என்றாள்.

என் பேச்சுக்கு இவ்ளோ தான் ரியாக்ஷனா ரீதியில் முகத்தை வைத்துக் கொண்ட மாலதியைக் கண்டு புன்னகைத்த வெற்றி, தன்னைக் கடந்து சென்ற நபரின் கையிலிருந்த அப்பளத்தில் ஒன்றை எடுத்து மாலதியின் முகத்தில் பட்டென அடித்து “இடத்தைக் காலி பண்ணுடி என் இசுக்கு” என்று விட்டு “டீச்சர், பாயாசம்?” என்றபடி ஜமுனாவின் அருகே சென்றான்.

அடுத்த மூன்று மணி நேரம் பந்தியில் பிஸியாகி விட்டவன், அங்குமிங்கும் ஓடி மற்ற வேலைகளையும் முடித்த போது அவனது நண்பர் பட்டாளம் உண்டு விட்டு வேறு வேலையாய் வெளியில் சென்றிருந்தனர்.

“டேய் வெற்றி, எவ்ளோ நேரம் டா வேலை பார்த்துட்டிருப்ப?, முதல்ல போய் சாப்பிடுடா” - பிரசாத்.

“போறேன் டா! பசங்க எவனையும் காணோம்?, எங்கடா போனானுங்க?”

“அவனுங்கள்லாம் எப்பவோ கொட்டிக்கிட்டானுங்க! நானும் வேற வேலையா வெளிய போறேன்! நீ போய்ச் சாப்பிடு!” என்ற பிரசாத் அங்கு நின்றிருந்தத் தன் தங்கையின் தோழியிடம் “மலரு, போய் அண்ணனுக்குப் பரிமாறும்மா” எனக் கூறிச் சென்று விட்டான்.

அந்தப் பெண் அவனை ஒரு மாதிரி நோக்கியதிலேயே ‘இவள் நிச்சயம் தனக்குப் பரிமாறப் போவதில்லை’ என்றுணர்ந்த வெற்றி, தானே பந்தி நடந்த இடத்திற்குச் சென்றமர்ந்தான்.

‘ஓடி,ஓடி வேலை பார்த்தவன் வயித்துக்குச் சோறு போடக் கூட ஆள் இல்லையா இங்க?’ - புலம்பியபடி இலையை விரித்தவன் இட்லி,பூரியென ஒவ்வொன்றையும்

அதில் இட்டுக் கொண்டிருந்த நேரம் அவன் கையிலிருந்தக் கரண்டியைப் பறித்தபடி முன்னே வந்து நின்றாள் ஜமுனா.

"ஏய்ய்ய்" - என்றபடி எரிச்சலுடன் திரும்பியவன் அவளைக் கண்டதும் திகைத்து "என்ன?" என்றான்.

"நான் பரிமாறுறேன். நீ உட்கார்ந்து சாப்பிடு" - என்றாள்.

தானாகப் பிளந்து கொண்ட வாயை இரு கைகளாலும் பொத்திக் கண்களைப் பெரிதாக விரித்தவன் "என்ன டீச்சர் சொன்னீங்க?" என்று வினவினான்.

"ப்ச்" என்றபடி முகத்தைச் சுருக்கியவள் "ஓடி ஓடி வேலை செஞ்சியேன்னு பாவம் பார்த்து, நமக்கிருக்கிற முன் பகையைக் கூட மனசுல வைச்சுக்காம, பரிமாற வந்திருக்கேன்! மரியாதையா உக்காரு" என்றாள்.

"நீங்க சொன்னப்புறம் மறுப்பேனா?, இதோ உட்கார்ந்துட்டேன்" - என்றபடி சிரித்துக் கொண்டே அமர்ந்தவன்.. அவள் சாம்பார்,சட்னியை ஊற்றியதும் ஆர்வமாய் அள்ளி சாப்பிடத் தொடங்கினான்.

"புகழ் மாமாக்கு அப்புறம் எனக்குப் பாசமா சோறு பரிமாறுற முதல் ஆளு நீங்க தான் டீச்சர்"

"பரிமாறுறேன்னு மட்டும் சொல்லு. அதென்னா 'பாசமா'-ன்னு ஒரு கொடுக்கு! ஆமா, யாரு புகழ் மாமா?"

"எங்கப்பன் கடைல வேலை செய்யுற ஒரு நல்ல மனுஷன்"

"ஆமாமா! உங்கப்பாவைப் பத்திக் கேள்விப்பட்டேன்! 3 ஹோட்டல் வைச்சு நடத்துறாராமே!, பெரிய பணக்காரன் தான் போல நீ"

"ஹோட்டல் நடத்துறது எங்கப்பன். நான் இல்ல"

"என்னிக்குன்னாலும் அதெல்லாம் உனக்குத் தான சொந்தம்?"

"ம்ஹ்ம் சாகக் கிடந்தாலும், அந்தாளு காசுல பச்சத் தண்ணீ கூட குடிக்க மாட்டேன்"

"ஏன்?"

"அது ஒரு பெரிய கதை டீச்சர்"

"அதைக் கேட்கல்லாம் எனக்கு நேரமில்ல. குருமா வைக்கவா?"

“ம்ம்ம்” - என்றவன் அடுத்த இரண்டு நிமிடம் அமைதியாகச் சாப்பிட்டான்.

திடீரென தூரத்தில் சலசலத்தக் குரல்களைக் கேட்டு இருவரும் திரும்பி நோக்கினர். ஏதோ அதிசயத்தைக் காண்பவர்கள் போல இருவரையும் கண்ட மாலதி அண்ட் கோ தங்களுக்குள் குசு,குசுவென ஏதோ பேசிக் கொள்ள... தோள் குலுங்கச் சிரித்தபடி உணவை அடைத்துக் கொண்டிருந்தவனை சுருக்கியப் புருவங்களுடன் நோக்கினாள் ஜமுனா.

“ஒவ்வொரு தடவையும் உன்னைப் பார்க்கும் போது, மானக்கேடா பேசுறாளுங்களே! இதுங்களோடப் போய் நீ சிறுபிள்ளைத்தனமா வாய்ச்சண்டை போட்டுட்டுத் திரியுற?”

“ப்ச், பத்து வயசுல இருந்து இதுங்களைப் பார்க்குறேன்! தகராறு பண்ணியே பழகிப் போச்சு”

“என்ன ஜென்மமோ நீ!, இதுவே நானா இருந்திருந்தா பல்லைப் பேத்து இனி அவளுங்க பேசவே முடியாத படி செஞ்சிருப்பேன்”

“நீங்க ஏன் டீச்சர் கோவப்பட்றீங்க?, செருப்பு,கல்லுன்னு நீங்க என் மேல யூஸ் பண்ணின ஆயுதங்களுக்கு இவங்க எவ்ளவோ பெட்டர் தான?”

“என்ன நக்கலா?, ஆனா.. அதுங்களைக் குறை சொல்லிப் பிரயோஜனம் இல்ல! அவளுங்க இவ்ளோ காண்டாகுறாளுகன்னா... நீ.. கண்டிப்பா ஏதோ பெரிய சம்பவமா பண்ணியிருப்ப”

“ப்ச், இதுங்கள்லாம் சின்னப் பொன்னுங்க டீச்சர்! இதுங்களை வைச்சு நான் சம்பவம் பண்ண நினைப்பேனா?, ஒன்றரை மாசமா உங்க பின்னாடி சுத்துறேன்! இன்னும், என்னைப் பத்தி உங்களுக்குச் சரியா புரியலையே!”

“யாரு சின்னப்பொன்னு?, அந்த மாலதியா?, உன் கூடவே சுத்தினு இருப்பானே ஒரு பன்னாட! எந்நேரமும் முழங்கால் வரைக்கும் ட்ரௌசர் ஒன்னைப் போட்டுக்கிட்டு?”

“யாரைச் சொல்றீங்க?, கதிரையா?”

“ஆமாமா, அவன் தான்! இந்த மூதேவி, அந்தக் கஸ்மாலத்தோட சேர்ந்துக்கினு நம்ம சேட்டு வூட்டு மாடியில கொஞ்சினு உட்கார்ந்திருந்ததை, நான் என் ரெண்டு கண்ணால பார்த்தேன்! இவ, இவ சின்னப் பொன்னா?”

“பார்றா! டீச்சர், இந்த ஏரியாக்கு நீங்க வந்து கொஞ்ச நாள் தான் ஆகுது! ஆனா.. ஆல் இன்ஃபர்மேஷன் கலெக்ட் பண்ணி வைச்சிருக்கீங்க!”

“பின்ன, உன்னை மாதிரி ஆளுங்களையெல்லாம் சமாளிச்சாகனுமே”

“அப்டின்னா, உங்க கீழ் வீட்டு கனகா-அக்காப் புருஷன் சுந்தரேசன், நீங்க நைட்டியைப் போட்டுக்கிட்டுத் தண்ணி பிடிக்கும் போது, கையில சுருட்டோடக் காமப் பார்வை பார்க்குறதையும், பக்கத்துத் தெரு ஜெகதீஸ், தினம் நீங்க பஸ் ஸ்டாப்ல நிற்கிற நேரமாப் பார்த்து, அவனோட பல்சர் பைக்ல ஸ்டண்ட் காட்டி சீன் போடுறதையும் தெரிஞ்சு தான் வைச்சிருக்கீங்க? இல்லையா?” - இட்லியை சாம்பாரில் ஊற வைத்தபடி அசால்ட்டாகக் கேள்வி கேட்டவனை...

“அடப்பாவி! இதெல்லாம் உனக்கு எப்பிடி டா தெரியும்?” - என்று வியப்புடன் வினவினாள்.

“இவனுங்க மட்டுமில்ல! நம்ம தெருவுல இன்னும் 2,3 பேரு உங்களை உஷார் பண்ணுறதுக்கோசரமே தினம் லைஃப்-பாய் சோப்புப் போட்டுக் குளிச்சுன்னு சுத்துரானுங்க! இந்த ‘பாடு’-களுக்கு மத்தில உங்க பின்னாடி ஜென்டிலா சுத்துற ஒரே ஆண்மகன் நான் மட்டும் தான்! நல்லாத் தெரிஞ்சுக்கோங்க”

“அதுல உனக்கொரு பெருமை வேற! பரதேசி!”

“பேச்சோட பேச்சா, அப்டியே அந்தப் பாயாசத்தை எடுங்க டீச்சர்! அந்த அப்பளத்தையும்!”

“என்ன காம்பினேஷன் இது?, கண்றாவி”

“நீங்க பூரிக்குத் தேங்காய்ச் சட்னி தொட்டு சாப்பிட்டீங்களே! அதை விட இது நல்ல காம்போ தான்”

“ம்க்கும்”

“அப்புறம், உங்களுக்கு வேற என்னல்லாம் பிடிக்கும் டீச்சர்?”

“வேற-ன்னா?”

“பொதுவா சொல்லுங்க!, ம்ம்ம்ம், இளையராஜான்னா எனக்கு உயிர்! உங்களுக்கு?”

“ஓ!, அதான் ஏரியா-ல நீ அட்டெண்ட் பண்ற ஃபங்க்ஷன் அத்தனைலயும் வெறும் இளையராஜா பாட்டா ஓடுதா?”

“யெஸ்! நான் கேட்டக் கேள்விக்குப் பதில் சொல்லுங்க டீச்சர்”

“ப்ச், அவர் பாட்டைப் பிடிக்காதவங்க யாராவது உலகத்துல இருக்க முடியுமா?”

“ம்ம்ம், அப்புறம் எஸ்.ஜானகியைப் பிடிக்குமா?”

“பிடிக்கும்”

“எஸ்.பி.பி?”

“ரொம்பப் பிடிக்கும்” - இப்போது அவள் குரலிலும் குதூகலம்.

“கே.ஜே.யேசுதாஸ்?

“ம்ம்ம்”

“ஜென்சி?”

“ரொம்ப....”

“வெற்றிச்செல்வன்?”

“ம்ம்,ரொம்ப ரொம்ப! ஏய்,ஏய்,ஏய்.... இரு இரு! அப்டி ஒரு சிங்கர்-ஏ கிடையாதே! அடச்சீ பன்னாட! பேச்சு வாக்குல உன் பேரைக் கோர்க்குற இடைல?” - அவள் கோபமாய்க் கூறியதும் பொறுமையாக இலையை மூடி விட்டு எழுந்தவன்..

“இந்த நாளை உங்க டைரில நோட் பண்ணி வைச்சுக்கோங்க டீச்சர்! வெற்றிச் செல்வனை ரொம்ப,ரொம்பப் பிடிக்கும்ன்னு ஒரு ஸ்டேட்மெண்ட்டை சொல்லியிருக்கீங்க! நாளைக்கு மாத்திப் பேசுற வேலையெல்லாம் வைச்சுக்கக் கூடாது. சரியா?” - என்று தோரணையாகக் கூற.. வாயடைத்துப் போய் நின்று விட்டவள்... கை கழுவுவதற்காக முன்னே சென்றவனைத் தொடர்ந்து “டேய் கருமாந்திரம் பிடிச்சவனே” என்று கத்தியபடியே சென்றாள்.

“இதோ பாரு, நீ பண்ணது ஃப்ராடுத்தனம்! கண்டதைக் கேட்டு என் வாயைப் பிடுங்கிட்டு, என்ன டயலாக் அடிக்கிற?”

பதில் சொல்லாமல் சிரிப்புடன் கையிலிருந்தத் தண்ணீரை உதறினான் அவன்.

“என்னடா சிரிப்பு?, வாயைத் தொறந்து பதில் பேசுடா” - அவள் குதித்துக் கொண்டிருக்கையிலேயே.. வாசலில் கட்டப்பட்டிருந்த ஸ்பீக்கரிலிருந்து எஸ்.பி.பி...

**“பேசும் பிள்ளையே... ஈர முல்லையே! நேரமில்லையே இப்போது!”** - எனப் பாட...

கடகடவென சிரித்தவன் “நான் சொல்ல நினைச்சத அவர் சொல்லிட்டார்! நீங்க சொன்னது சொன்னது தான் டீச்சர்!, அதுக்கு மேல நீங்க போட்ற சண்டைக்குப் பதில் சொல்ல எனக்கு நேரமில்ல. வேலையிருக்கு. வர்ட்டா?” - என்று ஸ்டைலாக சல்யூட் வைத்துக் கூறி விட்டு விறுவிறுவெனச் சென்று விட்டான் வெற்றி.

**‘கண்ணாளனைப் பார்த்து... கன்னோரங்கள் வேர்த்து...**

**சாலையோரம் சோலை ஒன்று வாடும்... சங்கீதம் பாடும்..’** - ஜமுனாவின் பற்கள் நறநறத்துக் கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமல் எஸ்.பி.பி தொடர்ந்து பாடினார்.

*‘மதுரையருகே நடந்த ஆணவப் படுகொலையினால் இளம் காதல் ஜோடி கழுத்தறுத்துக் கொல்லப்பட்டக் கொடூரச் சம்பவம்’*

-ஒற்றைப் படுக்கையறை கொண்ட ஜமுனாவின் இல்லத்தில் ஒலித்த டி.வி சத்தம் அக்கம்பக்கத்து வீடுகளுக்கும் சேர்த்து செய்தி பரப்பிக் கொண்டிருந்தது.

“அடப்படுபாவிப் பயலுவளா! காதலிக்கிறது குத்தமா டா?, உசுரை விட ஜாதி,மதம் பெருசாப் போச்சு! என்னத்த சொல்ல?” - வாய் விட்டுப் புலம்பியபடித் தனது வருத்தத்தைப் பதிவு செய்த சரோஜா, தன் தாய்க்கு உணவு புகட்டிக் கொண்டிருந்த ஜமுனாவைப் பரிவுடன் நோக்கினார்.

“ஏன் கண்ணு, உனக்குக் கிடைக்குறதே ஒரு நாள் லீவ் தான்! ரெஸ்ட் எடுக்காம, நீ ஏன் இதையெல்லாம் செய்யுற?, எப்பவும் போல நான் பார்த்துக்க மாட்டேனா உங்கம்மாவை?” - சரோஜா.

தன் தாயின் கடை வாயில் வழிந்த நீரைத் துடைத்தபடி சரோஜாவிடம் புன்னகைத்த ஜமுனா “ரெஸ்ட் எனக்கு மட்டும் தானா?, உனக்கு வேண்டாமா?” என்றாள்.

அதற்கு சரோஜா பதில் சொல்லும் முன்.. அவர்களின் வீட்டினுள் நுழைந்த செல்வி “ஏ ஜம்மு!, என்ன நீ அதிசயமா இன்னிக்கு வீட்ல இருக்கிற?, ஃப்ரீயா இன்னிக்கு?” என்று விசாரித்தாள்.

“ஃப்ரீ-ஆத் தான் கண்ணு இருக்குறா. எங்கயாச்சும் வெளிய கூப்பிட்டுப் போயேன்! வயசுப் பொண்ணு மாதிரியா நடந்துக்கிறா?, வீட்டு வேலை,பள்ளிக்கூட வேலைன்னு முழு நேரமும் ஓய்வில்லாமத் திரியுறா! அவங்கப்பா இறந்து போனதிலிருந்து, இந்த 5 வருஷமா.. கால்-ல சக்கரத்தைக் கட்டிட்டு ஓடுது புள்ள!, தனக்குன்னு எந்த சந்தோசத்தையும் தேடிக்காம...”

“ப்ச், புலம்பாத சரோம்மா!, நான் சந்தோசமாத் தான் இருக்கேன்னு எப்பிடி காட்டச் சொல்ற?., முழு நேரமும் ஈ-ன்னு இளிச்சவாயா சுத்துனா.. நம்புவியா?”

“ஏய் ஜம்மு, சரோஜாம்மா சொல்றது சரி தான்! வா, நாம வெளியே போகலாம். இன்னிக்கு நம்ம ஏரியா பசங்களுக்கும், பக்கத்து ஏரியா பசங்களுக்கும் பெட் மேட்ச் நடக்குது! ஜாலியா இருக்கும்! வா.. போய்ப் பார்க்கலாம்” - என்று குதூகலமாகக் கூறிய செல்வி, வரவில்லையெனக் கூறிய ஜமுனாவிடம் வம்பு செய்து அழைத்துக் கொண்டு சென்றாள்.

அடிக்கின்ற வெயிலைப் பொருட்படுத்தாது, அந்தச் சிறிய மைதானத்தைச் சுற்றிக் கூட்டம் கூடியிருக்க, அங்கு நின்று கொண்டிருந்த ஐஸ் வண்டிக்காரரிடம் ஆளுக்கொரு குச்சி ஐஸ் வாங்கிக் கொண்டுக் கூட்டத்தோடு ஐக்கியமாயினர் செல்வியும்,ஜமுனாவும்.

அவர்கள் சென்ற நேரம் ஸ்ட்ரைக்கர் எண்ட்-இல் கைலியுடன் வெற்றி, ரன்னர் எண்ட்-இல் கதிர்! அம்பயர்,பௌலரிலிருந்துத் தொடங்கி ஃபீல்டிங்கிலிருந்த அத்தனை பேரும் வெற்றி செய்யும் களேபரத்தில் சுழித்த முகத்துடன் நின்றிருந்தனர்.

“**டே**ய் கதிரு, உன் பேச்சைக் கேட்டு இவனை டீம்-ல சேர்த்துக்கிட்டதுக்கு நல்லா கைம்மாறு செய்ற டா!” - அடுத்துக் களமிறங்க வேண்டிய நபரான ரவி மைதானத்தின் மறு ஓரத்திலிருந்து முழுத் தொண்டையில் கதிரை நோக்கிக் கத்திக் கொண்டிருந்தான்.

அவனது பேச்சில் காண்டாகி நண்பனை முறைத்த கதிர் “டேய் வெற்றி, ஒரு ரன் எடு டா! ஒரே ஒரு ரன்! ப்ளீஸ்.. தொடர்ந்து 4-வது பால் டா இது! ஒரு தடவை கூட நீ கைல வச்சிருக்கிற பேட், பால்-ஐத் தட்டவே இல்ல டா!, அடுத்த பால்-ஐ விட்டா.. நாம ஜெயிக்கிறதுக் கஷ்டம் டா!” என்று கெஞ்சினான்.

“நானா டா வேணாம்ன்றேன்! இந்த மாங்கா மூஞ்சி ‘பாடு’ பால் போடுறதே சரியில்ல மச்சி” - மூக்கைச் சுருக்கியபடி வெற்றி.

“டேய் செருப்பால அடிப்பேன் டா! எச்ச நாயே!, உனக்குத் தான் சுட்டு போட்டாலும் கிரிக்கெட் ஆட வராதுல்ல?, ஏன் டா மொட்டை வெயில்ல என் தாலியறுக்குற?” - என்ற கதிர் மேலும்,சில,பல கெட்ட வார்த்தைகளைக் கூச்சமின்றி உச்சரிக்க.. “இப்போ பார்றா, உங்கொப்பன்மவனே” என்று பொங்கியெழுந்த வெற்றி அடுத்த பால்-ஐ எதிர் கொள்ளத் தயாரானான்.

கடாயுதத்தை ஏந்திய புஜபலபராக்கிரமசாலியாகத் தன்னை உருவகித்து, இரு கைகளாலும் பேட்-ஐ தூக்கிக் கொண்டு நின்றவன், ‘மாங்கா மூஞ்சி’ எறிந்த அடுத்தப் பந்தையும் தவற விட.. “டேய்... கதிரு கம்னாட்டி! மவனே இன்னிக்கு உனக்கு சங்கூதி, நாளான்னைக்கு உன் சமாதி-ல பால் ஊத்தல, என் பேரு ரவி இல்லடா” - சூர காண்டில் சண்டைக்கு நின்ற ரவியைக் கண்டு விட்டு.. நண்பனை அழுகையும்,பொறுமலுமாய் நோக்கினான் கதிர்.

“சாரி மச்சி! மிஸ் ஆயிடுச்சு” - ஈயென்ற வாயுடன் வெற்றி.

“அடுத்த பால்-ல தயவு செஞ்சு அவ்ட் ஆயிடு டா!, நெக்ஸ்ட் ஓவர்-ல எப்படியாவது நான் சமாளிச்சுக்கிறேன்! ஒரே ஓவர்-ல என்ட்ரி குடுத்து சோலிய முடிச்சுக் கட்டிட்டேல?, நல்லா வருவ டா! நல்லா வருவ!”

சபித்த கதிர் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதால், அடுத்தப் பந்தில் க்ளீன் போல்ட் ஆகி வெளியே வந்த வெற்றியின் முகத்தில் அத்தனை பெருமிதம்! சதம் அடித்து விட்ட சச்சினைப் போல் நடந்து வந்தான்.

மைதானத்தில் அமர்ந்திருந்தவர்களிடம் பேட்-ஐத் தூக்கிக் காட்டியபடி இண்டர்நேஷனல் ப்ளேயர் ரேஞ்ச்ஜிற்கு ஈ-யென வந்தவனின் மீதுக் கையிலிருந்த மாங்காயை விட்டெறிந்தாள் மாலதி “சாவுடா பரதேசி" என்று!.

தன்னை முறைத்தபடிக் கடந்து சென்ற ரவியின் தோளைத் தட்டிய வெற்றி “சாரி டா மச்சி!, I couldn't perform well, பட் நீ என் பேரைக் காப்பாத்துற மாதிரி விளையாடனும் மச்சி!, இன்னிக்கு ‘கப்’ நம்மது தான்!!” என்று கூற “அய்யோஓஓஓ” எனக் கண்களில் கை வைத்து அழுத ரவி “போயிட்றா டேய்... ப்ளீஸ் போயிட்றா!” என்று புலம்பியபடியே ஓடிச் சென்றான்.

“என்ன மாலதி! உங்கத் தோட்டத்துல விளைஞ்ச மாங்காயா இது?” - என்று கேட்டபடி ஒரு கடி,கடித்தவன்.. சிரிப்பை அடக்க முயற்சித்தபடித் தன்னையே நோக்கிய ஜமுனாவைக் கண்டு “நம்ம டீச்சரு!” என்றபடி ஹாய் எனக் கையசைத்தான்.

“கையில வச்சிருக்கிற தண்ணீர் பாட்டிலைக் கொஞ்சம் கடன் தர முடியுமா?”

மாங்காய்க் கொட்டையைத் தூக்கி எறிந்தபடி தன் முன்னே நின்று வினவியவனிடம் தண்ணீர் பாட்டிலை நீட்டினாள் ஜமுனா.

“கைலியைக் கட்டிக்கிட்டு கிரிக்கெட் ஆடுற முதல் மனுஷன் நீயாத் தான் டா இருப்ப” - ஜமுனா.

“அதனால என்னங்க டீச்சர்”

“அதான, நல்லா ஆடுறவனுக்குத் தான் அந்தக் கவலையெல்லாம் இருக்கனும்!”

“என்ன டீச்சர், கலாய்க்குறீங்களா?”

“ஏன் டா எல்லா இடத்துலயும் வாண்டட்-ஆ போய் அசிங்கப்பட்டுக்குற?”

“என்னைப் பார்த்து 4 பேர் சிரிச்சு சந்தோசமா இருக்கட்டுமேன்னு தான்!, உண்மையைச் சொல்லுங்க! நீங்களும் என்னைப் பார்த்து சிரிச்சுன்னு தானே நின்னுட்டிருந்தீங்க?”

“ஹாஹாஹா! பின்ன! நீ பண்ற கூத்துக்கு சிரிக்காம இருந்தாத் தான் ஆச்சரியப்படனும்! அதுலயும் கங்குலி மாதிரி நின்னு ஒரு போஸ் குடுத்தியே! செத்துட்டேன் போ!” - வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தவளை விழிகளில் ஆர்வத்துடன் இமைக்காது நோக்கினான்.

“சிரிக்கும் போது ரொம்ப அழகாயிருக்க!” - அடிக்குரலில் கூறியவனை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் ஜமுனா.

“என்ன டா பார்வை,பேச்சு எல்லாம் ஒரு மாதிரி இருக்கு?” - புருவத்தைத் தூக்கியவளிடம் மறுத்துத் தலையசைத்தபடிப் பின் தலையைக் கோதியவன்...

**‘உன்னைப் போன்ற பெண்ணைக் கண்ணால் பார்த்ததில்லை....**

**உன்னையன்றி யாரும் பெண்ணாய்த் தோன்றவில்லை’**

எங்கிருந்தோ செல்ஃபோனில் ஒலித்த இளையராஜாவைக் கேட்டுச் சிரித்து... “இன்னிக்கு சாயந்தரம் நீங்க ஃப்ரீ-ஆ டீச்சர்?” என்று வினவினான்.

“ஆமா, ஏன்?”

“படத்துக்குப் போலாமா?”

“என்னது?”

“ச்சி! பாடம் படிக்கப் போலாமான்னு கேக்க வந்தேன்! டங் ஸ்லிப் ஆயிடுச்சு!,எனக்குக் கணக்கு பாடம் சொல்லிக் குடுங்க டீச்சர்!, இந்த வருசமாவது நான் பத்தாவது பாஸ் ஆகனும்”

“என்ன கணக்கு படிக்கிறேன்ற பேர்ல என்னைய கணக்கு பண்ணப் பார்க்குறியா?, உன் திருட்டு முழியைப் பார்க்கும் போதே தெரியுது! நீ ஏதோ ப்ளான் வைச்சிருக்கன்னு! ‘சம்பவம்’ நடத்துறப் பழக்கத்தையெல்லாம் வேற எவக்கிட்டயாவது வைச்சுக்க”

“டீச்சர், 3,4 மாசமா பழகுறோம்! நான் ஹார்ம்-லெஸ்ன்றது உங்களுக்குப் புரியவேயில்ல பார்த்தீங்களா?”

“நான் உன்னை நம்ப மாட்டேன் டா”

“சரி தான் போடி!”

“பார்த்தியா, பார்த்தியா?, இது தான் நீ! அப்பப்போ சிரிச்சு,சிரிச்சுப் பேசுறதெல்லாம் வெறும் நடிப்பு”

“ஆமா, நீ பார்த்த! மூடிட்டுப் போயிட்றி! ஏதாவது சொல்லிறப் போறேன்! தினம் நாய் மாதிரி உன் பின்னால சுத்துறேனே! என் கூட ஒரு பத்து நிமிஷம் டைம் ஸ்பெண்ட் பண்ணுறதுல என்னா கஷ்டம் உனக்கு?”

“என்ன டா?, ரொம்ப உரிமையா கேள்வி கேக்குற?”

“அப்டித் தான் பேசுவேன்! என்னடி செய்வ?, இத்தனை நாள் பழகியும், என்னைப் பத்தி ஒன்னும் தெரியல! உனக்கெல்லாம் குரு ஸ்தானத்துல இருக்கத் தகுதியே இல்லடி”

“ஏய்... என்ன ரொம்பப் பேசுற?, பல்லைத் தட்டிருவேன்”

“போடி சாத்திட்டு! திமிர்ப்பிடிச்ச ராங்கி!” - என முணுமுணுத்தவன்....

**‘காத்துல சூடம் போல... கரையிறேன் உன்னால...’** - என மீண்டும் நான்-சிங்க்-இல் உள்ளே வந்த இளையராஜாவை சபித்து விட்டு அந்த இடத்தைக் காலி செய்தான்.

**அ**ன்று மாலை கதிர் வீட்டிற்கு ஏதோ வேலையாகச் சென்ற வெற்றி, அங்கு செல்வியுடன் அமர்ந்திருந்த ஜமுனாவைக் கண்டு கொள்ளாமல் “டேய் கதிர்...” என்று குரல் கொடுத்தான்.

“அண்ணன் வீட்ல இல்ல” - விறைப்புடன் பதிலளித்த செல்வியிடம் “என்னைய வரச் சொல்லிட்டு இந்த நாய் எங்க போச்சு” என்று முணுமுணுத்தவன் “சரி,சரி, போய் அண்ணனுக்குக் காபி போடு” என்றான்.

“எனக்குக் காபியெல்லாம் போடத் தெரியாது”

“ஆமா, திங்க மட்டும் தான் தெரியும்! எந்திரிச்சுப் போடி” - அவன் மிரட்டியதும் முறைத்தபடியே சமையலறைக்குச் சென்றாள் செல்வி.

“இப்ப என்னத்துக்கு அவசரமா அவளைக் காலி பண்ணுற?” - கையைக் கட்டிக் கொண்டுப் பொறுமையாய் கேள்வி கேட்டாள் ஜமுனா.

அப்போதும் அவளைக் கண்டு கொள்ளாமல் “செல்வி... காபி ரெடியா?” என்று மீண்டும் கத்தினான்.

“அடேங்கப்பா! சார் என் முகத்தைப் பார்த்துப் பேச மாட்டீங்களோ!”

“முகத்தைப் பார்த்துப் பேசுனாத் தான் முடிச்சவிக்கிப் பட்டம் குடுக்குறீங்களே! பின்ன என்ன?”

“இப்போ என்னாத்துக்கு மூஞ்சியத் தூக்குற?, கணக்குப் பாடம் தான?, நான் சொல்லிக் கொடுக்குறேன் வா...”

“ப்ச், இனிமே படிச்சு நான் என்ன ஐஏஎஸ் ஆகவாப் போறேன்?”

“பின்ன?”

“உன் கூடப் பேசலாம்ன்னு தான் அப்டி சொன்னேன்”

“சரி, அப்பப் பேசு”

“எ...எ...என்ன பேச?” - அவள் பட்டென ஒத்துக் கொண்டதில் தயங்கித் தடுமாறி நின்றவனிடம்.. “நீ தான டா என்னமோ பேசனும்ன்ன?” என்றாள்.

“க்கும்” எனத் தொண்டையைச் செறுமியவன் டீ-ஷர்ட்டின் காலரை எடுத்து விட்டுக் கொண்டான். பிடறி முடியைக் கோதியபடியே...

“நை... நைட் வூட்ல என்ன சாப்பாடு?” என்றான்.

அவன் முகத்தில் தெரிந்தத் தயக்கம், பயம், ஆசை,ஆர்வம் போன்ற அத்தனை உணர்ச்சிகளும் அவளுக்குச் சிரிப்பை வரவழைக்க.. ஆனாலும் முயன்று அடக்கி..

“வெண் பொங்கலும்,சட்னியும்” - என்றாள்.

“தேங்காய்ச் சட்னின்னா ரொம்ப இஷ்டமோ?”

“இல்லையே! வெங்காயச் சட்னி கூட நல்லா சாப்பிடுவேன்”

“வக்கணையாப் பேசுறீங்க! பேச்சு போலவே சமையலும் இருக்குமா?”

“ம்ஹ்ம், பசில காது அடைச்சாலும், அடுப்படிப் பக்கம் போகவே மாட்டேன்”

“ஓஹோ! அ...அப்போ, உன்னைக் கட்டிக்கிறவனுக்குக் கண்டிப்பா சமையல் தெரிஞ்சுருக்கனும் போல” - இதைக் கூறுகையில் வேறு புறம் பார்த்தவனைக் கண்டு அடக்க முடியாமல் புன்முறுவல் பூத்து....

“ஆமா!, ஆனா.. அதுக்கு வாய்ப்பில்ல” என்றாள்.

“ஏன்?”

“ஏன்-னா நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்ல”

“ஏன்-வாம்?”

“நீ தான் அன்னிக்கு சொன்னியே! நான் கல்யாணம் பண்ணிப் போய்ட்டா, என் அம்மாவை யார் பார்த்துக்கிறதுன்னு?, அந்தக் காரணம் தான்!”

“ஹ்ம்ம்! அம்மா-ன்னா ரொம்ப இஷ்டமோ?”

“இதென்ன கேள்வி?, எல்லா ஜீவராசிக்கும் அம்மா-ன்னா இஷ்டமாத் தான இருக்கும்?, ஏன், உனக்கில்லையா?”

“ப்ச்!, பெத்தவளைக் காவு வாங்குனவன்னு பேர் வாங்கிக் குடுத்துட்டுப் போய்ச் சேர்ந்த பொம்பள மேல எங்கிட்டிருந்துப் பாசம் வரும்?” - அவன் கூறியதும் ஒரு நொடி அமைதியானவள்... “அது ஒன்னும் அவங்க தப்பில்லையே” என்றாள்.

“என் தப்பும் இல்லயே” - இறுகிய குரலில் கூறியவனைக் கண்டுத் திகைத்துப் பின் பேச்சை மாற்ற நினைத்து...

“ஹேய்.. உனக்கு சீரியஸா-ல்லாம் பேசத் தெரியுமா?” எனக் கேலி செய்தபடி சிரிக்க முயன்றாள்.

“பின்ன எந்நேரமும் பல்பு வாங்கிக்கிட்டு சிரிச்சுனே இருக்குற ஆளுன்னு நினைச்சியா?”

“அதுசரி”

“டீச்சர், அதே சீரியஸ்நெஸ்-ஓட இப்போ இன்னொரு விசயம் சொல்றேன். கேளு” - என்றவன், சொல்லத் தொடங்குகையில் “காபி..” எனக் கூறி இடைமறித்தபடி வந்து நின்றாள் செல்வி.

எட்டி அவள் கையிலிருந்ததை உற்றுப் பார்த்தவன், வாசலை நோக்கித் திரும்பி “மணிஇஇஇஇ...” என்று குரல் கொடுத்தான்.

அவன் கூப்பிட்டக் குரலுக்கு ஓடோடி வந்த நாயிடம் “தங்கச்சி உனக்காக காபி போட்டுக் கொண்டாந்துருக்கு. சமத்தா குடிச்சிட்டு வால் ஆட்டினே வாசல்ல படுத்துக்க. சரியா?” என்று விட்டு செல்வியின் கர்ணகொடூரப் பார்வையிலிருந்துத் தப்பித்து ஓடியே விட்டவனைக் கண்டு கலகலவெனச் சிரித்தாள் ஜமுனா.

‘என்ன விஷயம்ன்னு சொல்லாமலே போயிட்டானே’ என்று யோசித்தவளுக்கான பதிலை மறுநாள் கூறினான் அவன்.

அன்று காலை வழக்கம் போல் அவர்களது தெருவில் தண்ணீர் லாரி வந்து நிற்க.. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் நான்,நீ எனப் போட்டி போட்டுக் கொண்டுக் குடத்துடன் வந்து வரிசையில் நின்றனர் நம் தமிழ்நாட்டு வீராங்கனைகள். சாரி! இல்லத்தரசிகள்.

பொதுவாக வெற்றியின் வீட்டில் மட்டும் சேவல் காலை 11 மணிக்குக் கூவுவதால், அப்போது தான் துயில் முடித்து எழுந்த வெற்றி ஒரு நீண்ட கொட்டாவியை வெளியிட்டபடி வாசலுக்கு வந்து நின்றான்.

அவனது அழகான காலை வேளையைக் கெடுப்பதற்காகவே அவன் கண்ணில் பட்டுத் தொலைத்தான் சுந்தரேசன், ஜமுனாவை நோக்கிக் காமப்பார்வையை செலுத்தியபடி!

அந்தக் காமுகனின் பார்வையைக் கண்டு ஏனென்றே புரியாமல் வெற்றியின் தலை,முதல் கால் வரை சுரு,சுருவெனக் கோபம் ஏற.. விறுவிறுவெனச் சென்று இடுப்பில் குடத்துடன் நடந்து கொண்டிருந்த ஜமுனாவின் முன்பு நின்றான்.

தன் முன்னே கோப முகத்துடன் நிற்பவனை சுருக்கிய புருவங்களுடன் நோக்கியவள் “என்னா டா குடத்தைக் கைல வாங்கி எனக்கு ஹெல்ப் பண்ணலாம்ன்னு இருக்கியா?” என்று வினவினாள்.

“இல்ல”

“பின்ன என்னாத்துக்கு இப்பிடி சிலை மாதிரி நிக்குற?, நவுரு (நகரு)”

“டீச்சர், நேத்து சீரியஸா ஒரு மேட்டர் சொல்லனும்ன்னு சொன்னேனே, நியாபகம் இருக்கா?”

“இருக்கு”

“மேட்டர் இது தான். இனிமே நைட்டி போட்டுக்கிட்டு வாசலுக்கு வராத” - பட்டெனக் கூறியவனை ‘நீ என்ன லூசா’ என்பது போல் பார்த்து வைத்தாள்.

“பெருசா ஏதோ சொல்லப் போற-ன்னு பார்த்தா... என்னாடா இப்பிடி சொல்ற?”

“ப்ச், நீ இனி நைட்டி போடாதன்னா போடாத”

“ஏய்... நான் என்ன டிரெஸ் போட்டா உனக்கென்ன?” - எரிச்சலுடன் பாய்ந்தவளிடம்...

“சொன்னாக் கேளு டீச்சர்! நானாவது அன்னிக்கு உன் இடுப்புல ரெண்டு இஞ்ச் மட்டும் தான் பார்த்தேன்! ஆனா இந்த சுந்தரேசன்... கண்ட,கண்ட இடத்தையெல்லாம் கண்றாவியாப் பார்க்குறான்”

“அவன் பார்க்குறான்றதுக்காக நான் என்னை மாத்திக்க முடியுமா?”

“அப்டின்னா.. அவன் உன்னை எப்பிடிப் பார்த்தாலும், உனக்குப் பரவாயில்லையா?”

“ப்ச், அவன் என்னை மட்டுமா பார்க்குறான்?, இதையெல்லாம் பெருசு படுத்த முடியுமா?, அப்டியே தட்டி விட்டுட்டுப் போய்ட வேண்டியது தான்”

“அப்போ நான் பார்த்ததுக்கு மட்டும் ஏன் டி பிரச்சனை பண்ணுன?”

“ஏய்... உனக்கு என்னாப் பிரச்சனை இப்போ?”

“அந்தாளு உன்னை இப்பிடிப் பார்க்குறது எனக்குப் பிடிக்கல. நீ இனிமே நைட்டியை மாட்டிக்கிட்டுத் தெருவுக்கு வராத” - சட்டமாய்க் கூறியவனைக் கண்டு கொதித்துப் போனவள், தன் வீட்டு வாசலில் குடத்தை இறக்கி வைத்து விட்டு...

“இன்னா டா?, நானும் பார்த்துனே இருக்குறேன்! ரொம்ப உரிமையா மிரட்டுற?, இவன் பார்க்குறான், அவன் பார்க்குறான்னு ஒவ்வொன்னையும் நான் பெருசா படுத்துனா.. வூட்டு வாசலைத் தாண்டி எங்கயும் போ முடியாது! இந்த ***** பசங்களுக்காக நான், படுதா-வை மாட்டியினா சுத்த முடியும்?, நீ மூடிட்டுப் போ டா” - என்று கிழித்துக் கூறு போட்டு விட்டு நகர்ந்து விட்டாள்.

‘ம்ஹ்ம் இவ மேல கோபப்பட்றதால ஒரு பிரயோஜனமும் இல்ல டா வெற்றி!, இவ சொன்னா மாதிரி, முழுசா போர்த்தினு வந்தாக் கூட, இந்தக் கம்னாட்டி மூட் சாங் பாடத் தான் போகுது!, இவளைத் திட்றதுக்குப் பதிலா, இந்த நாய்க்கு ஆஸ்பத்திரிக்கேப் போகாம ஒரு குடும்பக் கட்டுப்பாடு பண்ணி விட்டா என்ன!’ - என்றெண்ணிக் கொண்டு “ண்ணா… சுந்தரேசன் ண்ணா…” என்றழைத்தபடி அருகே சென்றான்.

**அ**ன்று மாலை பஸ் ஸ்டாப்பில் அவன் மறுபடி ஜமுனாவைக் காண காத்துக் கொண்டிருக்கையில் பக்கத்துத் தெரு ஜெகதீஷ், தன் பல்சரை ஸ்டாப் அருகே பார்க் செய்து விட்டு, அதன் மீது சாய்ந்து நின்றபடி அவனை நோட்டம் விட்டான்.

‘என்னாவாமாம் இவனுக்கு?, பொதுவா ஸ்டண்ட் காட்டிட்டுத் தொலைஞ்சிடுவானே! இன்னிக்கு ஏன் பார்க் பண்ணிட்டு நிக்கிறான்?’ - என்று வெற்றி யோசித்துக் கொண்டிருக்கையிலேயே ஜமுனா வந்து நின்றாள்.

காலையில் வெற்றி, சுந்தரேசனை ‘சிகரெட்’ வாங்கிக் கொடுப்பதாகக் கூறித் தனியாக அழைத்துச் சென்று செமத்தையாகக் கவனித்து அனுப்பியதில்.. அவர் மூக்கு,வாயெல்லாம் வீங்கி ரத்தக்களறியாய் வீடு வந்து சேர்ந்திருந்தார்.

என்ன சொல்லி அடித்தானோ தெரியவில்லை! இவள் பள்ளிக்குச் செல்லக் கீழிறங்குகையில் ‘நீ என்ன பெரிய அழகியா?, கிளி மாதிரி நான் இருக்கையில… வெள்ளைக் குரங்காட்டம் இருக்குற உன் மேல என் புருஷன் கண்ணு படப் போகுதா?, அந்த ஆந்த்ராக்ஸைக் கைக்குள்ளப் போட்டுக்கிட்டு ஆட்டமாடி ஆடுற?,’ -என்று கத்திக் கூப்பாடு போட்டு விட்டாள் சுந்தரேசனின் மனைவி கனகா..

இந்த ஏரியாவிற்கு மாறி வந்த இத்தனை மாதங்களில் யாருடனும் சண்டை,சச்சரவின்றி நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தாள். அதில் கல்லை எறிவதற்கென்றே வந்து சேர்ந்திருக்கிறான் இந்த வெற்றி! பரதேசி!

அவன் மீது ஏகக் காண்டில் இருந்ததால்… முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தவளின் அருகே வந்த ஜெகதீஷ் “ஜமுனா” என்றழைத்துக் கையிலிருந்த ரோஜாப் பூவையும், ஒரு க்ரீட்டிங் கார்டையும் அவள் முன்பு நீட்டினான்.

அவனையே விடாது கவனித்துக் கொண்டிருந்த வெற்றி, வெறுப்புடன் ஒரு மூச்சை இழுத்து “நினைச்சேன்!, இவன் இப்பிடித் தான் ஏதாவது பண்ணுவான்னு! மொசை புடிக்கிற நாய் மூஞ்சியைப் பார்த்தா.. தெரியாது!, காலைல தான் ஒருத்தனை

நொங்கெடுத்தேன்! அடுத்து இவனா?" என்றெண்ணிக் கொண்டு மெல்ல நடந்து... அவர்களருகே சென்றான்.

"என்ன இது?" - ஜெகதீஷை நோக்கி ஜமுனா.

"லவ் லெட்டர்"

"யார் குடுத்தா?"

"நான் தான்! உங்களுக்குக் கொடுக்கிறேன். ஐ லவ் யூ ஜமுனா"

"ஷ்ஷ்ஷ் கடுப்பேத்தாம போங்க சார்! எனக்கு நீங்க யாருன்னு கூடத் தெரியாது"

"நீங்க பொய் சொல்றீங்க"

"ஏய்ய்ய் அதான் பேசாம போ-ன்னு சொல்லுதுல்ல?, இன்னும் இன்னா டா பொய் சொல்ற, மெய் சொல்றன்னுட்டு?, கிளம்பு கிளம்பு! காத்து வரட்டும்" - திடீரென இடை புகுந்துக் கரடியாய்க் கத்தினான் வெற்றி.

"ஏய் நீ இதுல தலையிடாத" - ஜெகதீஷ்

"நான் தலையிடாம வேற யாருடா தலையிடுவா?"

"ப்ச், டேய்.. ஆறு மாசமா இவ பின்னால சுத்துறதால, நீ அவளோட லவர் ஆய்ட முடியாது. சரியா?"

"அதை அவ சொல்லட்டும்! நீ முதல்ல இடத்தைக் காலி பண்ணு"

"ஜமுனா... இவன் ஒரு வெத்து வேட்டு!, இவனுக்குப் பயந்துக்கிட்டு நீங்க என் மனசை நோகடிக்காதீங்க" - ஜமுனாவிடம் ஜெகதீஷ் கூறியதும் "யாரு டா வெத்து வேட்டு?" எனப் பொங்கி எழுந்த வெற்றி, அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றினான்.

நொடியில் இருவரும் தரையில் விழுந்து..... ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு உருள.... கத்தி,கத்திப் பார்த்த ஜமுனா.. 'ச்சை' என்றபடி விறுவிறுவென அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

அதன் பின்பு ஜெகதீஷின் கடவாய்ப் பல்லை உடைத்து வெற்றிக் கொடியை நாட்டிய வெற்றி நேராக ஜமுனாவைத் தேடி தன் ஏரியாவிற்கு வந்தான்.

அவளது வீடு, கதிரின் வீடு, அம்புஜம் மாமி வீடு, பிள்ளையார் கோவில் என அவள் அடிக்கடி வந்து போகும் அனைத்து இடத்திலும் அவளைத் தேடிச் சலித்தவன்..

இருள் சூழ்ந்த வேளையில்.. அருகிலிருந்த பார்க்கில்... மரத்தடி பெஞ்சில்.. கொசுக்கடியில் அமர்ந்திருந்தவளைக் கண்டு.. நேரே அவள் முன்பு சென்று நின்றான்.

“ஏய்.. உன்ன எங்கல்லாம் தேடுறது?, இங்க என்ன பண்ணிட்டிருக்க?” - வெற்றி

“ம்ம், பார்த்தா தெரியல?, கொசு அடிச்சிட்டிருக்கேன்”

“என் வீட்டுக்கு வந்து அடிக்கிறியா?, அங்க நிறைய கொசு இருக்கு”

“டேய் பன்னாட, நீயெல்லாம் சோறு தான தின்னுற?”

பதில் சொல்லாமல் அவளை வெற்றுப் பார்வை பார்த்து வைத்தான்.

“இல்ல, இட்லி,தோசையெல்லாம் கூட தின்பேன்னு மொக்கை போட்ட, சாவட்ச்சிருவேன் ****”

“ஏய்ய் வாயைக் கொற-டி! காலைல இருந்து ரெண்டு பேர் வாயை உடைச்சிருக்கேன்! உன்னோடதையும் சேர்த்து உடைக்க வைச்சிடாத”

“உடைப்ப டா உடைப்ப! உனக்கு என்ன தான் டா பிரச்சனை?, கோபம் குறையுற வரைக்கும் தான் உன் பின்னாடி வருவேன்னு சொன்னேல?, நானும் அதுக்கு மேல வம்பு வேணாம்ன்னு உன் கூட சிரிச்சு,சிரிச்சுப் பேசி சமாதானமாப் போயிட்டேன்ல?, பிரச்சனை முடிஞ்சதுன்னு விட்டுத் தொலையாம, ஏன் டா இப்பிடி நான் போற,வர்ற இடத்துல-லாம் வம்பிழுத்து என் உயிரை வாங்குற?”

“ஓஓ! நீ என்-ட்ட பல்லைக் காட்டுறதுக்குப் பின்னாடி இப்டி ஒரு லாஜிக் இருக்கா?, நீ சிரிச்சுப் பேசுனா, நான் உன் பின்னாடி வர்றதை நிறுத்திருவேன்னு நினைச்சியாக்கும்?”

“வெற்றி! போதும் டா! ஏரியாக்குள்ள என் பேரை நீ அதிகமாவே நாறடிச்சுட்ட! இதோட விட்ரு”

“இப்போ தான் முதன்முறையா நீ என் பேரை உன் வாயால உச்சரிக்கிறதைக் கேக்குறேன்”

“ரொம்ப முக்கியம்”

“நீ என் பேரைச் சொல்லிக் கூப்பிட்றது நல்லாயிருக்கு. எனக்குப் பிடிச்சிருக்கு. அதனால, இனி மிச்சமிருக்கிற காலம் முழுக்க நீ என் பேரை உச்சரிக்கிறதைக் கேட்டே என் வாழ்நாளைக் கடத்திடலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்”

-அலட்டிக் கொள்ளாமல், போகிற போக்கில் வாயில் வந்ததை நிதானமாக உளறிக் கொட்டியவனைத் திகைத்து விழி விரித்து நோக்கினாள் ஜமுனா.

“என்ன டா சொல்ற நீ?”

“ஏன் புரியலயா?, ரோஜாப்பூ, க்ரீட்டிங் கார்டுன்னு அந்த ஜெகதீஷ் பய குடுத்த மாதிரில்லாம் எனக்கு வராது”

“சுத்தமாப் புரியல டா எனக்கு”

“எனக்கும் தான் புரியல! இதுக்கு மேல எப்பிடி ஓப்பன்-ஆ சொல்றதுன்னு”

“.................”

கலவர முகத்துடன் புருவங்களைச் சுருக்கியபடி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டு வேக மூச்சுடன் திரும்பி நின்றான்.

இடது கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, வலது கையினால் நெற்றியைத் தேய்த்தவன் ‘நெத்தி,கழுத்தோட சேர்த்து இதயத்துக்கும் வேர்க்குதோ!, இப்பிடிப் படபடன்னு வருதே!’ என்று புலம்பி விட்டு.... பரபரப்பில் வெடவெடத்தைக் கரங்களை இறுக்கிக் கொண்டு மீண்டும் அவள் முன்பு திரும்பினான்.

“அந்த சுந்தரேசனையும்,ஜெகதீஸையும் ஏன் அடிச்சேன்னு உனக்குப் புரியவேயில்லையா?”

“ஏன் அடிச்ச?”

“நடிக்காத டி! இந்த மாதிரி விசயத்துல-லாம் நீ கடைஞ்செடுத்தப் பருப்புன்னு எனக்கு நல்லாத் தெரியும்!”

“நான் பருப்பு தான் டா! ஒத்துக்கிறேன்! ஆனா.. உன் விசயத்துல என் பருப்பு தான் வேகுறதேயில்லையே! நீ எந்த நிமிஷம் என்ன பேசுவ,எப்பிடி நடந்துப்பன்னு சத்தியமா எனக்குப் புரியவேயில்ல”

“என்ன புரியல உனக்கு?”

“கில்மா போஸ்டர்ல இருக்குற ஜட்டம் மாதிரி இருக்க, அதனால உன் மேல லவ்வெல்லாம் எனக்கு வராதுன்னு நீ தான டா சொன்ன?”

“தப்பா சொல்லிட்டேன்! நம்ம மீசை - டீக்கடையாண்ட, அம்சமா சேலைக்கட்டினு குத்து விளக்கு ஏத்துற மாதிரி ஒரு பொன்னு போஸ்டர் ஒட்டிருக்கானுங்கள்ல?, நீ அதுல இருக்குற பொன்னு மாதிரி இருக்க”

“லவ் பண்ற அளவுக்கு எனக்கு வர்த் இல்லன்னு வேற சொன்ன!”

“ஆமா! ஏன்னா நீ… கல்யாணம் பண்றதுக்கு வர்த் ஆன ஃபிகர்”

“……………….”

“ஏதாவது பதில் பேசு டி. அமைதியா இருந்து டென்ஷன் பண்ணாத என்னை”

“என்ன டா பதில் சொல்லச் சொல்ற?” - வள்ளென விழுந்தவள்… ஒரு நீண்ட பெருமூச்சுடன் கையைக் கட்டிக் கொண்டு, இருளை வெறித்தபடி “எனக்குக் காதல்,கல்யாணம்ன்னு எதுலயும் பெருசா இன்ட்ரெஸ்ட் இல்ல வெற்றி! நான் அந்த மாதிரி ஆசையெல்லாம் வளர்த்துக்க விரும்பல! என் அம்மா உயிரோட இருக்கிற வரைக்கும் அவங்கள நல்லபடியாப் பார்த்துக்கனும்! எனக்குன்னு வாழ்க்கை அமைச்சுக்கிற ‘தாட்’ எல்லாம் கிடையவே கிடையாது” என்றாள்.

“உங்கம்மாவைப் பார்த்துக்கக் கூடாதுன்னு யார் சொன்னா இப்போ?, என் கூட வா! நாம ரெண்டு பேரும் சேர்ந்து பார்த்துக்கலாம்”

எரிச்சலுடன் அவனை முறைத்துப் பார்த்து “யாரு? நீ?” என நக்கலாய்ச் சிரித்தவள் “தினம் அவங்களைக் குளிப்பாட்டி, 3 வேளை சோறு ஊட்டி, பெட் பேன் வைச்சு… நாள் பூரா வீட்ல உட்கார்ந்து நர்ஸ் மாதிரி பார்த்துக்குவியா?, ம்?, பொறுமைன்னா கிலோ எவ்ளோன்னு கேக்குற ஆள் நீ?, நீ எங்கம்மாவைப் பார்த்துக்குவியா?”

“…………………”

அவன் அமைதியில் மேலும் எரிச்சலுற்றவள், காலையில் கனகா திட்டியதில் உண்டான கோபம், ஜெகதீஸூம்,இவனும் சண்டையிட்ட போது பஸ் ஸ்டாப்பில் நின்றவர்கள் இவளைப் பற்றிப் பேசியதில் உண்டான ஆத்திரம் என அத்தனையையும் அவன் மீது காட்டி…

“ஏன் டா மூணு வேளை சோத்துக்கே முப்பது இடத்துல வேலை பார்க்குற?, நிலையான வேலை,வருமானம்ன்னு எதுவுமில்லாம.. என்னடா லவ்வு **** கேக்குது உனக்கு?, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ரோஜாப்பூவை நீட்டுன அந்த ஜெகதீஸ் கம்னாட்டிக்கும், உனக்கும் என்னைப் பொறுத்தவரை எந்த வித்தியாசமும் கிடையாது!

ஏதோ.. கொஞ்சம் நல்லவனா இருக்கியேன்னு... பக்கத்துல வந்து சிரிச்சுப் பேசுனா... உனக்கு வாழ்க்கைக் கொடுப்பேன், உங்கம்மாவைப் பார்த்துக்குவேன்னு வசனம் பேசுவியா நீ?, ஆளு தான்.. காட்டெருமை மாதிரி வளர்ந்திருக்க! பேசுறது,பண்றதுன்னு அத்தனைலயும் சிறுபிள்ளைத்தனம்! பொறுப்பு-ன்றது மருந்துக்கும் கிடையாது! இன்னொரு தடவை.. இப்பிடி எதுவும் லூசுத்தனமா உளறிக்கிட்டு என் பின்னாடி வந்த, செருப்புப் பிஞ்சிடும்" எனக் கூறி விட்டு விறு,விறுவென நடந்து சென்று விட்டாள்.

அவமானத்தில் முகம் கருக்க, இறுகிப் போன உடலுடன் விறைத்து நின்ற வெற்றிக்கு ஆத்திரம் கட்டுக்கடங்காமல் பொங்கிக் கொண்டிருப்பதை, அவனது சிவந்த விழிகளே கூறியது.

# அத்தியாயம் - 4

**இ**றுகிய இதழ்களும்,சிவந்த கண்களுமாய் வெறி பிடித்துப் போய்.. அசுர வேகத்தில்.. தன்னைச் சுற்றி உலவிய காற்றைக் கிழித்தெறிந்தபடி.. விர்ரெனத் தன் வண்டியை செலுத்திக் கொண்டிருந்தான் வெற்றி. நிதானமென்பது அவன் முகத்தில் மருந்துக்கும் இல்லை!

'என்ன பேச்சு பேசுறா! எனக்கு... எனக்குப் பொறுப்பில்லையாம்! பொறுமையில்லையாம்! என் பொறுமையையும்,பொறுப்பையும் பத்தி உனக்கு என்னடி தெரியும்?, நல்ல அம்மா-அப்பாவுக்குப் பொறந்து, சிரிச்சு விளையாடி சந்தோசமா ஸ்கூலுக்குப் போய், படிச்சுப் பட்டம் வாங்குன உனக்கு என்னைப் பத்திப் பேச என்னடி தகுதியிருக்கு?, பொறந்ததுல இருந்து பேச்சு வாங்குறேன் 'பெத்தவளைக் காவு வாங்குனவன், ராசியில்லாதவன்னு! எல்லாத்தையும் அமைதியாத் தான கடந்து வந்திருக்கேன்! இதுக்குப் பேரு பொறுமை இல்லாம என்னடி?, அப்பன் சரியில்லாதவன்னு தெரிஞ்சுக்கிட்டு அவன் குடுக்குற படிப்பு,பொழப்பு எதுவுமே வேணாம்ன்னு நானே சம்பாதிச்சு என் வயித்துப்பாட்டைப் பார்த்துக்கிறது, உன் கண்ணுக்குப் பொறுப்பாத் தெரியலயா?, அலட்டிக்காம சிரிச்சுப் பழகி, கெத்து காட்டாம நடந்துக்கிட்டா... சிறுபிள்ளைத்தனம்ன்னு சொல்லுவியா?, உனக்கு இந்த வெற்றியைப் பத்தி ஒரு மண்ணும் தெரியாது டி'

பொறுமலும்,புலம்பலுமாய் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக அவன் விடாது வண்டி ஓட்டியதில் பெட்ரோல் தீர்ந்து... முக்கலும்,விக்கலுமாய் பாதியில் நின்றது அவனது பல்சர்.

"ப்ச்" - என்றபடி வண்டியை விட்டு இறங்கியவன் அதை ஓரம் கட்டி விட்டு நின்றிருந்த பாலத்தின் கைப்பிடியருகே சென்றான்.

நேரம் நிச்சயம் 12-ஐக் கடந்திருக்கும். ஆங்காங்கு சென்று கொண்டிருந்த வண்டிகளைக் கண்டபடி தெரு விளக்கு வெளிச்சத்தில்.. சிலுசிலுக் காற்றினால் நெற்றி முடி அசைந்தாட.. விரக்தியான பார்வையுடன் சிறிது நேரம் நின்றிருந்தான்.

'இது சரியில்ல டா வெற்றி!, இப்டியே சோக ட்யூன் வாசிச்சின்னு இருக்கிறதால எதுவும் ஆகப் போறதில்ல' - என்று தீர்மானித்துக் கொண்டு உடனே தன் நண்பனை செல்ஃபோனில் அழைத்தான்.

"டேய் கதிர்" - வெற்றி

“சொல்லுடா வெற்றி, நீ இன்னும் தூங்கலயா?”

“மச்சி, மாலதி வூட்ல குடுத்த மாங்காயை உங்கம்மா ஊறுகா போட்ருச்சா டா?”

“ஆமா, ஒரு பாட்டில் ஊறுகா! ஃப்ரெஷ்-ஆ போட்டு வைச்சிருக்கு. இதைக் கேக்கவா டா தூங்கினு இருந்தவனை எழுப்பி விட்ட?”

“நீ இப்போ என்ன பண்ற, உடனே எந்திரிச்சு முகத்தைக் கழுவிட்டு அந்த ஊறுகாய் பாட்டிலை லவட்டிக்கிட்டு நேப்பியர் பிரிட்ஜாண்ட வந்து சேர்றா! அப்டியே மறக்காம ஊறுகாய்க்கு சைட்-டிஷ்-ஆ சரக்கு வாங்கினு வந்துரு மச்சி”

“டேய்... சரக்கையே சைட்-டிஷ்-ஆ யூஸ் பண்ணுவியா நீ!, இந்நேரத்துக்கு என்னாத்துக்குடா நேப்பியர் பிரிஜ்ல குந்தினு இருக்கிற?”

“கேள்வி கேக்காம நான் சொல்றதை மட்டும் செய் டா”

“ஏய்.. இன்னாடா விளையாட்றியா?, மணி இப்போ என்ன தெரியுமா?, நடு ராத்திரி 1.50. நான் நல்லத் தூக்கத்துல இருக்கேன்!, நீ டிஸ்டர்ப் பண்ணாம ஃபோனை வை”

“....................”

“டேய்.. என்னாடா?”

“கதிரு...”

“சொல்றா”

“உலகத்துலயே என் மேல உண்மையானப் பாசம் காட்டுறது ரெண்டே பேர் தான் டா”

“ஓஹோ!’

“ஒன்னு புகழ் மாமா. இன்னொன்னு நீ”

“அதனால?”

“சரக்கு வாங்கிட்டு வா டா”

-அடுத்த ஒரு மணி நேரத்தில் சரக்கு மற்றும் ஊறுகாயுடன் கதிர் வந்து சேர... இருவரும் பாலத்தின் ஓரத்திலேயே அமர்ந்தனர்.

“இங்க உட்கார்ந்தா டா அடிக்க சொல்ற?, ரோந்து போலீஸ் வந்தானுங்கன்னா பிரச்சனை ஆயிடும் டா”

“அதெல்லாம் ஒன்னும் ஆகாது! வர்றவனுங்களுக்கும் ஒரு ‘பெக்’ ஊத்திக் கொடுப்போம்”

“அட நாதாரி, என்னா தான் டா பிரச்சனை உனக்கு?”

“................” - பதிலற்று பாட்டிலைத் திறந்த வெற்றி, கடகடவென ராவாக சரக்கை வாயில் ஊற்றிக் கொண்டு, கை நிறைய மாங்காய் ஊறுகாயை அள்ளி ‘அசக்,அசக்’ என மெல்லத் துவங்கினான்.

“ஊறுகா காரமா இருக்கா மச்சி?”

“.....”

“இல்ல, உன் கண்ணுல இருந்துத் தண்ணியா ஊத்துதே! அதான் கேட்டேன்”

“இது காரத்துனால வந்தக் கண்ணீர் இல்ல மச்சி! அ...அந்தக் கருமாந்திரம் புடிச்சவளால வந்தக் கண்ணீர்” - இண்ட்ஸ்டண்டாகக் குழறத் துவங்கிய வாயுடன் பதிலளித்தவன், கன்னத்தில் வழிந்து கொண்டிருக்கும் நீரைத் தன் சட்டையிலேயே துடைத்துக் கொண்டான்.

“யாரை டா சொல்ற?”

“வேற யாரைச் சொல்லப் போறேன்?, எல்லாம் அந்த டீச்சர் ****** தான்”

“அந்தப் பொண்ணை ஏன் டா அசிங்கமா பேசுற?, பாவம் டா அவ!”

“அப்போ நான்?, நான் பாவமில்லையா மச்சி?” - கோபக் குரலில் கேட்டவனைக் கண்டுப் பயந்து...

“நீயும் பாவம் தான் டா” - என்றான் கதிர்.

“ப்ச்!, நான் பாவமா இல்ல பாவமா?, ஒழுங்கா உண்மையைச் சொல்லு”

“அ...அது.. அது வந்து மச்சி?, யார் பாவம்ன்னு நீயே சொல்லிட்றியா?”

“பொறந்ததுல இருந்து என் கூட வளர்ற உனக்கே நான் தான் பாவம்ன்னு தெரியல, அந்த டீச்சரைச் சொல்லி என்ன டா பிரயோஜனம்?”

-புலம்பியபடியே எழுந்தவன் கையில் பாட்டிலுடன் பாலத்தின் கைப்பிடியில் ஏறி நின்றான்.

“டேய் நன்னாரி! கீழ வுழுந்து செத்து,கித்துப் போயிராத டா!, இறங்கித் தொல டா” - பதறிய கதிரைக் கண்டு கொள்ளாது... கோணலாகப் புன்னகை புரிந்தவன்..,

“டேய் நண்பா!, நான் செத்தா யாரெல்லாம் அழுவாங்கன்னு உனக்குத் தோணுது டா?” -என்று வினவினான்.

“கண்டிப்பா நான் அழ மாட்டேன் டா” என்று முணுமுணுத்த கதிர் “இப்ப என்னாத்துக்கு சாவு,கீவுன்னு உளறினு இருக்குற?” எனக் கேட்டான்.

“பதில் சொல்லு டா, இல்ல, கீழ குதிச்சுடுவேன்”

“ஏய்.ஏய்,ஏய்... ஸ்டெடியா நில்லுடா” என்றபடி அவன் காலைப் பற்றியவன் “நீ செத்தா நான் அழுவேன் மச்சி” என்றான் அழுகைக் குரலில் ‘சும்மா தூங்கினு இருந்தவனைக் கூப்பிட்டு வச்சுக் காவு வாங்குறானே!’

“அப்புறம்?”

“அப்புறம் புகழ் மாமா!”

“அப்புறம்?”

“அப்புறம்.... உங்கொப்பன்...........”

“ம்ஹ்ம்! அந்தாளு அழ மாட்டான் மச்சி!, அவன்-லாம் நான் செத்தா சந்தோசம் தான் படுவான்”

“ப்ச், உனக்காக மறு கல்யாணம் கூடப் பண்ணிக்காதத் தியாகி டா அவுரு,”

“யாரு அவனா தியாகி?, ******** பய! அவனைப் பத்திப் பேசாத டா!”

“சரி டா பேசல!”

“ம்ம், இப்போ சொல்லு. வேற யாரு அழுவா?”

“வேற யாரு டா?, நம்ம டீக்கடை மீச!, மாமி அம்புஜம்! பிரசாத்தோட பாட்டி சௌந்தரம்மா!..” -வரிசையாகச் சொல்லிக் கொண்டே சென்றவனை இடைமறித்தவன்..

“டீ....டீச்சர்.. டீச்சர் அழுவாளா டா மச்சி?” - குரலில் ஏக்கம் தெறிக்க... பாவமாகக் கேட்டவனை வியப்புடன் நோக்கினான் கதிர்.

“வெற்றி, உனக்கும், அந்தப் பொண்ணுக்கும் என்ன டா பிரச்சனை?”

கதிர் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் பாட்டிலை வாயில் சரித்தவன்.... மீண்டும் ஊறுகாயை வாயில் அடைத்துக் கொண்டு... எச்சில் ஒழுக.....

**“அன்னக்கிளி உன்னைத் தேடுதே.....**

**ஆறு மாசம்,ஒரு வருஷம்.. ஆவரம் பூ மேனி வாடுதேஏஏஏஏஏ”** - என கர்ண,கொடூரமானக் குரலில் பாடத் துவங்க... காதைப் பொத்திக் கொண்டுக் கீழே அமர்ந்தான் கதிர்.

“சா....ர்...... ராஜா சார்!!! அந்தக் கருமம் புடிச்ச **** பார்க்குறப்பல்லாம் பேக் க்ரவுண்ட்ல வருவீங்களே!, இப்பிடி ஏமாத்துவா-ன்னு ஒரு வார்த்தை சொன்னீங்களா?, நீங்களும் எனக்கு எதிரா நடந்துக்கிறீங்களே!”

-அடுத்த இரண்டு மணி நேரம் விடாது புலம்பியும்,அழுதும் தன் மனக்கிலேசத்தைப் போக்க முயற்சித்தவன்.. கதிரின் உதவியால் ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தான்.

சாப்பிடாமல் வெறும் வயிற்றில் சரக்கை ஊற்றிக் கொண்டதாலும், ஒரு பாட்டில் மாங்காய் ஊறுகாயை ஒருமையாகத் தின்று தீர்த்ததாலும்.. மறுநாள் காலை முழுக்க.. வாந்தியும்,பேதியும் பாத்ரூமில் அடைபட்டுக் கிடந்தான் வெற்றி.

ஒரே ராத்திரியில் பாதி ஆள் ஆகி விட்டவனை இழுத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்று வந்தான் கதிர்.

**அ**ன்று மாலை பள்ளியிலிருந்துத் திரும்பி வந்த ஜமுனா, டீக்கடையருகே கதிரின் தோளைப் பற்றியபடி மெல்ல நடந்து வந்த வெற்றியைக் கண்டு புருவம் சுருக்கியபடி அருகே சென்றாள்.

“என்ன டா ஆச்சு?, அவன் தோள்ல தொங்கினு வர்ற?, அடி,கிடி பட்ருச்சா?” - அவனை மேலும்,கீழுமாய் ஆராய்ந்தபடி வினவினாள்.

அவள் முகத்தைப் பார்க்காமல் வேறு புறம் திரும்பிக் கொண்ட வெற்றி “எனக்கு என்ன ஆனா... இவளுக்கு என்னவாம் டா?” என்று நண்பனிடம் வினவினான்.

கையைக் கட்டிக் கொண்டு அவனை முறைத்தவள் “ஏன் சார் என் கிட்ட நேராப் பேச மாட்டாராமா?” என்றாள்.

“இவ கூட போராட எனக்கு எனர்ஜி இல்ல மச்சி!” என்றவன் தொடர்ந்து “மீச! ஒரு பூஸ்ட்! சுகர் தூக்கலா!, அப்டியே ரெண்டு ஃப்ரூட் பிஸ்கட் கொண்டா! பசியெடுக்குது” என்றான்.

வெளுத்த உதடுகளும், கலையிழந்த முகமுமாய்க் காட்சியளித்தவனைக் கண்டுக் கதிரிடம் திரும்பியவள் “ஆஸ்பத்திரில இருந்தா டா வர்றீங்க?, கைல ட்ரிப்ஸ் எல்லாம் போட்ருக்கான்?” என்று வினவினாள்.

“ஆமா” என்ற கதிர் நேற்றிரவு அவன் ராவாக அடித்தக் கதையை சென்சாருடன் சொல்லி முடித்தான்.

அவள் ஒருத்தி அங்கிருப்பதையே கண்டு கொள்ளாமல்.. மீசை கொடுத்த பூஸ்ட்டை ஊதிக் குடித்துக் கொண்டிருந்தான் வெற்றி.

நடந்த விசயத்தைக் கதிர் கத்திரியிட்டுக் கூறினாலும், எது அவனைக் குடிக்கத் தூண்டியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்ட ஜமுனா, கோபத்துடன் அவன் புறம் திரும்பினாள்.

“நான் அப்டி என்ன சொல்லிட்டேன்னு நீ இவ்ளோ ஓவர்-ஆ பண்ற?” - ஜமுனா.

நிமிர்ந்து அவளை முறைத்தவன் “அடிச்சவனுக்கு எப்பவுமே வலி தெரியாதுடி! அடி வாங்குனவனுக்குத் தான் தெரியும்” என்றான்.

“அப்டின்னா இந்தப் பொண்ணுக்கிட்ட நீ அடி வாங்கினியா மச்சி?” -கதிர் வேறு இடையில்..

“ஏய்.... நீ கம்முன்னு இருக்க மாட்ட?” - கதிரை அதட்டிய ஜமுனா “அப்படி என்ன டா பெரிய வலி உனக்கு?” என்று வெற்றியிடம் கத்தினாள்.

“புடிக்கலன்னா, புடிக்கலன்னு சொல்லியிருக்கனும்டி! அதை வுட்டுட்டு பொறுப்பில்ல, பொறுமையில்லன்னு பெரிய பருப்பாட்டம் பேசி இன்சல்ட் பண்ணுவியா?” - தானும் கோபமாய்க் கத்தினான் வெற்றி.

“ஏன் டா நான் ஒருத்திப் பேசுனதையே நீ இன்சல்ட்-ன்றியே!, அந்த *** பய சுந்தரேசனை நீ அடிச்ச அன்னிக்கு, அவன் பொண்டாட்டி கனகா என்னல்லாம் பேசுனா-ன்னு தெரியுமா உனக்கு?, நான் புடவை கட்டிக்கிட்டு வாசலுக்கு வர்றதே, அவ புருசனை மயக்கத் தான்-ன்ற ரேஞ்சுக்கு... என்னைப் பத்தி அசிங்க,அசிங்கமா தெரு முழுக்கப் பேசி வைச்சிருக்கா! அந்த ஜெகதீஸ் கம்னாட்டியோட நீ போட்ட சண்டைல என் ஸ்கூல் பஸ்-ஸ்டாப்லயும் எனக்குக் கெட்ட பேரு!. நீ பண்ணுன கலாட்டாவுல, நான் தான் டா அவமானப்பட்டு நிக்குறேன்!”

ஏகத்துக்கும் பொங்கியவளைக் கண்டு கோபத்துடன் எழுந்து நின்றவன்..

“ஏன் டி படிச்சவ மாதிரியாடி பேசுற?, இந்த சுந்தரேசனோ, ஜெகதீஸோ நாளைக்கு உன் கையப் புடிச்சு இழுத்துத் தப்பா நடந்துக்கிட்டாலும், இப்டித் தான் அக்கம்,பக்கத்துல இருக்கிறவங்க என்ன நினைப்பாங்க, பஸ் ஸ்டாப்ல நிக்கிறவங்க என்ன பேசுவாங்கன்னு யோசிச்சுக்கிட்டு... அமைதியா போயிடுவியா?” - என்றான் பதிலுக்கு.

“அது என் பிரச்சனை. நீ தலையிடாத”

“நான் தலையிடாம இருக்கனும்ன்னா நீ எனக்கு எவளோ ஒருத்தியா இருக்கனும்டி! நான் காதலிக்கிறப் பொண்ணா இருக்கக் கூடாது”

“எ...என்னாஆஆஆஆஆது காதலிக்கிறியா?” - வாயைப் பிளந்தக் கதிரை எரிச்சல் குறையாமல் நோக்கினான் வெற்றி. இவன் ராஜா சார்-ஐ விட நான்-சிங்க்ல இருக்கானே!

“என்னடா ஒன் சைட் லவ்வுக்கே ஓவர்-ஆ உரிமை எடுத்துக்கிற?” - கடுங்கோபத்தில் தன்னையே முறைத்தவளைப் பொருட்படுத்தாமல்.. திரும்பி வீடு நோக்கி நடக்கத் தொடங்கியவனிடம்..

“உன்னையெல்லாம் திருத்தவே முடியாதுடா! இன்னொரு தடவை இப்டிப் பாவமா மூஞ்சியை வச்சுக்கிட்டு என் முன்னாடி சீப்-ஆ சிம்பதி க்ரியேட் பண்ணப் பார்த்தேனா.. கேவலமா கிழிப்பேன் டா” - என்று மேலும் திட்டியவளைக் கண்டு ஒரு நொடி நின்றவன்... விறுவிறுவென அவளருகே வந்து....

“பெருசா அக்கறை இருக்கிற மாதிரி சும்மா இருந்தவன் கிட்ட வந்து என்னாச்சு,நொன்னாச்சுன்னு கேள்வி கேட்டுட்டு, நான் சிம்பதி க்ரியேட் பண்றேன்னு பழி போட்றியா?, நீ என்ன பேசுனாலும், அமைதியா கேட்டுனு இருப்பேன்னு நினைக்காதடி” - என்று கத்தியதும், இல்லாத மூக்கை விடைத்தபடி அவனைத் தாண்டி நடந்து சென்று விட்டாள் ஜமுனா.

தன் ஐந்தே அடி உயரத்தை விறைப்பாய் நிமிர்த்திக் கொண்டு விசுக்,விசுக்கென செல்பவளைக் கண் சிமிட்டாமல் நோக்கிக் கொண்டிருந்தவனின் முகத்தைக் கண்ட கதிர் அவனைக் கேள்வி கேட்டு நச்சரித்ததைக் கண்டு கொள்ளவேயில்லை வெற்றி.

**அ**ன்று அவர்களதுத் தெருவில் அமைந்துள்ள ‘பெரிய பாளையத்தம்மன்’ கோவிலில் ஆடித் திருவிழா கோலாகலமாகத் துவங்கியது. தெருவிலிருப்பவர்களிடம் பணம் வசூலித்துப் பந்தல், ஸ்பீக்கர் செட் என வருடம் தவறாமல் விழா எடுத்து அம்மனைக்

குளிர்விக்கும் விசயத்தைப் பொறுப்பாய் நடத்தி வந்தனர் அத்தெருவைச் சேர்ந்த இளைஞர்கள்.

‘இனி வெள்ளிக்கிழமையானாலே தவறாம கூழ் ஊத்துவாளுங்க!, உனக்கு மதியச் சாப்பாட்டுக்குப் பஞ்சமிருக்காது டா வெற்றி’ - எனக் கலாய்த்த கதிரிடம் அவன் பதிலே சொல்லவில்லை.

கலகலப்பைத் தொலைத்து விட்ட முகத்துடன் எந்நேரமும் ஏதோ யோசனையில் வலம் வருபவனை மாற்ற, கதிர் எவ்வளவோ முயற்சித்து விட்டான்.

நண்பனின் ஒவ்வொரு அசட்டுத்தனமான செய்கைக்கும், சிரிப்புக்கும் முழுதாய் அர்த்தம் தெரிந்தவன் கதிர் ஒருவன் மட்டுமே! ‘ராசியில்லாதவன், பிறந்ததும் பெற்றத் தாயை முழுங்கியவன்’ என அவன் சுற்றமும்,உறவும் விடாது பழி கூறுகையில்.. முதலில் கலங்கினாலும்.. பின்பு மாறி.. வாய்ச்சண்டையும், கேலியுமாய் தன்னைக் குறை கூறுபவர்களை வம்பு செய்யத் துவங்கியவன் அவன்!

அவனைக் காணும் போதெல்லாம் கேலி செய்யும் மாலதியிடம் ஒரு முறை கூட அவன் முகம் திருப்பியதில்லை! யார் என்ன பேசினாலும்,மட்டம் தட்டினாலும்.. அவர்களனைவருடனும் சண்டை போட்டேனும் பேச்சு வளர்த்து உறவை நீட்டித்துத் தான் கொண்டானே தவிர, யாரையும் தவிர்த்ததில்லை. இந்த ஏச்சு,பேச்செல்லாம் ஒரு நாள் மாறி.. அனைவருடனும் சுமூகமான உறவுடன் என்றாவது வாழ்வோம் என்கிற நம்பிக்கையுடன் தானிருந்தான். ஒரு வேளை அவனது தந்தைத் தன் மகனிடம் அன்பும்,அக்கறையுமாய் நடந்து கொண்டிருந்தால்.. இப்படி சுற்றியிருப்போரிடம் ‘அட்டென்ஷன்’ தேடி ‘ஜோக்கர்’ ஆகியிருக்க மாட்டான்.

“என்னாப்பா வெற்றி, திருவிழா தொடங்கி ரெண்டு நாளாச்சு! ஒரு கலகலப்பும் இல்லையே?”

மரத்தடியிலிருந்த டீக்கடை பெஞ்சில் கண் மூடிப் படுத்திருந்தவனின் அருகே வந்து விசாரித்தார் பிரசாத்தின் பாட்டி சௌந்தரம்.

“இன்னா கெய்வி, வூட்டு வாசலைத் தாண்டி வெளிய-லாம் வந்துருக்க?, வெத்தளை தீர்ந்துடுச்சா?”

“ஹிஹிஹி ஆமாப்பா”

“அதான, 24- மணி நேரமும் டிவி சீரியல்லயே உட்கார்ந்திருக்காத கெழவி! கண்ணு பொட்டையாகி கண்ணம்மா பேட்டைல படுத்துறப் போற”

“கொறஞ்சது இன்னும் 15 வருசத்துக்காவது நான் உயிரோட தான் இருப்பேன். என் ஆயுசு அவ்ளோ கெட்டி”

“அதுசரி”

“சரி, திருவிழான்ற கலகலப்பே இல்லாம தெருவு ஏன் இப்புடி வெறிச்சுப் போய்க்கிடக்கு?, பாட்டு,டான்ஸூன்னு ஒரு அமர்க்களமும் இல்ல?, நீ தான வருசம் தவறாம இதையெல்லாம் எடுத்து செஞ்சின்னு இருந்த? இப்போ ஏன் கண்டுக்காம இருக்க?”

“பாட்டி!, அவன் காதல் தோல்வில சோகமா சுத்தினு இருக்குறான்! அவனாண்ட போய் பாட்டு,டான்ஸூன்னு பேசிட்டிருக்கிற?” - கதிர் இடைபுகுந்தான்.

“காதல் தோல்வியா?, அது வருசமெல்லாம் உனக்கு நடக்குறது தானய்யா?,” - வெள்ளந்தியாய்ப் பாட்டி.

“ஹாஹாஹாஹா” - கதிர்.

“மூட்றா மூதேவி! இன்னா கெய்வி, கலாய்க்கிறியா?” - வெற்றி

“உண்மையைத் தானய்யா சொல்றேன்?”

“நீ கூட என்னை புரிஞ்சுக்கலேல அப்பத்தா?” - ரோசத்துடன் வினவியவனிடம்..

“ச்ச,ச்ச” என்றபடி அருகே வந்த பாட்டி அவன் தலை முடியைக் கோதி “உன்னை வேணாம்ன்னு வுட்டுட்டுப் போனா அந்தச் சண்டாளிக்குத் தான் ராசா இழப்பு! நீ மகராசன் ஆச்சே’ என்று கூற..

“முடியைக் களைக்காத கிழவி” என்றபடியே பாட்டியின் கையைத் தடுத்தவன் “நீ மட்டும் தான் என்னைய மகராசன்ற?, அவ,அவ எனக்கு மொல்லமாரிப் பட்டன் தான் குடுக்குறாளுங்க” என்று முணுமுணுத்தவன்... “டேய் கதிரு, பாட்டைப் போட்றா!, சிறுசு,பெருசுன்னு அத்தனையும் வீதிக்கு வரட்டும்” - எனக் கத்திக் கூற... அவனும் ஓடிச் சென்று பாட்டை ஒலிக்க விட்டான்.

ஸ்பீக்கர் சத்தம் தெருவெங்கும் ஒலிக்கத் துவங்க, விடுமுறையென வீட்டினுள் முடங்கிக் கிடந்தக் குழந்தைகள் அனைவரும் தெருவுக்கு வந்து.. கோவில் முன்பிருந்தப் பந்தலில் கூடி.... டான்ஸ் ஆடத் தொடங்கினர்.

“இது போதுமா கெழவி” - ஒலித்த பாடலை மீறி கத்திக் கேட்டவனிடம் “என்னாய்யா சொன்ன?” - என்று பதிலுக்குக் கத்தியது கிழவி.

“ம்ம்ம், கீழ வுழுந்து மண்ணைக் கவ்வாம ஒழுங்கா வூடு போய்ச் சேருன்னு சொன்னேன்” - என்று விட்டு... பந்தல் அருகே சென்றான் வெற்றி.

அதன் பின்பு கூழ் ஊற்றவென சட்டி,புட்டிகளுடன் பெண்கள் வந்து சேர.. பூஜை, படையலென கோவில் அமர்களப்பட்டது.

ஆளாளுக்கு வாளியுடன் வரிசையில் நின்று கூழை வாங்கிக் கொள்ள... பந்தல் கம்பத்தில் கைக் கட்டிச் சாய்ந்து நின்று கொண்டு.. போவோர்,வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் வெற்றி.

“இன்னா வெற்றி, ஆளையே பார்க்க முடியல?, இந்த ஏரியால தான் இருக்கியா?” - நக்கல் குரலில் கேட்ட சுந்தரேசனைக் கேவலமாய் முறைத்தான்.

“****! வாய்லயே வாங்கியும் அடங்க மாட்றானே!” -முணுமுணுத்துக் கொண்டாலும் பதில் பேசவில்லை அவன்.

இவன் ஏதாவது பேசப் போய், மீண்டும் கைக்கலப்பாகி விட்டால், இதற்கும் வெற்றியின் மீது பழியைப் போடுவாள் அவள்! எக்கேடோ கெட்டுப் போய்த் தொலையட்டும்!

அவன் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே, அவன் எண்ணத்தின் நாயகி கையில் கிண்ணத்துடன் வந்து சேர்ந்தாள்.

தூக்கிக் கட்டியக் கொண்டையுடனும்,நீல நிற காட்டன் சல்வாருடனும் பந்தலருகே வந்தவளைக் கண்டுப் பார்வையை வேறு புறம் திருப்பினான் வெற்றி.

**‘காத்தோடு பூ உரச.... பூவ வண்டுரச...**

**உன்னோடு நான்.... என்னோடு நீ......**

**பூவா.. காத்தா... உரச......’**

-ஷ்ஷ்ஷ்ஷ்... வந்துட்டாருய்யா! மனுஷன் அடங்கவே மாட்டாரு! சதி பண்றீங்க ராஜா சார் நீங்க! - முணுமுணுத்தவன் மனசு கேட்காமல் மீண்டும் அவள் புறம் திரும்பினான்.

மிகுந்தத் தயக்கத்துடன் மெல்ல,மெல்லப் பார்வையை உயர்த்தித் தடுமாற்றத்துடன் தன்னை நோக்கியவனை அவளும் பதிலுக்கு நோக்கினாள்.

ஒரு காலை மடக்கி நின்றும் கூட.... அந்தக் கம்பத்தின் முக்கால்வாசி உயரத்தை அசால்ட்டாகத் தொட்டிருந்தான். களைந்தத் தலை முடியும், இரண்டு நாள் தாடியுமாக.. துடிக்கும் இதழ்களுடன்.. தன் பெரிய கருமணிகள் இரண்டிலும் அவளை முழுதாக நிரப்பிக் கொண்டு.. ஒலித்துக் கொண்டிருந்தப் பாடலில் மயங்கி... அநியாயத்திற்குக் காதல் பார்வை பார்த்துக் கொண்டிருந்தவனை வியந்து போய் நோக்கினாள் அவள். ரொம்ப அழகா இருக்கானோ!, ஒரு வேளை என் கண்ணுக்கு அப்படித் தெரியுறானா?-பெருத்த யோசனை அவளுக்கு!

“இப்டியே எவ்ளோ நேரம் டா பார்த்துக்கிட்டே இருப்பீங்க?” - இடையில் கதிர்.

“அவளா முகத்தைத் திருப்பிக்கிற வரைக்கும்” - பார்வை அவள் மீதிருந்தாலும் நண்பனுக்குப் பதிலளித்தான் வெற்றி.

“முன்னால போறியா என்னாம்மா?” - என்று அவள் நின்றிருந்த வரிசையில், அவள் பின்னே நின்ற பெண்மணி குரல் கொடுக்க... சட்டெனப் பார்வையைத் திருப்பி முன்னே சென்றவள் கையிலிருந்தப் பாத்திரத்தில் கூழை வாங்கிக் கொண்டு அவனருகே வந்தாள்.

அதுவரையிலும் கூடத் தன் பார்வையை மாற்றிக் கொள்ளாமல் நின்றிருந்தவன், அவள் தன்னருகே வந்ததும், ஆசையும்,ஆர்வமுமாய் நோக்கினான்.

பாத்திரத்தை அருகிலிருந்தத் திண்டில் வைத்தவள் கையைக் கட்டிக் கொண்டு அவனை முறைத்தாள்.

“இன்னாத்துக்கு டா அப்பிடிப் பார்க்குற?”

“எப்பிடிப் பார்க்குறேன்?”

“இருட்டுக்குள்ள உட்கார்ந்திருக்கிறக் கோட்டான் மாதிரி!, இதோ பாரு.. அங்கங்க நின்னுக்கினு என்னையப் பார்த்து ரொமாண்ட்டிக்-ஆ லுக் வுட்ற வேலைய இத்தோட விடு! இதுக்கு, நீ என் பின்னாடி சுத்துனப்போக் குடுத்த டார்ச்சர்-ஏ பரவாயில்ல போல!”

-அங்கலாய்த்துக் கொண்டவளுக்குப் பதில் சொல்லாமல் ஒரு பார்வை பார்த்து விட்டு, அவளைத் தாண்டிக் கொண்டு முன்னே நடந்தான் அவன்.

“என்னடா நான் பேசிட்டே இருக்குறேன்?, நீ பாட்டுக்க போற?” - அவனைத் தொடர்ந்து புலம்பியபடிப் பின்னே வந்தவளைக் கண்டு கொள்ளாமல்.. கதிர் வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்தான் வெற்றி.

எதிர் சுவருக்கும், வீட்டு வாசலுக்கும் இடையே நான்கே அடி இடைவெளியைக் கொண்ட அந்த காம்பவுண்டுக்குள் மொத்தமாய் ஐந்து வீடுகளிலிருந்தது.

அவனைத் தொடர்ந்து தானும் நுழைந்தவளைத் திரும்பி நோக்கியவன்...

“என்னடி பிரச்சனை உனக்கு?, எதுக்கு இப்போ சும்மா இருக்கிறவனை சொரிஞ்சு விடப் பார்க்குற?” - என்று பொறுமையாய் வினவினான்.

ஐந்து வீட்டு ஆட்களும் கோவில் முன்பு கூடியிருந்ததால்.. ஐந்து வீடுகளுமே சத்தமின்றி அமைதியாயிருந்தது. கோவில் வாசலில் விடாது ஒலித்த இளையராஜா.. சன்னமாய் இருவருக்கிடையில் வந்து,சென்று கொண்டிருந்தார்.

அடித்துக் கொண்டிருந்த வெயிலை மீறி.... ஆடி மாதக் காற்று.. அவனது முன் நெற்றி முடியுடன் ஹை-ஃபை கொடுத்துக் கொண்டிருக்க.. சுருக்கியப் புருவங்களுடன் தன்னை நோக்குபவனைப் புரியாத உணர்வுகளுடன் நோக்கினாள் ஜமுனா.

விரல்களைப் பிசைந்தபடிப் பார்வையைத் தழைத்தவள்..

“எனக்கு... என்னமோ... ரொம்ப அன்-கம்ஃபர்டபிளா ஃபீல் ஆகுது!” - என்றாள்.

“........” - பார்வை மாறாமல் நோக்கிக் கொண்டிருந்தவனைத் தயக்கத்துடன் ஏறிட்டு..

“நீ பார்க்குறது, பண்றது எல்லாத்தையும் தான் சொல்றேன்” - என்றாள்.

**‘தேனோடை ஓரமே... நீராடும் நேரமே...**

**புல்லாங்குழல் தள்ளாடுமே... பொன்மேனி கேளாய் ராணி!’** - ராஜா சார் வேறு இடையில்! டிஸ்ட்ராக்ட் பண்ணாதீங்க சார்! என்றபடி அவரைத் துரத்தியவன்...

“புரியல எனக்கு” என்றான்.

“..................”

“புடிச்சிருக்குன்னு சொன்னவனை, இந்தப் பரந்த உலகத்துல, ஒரு வாய்த் தண்ணீ குடிக்கக் கூடத் தகுதியில்லாதவன் டா நீ-ன்னு சொல்லி அவமானப்படுத்தி

அனுப்பிட்ட! நானும் உன் பின்னாடி வராம ஒதுங்கிப் போயிட்டேன்ல? அப்புறம் என்ன?" என்றவனை அவசரமாக இடைமறித்து......

"அது தான் பிரச்சனை" என்றாள்.

"ம்??"

"நீ பின்னாடி வராதது தான் பிரச்சனை"

-அது வரைக் கையை உயர்த்திக் கோபமாய்ப் பேசிக் கொண்டிருந்தவன் சட்டென இரண்டு கையையும் கீழிறக்கி, மூக்கு விடைக்க அவளை ஒரு பார்வை பார்த்து விட்டுப் பின் பல்லைக் கடித்தான்.

"மணி,மணி-ன்னு நாம பேர் சொல்லிக் கூப்பிட்றதால.. நாய் மனுஷனாயிடாது டி! அதே மாதிரி தான் நானும்! உன் பின்னாடியே திரிஞ்சதால... என்னைய ஐந்தறிவு ஜீவின்னு நினைச்சுக்காத! கை,கால்,மூளை,இதயம்ன்னு எல்லா பார்ட்டும் இருக்குற... நிறைஞ்ச மனுஷன் நானு"

"ப்ச், நான் என்ன சொல்ல வந்தா நீ என்ன பேசுற?, நான் போற இடத்துக்கெல்லாம் எப்பவும் பின்னாடி வருவ! இப்போ நீ இல்லாதது ஒரு மாதிரி இருக்குன்னு சொல்றேன்! இப்போ-ல்லாம் நீ வராததால, பிள்ளையார் கோவில் வாசல்-ல நெய் விளக்கு விக்குற அக்கா, தம்மதூண்டு நெய் இருக்கிற விளக்காப் பார்த்துக் குடுத்து என்னைய எப்பிடி ஏமாத்துது தெரியுமா?"

"ஓஹோ! அந்தக்கா நெய் நிறைய ஊத்திக் குடுக்காதது தான் உன் பிரச்சனையா இப்போ?"

"ச்ச,ச்ச நான் அப்டி சொல்லல! உன் ப்ரசன்ஸை மிஸ் பண்றேன்! நீயில்லாதது ஏதோ.. கை உடைஞ்ச மாதிரி இருக்கு...."

யோசித்து யோசித்து வார்த்தைகளைக் கோர்த்தவளிடம்..

"நீ இப்போ சொன்னதுக்கு என்னடி அர்த்தம்?? ம்? உன்னைக் காதலிக்கிறேன்னு சொல்லியிருக்கேன் நான்! நீ என்னை மிஸ் பண்றதா சொல்ற?, இப்போ எனக்கு எப்பிடியிருக்குத் தெரியுமா?, இதயத்துல ஐஸ் கட்டி வைச்ச மாதிரி, உடம்பு முழுக்கக் குளிர்ந்து போய்... மூளை,மனசுன்னு அத்தனைலயும் அநியாயத்துக்கு ஆசை வருது... இப்போ உன்னைக் கட்டிப்பிடிச்சாக் கூடத் தப்பில்லன்னு தோணுது!"

-தீவிரமாய்க் கூறியவனைக் கேட்டு விழி விரித்துப் பின் பயந்து.. இரண்டடி பின்னே சென்றவள்..

“அப்டிலாம் எதுவும் பண்ணித் தொலைச்சுடாத! அவசரத்துல செருப்புப் போடாம வந்துட்டேன்! உன்னை அடிக்கிறதுக்குக் கூட எதுவுமில்ல என் கிட்ட” என்றாள்.

பதில் கூறாமல் வெறித்தவனிடம் “நான் சொல்ற எல்லாத்தையும் நீ ட்விஸ்ட் பண்ற!, நான் ஒரு நண்பனா... உன்னை மிஸ் பண்றேன்னு தான் சொன்னேன்! பார்க்கும் போதெல்லாம் வாயடிச்சு,வம்பு பேசி.. ஏதாவது செஞ்சு என்னை சிரிக்க வைப்ப! வேலை,அம்மா இது ரெண்டு மட்டுமே உலகம்ன்னு இருந்த எனக்கு, உன் கூடப் பழகுனது எவ்ளோ ரெஃப்ரஷிங்-ஆ இருந்தது தெரியுமா?, ஒரு நண்பனா... உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும் வெற்றி! அன்னைக்கு ஏதோ கோபத்துல நிறைய பேசிட்டேன்! இப்போ சாரி கேட்டுக்குறேன்! என்னை மன்னிச்சுடு! நாம பழையபடி.. நல்ல ஃப்ரண்ட்ஸா இருப்போம். என்ன சொல்ற?” - கண்ணை உருட்டிக் கொண்டு ஆர்வத்துடன் தன்னை நோக்குபவளைக் கண்டு மெல்லச் சிரித்தவன் அவளருகே நெருங்கி நின்று “என்னைப் பார்த்தா... ஈனா,வானா மாதிரி தெரியுதா டி உனக்கு?” - உச்சகட்ட கோபத்தில், அடிக்குரலில் அதட்டினான்.

“வெற்றி.............”

“ஆனா சும்மா சொல்லக் கூடாதுடி! என்னமா வார்த்தையைப் போட்ற?, உன்னை மாதிரி பொன்னுங்களையெல்லாம் நான் சினிமா-ல தான் டி பார்த்திருக்கேன்! சிரிச்சு சிரிச்சுப் பேசி பழகிட்டுக் கடைசில ஃப்ரண்ட்ன்னு சிம்பிளா முடிச்சிடுவாளுங்க!”

“தேவையில்லாம ஓவர்-ஆ பேசாத டா!, அமைதியா இருக்க மாட்டேன் நான்”

“என்னடி பண்ணுவ?, ம்? என்ன பண்ணுவ?, ஆள் இல்லாத காம்பௌண்டுக்குள்ள தன்னந்தனியா நிக்கிறோம் ரெண்டு பேரும்! எக்குத்தப்பா என்னன்னவோ தோணுது! ஆனாலும் கட்டுப்படுத்திட்டு நிக்குறேன்! நான்... நான் உனக்கு ஜஸ்ட் ஃப்ரண்ட்-ஆ மட்டும் இருக்கனுமா?, போயிரு டி! பச்ச,பச்சையா மனசு நினைக்கிறதை, யோசிக்காம ‘பசக்,பசக்’-ன்னு கொடுத்துடப் போறேன்”

தன் முகத்தருகே நெருங்கி மூச்சு வாங்கக் கத்தியவனை இமை இடுங்க நோக்கியவள்.. அவனை விட்டு விலகி நின்றாள்.

“உலகத்துல இருக்கிற எல்லாப் பசங்களுக்கும் ஒரே எதிர்பார்ப்பு தான் டா!, நீங்க காதலிக்கிறதா சொன்னவுடனே, நாங்க டப்புனு ஒத்துக்கிட்டு டூயட் பாடிடனும்ன்னு!”

“ஏய்ய்ய் மூடிட்டு போயிட்றி! வந்துட்டா... பெருசா வியாக்யானம் பேசிக்கிட்டு!”

“டேய்...” - மறுபடி ஏதோ பேசத் துவங்கியவளைத் தடுக்கும் பொருட்டு அருகிலிருந்த கிரிக்கெட் மட்டையைக் கையில் எடுத்தவன் “போறியா?, நடு மண்டைலயே நச்சுன்னு போடவா? போடி..... போ...” என்று மிரட்டி விரட்ட.... “நீயெல்லாம் உருப்படவே மாட்ட டா” என்ற கடைசி சாபத்தோடு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

ஆளில்லாத காம்பவுண்டுக்குள்ளிருந்து எரிச்சலுடன் வெளியே வந்த ஜமுனாவையும்,அவளைத் தொடர்ந்து இறுகிய முகத்துடன் வந்த வெற்றியையும் கண்ட மாலதி அண்ட் கோ தங்களது வேலையைக் காட்டத் துவங்கினர்.

கோவிலருகேயிருந்தத் திண்டின் மீது தான் வைத்தப் பாத்திரத்தை எடுத்துக் கொள்ள வந்த ஜமுனாவின் அருகே வந்து நின்றாள் மாலதி.

“என்ன ஜம்மு!, ஆந்த்ராக்ஸூக்கும், உனக்கும் முட்டிக்கிச்சு போல! உன் முந்தானையைப் பிடிச்சுக்கிட்டு மூணு வேளையும் வலம் வர்றவன், தாடியும்,மீசையுமா.. தேவதாஸ் மாதிரி சுத்துறானே”

“..................” - இழுத்து மூச்சு விட்ட ஜமுனாவின் முகத்தில் கொஞ்சம்,கொஞ்சமாக பொறுமை போய்க் கொண்டிருந்தது.

“நான் தான் அன்னிக்கே சொன்னேனே!, அந்தப் பய ஒரு மாதிரின்னு! எங்களுக்குத் தெரிஞ்சு, அவன் சிரிச்சுப் பேசிப் பழகியும் கூட... கை,கால்ல சேதாரமில்லாம நல்லா சுத்தினு இருக்கீற ஒரே பொண்ணு நீ தான்! நமக்குத் தான் ஒன்னுமாகலையேன்னு நீ பாட்டுக்க அசால்ட்-ஆ இருக்காத!, இதையே சாக்கா வைச்சு அவன்-ட்ட இருந்து எஸ் ஆயிடு!, சரியான ராசி கெட்டப் பய அவன்” - நான்-ஸ்டாப்பாய் வளவளத்தவளை ஒரே வார்த்தையில் ஆஃப் செய்ய முடிவெடுத்து நிமிர்ந்து அவள் முகம் பார்த்தாள் ஜமுனா.

“நீ கூழ் வாங்கிக் குடுச்சுட்டியா?” - ஜமுனா

“அதெல்லாம் அப்பவே ஆச்சுது!, ஏய், நான் எவ்ளோ சீரியஸ்-ஆ பேசிட்டிருக்கேன்! நீ என்ன கூழ்,கஞ்சின்னுட்டு?”

“கதிர் குடிச்சானான்னு கேட்டியா?”

வெடுக்கென அவள் புறம் நோக்கியவள் “அ...அவன் குடிச்சிட்டானா,இல்லையான்னு நான் என்னாத்துக்குக் கேட்கனும்?” - தானாகத் தந்தியடிக்கத் தொடங்கியப் பற்களுடன் வினவினாள்.

“ஓஓஓஓ.. அப்ப வாராவாரம் வெள்ளிக் கிழமை ராத்திரி பத்து மணிக்கு, சேட்டு வூட்டு மாடில ரெண்டு பேரும் கட்டிப்பிடிச்சுக்கினு உட்கார்ந்திருக்கிறது வெறும் குஜால் மேட்டருக்குத் தானா?, நான் கூடப் புனிதமான காதல்ன்னு நினைச்சேனே”

“ஷ்,ஷ், சத்தமா பேசாத! உனக்கு எப்படித் தெரியும்?, ஆந்த்ராக்ஸ்க்குக் கூட எங்க லவ் மேட்டர் தெரியாதே”

“கதிர் கூடவே சுத்துறான்! அவனுக்குத் தெரியாமலா இருக்கும்?, ஆனா.. அவன் சொல்லல. சௌந்தரம்மா வூட்டு மொட்டமாடில ஆண்டனாவத் திருக வந்தப்போ நானே என் ரெண்டு கண்ணால பார்த்தேன்!”

“ஏய் ஏய்.. நீ.. நீ பார்த்ததை யார்க்கிட்டயும் சொல்ல மாட்டேல?, எங்கம்மாவுக்குத் தெரிஞ்சா.. அவ்ளோ தான்! கூவம் ஆத்துல நான் டெட்-பாடியாத் தான் மிதப்பேன்!”

“நான் உங்கம்மாக்கிட்ட வத்தி வைக்கிறதும், இந்தத் தெரு முழுக்க ஸ்பீக்கர் போட்டு சொல்லாம இருக்கிறதும் உன் கையில தான் இருக்கு”

“என்ன?”

“ஆமா! இன்னொரு தடவை வெற்றியைப் பார்த்து ராசியில்லாதவன்னு கேலி பண்றது, அவனுக்கும்,உனக்கும் இருக்கிற வயசு வித்தியாசத்தைக் கூட மதிக்காம, அவனை மரியாதையில்லாம பேசுறது,மட்டம் தட்டுறது இந்த மாதிரி வேலையெல்லாம் வைச்சுகிட்டன்னு வை, நேராப் போய்.. கனகா-க்கா கிட்ட உன் மேட்டரை பட்டுன்னு உடைச்சிடுவேன்! உனக்கேத் தெரியும், கனகா-க்கா கிட்ட சொன்னா.. மெட்ராஸூக்கே சொன்ன மாதிரி”

“ஏய்... இன்னா மிரட்டுற?”

“சரி வுடு!, உன் தலையெழுத்து அவ்ளோ தான் போல! கனகா-க்கா... உங்களுக்கு மாலதி விசயம் தெரியுமா?” - எனக் கத்தியவளின் வாயைப் பொத்திய மாலதி...

“பேச மாட்டேன்! இனி வெற்றியைப் பத்தித் தப்பா ஒரு வார்த்தைக் கூடப் பேச மாட்டேன்! ப்ளீஸ்.. நீ எதுவும் பண்ணிடாத! கதிருக்கு நல்ல இடத்துல வேலை

கிடச்சதும் நாங்களே வீட்ல பேசி கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கோம்! இப்போ விசயம் தெரிஞ்சதுனா... எல்லாம் கெட்டுடும்”

“அப்போ நீ வாயை அடக்கி வை”

“நான் வெற்றி இருக்கிறப் பக்கமே வர மாட்டேன் இனி”

“ம்ம், வெர்ரி குட்” என்றவள் தன் வீட்டை நோக்கி நடக்கத் துவங்க.. “ஏய் ஒரு நிமிஷம் இரு” என்ற மாலதி “நீ... நீ ஆந்த்ராக்ஸை... சாரி!, வெற்றியை லவ் பண்றியா?” என்று வினவினாள்.

“இப்போதைக்கு இல்ல. ஆனா... ஃப்யூச்சர்ல லவ் பண்ண மாட்டேன்னு சொல்ல முடியாது” - தோரணையாகக் கூறி விட்டு முன்னே சென்றவளை விரிந்த வாயுடன் நோக்கினாள் மாலதி.

**அ**ன்றிரவு சிறியவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து.. கோவில் பந்தலிலேயே டிவி ஒன்றை வைத்து வரிசையாகப் படங்களை ஒலிபரப்ப.. அத்தெருவைச் சேர்ந்தப் பெண்களும், ஆண்களும் அதன் முன்னே கூடி விட்டனர்.

ஜமுனாவுடன் அமர்ந்திருந்த சரோஜா சிறிது நேரத்திலேயே சென்று விட செல்வியின் நச்சரிப்பால் வீட்டிற்குச் செல்ல வழியின்றிக் கொட்டாவியை வெளியிட்டபடி படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜமுனா.

அருகில் அமர்ந்திருந்த மாலதி ஒரு மாதிரி நெளிவதை ஓரக்கண்ணால் நோக்கியவள்... என்னவென்று எதிரே பார்க்க... அவளிடம் சைகையில் ஏதோ பேச முயன்றபடி தூக்கியக் கைகளுடன் கதிர் நின்றிருந்தான்.

மாலதியின் இந்த அவஸ்தை தனக்கு விசயம் தெரிந்து விட்டதால் உண்டானதென்பதைப் புரிந்து கொண்ட ஜமுனா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

“மாலதி...” - மெல்லிய குரலில் அவளை அழைத்தாள் ஜமுனா.

“என்ன?”

“உன் ஆளுக்குத் தைரியத்த பார்த்தியா?, எல்லாரும் கூடியிருக்கிறப்பவே, உன்னை சேட்டு வூட்டு மாடிக்குக் கில்மா பண்ணக் கூப்பிட்றான்?”

“ச்சி, அவன் ஒன்னும் அதுக்காகக் கூப்பிடல”

“பின்ன?”

“பசங்களோட சேர்ந்து தண்ணியடிக்கப் போறானாம்! அதான் என் கிட்ட பர்மிஷன் கேக்குறான்.” - மிடுக்காகக் கூறியவளிடம் “அடேங்கப்பா அவன் அவ்ளோ நல்லவனா” என்ற ஜமுனா.. கலகலவெனச் சிரிக்க.. “ஷ்ஷ்ஷ், பக்கத்துல செல்வி இருக்கா, நீ கொஞ்சம் அமைதியா இரேன் ப்ளீஸ்” என்று மாலதி கெஞ்சிய பின் அமைதியானாள்.

அதற்குப் பின்னும் இருவரும் பேசிய சைகை பாஷையை ஓரக்கண்ணில் கவனித்தபடி சிரித்துக் கொண்டிருந்தவள், திடீரென பிரசாத்தின் “டேய் வெற்றி....” என்ற அழைப்பில் சட்டெனத் திரும்பினாள்.

மடித்துக் கட்டிய வெள்ளை வேட்டியும்,சிகப்புச் சட்டையுமாக நின்றவன், அவளது பார்வையை உணர்ந்தாலும் கண்டுகொள்ளாமல் நண்பனிடம் என்னவென்று வினவினான் அவன்.

“உனக்குப் புடிச்ச ‘பயணங்கள் முடிவதில்லை’ படம் ஓடின்னு இருக்குது! வந்து உக்கார்றா”

“இல்ல மச்சி! மீச கடையை சாத்தினு இருக்காரு! நான் போய் ஹெல்ப் பண்றேன்!”

“ஹெல்ப்ன்னா?, பூட்டு துவாரத்துல சாவிய மாட்டித் திருகி விட்டுட்டு வருவியா?, டேய்.. நீ எந்த அழகுல உதவி செய்வன்னு எங்களுக்குத் தெரியும்?, உட்கார்றா மூடிட்டு”

‘இந்த ராங்கி மூஞ்சியைப் பார்க்க வேணாம்ன்னு ஒதுங்கிப் போக நினைச்சா... இவனுங்க வேற!’ முணுமுணுத்தபடி அமர்ந்தவன்... மாலதியைக் கண்டு...

“என்ன மாலதி, படம் பார்க்குறியா?” என்று வம்பு செய்தான்.

‘இல்ல, பாடை கட்டினு இருக்குறேன்’ - என்று பதில் சொல்ல... வாய் வந்தாலும், ஜமுனாவை நினைத்து நாவை அடக்கி... அவனைப் பார்த்து லேசாகச் சிரித்து வைத்தாள்.

“சிரிப்பைப் பார்றா!, என்ன அமைதியா இருக்க?, மதியம் குடிச்சக் கூழ்-ல கெய்வி எதையும் கலந்துருச்சா?” - என்று அவன் கேலி பேசியதற்கும் அவள் பதில் சொல்லாமல் அமர்ந்திருக்க.., என்னாச்சு இவளுக்கு என்றெண்ணியபடி நண்பர்களிடம் திரும்பினான் வெற்றி.

விடாது டிவி ஓடிக் கொண்டிருக்க.. சிலர் ஆர்வமாய்ப் படம் பார்த்தபடியும், சிலர் அங்கேயே படுத்துறங்கியபடியும், சிலர் கொட்டாவியை வெளியிட்டபடி ஊர்க்கதைகளைப் பேசியபடியும் அமர்ந்திருந்தனர்.

கண்கள் முழுக்கத் தூக்கத்துடன் தன் இரு கைகளால் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, அதில் நாடியைப் பதித்து தூக்கியப் புருவங்களுடன் டிவியை பார்த்துக் கொண்டிருந்தவளின் மீது நிமிடத்திற்கொரு முறை படிந்து மீண்டது வெற்றியின் பார்வை..

**‘ராதை மனம் ஏங்கலாமோ.... கண்ணன் மனம் வாடலாமோ..**

**வாழ்க்கை மாறுமோ... நெஞ்சம் தாங்குமோ....**

**மணி ஓசை கேட்டு எழுந்து... நெஞ்சில் ஆசை கோடி சுமந்து....’**

-லொக்,லொக் என்ற இருமல்களுக்கிடையில் சோகம் ஏந்தி வந்த எஸ்.பி.பியின் குரல், ராஜாவின் இசை! வழக்கம் போல் அவன் உள் மனதின் ஏக்கங்களைத் தட்டி எழுப்ப.. கம்பத்தின் அருகே அமர்ந்திருந்தவன், அவளையே பார்த்தபடி அதில் மெல்லத் தலை சாய்த்தான்.

வெள்ளிக்கிழமையானாலே ஆளு ஒரு டைப்-ஆ இருப்பா! இன்னிக்கு ஆடி வெள்ளி வேற! உடம்பு முழுக்க பக்தி தாண்டவம் ஆடனும்ன்றதுக்காகவே.. ரெண்டு தடவை குளிச்சிருப்பா!, சோர்வை மீறிப் பளபளத்த அவள் கண்களில் மையல் நிறைந்தால்.. எப்படியிருக்குமென மனம் வேண்டாதக் கற்பனையில் இறங்க.. அந்த மெல்லிய வெளிச்சத்தில்.. சிவப்பு நிற சுடிதாரில்.. பதுமையாய் அமர்ந்திருந்தவளின் அருகே சென்றமர்ந்து... அவள் மடி சாயத் துடித்த மனதை சிரமப்பட்டு அடக்கினான்.

அவனது ஏக்கமும்,ஆசையும் காற்றோடு கலந்து அவளைத் தீண்டியதோ என்னவோ... மெல்லத் திரும்பி அவன் முகம் பார்த்தாள்.

பார்க்குறதைப் பாரேன்! கோட்டானே தான்! முறைப்புடன் அவள் எண்ணுகையில்... அவளையே பார்த்தபடி கம்பத்தில் தலை சாய்த்தவன்.... விழிகள் முழுதிலும் அவளை நிரப்பியபடி மெல்லக் கண் மூடினான்.

அவன் செய்கையில் படபடத்த இதயத்தை மறைத்து.. சட்டென டிவியின் மீது பார்வையைப் பதித்தாள் ஜமுனா. ஏதோ... அவன், அவள் மீதே சாய்ந்துக் கண் மூடி விட்டதைப் போன்ற உணர்வு! என்ன பார்வை அது?, காதல் இல்லை நிச்சயமாக! பலூன் வேண்டுமெனக் கேட்டுப் பாவமாய் முகத்தை வைத்துக் கொள்ளும் பிள்ளை

போல! ஏக்கமாய்...! என்ன கண்றாவியோ! என்ன தான் வேண்டுமாம் இவனுக்கு! காதலிப்பதாகச் சொன்ன போதும், காதலிக்கச் சொல்லிக் கேட்ட போதும்.. இத்தனை ஏக்கத்தை அவன் வெளிப்படுத்தவில்லை! ஆனால்.. அவளைக் காணும் போதெல்லாம்.. விழி வழியே ஏதோ செய்தி கடத்துகிறான்! யாரிடம் சென்று அந்த பாஷையை மொழி பெயர்ப்பது?, அவனே வாய் விட்டுக் கூறினால் தான் உண்டு!

யோசனையும்,குழப்புமாய் அவள் மறுபடித் திரும்பும் போது, அவன் அங்கில்லை.

கோவிலைக் கடந்தத் தெரு மூலையில் ஒரு குட்டிச் சந்துக்குள், ஆண்கள் சிலர்... குறிப்பாகக் குடி மகன்கள் சிலர் ஒன்று கூடி.. ஆடி வெள்ளியை சரக்கு,சைட்டிஷ் உடன் விமர்சையாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

குடிக்கக் கூடாதென்று மாலதி கூறியதற்காகவே மூக்கு முட்டக் குடித்தக் கதிர் போதையில் "மாலதி ஐம் சாரி மாலதி! நீ சொன்னதைக் கேட்காம.. மாமா குடிச்சுட்டேன் டா" என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

அவனைச் சும்மா விட்டால் மேலே ஏதாவது உளறி வைத்து விடுவானெனப் பயந்து, அவன் வாயில் சிப்ஸைத் திணித்தான் வெற்றி.

"டேய்.. வெற்றி.. நீ குடிக்கலையா டா?" - குழறலுடன் பிரசாத்.

"அவன் ஒரு மே-மாசக் குடிகாரன் டா" - கதிர்.

"அப்டின்னா?"

"அவனுக்கு ஒரு வினோதப் பழக்கமிருக்கு டா! எங்கம்மா செஞ்ச மாங்கா ஊறுகா இருந்தா மட்டும் தான் அவன் சரக்கடிப்பான்! எங்கம்மா செஞ்சதைத் தவிர ஊர்ல எந்த மாங்கா ஊறுகாயையும் தொட்டுப் பார்க்க மாட்டான்!, ஏப்ரல்,மே-ல எங்கம்மா போட்ற ஊறுகா பாட்டில் எல்லாம் காலியாகுறது இவன் ஒருத்தனால மட்டும் தான்!" - கதிர்.

"போதும் வாயை மூட்றா" - வெற்றி

"மூட முடியாது போல டா வெற்றி"

"ம்????"

“வா....வாந்தி வர்றா மாதிரி இருக்குடா” என்றவன் தொடர்ந்து உவ்வேஏஏஏஏ என அவன் சட்டை மீதே வாந்தி செய்ய.. ‘அடச்சை’ என்றபடி சட்டையைக் கழட்டித் தூர எறிந்தான் வெற்றி.

வாந்தி எடுத்த நாய்.. அங்கேயே படுத்து விட..

“இவனுக்கு ஏன் டா இவ்ளோ ஊத்திக் குடுத்தீங்க?” என்று நண்பனைத் திட்டி விட்டு உடை மாற்ற வேண்டி அந்தச் சந்தின் மறு கோடிக்கு வந்தான்.

மங்கிய வெளிச்சத்தில் நடந்து வந்து கொண்டிருந்தவன், எதிரே வந்த ஜமுனாவைக் கண்டுத் திகைத்துப் பின்.. சுதாரித்து.. தன்னைக் கடந்து செல்ல முயன்றவளை வழிமறித்து நின்றான்.

“ஏய்.. எங்க போற?” - வெற்றி

“வூட்டுக்குத் தான்.”

“படம் பார்க்கல?”

“பார்க்கல.”

“ஏன்?”

“என்ன ஏன்?, தூக்கம் வருது. அதான் வீட்டுக்குப் போறேன்”

“இப்பப் போக முடியாது”

“ஏன்?”

“சந்துல உட்கார்ந்து எல்லாம் தண்ணியடிச்சுட்டு இருக்கானுங்க. முக்கியமா... உன் ஆளு சுந்தரேசனும் இருக்கான். நீ வேற மசாலா தடவுன சிக்கன் பீஸ் மாதிரி, சிகப்பு டிரெஸ் போட்டுக்கிட்டுக் கலரா இருக்க!, லெக் பீஸ் தான் வேணும்ன்னு அவன் பாட்டுக்க உன் காலைக் கடிச்சிடப் போறான்”

“டேய்... தண்ணியடிக்க உங்களுக்கு வேற இடமே கிடைக்கலயா?, என் வூட்டுப் பாதை தான் கிடைச்சதா?, கருமம், அதான் உன் மேல இப்பிடி கப் அடிக்குதா?, குடிகாரப் பன்னாட”

“ஏய்.. உன்னை திரும்பிப் போ-ன்னு சொன்னேன்”

“போக முடியாது டா!, நான் ஏன் போகனும்?, அவனுங்களைக் காலி பண்ணச் சொல்லு”

“அவனுங்கல்லாம் இப்போதைக்குப் போ மாட்டானுங்க”

“அப்புறம், நான் எப்போ வீடு போய்ச் சேர்றது?, அதெல்லாம் நான் போனா.. இடத்தைக் காலி பண்ணிடுவானுங்க”

“ஏய்.... அவனுங்க யாரும் நிதானத்துல இல்ல. சொன்னாக் கேளு”

“பரவாயில்ல! நான் தெளிவாத் தான இருக்கேன்?, பார்த்துப் போய்க்குவேன், நீ வழியை விடு முதல்ல! தண்ணியடிச்சுட்டு என் முன்னாடி நின்னு பேசுறதேத் தப்பு. இதுல அக்கறை இருக்கிற மாதிரி அட்வைஸ் வேற...” - முணுமுணுத்தபடி நகர்ந்தவளின் முன்னே கை நீட்டித் தடுத்தான் வெற்றி.

“ஏய்... வழியை விட்றா”

“ஒழுங்கா திரும்பிப் போடி”

“முடியாது டா!

“நான் எதைச் சொன்னாலும் செய்யக் கூடாதுன்னு கங்கணம் கட்டிட்டுத் திரியுறாயா? லூசுப்பயன்னு நினைச்சியா என்னைய?” - எரிச்சலும்,கோபமாய் வினவியவனைத் தாண்டி அவள் செல்லப் பார்க்க... அதுவரை வாய்ச்சண்டையாகப் பேசிக் கொண்டிருந்த இருவருக்கும்.. நொடியில் கைக்கலப்பாகி விட.. தன்னைத் தாண்டி முன்னே செல்லப் பார்த்தவளைக் கை நீட்டி அவன் தடுக்க முனைந்ததில்.. இயல்பாக.. அவன் கை நீண்டு.. அவள் இடையை இறுகப் பிடித்திருந்தது.

“போகாதன்னு சொல்றேன்ல?”

“கையை எடுடா பொறுக்கி!”

“மரியாதையா திரும்பிப் போடி”

“நீ கையை விட்றா முதல்ல!” - போராடித் திமிறியவள்.. அவன் வெற்றுத் தோளில் கை வைத்து அவனை விலக்கித் தள்ளினாள். இல்லை தள்ள முயற்சித்தாள்.

சந்தின் மறு கோடியிலிருந்த விளக்கு பாரபட்சத்துடன் சொற்பமான வெளிச்சத்தை மட்டுமே இவர்களிருந்த பக்கம் அளித்திருக்க... அதுவரை மனதினுள்.. அந்தரத்தில்

ஆட்டமாடிக் கொண்டிருந்த அவன் உணர்வுகள்.. அவள் தொட்டதில்.. மேடை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில்... கச்சேரி வைத்து ஆடத் துவங்கியது.

தன் தோளில் பதிந்திருந்த அவள் கை விரல்களைப் பேச்சின்றிக் குனிந்து நோக்கியவன்... தன் இடது கையால் அதைப் பற்றி... நிமிர்ந்து அவள் முகம் பார்த்தான்.

மீண்டும் அதே பார்வை! இம்முறை டன்,டன்னாய் காதலையும்,ஆசையையும் சேர்த்துக் கொண்டு!

விக்கித்துப் போய் பெரிதாய் விழி திறந்து.. இமைக்க மறந்து நின்றவளின் இடையை இறுகப் பற்றித் தன் புறம் இழுத்தான் அவன்.

காற்றின் உபயோகத்தில் பறந்து வந்து மோதிய அவளது முன்னுச்சி முடிகள்.. நறுமணத்தைப் பரப்பியதில் உண்டான கிறக்கத்தில்.. தன் நெற்றியை நோக்கிக் கண் மூடிக் குனிந்தவனை வெடுக்கென உதறித் தள்ளி நின்றாள் அவள்.

அவள் விலகியதும் தன்னிலை புரிந்தாலும்.. அதை ஏற்றுக் கொள்ளப் பிடிக்காமல்.. அவள் கையை மெல்லப் பற்றினான். பற்ற.. முயற்சித்தான் வெற்றி.

"ஜமுனா........" - ஏக்கமும்,கிறக்கமுமாய் வெளி வந்த அவனது குரல், நெஞ்சை ஏதோ செய்தது அவளுக்கு.

முதல் முறையாகப் பெயர் சொல்லி அழைக்கிறான்! தாளம் தப்பித் துடித்த இதயத்தை சமன் செய்வதற்குக் கூட வாய்ப்பளிக்காமல்.. தன் புறம் கரம் நீட்டுபவனைக் கண்டு அவள் மேலும் பின்னடைய...

மீண்டும் "ஜமுனா..." என்றான்.

"எ....என்ன?" - குரல் நடுங்கக் கேள்வி கேட்டாள் அவள்.

"ரெண்டு நிமிஷம்.... ப்ளீஸ்...."

"..............." - பதில் சொல்லாமல் ஏறெடுத்துப் பார்த்தவளிடம்..

"கட்டிப் புடிச்சுக்கட்டுமா?" - ஆழ்ந்த குரலில் அசால்ட்டாகக் கேட்டவனைக் கண்டு விக்கல் வந்தது அவளுக்கு. நா வரண்டு போய்... தண்ணீர் வேண்டுமென்றுத் தோன்றியது.

மூச்சு விட மறந்து.. கண்ணை விரித்தபடி.... சிலையாய் நின்றவளைப் பார்த்துக் கொண்டு நிற்கத் தோன்றாமல்... எட்டி இருகைகளால் அவளை இறுக அணைத்திருந்தான் அவன்.

உடல் இறுக.. விறைத்துப் போய் நின்றவள், அவன் கன்னம் அழுத்தியதில் அவிழ்ந்து கொண்ட கூந்தல்... முதுகு முழுதும் சூடாகப் பரவுவதை உணர்ந்ததும்... திடுக்கிட்டு.. அவனை விலக்கித் தள்ளினாள்.

அவள் பலமாகத் தள்ளியதில் இரண்டடி நகர்ந்துத் தடுமாறி நின்றவனை... மூச்சு வாங்க நோக்கியவள்... ஆங்காரத்துடன் அவன் கன்னத்தில் அறைந்தாள்.

ஒன்று..... இரண்டு.... மூன்று....

முழுதாக மூன்று அடிகளைத் தன் இரண்டு கன்னத்திலும் மாறி,மாறி வாங்கியவன்... அவள் மீண்டும் கை உயர்த்துகையில்... அதைப் பற்றித் தடுத்து..

“போதும்! ஏற்கனவே 3-ஆயிடுச்சு” என்றான்.

“கையை விடு! என்னைத் தொடாத! தொடாத டா நாயே” - அவன் கையிலிருந்துத் தன் கரத்தை உதறி விலக்கியவள்..

“என் கிட்ட... என் கிட்டயே உன் பொறுக்கித்தனத்தைக் காட்டுறியா நீ?, ராஸ்கல்!, செருப்பால அடி வாங்கியும், மானக்கேடாத் திட்டு வாங்கியும் உனக்கு புத்தி வரலேல்ல?, உனக்கும் அந்த சுந்தரேசனுக்கும் என்ன டா வித்தியாசம்!, வக்கிரம் புடிச்ச நாயே!”

“என்ன வித்தியாசமா?, அவனா இருந்திருந்தா.. கண்ட இடத்துலக் கை வைச்சிருப்பான்! நான்-ன்றதால கட்டி மட்டும் புடிச்சிருக்கேன்”

-நாராசமாகப் பேசியவனைக் கேட்டுக் காதைப் பொத்திக் கொண்டவளிடம்..

“இனிமே வாழ்க்கைல நான் உன்னைத் தவிர வேற எவளையும் கட்டிப்பிடிக்க மாட்டேன்! ஆனா... அவன் அப்பிடி இல்ல! அதான் அவனுக்கும்,எனக்குமிருக்கிற வித்தியாசம்.” என்றான்.

“பண்றதையும் பண்ணிட்டு வசனம் பேசுறியா?, எப்போடா சான்ஸ் கிடைக்கும்ன்னு காத்துட்டிருப்பீங்களா டா?, உன் மேல எந்த விருப்பமும் இல்லன்னு சொன்ன பொண்ணுக்கிட்ட இப்டித் தான் நடந்துப்பியா?, நீயும் உங்கப்பனை மாதிரி தான் டா!, மேட்டர்-க்காக மட்டும் பொம்பளைங்களை சுத்துறத் தெரு நாய்ங்க!”

-அவன் தந்தையைப் பற்றி எதேச்சையாக அவள் அறிந்து வைத்திருந்த விசயம்... இன்று அடக்க முடியாத கோபத்தில்.. ஆங்காரமாய் வெளி வந்து விட.. விழி சிவக்கக் கொதித்துப் போய் ஒரு நொடி நின்ற வெற்றி... மறு நொடி... அவளை ஓங்கி அறைந்திருந்தான்.

# அத்தியாயம் - 5

**'கண்கள் என்னும் சோலையில்... காதல் வாங்கி வந்தேன்..**

**வாங்கி வந்தபின்பு தான் சாபம் என்று கண்டேன்!**

**என் சாபம் தீரவே நீயும் இல்லையே..**

**என் சோகம் பாடவே ராகம் இல்லையே...!'**

**சென்**னையிலிருந்து வேலூருக்குச் செல்லும் பேருந்தின் ஜன்னலோர இருக்கையில்.. தலை சாய்ந்தமர்ந்தபடி வெளியே தெரிந்த இருளை வெறித்துக் கொண்டிருந்தான் வெற்றிச் செல்வன். வழக்கம் போல்.. ஹெட்செட் வழியே.. காதுக்குள் இளையராஜா!

அன்றிரவு.. அவன் காட்டுத்தனமாய் அடித்த பின்பு.. கருமணிகள் வெளியே தெறித்து விழுமளவிற்கு அவனை நோக்கி உறுத்து விழித்து விட்டு... அந்த இடத்தை விட்டு ஓடியவள் தான்... அதன் பின்பு நான்கு நாட்களுக்கும் மேலாக வீட்டை விட்டு வெளியே வரவேயில்லை.

கதிர் வேறு தனது தந்தை வழிப் பாட்டி இறந்து போய் விட்டதாகக் கூறி மறுநாளே வெளியூருக்குச் சென்று விட.. அவளுடன் நெருங்கிப் பழகும் ஒரே ஆளான செல்வியை அனுப்பி அவளது நிலையைக் கண்டறியக் கூட வழியில்லாமல் போனது அவனுக்கு.

டீக்கடையில் அமர்ந்து கொண்டும், தன் வீட்டுப் பலகணியில் நின்று கொண்டும் அவள் வீட்டு வாசலையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். சரோஜாவிடமும் பேசிப் பழக்கமில்லாததால்.. அவரிடம் வாய் விட்டுக் கேட்பதற்கும் மனம் இடம் கொடுக்கவில்லை!

இந்த உலகத்திலேயேத் தான் வெறுக்கும் தன் தந்தையுடன் தன்னை ஒப்பிட்டுப் பேசியதில் கொதித்துப் போய்... முதல் இரண்டு நாட்கள் வெறுப்பும்,முறுக்குமாய் விறைப்புடன் சுற்றிக் கொண்டிருந்தவன்.. 'என்ன இருந்தாலும் ஒரு பெண்ணைக் கை நீட்டி அடிப்பதா?, யார் அந்த உரிமையைக் கொடுத்தது தனக்கு?, அர்த்தராத்திரியில் அள்ளிக் கொள்ளும் அழகுடன் அருகே நின்றவளை.. அடக்கமாய்ப் பேசி அனுப்பி வைப்பதை விட்டு விட்டு... அராஜகமாக நடந்து கொண்டு.... அவளைக் கஷ்டப்படுத்தி விட்டானே!' - புலம்பிய மனதை சமாதானப்படுத்த முடியாமல் ஒரு முறையேனும்

அவளை நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டுமென.. வேலைக்குச் செல்லாமல் சாப்பாடு,தூக்கமின்றி டீக்கடை பெஞ்சே கதியெனக் கிடந்தான்.

முழுதாக நான்கு நாட்களுக்குப் பின் தன் வீட்டு வாசலில் யாரையோ வழியனுப்ப வந்தவளைக் கண்டு.. மகிழ்ச்சியும்,ஆர்வமுமாய் அவன் அருகே வர.... அவளோ அவனைக் கண்டு கொள்ளாமல்.. அந்தப் பெண்மணியிடம் நின்று ஏதோ தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

ப்ரௌன் நிற சுடிதாரில், தூக்கிக் கட்டியக் கொண்டையும், வெற்று நெற்றியுமாய் இருந்தவளின் முகத்தில் அத்தனை சோர்வு! தடித்த இமைகளும்,வெளுத்த உதடுகளுமாய் நின்றவளைக் கண்டு மனம் வலித்தது அவனுக்கு! தன்னால் தானோ?? அவன் கூறிய ஒரு வார்த்தைக்காகவே இன்று வரை சுடிதாருடன் மட்டுமே வாசலுக்கு வருகிறாள்!

வலிக்க,வலிக்க இதயத்தில் குத்திய மனசாட்சியின் பொறுமலைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்.. தன்னைக் காணாது வீட்டுக்குள் செல்ல எத்தனித்தவளை "ஜமுனா......" என்றபடி அவசரமாய்த் தடுத்து நிறுத்தினான்.

அவன் முகம் காணாமல் மறுபுறம் திரும்பி நின்றவள் லேசாகத் தலையைத் திருப்பி என்ன என்பது போல் பார்த்தாள்.

"ஒரு நிமிஷம் என்னைப் பாரேன்..." - வெற்றி

".........."

"ப்ளீஸ்...."

கையைக் கட்டிக் கொண்டு அவன் புறம் திரும்பி நின்றாள்.

தலை முதல் கால் வரை நேசத்துடன் அவளைப் பார்வையால் வருடியவன்... "ஏன் இப்பிடியிருக்க?" என்றான்.

"எப்பிடி இருக்கேன்?"

"நெத்தில பொட்டு இல்ல! காதுல தோடு இல்ல?"

வேக மூச்சுடன் அவன் கண்களை நோக்கியவள் "என்னைப் பேச வைக்காத வெற்றி" என்றாள்.

ஒரு நொடி அமைதியாய்த் தலை குனிந்தவன் பின் நிமிர்ந்து.. "சாரி ஜமுனா. என்னை மன்னிச்சுடு! நான் பண்ணது தப்பு தான்" என்றான்.

"............."

"ப்ளீஸ்...."

படி மீது நின்றிருந்தவளின் அருகே நெருங்கி வந்து... அண்ணாந்து அவள் முகம் பார்த்துக் கெஞ்சியவனின் முகத்தைக் கண்டவளுக்கு, அவன் தலைமுடியைக் கோதி விடும் வேகம் பிறக்க... கலங்கிய விழிகளுடன் அவனை நோக்கினாள்.

"அழறியா?" - வெற்றி

"..............."

"நான் தான் காரணமா?"

"..............."

"நான் பொண்ணுங்கக்கிட்டக் கை ஓங்கி வீரத்தைக் காட்டுற ஆள் இல்ல ஜமுனா.. உனக்கேத் தெரியும் தான?"

"..........."

"மன்னிச்சுட்டேன்னு சொல்லேன்"

"..........."

"உன்னைக் காதலிக்கிறேன்,அது,இதுன்னு சொல்லி இனி உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டேன்! நீ சொன்ன மாதிரி, மறுபடி நாம ரெண்டு பேரும் ஃப்ரண்ட்ஸா பழகலாமா?" - ஏக்கம் வழிந்த விழிகளுடன் தன்னிடம் கேள்வி கேட்டவனைக் கண்டு சிரிப்பு வந்தது அவளுக்கு.

"சிரிச்சுட்டியா?" - சாதித்த உணர்வுடன் அவள் முகம் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சியபடி நிமிர்ந்தவளின் பார்வையில் இவர்களையே நோக்கியபடி எதிர் வீட்டு வாசலில் கனகாவும்,இன்னும் சிலரையும் கண்டு.. தான் இருக்கும் நிலையும்,கண் முன்னே வரிசை கட்டி நிற்கும்

பிரச்சனைகளும் அடுத்தடுத்து நினைவிற்கு வர.. சட்டென முகம் திருப்பி.. வாசல் படியில் மேலேறியவள்...

“போயிடு வெற்றி” என்றாள்.

“................” - திடுக்கிட்டு அவள் முகம் நோக்கியவனிடம்...

“இனி என் பார்வைல படாம போயிடு!, இல்லேன்னா... நான் போயிடுவேன்! இந்த வீட்டை விட்டு! இந்த ஏரியாவை விட்டு” - முகத்திலடித்தாற் போல் கூறி விட்டு விறுவிறுவெனப் படியேறித் தன் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள்.

அவள் கூறிய வார்த்தைகளின் தாக்கத்தில்.. அவள் சென்று விட்டப் பின்பும் உறைந்து போய் நின்றவன், வெகு நேரம் அந்த இடத்தை விட்டு நகரவேயில்லை.

எரிதணலாய் ஏதோ ஒன்று மூளைக்குள் அமர்ந்து கொண்டு.. அவன் உடல் முழுதையும் பற்றியெரியச் செய்ய.... இதயம் இருக்க வேண்டிய இடத்தில் பாறாங்கல்லை வைத்தது போல்.. மனது மிகவும் பாரமாகத் தெரிந்தது அவனுக்கு.

கடைசியாகப் பதினாறு வயதில்.. அவனது பாட்டி இறந்த போது தான் இப்படியொரு வெறுமையை உணர்ந்திருக்கிறான். இனி வாழ்வதற்குப் பிடிப்பெதுவும் இல்லையென்பது போல்... மொத்தமாய் சறுக்கி விழுந்து விட்ட உணர்வு...!

நொறுங்கிப் போன இதயத்துடன் நடை பிணமாய் வலம் வந்தவனுக்கு, அவளிருக்கும் தெருவுக்குள் தானும் இருப்பதே.. மூச்சு முட்டுவது போலிருந்தது. அவள் முகத்தில் கூட விழிக்காமல்.. விலகிப் போய் விடச் சொன்னாளே! ஒரேடியாகப் போய் விடுவோமா...??? யோசனையுடன் திரிந்தவனின் கைகளில் சிக்கியது அன்றைய செய்தித் தாளில் கொட்டை எழுத்துக்களுடனிருந்த ‘ஆட்கள் தேவை’ விளம்பரம்.

வேலூர் அருகே ஒரு புகழ்பெற்ற ஹோட்டலில் சமையல் வேலைக்கு ஆட்கள் தேவையென செய்தி கொடுத்திருந்தனர். கணிசமான சம்பளம்! படிப்பைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாதது அவனுக்கு நல்லதாகப் பட்டது. உடனே அவர்களுடன் தொடர்பு கொண்டு இதோ... நேர்முகத் தேர்வுக்காக சென்று கொண்டிருக்கிறான்.

**அ**ன்று வெற்றியைத் துரத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்த ஜமுனாவிற்குத் தன் அன்னையின் நிலையைக் கண்டுத் துக்கம் பொங்கியது.

கடந்த இரண்டு,மூன்று நாட்களாக அன்னம்,ஆகாரம் எதுவும் எடுத்துக் கொள்ள முடியாமல்.. உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுப் பாதி ஆளாக சுருங்கிப் போயிருந்தார் சுந்தரி.

இரண்டு வருடத்திற்கும் மேலாக படுக்கையேக் கதி எனக் கிடப்பவளுக்கு இப்பூமிக்குப் பாரமாய், தன் மகளுக்கு இடைஞ்சலாய் இதுவரை வாழ்ந்ததுப் போதுமென்று தோன்றி விட்டதோ என்னவோ! எடுத்துக் கொண்டப் பணியை முழுதாய் செய்து முடிக்க முடியாமல்.. பாதியில் சென்று விட்டக் கணவனோடு சேர்ந்துத் தானும் சென்று விட எண்ணி... தன் வாழ்வின் கடைசி நாட்களை வலியோடு கடத்திக் கொண்டிருந்தார்.

கடந்த இரண்டு வருடமாக அவரைக் குழந்தை போல் கவனித்துக் கொண்டு வரும் சரோஜா, கண்ணீர் விட்டபடியே... அவர் கை,கால்களை நீவுவதும், வாயோரம் வழியும் எச்சிலைத் துடைப்பதுமாக துக்கத்துடன் அமர்ந்திருந்தார்.

இரண்டு,மூன்று நாட்களுக்கு மேல் அவர் உயிர் தாங்காது, சொந்தக்காரர்களுக்குச் சொல்லியனுப்புமாறு அவரை செக் செய்த டாக்டர் சொல்லிச் செல்ல.. அவரை வாசலருகே வழியனுப்ப வந்த போது தான் அவள் வெற்றியைக் கண்டது!

சொந்தபந்தங்களென்றுப் பெரிதாக சொல்லிக் கொள்ள யாருமற்ற நிலையில் தன் தந்தையை இழந்த.. இந்த ஐந்து வருடங்களில், தானாக சொந்தக் காலில் நிற்க நன்றாகவே பழகியிருந்தாள். அதிலும் தாய்.. படுத்த,படுக்கையாகிய பின்புத் தனியாளாக வாழ்க்கையை எதிர் கொள்ளும் துணிவு கூடுதலாகவே வந்திருந்தது அவளுக்கு.

எப்படியேனும் தன் தாயின் உடல்நிலையைச் சரிசெய்து விட வேண்டுமென்று இந்த இரண்டு வருடத்தில் அவள் செலவழித்த நேரம்,பணம் அத்தனையும் ஒரு முன்னேற்றத்தைக் கூடக் கொடுக்கவில்லை!

அவள் பட்ட பாடு அனைத்திற்கும் ஒரு பிரதிபலனுமின்றிக் கடைசியில்.. அன்னை,தந்தையற்ற அநாதையாகத் தன்னை நிற்க வைக்கப் போகும் விதியை எண்ணி நொந்து கொண்டு... சரோஜாவின் அருகில் தானும் அமர்ந்து.. அன்னையின் முகத்தை வருடினாள் ஜமுனா.

**வே**லூரில் நேர்முகத் தேர்வை வெற்றிகரமாக முடித்து விட்டு சென்னைக்குத் திரும்பினான் வெற்றி. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம்

வேலையில் சேரக் கோரிய நிர்வாகத்திடம் அந்த வாரமே சேர்வதாக வாக்களித்து விட்டு வந்தான்.

கதிர் ஊரிலில்லாததால் அவனது இருப்பைப் பெரிதாகக் கண்டு கொள்ள யாருமில்லை அங்கு. அவன் ஊரிலிருந்துத் திரும்பும் முன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வேலூருக்கு ஓடி விட வேண்டுமென்றுத் தீர்மானம் செய்து கொண்டான்.

கதிரிடம் விசயத்தைக் கூறினால்.. நிச்சயம் ஜமுனாவுடனானப் பிரச்சனையைக் கண்டுபிடித்து விடுவான். அத்தோடு நில்லாமல்.. நண்பனுக்காக அவளிடம் அவன் சண்டைக்கு நின்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவளுக்கு எந்த விதத்திலும் தொந்தரவு கொடுக்காமல் அமைதியாக ஒதுங்கி விட வேண்டுமென்று எண்ணி வைத்திருந்தான்.

அதன் முதல் படியாக, வேலூர் சென்று திரும்பியதிலிருந்து மறந்தும் கூட ஜமுனா வீட்டின் மீது பார்வையைச் செலுத்தவில்லை அவன். டீக்கடை பெஞ்சில் அமர்வதைக் கூடத் தவிர்த்திருந்தான். அக்கம்,பக்கத்து வீட்டிலிருப்போர் அனைவரும் அவள் வீட்டின் முன்பு அவ்வப்போது கூடி நின்று பேசுவதைக் கண்டாலும்.. அவன் பெரிதாக நினைக்கவில்லை.  ஏனெனில் அவள் வீட்டின் கீழ் போர்ஷனில் குடியிருக்கும் கனகாவைக் காண வேண்டி எப்போதும் புறணி பேசும் கூட்டமொன்று அவள் வீட்டு முன்பு அவ்வப்போது நிற்பது தான்! அதனால்.. சாகக் கிடக்கும் அவள் அன்னையைப் பற்றிய செய்தி அவன் காதுகளை எட்டாமலே போனது.

மறுநாளே வேலூருக்குக் கிளம்ப முடிவு செய்திருந்ததால்.. தன் உடைமைகளை 'பேக்' செய்து கொண்டிருந்தான் வெற்றி.

ஷெல்ஃபிலிருந்தத் தனது ஷேவிங் செட்,க்ரீம் என அத்தியாவசியப் பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவனின் கண்ணில் சிக்கியது, அவன் முன்பொரு நாள் ஷண்முகத்தை அடித்து விரட்டிய போது கிடாசி எறிந்த புகைப்படக் கட்டு.

'ப்ச், இத இன்னும் குப்பைல தூக்கிப் போடாம வைச்சிருக்கான் பாரு!, பரதேசி நாய்!' எனத் தந்தையைத் திட்டி விட்டு.. ஃபோட்டோக்களை ஒரே தள்ளாகக் கீழே தள்ளினான்.

சிதறி விழுந்தப் புகைப்படங்களை மிதித்து நடந்தவன்.. கையிலிருந்தப் பொருட்களை பையினுள் திணித்து விட்டு மீண்டும் ஷெல்ஃபின் அருகே சென்றான். செல்ஃபோன்

சார்ஜர், டிரைவிங் லைசன்ஸ்,பாஸ்போர்ட் என அனைத்தையும் சரி பார்த்தபடி நின்று கொண்டிருந்தவனின் பார்வை.. எதேச்சையாக.. சிதறிக் கிடந்தப் படங்களின் படிந்தது.

உள்ளங்கையால் கன்னத்துப் பருக்களை மறைத்தபடி காமப் பார்வையுடன் போஸ் கொடுத்திருந்தப் பெண்ணின் புகைப்படத்தைத் தொடர்ந்து... கருநீல நிற சர்வாரில், தோளில் வழிந்து கொண்டிருந்த மல்லிகைச் சரத்துடன்... சுவரில் சாய்ந்தபடி ஃபோட்டோவில் நின்றிருந்தது... சாட்சாத் ஜமுனாவே தான்!

ஒரு நிமிடம் மூளை செயல்பாட்டை நிறுத்தி விட... தலைக்கு மேலே சுற்றிக் கொண்டிருந்த ஃபேன் காற்றை மீறி நெற்றியில் வியர்வை பொட்டு,பொட்டாகப் பூக்கத் துவங்கியது அவனுக்கு. அதிர்ந்து போன இதயத்துடன்.. சட்டெனக் குனிந்து அந்தப் புகைப்படத்தைக் கையில் எடுத்தான்.

ஜமுனா,வேளச்சேரி எனப் பெயர் குறிப்பிடப்பட்டு ஒரு ஃபோன் நம்பரைத் தன் கைப்பட எழுதி வைத்திருந்தான் ஷண்முகம்.

ரத்தத்தைச் சுமந்து கொண்டு இதயத்திற்குச் செல்லும் அத்தனை நரம்புகளிலும் கோப ஹார்மோன்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்க, நெற்றியோரம் புடைத்தெழுந்த நரம்பு, அவன் ஆத்திரத்தின் அளவை எடுத்துச் சொல்லியது. ஜிவ்,ஜிவ்வெனத் தெறித்து வலித்த மொத்தத் தலையையும் தன் இரு கைகளால் பற்றியவன், சம்மட்டியால் அடித்தது போன்று அவள் கடைசியாகக் கூறிய வார்த்தைகளை எண்ணிப் பார்த்து.... அளவற்ற ஆங்காரத்துடன் வெறி பிடித்துப் போய் அவள் வீடு நோக்கி விறுவிறுவென நடந்தான்.

முழு வேகத்துடன் அவள் வீட்டுக் கதவைப் படாரெனத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன்... சமையலறையில்.. அடுப்பில் வெந்நீருடன்.... விரக்திப் பார்வையைச் சுமந்த படி நின்றிருந்தவளின் கையை வெடுக்கெனப் பற்றித் தன் புறம் திருப்பினான்.

அனிச்சை செயலாகத் தன் கையை உதறிய ஜமுனா.. அவனைக் கண்டதும் மகிழ்ச்சி கொண்டுப் பின்.. அவன் முகத்திலிருந்தக் கோபத்தைக் கண்டுப் புருவம் சுருக்கினாள்.

அவள் தன் கையை உதறியதில், அநியாயத்திற்குக் கோபம் கொண்டவன்.. அவள் கழுத்தை இறுகப் பற்றி.. அருகிலிருந்த சுவரில் சாய்த்து அழுத்தியிருந்தான்.

“அன்னிக்கும்.. அன்னிக்கும் இப்டித் தானடி என் கையத் தட்டி விட்ட?, பெரிய உத்தம பத்தினி மாதிரி?”

அடங்காத ஆத்திரத்துடன் அடிக்குரலில் சீறியவனைக் கோபத்துடன் நோக்கிய ஜமுனா.. அவன் கைகளில் நெரி பட்டுக் கொண்டிருந்தத் தொண்டையைக் கஷ்டப்பட்டுத் திறந்து.... "கையை எடுடா கேப்மாரி" எனப் பதிலுக்கு சீறினாள்.

"ஒருத்தன் உன்னைத் தப்பா பார்த்ததுக்கே... உடம்பு முழுக்கப் பத்தியெறிஞ்ச மாதிரி கொதிச்சுப் போன என்னை... இப்டி ஊர்ப் பரத்தைங்களுக்கு மத்தில உன் முகத்தைப் பார்க்க வைச்சுட்டியே டி?"

சத்தியமாக அவன் என்ன சொல்கிறானென்றேப் புரியவில்லை அவளுக்கு. அவன் இன்னும் ஒரு நொடித் தன் தொண்டையை அழுத்தினால்.. தாய்க்கு முன்னால் தான் இறைவனடி சேர்ந்து விடுவோமென எண்ணியவள்... முழு பலத்துடன் அவன் கைகளிருந்துத் தப்பிக்கப் போராடினாள்.

"ஏற்......க...னவே நீ.. நீ.. என்னை அடிச்சதுக்கே நான் இ..இன்னும் திருப்பிக் கொடுக்கல! என்னைக் கோபப்படுத்திப் பார்க்காத! அப்புறம் நான் என்ன செய்வேன்னே தெரியாது எனக்கு" - அவனுக்கு நிகரான கோபத்தில்.. நாக்குத் தள்ள மிரட்டியவளை மேலும் சுவற்றோடு அழுத்தியவன்...

"உன்னை அடிச்சதோடு நிறுத்தியிருக்கக் கூடாது டி! கொன்னுப் போட்டிருக்கனும். உனக்கும்,அந்த ஷண்முகத்துக்கும் என்னடி சம்பந்தம்?, உன் ஃபோட்டோ எப்பிடி அவன் கிட்ட வந்தது?, உத்தமி வேஷம் போட்டு, ஒன்னும் தெரியாதவ மாதிரி டீச்சர் உத்தியோகம் பார்க்குறியே! இன்னும் கை வசம் எத்தனை தொழில் வைச்சிருக்க?, போயும்,போயும் உன்னை நினைச்சா டி நான் பைத்தியமா சுத்திட்டிருக்கேன்?"

-நின்று நிதானமாக யோசிக்கும் திறன் என்பதைப் பிறப்பிலேயே பெற்றிராத வெற்றி.. அவள் புகைப்படம் எப்படி ஷண்முகத்தின் கையில் கிடைத்தது, அவன் எதற்காக ஐட்டம் லிஸ்ட்டில் இவளது ஃபோட்டைவை இணைத்திருக்கிறான் என்று ஆராய்ந்து பார்த்து... அவன் சட்டையைப் பிடித்து, அவனைக் கூறு போடுவதை விட்டு விட்டு... தான் காதலிக்கும் பெண்ணைச் சந்தேகம் கொண்டு.. அவன் மீதான அவள் உணர்வுகளைத் தானே சிதைத்துக் கொண்டிருக்கிறோம் என்கிற எண்ணமின்றி புத்தி கெட்டப் புண்ணாக்காக நடந்து கொண்டிருந்தான்.

அவன் கூறியதில் பாதி புரியா விட்டாலும், அவன் தன்னை மிகவும் மோசமாக சித்தரித்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட ஜமுனா.. ஆத்திரத்துடன் அவன் கைகளைப் பிரித்து பலத்துடன் ஒரு தள்ளு,தள்ளினாள்.

தடுமாறாமல் இரண்டடிப் பின்னே நகர்ந்தவனைக் கோபத்துடன் நோக்கி.. "நாக்கை இழுத்து வைச்சு அறுத்துடுவேன்.. பொறுக்கி நாயே!, என்ன டா பேசுற நீ?" என்று பொங்க.....

"நானா டி பொறுக்கி?, நீ தான் டி *****" - அவன் அந்த வார்த்தையை முடிப்பதற்குள் தன் முழு பலத்தையும் திரட்டி ஓங்கி அவன் கன்னத்தில் அறைந்தாள்.

கடந்த நான்கு நாட்களாகச் சரியாக உண்ணாமல் உறங்காமல் இருந்ததில் உண்டான பலவீனம், சாகக் கிடக்கும் அன்னையை நினைத்த துக்கம், அன்னைக்குப் பிறகான வாழ்க்கையை எண்ணி உண்டான பயம்.... அனைத்தையும் தாண்டி.. ஆறுதல் சொல்ல எவருமின்றித் நிர்க்கதியாய் நிற்பவளைத் தேடி வந்து கைக் கொடுப்பானென்று அவள் நம்பிய ஒருவன்... அவளிருக்கும் நிலையை அறிந்து கொள்ளக் கூட முற்படாமல்.. ஏதோ உளறியபடி.. வாய் விட்டு உச்சரிக்கக் கூசும் வார்த்தைகளைத் தன் முன்னே நின்று கூறிக் கொண்டிருப்பதைக் கண்டு... வெம்பி,விரக்தியடைந்து அவள் பொல,பொலவெனக் கண்ணீரைச் சிந்தத் தொடங்கிய சமயம்...

பக்கத்து அறையிலிருந்து பலத்த சத்தத்துடன் வினோதமாய்க் கிளம்பிய ஒலியைக் கேட்டு.... விசுக்கென நிமிர்ந்தவள் "அம்மாஆஆஆஆ" என்று கத்தியபடியே முழு வேகத்துடன் ஓடிச் சென்றாள்.

ஒரு நொடி திகைப்புடன் நின்ற வெற்றியும், அவளைத் தொடர்ந்து ஓடி வர... மெலிந்த தேகம், மேலும் மெலிந்ததில் உருக்குலைந்தத் தோற்றத்துடன் கட்டிலில் கிடந்த அவள் அன்னையைக் கண்டுத் திடுக்கிட்டு நின்று விட்டான்.

"ம்மா... ம்மா...." என்று விடாமல் உச்சரித்த படி அவரது வலது கையைப் பற்றியிருந்த ஜமுனாவையே பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியின் கண்கள் விடாது கண்ணீரை சொரிந்து கொண்டிருந்தது. எதை நினைத்து அந்தக் கண்ணீரோ! அவருக்கே வெளிச்சம்!

அன்னையின் கண்களில் கண்ணீரைக் கண்ட ஜமுனா.. "நா.. நான் என்னைப் பார்த்துக்குவேன்ம்மா... நான் நல்லாயிருப்பேன்! நீ நினைச்ச மாதிரி! எ..என்னை நினைச்சு நீ கவலைப்படவே வேண்டாம்மா" என்று அவசர,அவசரமாகக் கூற அதைப் புரிந்து கொண்ட பெண்மணியும் லேசாய்க் கண்ணசைத்து அதை ஆமோதித்து விட்டு.... "சுந்தரிஇஇஇஇ..." என்றபடிக் கதறிக் கொண்டு அருகே வந்த சரோஜாவின் கையையும் பற்றிக் கொண்டு... சற்றுத் தள்ளி நின்றிருந்த வெற்றியை நோக்கினார்.

சத்தம் கேட்டு அதற்குள் அந்தத் தெருவைச் சேர்ந்த அனைவரும் ஜமுனாவின் வீட்டில் கூடி விட... அவர் பார்வை என்ன கூறியதோ... தானாய் நகர்ந்த அவனது கால்கள் அவரருகே செல்ல.... அவரது கையைப் பற்றியிருந்த ஜமுனாவின் கை மீதுத் தனது கையை வைத்து... அவரை நிமிர்ந்து பார்த்தான் வெற்றி.

தன் விரலில் வந்து விழுந்த ஒரு சொட்டுக் கண்ணீரைக் கண்டு நிமிர்ந்த ஜமுனா.. அவன் முகம் பார்க்கையில்.. விழிகளில் தேங்கியிருந்த நீருடன் அவள் அன்னையின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். இருவரது கையையும் ஒரு முறை இறுக அழுத்திய சுந்தரியின் கண்கள்.. அவர்கள் மீதே நிலைக்குத்தி நின்று விட்டது.

அதன் பின் சுற்றத்தாரின் உதவியுடன் சுந்தரியின் கடைசிக் காரியங்கள் விறுவிறுவென நடைபெற்றன. ஜமுனாவின் தந்தை இறந்த பின்பு, தாயும் படுத்த படுக்கையாகிய பிறகு எட்டிப் பார்க்காத சொந்தங்களனைத்தும் இன்று காரியத்திற்கு வந்திறங்கினர்.

வெற்றியின் நண்பர்களனைவரும் ஆளுக்கொரு வேலையை எடுத்துச் செய்தபடி அவளுக்கு உதவி புரிய.. வெற்றியின் பார்வையோ முழுக்க முழுக்க அவளையே சுற்றி வந்தது.

தேவதையாய் நினைத்துத் தான் காதலித்தப் பெண்ணை... புத்தி கெட்டுப் போய்.. எந்த அளவிற்குத் தரமிறக்கித் தவறாய்ச் சித்தரித்திருக்கிறோம் என்பது புரிந்த போது... நெஞ்சு உலர்ந்து போய்.. இனி உயிர் வாழ்வதே வீண் என்று தோன்றியது அவனுக்கு.

அறிவு இருக்க வேண்டிய இடத்தில் தனக்கு மட்டும் ஏன் ஆத்திரத்தை வைத்து விட்டான் ஆண்டவன்! நிதானமாக யோசித்து... புத்தியோடு செயல்படுவதை விட்டு.. விட்டு.. துக்கத்தில் இருந்தவளை.. எப்படியெல்லாம் பேசிக் காயப்படுத்தியிருக்கிறான்! சுந்தரியம்மாவோடு சேர்ந்து.. அவனும் எரிந்து சாம்பலாகிப் போனால் கூட தவறில்லை.

தன் காதல், அதற்கான அவளது பிரதிபலிப்பு என அவனைப் பற்றி மட்டுமே யோசித்திருக்கிறானே ஒழிய. அவளைப் பற்றிக் கொஞ்சமேனும் அறிந்து கொள்ள முயற்சித்தானா?

பக்கவாதம் வந்த அன்னையை வைத்துக் கொண்டு ஒற்றைப் பெண்ணாகப் பொறுப்பாய் வேலைக்குச் சென்று சம்பாதித்து.. கிடைக்கும் வருமானம் அனைத்தையும் தாய்க்கு மட்டுமே செலவழித்தாளே!, வாரக் கடைசியில் கூட டியூஷன்,டியூட்டரிங் எனச் செல்வாளே! அப்பேர்ப்பட்டவளை.... என்னவெல்லாம் பேசி

விட்டான்! அவள் கூறியது சரி தான்! தெருவில் கிடக்கும் எச்சில் இலைகளைப் பொறுக்கித் தின்னும் நாய்க்கும், அவனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை! சிவலிங்கத்தை செக்கோடு ஒப்பிடப் பார்த்தானே!

ஆறு மாதத்திற்கும் மேலாக அவளுடன் பழகியிருக்கிறான்! அவளைப் பற்றி என்ன தெரிந்ததென்று... என்ன புரிந்ததென்று காதல் சொல்லியிருக்கிறான்! வாழ்க்கையே வெறுத்தது அவனுக்கு!

அவள் முன் மண்டியிட்டு, மனதின் கதறல்களை எடுத்துச் சொல்லி... மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று உத்வேகம் பிறந்தது. நுரையீரல்கள் இரண்டும் காற்றுக்குத் தவிப்பது போல்... நெஞ்சு முழுதும் ரத்த ஓட்டமின்றி உறைந்து போனது போல்... மூச்சு விட சிரமப்பட்டுப் போனான்.

சுந்தரியின் உயிரற்ற உடலின் அருகே... அளவற்ற துக்கத்துடன்.. கண்ணீர் வற்றிப் போய்... பிரம்மை பிடித்தவள் போன்று அமர்ந்திருந்தவளைக் கண்டவனுக்குத் தான் செய்த தவறு பூதாகரமாய்த் தோன்றி.... மனதை மிரட்ட... தான் இந்த உலகில் உயிர் வாழ்வதற்குத் தகுதியே இல்லாதவன் போல் உணர்ந்தான் அவன்.

தலையைப் பிடித்தபடி தெரு கடைசியிலிருந்த முட்டுச் சந்துக்குள் அவன் ஒதுங்கிய சமயம் கண்ணில் பட்டான் ஷண்முகம். துக்க வீட்டிற்கு வருகை புரிந்திருப்பான் போலும்!

அவனைக் கண்டதும் ரௌத்திரம் பொங்கியெழ.. அவன் நின்றிருந்த சந்தைக் கடந்து செல்லப் பார்த்தவனின் தலையைக் கொத்தாகப் பற்றி முட்டுச் சந்தின் மூலைக்குக் கொண்டு சென்று நிறுத்தினான் வெற்றி.

நிலைகுலையத் தன் கண்ணாடியைப் பற்றிக் கொண்டு நிமிர்ந்தவனின் கழுத்தைப் பற்றிச் சுவரோடு அழுத்தித் தூக்கியவன்.. “ஜமுனா ஃபோட்டோ உன் கைல எப்பிடி டா வந்தது? ****-களோட அவ ஃபோட்டைவை எதுக்கு டா சேர்த்து வைச்சிருக்கிற?,” - உச்சகட்ட ஆத்திரத்தில் கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான்.

தன்னைக் கண்டாலே எப்போதும் சட்டையைப் பிடித்துச் சண்டையிடுபவன் தானே என்கிற எண்ணத்துடன், அந்தரத்தில் தொங்கிய போதும் அதுவரை அசால்ட்டாக இருந்த ஷண்முகம், அவள் ஜமுனாவைப் பற்றிக் கேட்டதும் விதிர்த்து “அ...அது அது.. வந்து.. அ..அந்தப் பொண்ணு ஃபோ...ஃபோட்டோ...” என்று உளற... பிடித்திருந்த அவன் கழுத்தைத் தூக்கி.. அவன் பின் மண்டையை சுவற்றிலேயே ஓங்கி அடித்தான் வெற்றி.

வலி தாளாமல் கத்திய ஷண்முகம் “என்னை விட்ரு... என்னை விட்ரு....” என்று கெஞ்சத் துவங்க.. “பதில் சொல்லுடா! பதில் சொல்லு” என்று மேலும் அடிக்க... “அவ அம்மாவைப் பழி வாங்கத் தான் அப்டி செஞ்சேன்! தெரியாம பண்ணிட்டேன்! என்னை மன்னிச்சுடு!” என்று புலம்பினான்.

“என்ன டா சொல்ற?” என்று கேள்வி கேட்டவனிடம் முழு பதிலையும் கூறினான் அவன்.

சிறு வயதிலேயே வேளச்சேரியில் அருகருகிலிருந்த வீட்டில் ஒன்றாக வளர்ந்தனராம் ஷண்முகமும்,சுந்தரியும். பதின் வயதைக் கடந்த பிறகு, பேருக்கேற்றார் போல் சுந்தரியாகவே இருந்த சுந்தரி மீது தீராக் காதல் கொண்டானாம் இந்த ஜிப்பா. இவன் அந்த வயதிலிருந்தேப் பெண்கள் விசயத்தில் ஒரு மாதிரியென்பதால் இவனிடமிருந்து ஒதுங்கியே இருந்த சுந்தரி மீது அவனுக்கு ஒரு வெறியே இருந்து வந்ததாம். அச்சூழ்நிலையில் அவர்களது வீட்டருகேப் புதிதாகக் குடி வந்த சுந்தரநாதனுடன் பழக்கம் ஏற்பட்டு சுந்தரி அவரையேத் திருமணம் செய்து கொள்ள.. ஷண்முகத்தின் காதல் ஆசையில் விழுந்தது ஒரு பெரிய அடி.

அவர்கள் அங்கே குடியிருந்த வரைப் பல தொல்லைகளைப் புரிந்து வந்தவன், அதன் பின்பு அவர்கள் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போன பிறகு, சுந்தரி கண்ணில் படாமல் போன பிறகு, இவ்வுலகையே வெறுத்தான். அவளையே எண்ணி... வாழ்க்கையில் திருமணமென்ற ஒன்றை செய்து கொள்ளாமல் தவிர்த்தான். மதுவும்,மாதுவுமாகக் கேடு கெட்டுத் திரிந்தவன் ‘மாமா’ தொழிலை எடுத்து நடத்தத் தொடங்கினான்.

எதேச்சையாக மீண்டும் அவன் வேளச்சேரியில் குடியிருக்கும் சுந்தரியைக் கண்ட போது அவள் கணவனற்ற நிலையிலிருந்தாள் கூடவே ஒரு அழகான பெண்ணை மகளாகவும் பெற்றிருந்தாள். அவன் தனது பழைய ஆசையைப் புதுப்பித்துக் கொள்ள நினைத்த போது, அவள் கூடவே இருந்த சரோஜா.. அவனை விளக்குமாற்றால் அடித்துத் துவைத்து அவமானப்படுத்தி அனுப்பி விட்டாள்.

அடி வாங்கியக் கோபத்தில்.. இருவரையும் பழிவாங்க விரும்பி சுந்தரியின் மகளான ஜமுனாவைப் பின் தொடர்ந்து, அவளது புகைப்படம் ஒன்றை ஐட்டம் லிஸ்ட்டுடன் இணைத்து ஊரில் உலவ விட்டு தாய்க்கும்,மகளுக்கும் குடைச்சலைக் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தான்.

அவனிடமிருந்த அவளது புகைப்படத்தின் முதலும்,கடைசியுமான காப்பி வெற்றியின் வீட்டு ஷெல்ஃபில் குடிபுகுந்தது.

அன்று வெற்றியுடன் அவன் வம்பு செய்ததில், அவன் அந்த வாரக் கடைசியில்.. ஷண்முகம் தொழில் நடத்தும் கற்பகம் லாட்ஜில் போலீஸ் ரைட்-க்கு ஏற்பாடு செய்திருந்த படியால்.. அதன் பின்பு அவன் தொழில் பற்றியத் தலைவலியில் தன்னை மூழ்கடித்துக் கொண்டதில் சுந்தரியையும்,ஜமுனாவையும் பற்றிச் சுத்தமாக மறந்து போனான்.

அதன் பின்பு போலீஸில் சிக்கி 4,5 மாதங்கள் சிறையில் கழித்து விட்டுத் திரும்பி வந்தவனுக்கு ஜமுனா, வெற்றியிருக்கும் ஏரியாவில் குடிபெயர்ந்திருப்பது சமீபத்தில் தான் தெரிய வந்திருந்தது.

காறித் துப்புமளவிற்கிருந்த ஷண்முகத்தின் காதல் கதையைக் கேட்டு, கோபத்தில் அவன் செய்த காரியம் தன்னை எப்பேர்ப்பட்டச் சிக்கலில் மாட்டி விட்டிருப்பதை எண்ணி ஆத்திரம் கொண்டு “இப்பிடித் தான் நல்ல குடும்பத்துப் பொண்ணுங்க பேரைக் கெடுப்பியா டா” எனக் கேட்டு அடுத்த ஆறு மாதத்திற்கு அவன் வெளியே நடமாட முடியாத படி அவனை அடித்துத் துவைத்தான் வெற்றி.

அவனை என்ன அடித்து என்ன பிரயோஜனம்! எல்லையற்ற அன்புடன் அவளை ஏகத்துக்கும் காதல் செய்தவன், நொடியில் தன் காதலைத் தெருக்கோடியில் நிறுத்தி... அவளைச் சாக்கடையில் தள்ளி.. கொண்ட காதல் அத்தனையையும் நிமிடத்தில் குப்பை மேட்டில் கொட்டியிருக்கிறான்! இனி அவள் முன்னே சென்று நின்று.. நேசத்தை யாசிக்கும் அருகதை அவனுக்கு இருக்கிறதா?,

ஷண்முகத்தை அடித்து அவன் செய்து வைத்தக் காரியத்துக்குத் தண்டனை கொடுத்து விட்டான்! ஆனால்.. இவன் அறிந்தே செய்த பெருந்தவறுக்கு யார் தண்டனையளிப்பது!

ரத்த வெள்ளத்தில் கீழே கிடந்த ஷண்முகத்தின் அருகிலேயேத் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்த வெற்றிக்குக் கண்ணீர் பெருகியது.

பின்னிருந்த சுவற்றில் பின் தலையை இடித்துக் கொண்டு... சத்தமில்லாமல் கண்ணீர் விட்டவனைக் கண்ட ஷண்முகம் கண்டிப்பாக மனதில் நினைத்திருப்பான் ‘பொரட்டி எடுத்தது என்னை! ஆனா... கம்னாட்டி இவன் ஏன் கண்ணீர் வுட்றான்!’.

**ஆ**யிற்று! இத்தோடுப் பத்து நாட்களாயிற்று சுந்தரியம்மாள் இந்தப் பூவுலகை விட்டு நீங்கி! அன்று அவளைக் கண்டதோடு சரி! அதன் பின்பு ஜமுனா வீட்டை விட்டு வெளியே வரவேயில்லை.

கதிரின் குடும்பம் வெளியூரிலிருந்துத் திரும்பி விட்டதால், கதிரின் அம்மா வள்ளி தான் அவளுக்கு மூன்று வேளை சாப்பாடு கொடுத்துக் கவனித்துக் கொள்வதாக கதிர் கூறினான். எந்நேரமும் அன்னையின் படத்தின் முன்பு அமர்ந்து அவள் அழுது கொண்டே இருப்பதாகவும்,சரியாகச் சாப்பிடுவது,தூங்குவது கூட இல்லையென்றும் செல்வி கூறினாள்.

அவள் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்து.. அவள் முகத்தைப் பார்த்து ஆறுதல் சொல்ல மனம் அநியாயத்திற்கு அடித்துக் கொண்டது. ஆனால்... மிகவும் பயமாக இருந்தது அவனுக்கு. இனி வாழ்நாளில் என் முகத்திலேயே முழித்து விடாதே, போ என அவனை விரட்டியடித்து விட்டாளானால்.. அதன் பின் அவளுடனான உறவென்பதே இல்லாமல் போய் விடுமோ என்றெண்ணிப் பயந்தான்.

டீக்கடை பெஞ்சில் அமர்ந்தபடி அவள் வீட்டை ஏக்கமும்,துக்கமுமாகப் பார்த்தே கழிப்பவனைக் கண்டு யோசனையில் ஆழ்ந்தான் கதிர்.

அவனுடன் சரியாகப் பேசுவதில்லை! சுந்தரியம்மாளின் கடைசி நிமிடங்களில் இவனும் அருகிலிருந்ததாக அக்கம்,பக்கத்தார் கூறியதைக் கேட்ட போது... இவன் எதற்காக அங்கே சென்றான் என்று யோசித்தான். அவன் எத்தனையோ முறை என்ன நடந்ததென்று நச்சரித்துப் பார்த்தும் கூட வெற்றி வாயே திறக்கவில்லை. மீண்டும் தாடியும்,சிவந்த விழிகளுமாகச் சுற்றியவனைப் பார்க்கச் சகிக்காமல்.. என்ன செய்வதென்றும் புரியாமல் நண்பனுடனே அலைந்தான் கதிர்.

**அ**ன்று மாலை ஐந்து மணியிருக்கும்! டீக்கடை பெஞ்சிலேயே தலை வைத்துப் படுத்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான் வெற்றி.

“டேய்..... டேய்... நண்பா....” - அவனைத் தட்டி எழுப்பினான் கதிர்.

“டேய்.... டீச்சர் வெளியே வந்திருக்கு டா. எந்திரி டா”

கதிரின் பரபரப்புத் தனக்கும் தொற்றிக் கொள்ள.. அடித்துப் பிடித்து எழுந்தமர்ந்தான் வெற்றி. சாம்பலும்,கருப்பும் கலந்த சுடிதாரில் கலையிழந்த முகத்துடன்... ரோபோ போல்.. நேரே பார்த்தபடி எங்கோ நடந்து சென்று கொண்டிருந்தாள் அவள்.

நெற்றியில் பொட்டில்லை, காது,கழுத்தில் அணிகலன்கள் இல்லை! ஒளியிழந்த பார்வையும்,உருக்குலைந்த தேகமுமாய்.. பத்து நாட்களில் பாதியாகி வெளி வந்தவளைக் கண்டவனுக்கு நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது.

விறுவிறுவென எழுந்தவன்.. அவளைப் பின் தொடர்ந்துத் தானும் நடந்தான்.

நான்கடி இடைவெளியில் முன்னே சென்று கொண்டிருந்தவள்.. மனதின் வலிகளை நடந்தே தீர்க்க எண்ணினாலோ என்னவோ.. ஐந்து கி.மீ தூரத்தை அசால்ட்டாகக் கடந்திருந்தவள், கால்கள் ஓய்ந்து போய்.. அருகிலிருந்த பார்க் பெஞ்சில் பொத்தென அமர்ந்தாள்.

முழுதாக இருட்டியிருந்த மாலை வேளையில்.. பார்க்கிலிருந்த ஆட்களின் எண்ணிக்கைக் கம்மியாகியிருக்க.. எதிரேயிருந்த நீரூற்றைப் பார்த்தவண்ணம்... சிலையாய் அமர்ந்திருந்தாள்.

சற்று நேரம் அவளையே பார்த்தபடி அமைதியாக நின்றிருந்தவன் பின் மெல்ல நடந்து அவளருகே சென்று.. அவள் அமர்ந்திருந்த பெஞ்சின் மறுகோடியில் தானும் அமர்ந்தான்.

அவளுக்குத் தெரியும்! அவன் தன்னைப் பின் தொடர்ந்து வருகிறான் என்பது! டீக்கடையைக் கடந்த போதே ஏதோ ஒரு உள்ளுணர்வு சொல்லியது. அவன் தன்னைக் கண்டதும் பின்னே வருவானென்று!ஆனாலும் நீரூற்றிலிருந்துப் பார்வையைத் திருப்பாது சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

“இப்போ ஏன் வந்திருக்க வெற்றி?” - ஜமுனா.

எவ்வித உணர்ச்சிகளுமின்றி ரோபோ குரலில் தன்னிடம் கேள்வி கேட்டவளின் புறம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை அவன்.

எப்படியும் காயப்படுத்தப் போகிறாள்! குண்டு துளைக்கப் போகிறதோ! அல்லது கத்தி நுழையப் போகிறதோ! வலி நிச்சயம்!

பதில் கூறாமல் நேர் வெறித்தபடி அமைதியாக அமர்ந்திருப்பவனை உணர்ந்துத் தானே பேசினாள் ஜமுனா.

“ஒரு நைட்க்கு எவ்ளோ வாங்குவேன்னு கேட்க வந்திருக்கியா?”

அவள் கூறியதும் சட்டெனத் திரும்பி அவளை நோக்கினான். கை முஷ்டி இறுக, பெஞ்சைப் பற்றியவனுக்குத் தன் மீதே ஆத்திரம் எழுந்தது. மூச்சு வாங்க அமர்ந்திருந்தப்பவனைத் திரும்பியும் பாராமல்..

“கேட்கப் பிடிக்கல. ஆனாலும்.. தெரிஞ்சுக்க விரும்புறேன். அன்னிக்கு ஏன் அப்டி சொன்ன?, ஃபோட்டோன்ன?, பரத்தைன்ன?, ஷண்முகம்ன்ன?, எத்தனை தொழில்

பண்றேன்னு கேட்ட!, ஏன் அப்பிடிக் கேட்ட?, எது அப்டி உன்னை பேச வைச்சது?" - என்று வினவினாள்.

இப்போதும் அமைதியாகவே அமர்ந்திருந்தான்.

"ஓ!, இதுக்குண்டான பதிலைத் தெரிஞ்சுக்கக் கூட நான் தகுதியில்லாதவளா?"

"இல்ல!" - சட்டெனக் கூறியவன்.. "உன் கிட்ட உட்கார்ந்து சரிக்குச் சமமா பேசக் கொஞ்சமும் தகுதியில்லாதவன் நான் தான்" என்று விட்டு முழுக் கதையையும் கூறினான்.

"ஷண்முகம்ன்னா யாருன்னே எனக்குத் தெரியாது. நான் பார்த்ததுக் கூட இல்ல"

"எனக்குத் தெரியும். நீ.. நீ எதுவுமே சொல்ல வேண்டாம்"

"அதான், எனக்கும் சேர்த்து நீ எல்லாமே சொல்லிட்டியே'

".........."

"ஆமா, எதை வைச்சு நான் அந்தத் தொழில் பண்றவ-ன்னு முடிவுக்கு வந்த?, அப்டி நான் உன்னை எத்தனை நைட்க்குக் கூப்ட்டேன்?"

"ஜமுனா...."

"இல்ல, எனக்குப் புரியல. எவனோ ஒருத்தன் வந்து என் ஃபோட்டோவைக் காட்டுனா.. அதை அப்படியே நம்பி, நான் அப்படிப்பட்டவளான்ற யோசனை கூட இல்லாம.. குருட்டுத்தனமாக் கோபப்படுவியா?"

"................."

"நல்ல வேளை உங்கம்மா செத்துப் போச்சு! நீ இப்டி மூளை இருந்தும் மூடனா வளர்ந்து நிக்குறதைப் பார்க்குறதுக்கு, அது செத்துப் போனதே பெட்டர்"

முகம் இறுகத் தலை குனிந்து அமர்ந்திருந்தான் வெற்றி. அய்யோ! அம்மா இல்லாது போனாலே என்கிற நிலை மாறி, நல்ல வேளை அம்மா இல்லாது போனாள் என்று நினைக்க வைத்து விட்டாள்! இன்னும் எதற்கு இந்த மானங்கெட்ட உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உயிர் வாழ்கிறான் அவன்!

அவள் துப்பாக்கியையோ,கத்தியையோக் கையில் எடுக்கவில்லை! ஊசி கொண்டு கொஞ்சம்,கொஞ்சமாய்க் குத்தியே நரக வேதனைக்கு உள்ளாக்குகிறாள்.

அன்னை போன துக்கத்தில் மட்டுப்பட்டிருந்த அவன் மீதான அவளது கோபம், மீண்டும் அசுர வேகத்தில் முன்னே வர.. கோபத்தில் சிவந்து போன முகத்துடன் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள் அவள்.

"நான் உன் கிட்ட மன்னிப்புக் கேட்கப் பின்னாடி வரல" - மெல்லிய குரலில் வெற்றி.

"அதுக்கானத் தகுதியும் உனக்கு இல்ல" - வெடுக்கென்ற பதிலுடன் ஜமுனா.

"தெரியும்"

"அப்டின்னா... எழுந்து போ இங்கேயிருந்து."

"மாட்டேன்"

"ஒரு காலத்துல என் கஷ்டத்தையெல்லாம் மறக்கடிச்சு நீ என்னை சிரிக்க வைக்குறன்னு ஒரு நினைப்பு வைச்சிருந்தேன்! அப்போ தெரியல எனக்கு! இப்டி ஒரேடியா அழ வைக்கத் தான் நீ என் வாழ்க்கைல வந்திருக்கன்னு"

"......................"

"எழுந்து போ வெற்றி"

"போறேன்! அதுக்கு முன்னாடி உன் கிட்ட சொல்லனும்ன்னு நினைச்ச எல்லாத்தையும் சொல்லிட்டுப் போயிட்றேன்! அதுக்கப்புறம், என்னிக்குமே உன் கண்ணு முன்னாடி வர மாட்டேன்"

"...................."

"சுந்தரியம்மாவையே நினைச்சு வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடக்காத! மறுபடி வேலைக்குப் போ! வெளி உலகத்துக்கு வா...!"

"............."

"உனக்குன்னு ஒரு வாழ்க்கையிருக்கு! அப்டி,இப்டின்னு நான் டையலாக் பேசப் போறதில்ல! ஆனா.. சாவுன்னு ஒன்னு வந்து இதயம் துடிக்கிறது நின்னு போற வரைக்கும், நாம வாழ்நாளைக் கடந்து தான் ஆகனும்! அதுக்கு.. மூணு வேளை சோறு திங்கனும், பொழுது சாய்ஞ்சா தூங்கி எந்திரிக்கனும்! அம்மாவை இழந்துட்டோம்ன்றதுக்காக.. நாம சராசரி மனுஷங்கள்ல இருந்து எந்த விதத்துலயும் மாறுபடப் போறதில்ல! நமக்கு எந்த ஸ்பெஷல் சலுகையும் இல்ல! சுத்துற பூமியோட சேர்ந்து நாமளும் சுத்தியாகனும்"

“..................”

“இனிமே எப்டி வாழ்க்கை இருக்கப் போகுதுன்னு யோசிக்காத! இது வரை எப்டி வந்தன்றதை மட்டும் மனசுல வை! நான் சொன்ன மாதிரி... சாவு தானாத் தேடி வர்ற வரைக்கும்... நல்ல படியா உயிர் வாழு!”

“........................”

“ஜமுனா..........”

“...............”

“நான் சொன்னதைக் கேட்பியா?”

“.............”

“பதில் பேசு ப்ளீஸ்.......”

நீண்ட ஒரு நொடி அமைதிக்குப் பின்.... கண்ணீர் தேங்கிய விழிகளுடன் அவனை நிமிர்ந்து நோக்கியவள்.... கோபமும்,அழுகையுமாய்....

“நீ என் கூட இருந்திருக்கனும். அட்லீஸ்ட் கூட இருக்கிற மாதிரி காட்டிக்கவாச்சும் செஞ்சிருக்கனும்!, எல்லாக் கஷ்டத்தையும் என்னைத் தனியா அனுபவிக்க விட்டு.. என் பார்வைல கூடப் படாம... ஒதுங்கி நின்னுட்ட!” எனக் கூறியவளின் கண்கள் அதுவரைத் தேக்கி வைத்திருந்தக் கண்ணீரை சரசரவென கன்னத்தில் இறக்க...

அவள் முகத்தைப் பார்க்கக் கூடத் தைரியமற்று உதட்டைக் கடித்தபடி நேர் வெறித்துக் கொண்டிருந்த வெற்றிக்குச் சத்தியமாகக் குற்ற உணர்வு கூறு போட்டது.

இரண்டடி இடைவெளியில் தள்ளி அமர்ந்திருப்பவளை அள்ளி அணைத்துக் கொண்டு... தனக்குள்ளே பத்திரமாகப் புதைத்துக் கொள்ளும் வேகம் பிறக்க... சிரமப்பட்டுத் தன்னை அடக்கியவன்...

“நீ தான போ-ன்னு சொன்ன?” என்றான் மெல்லிய குரலில்.

“போ-ன்னு சொன்னா போயிடுவியா?, நீ என் பின்னாடியே சுத்தித் திரிஞ்சப்ப போ,போன்னு விரட்டுனேனே! அப்போ-ல்லாம் போனயா?, இல்லை தான?”

“அப்போ நீ யாரோ ஒரு ஜமுனா. இப்போ நீ வெற்றியோட ஜமுனா.

“ஆமாமா! அதான் ***** பட்டம் கொடுத்து கழுத்தை நெரிக்க வந்த”

பதில் கூறாமல் அமைதியாக அமர்ந்திருந்தவனுக்கு.. அவளது அழுகைக் குரலே மிகப் பெரிய தண்டனையாகத் தெரிந்தது. அவள் சிந்தும் ஒவ்வொரு துளிக் கண்ணீரும், தன் முட்டாள்தனத்தின் வீரியத்தை எடுத்துச் சொல்லி... அவன் உயிரைக் கிழித்துத் தொங்க விட்டது.

வெகு நேரம் அழுதபடி அமர்ந்திருந்தவளைக் காணச் சகிக்காது.. விறுவிறுவென எழுந்தவன், அவள் குரல் கேட்காத தூரம் தள்ளி நின்றான்.

அழுது ஓய்ந்து மூக்கை உறிஞ்சியபடி அமர்ந்திருந்தவளின் அருகே வந்தவன்...

“வீட்டுக்குப் போகலாமா?” என்று வினவினான்.

“எனக்குத் தெரியும். நீ போ இங்கேயிருந்து”

“கைல காசு இல்லாம எப்டிப் போவ?. மறுபடி 5 கி.மீ நடக்கப் போறியா?, ஒழுங்கா வா என் கூட”

“இனி என் முகத்துல முழிக்க மாட்டேன்னு சொன்ன தான?, போ இங்கயிருந்து”

“உன்னை வீட்ல விட்டுட்டுப் போயிட்றேன். அதுக்கப்புறம் உன் முன்னாடி வர மாட்டேன்”

“நான் வரல. நீ போ”

-விடாது மாறி,மாறி இருவரும் மல்லுக்கட்டிக் கொண்டிருந்த போது பார்க்கின் வெளியே சர,சரவென நான்கைந்து தடியன்கள் கையில் கத்தி,அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் ஓடுவது தெரிந்தது.

சுற்றியிருந்த மக்களனைவரும் ஆளுக்கொரு திசையில் தெறித்து ஓட..... அந்தத் தடியன்களிடமிருந்துத் தப்பிக்க நினைத்து... உயிருக்குப் பயந்து முன்னே ஓடிக் கொண்டிருந்த ஒருவனை நான்கே எட்டில் வளைத்துப் பிடித்து சரமாரியாக வெட்டிப் போட்டனர்.

கண் முன்னே நடந்தேறியக் கொடூரத்தைக் கண்டு வெற்றியும்,ஜமுனாவும் உறைந்து போய் நிற்க... பார்க்கின் செக்யூரிட்டி இவர்களருகே அவசரமாய் வந்து.. பார்க்கை மூடப் போவதாகவும் உடனே இடத்தைக் காலி செய்யுமாறும் விரட்டினார்,

வெட்டிய ஐவரும் நிமிடத்தில் சுமோ ஒன்றில் சிட்டாய்ப் பறந்திருக்க.. வெட்டு பட்டவனோ.. இரத்த வெள்ளத்தில் அநாதையாய் நடு ரோட்டில்.. நாதியற்றுக் கிடந்தான்.

சற்று நேரத்திலேயே இறந்து கிடந்தவனைச் சுற்றிக் கூட்டம் கூடி விட.. தானும் அருகே செல்ல விழைந்த வெற்றியின் கையை இறுகப் பற்றி "போ....போகாத.. போகாத, எனக்குப் பயமாயிருக்கு" எனக் கூறித் தடுத்தாள் ஜமுனா.

"இரு டி! அந்தப் பையனுக்கு என்னாச்சுன்னு பார்த்துட்டு வர்றேன்! ஆம்புலன்சைக் கூப்பிடாம.. கூட்டம் கூடி என்ன பண்றானுங்க" என்றவன் தனது செல்ஃபோனில் உடனே ஆம்புலன்சை அழைத்தான்.

"நாம போயிடலாம் வெற்றி, ப்ளீஸ்.. வா... வா போலாம்" - விடாது நச்சரித்தவளின் முகத்தில் தெரிந்த பயத்தைக் கண்டு மனம் மாறிய வெற்றி தூரத்தில் ஒலித்த ஆம்புலன்சின் சைரன்-ஐக் கேட்டு... "சரி, வா போகலாம்" என்றபடி அவளை அழைத்துக் கொண்டு முன்னே நடந்தான்.

போவோர்,வருவோர் அத்தனை பேரும் கண் முன்னே நடந்தேறிய பயங்கரத்தை எண்ணி அதிர்ச்சி மாறாமல் அதைப் பற்றியே பேசிக் கொண்டு செல்ல.. வெற்றியின் கையை இறுகப் பற்றிக் கொண்டு நடந்த ஜமுனாவிற்கோ... உடல் முழுதும் பயத்தில் வெட,வெடக்கத் துவங்கியது.

அவள் நடுங்குவதைக் கண்டவன் விரைவில் பஸ் ஸ்டாப்பிற்குச் சென்று விட எண்ணி.. குறுக்குப் பாதையொன்றில் அவளை அழைத்துச் சென்றான்.

மங்கிய விளக்கொளியில் ஆள் அரவமற்றிருந்த அந்தத் தெருவில் இருவரும் நடந்து கொண்டிருந்த வேளை... இடது புறமிருந்தக் குப்பைத் தொட்டியின் பின்னே மெல்லிய முனகல் சத்தம் வந்தது.

ஒருமுறை நின்று ஒருவரையொருவர் நோக்கிக் கொண்ட இருவரும் தொடர்ந்து நடக்க.. அந்த முனகல் சத்தம் சற்று அதிகமாகக் கேட்டது இப்போது.

ஏற்கனவே பயத்தில் வெளிறிப் போயிருந்த ஜமுனா, சத்தம் எங்கிருந்து வருகிறதென்பதைக் காண நகர்ந்த வெற்றியின் கையை மேலும் இறுகப் பற்றி "எ...எங்க போற?" என்றாள்.

"குப்பத் தொட்டிக் கிட்டயிருந்து ஏதோ சத்தம் வருதுடி! என்னன்னு பார்த்துட்டு வரேன்"

“வே..வேணாம், வேணாம்! நாம முதல்ல வீட்டுக்குப் போலாம் டா” - அவள் கெஞ்சிக் கொண்டிருந்த வேளை சத்தம் அதிகமாக... “ப்ச்” என்றபடி அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு தொட்டியின் அருகே சென்றான்.

அருகே செல்லச் செல்ல.. அந்த மங்கிய விளக்கு சிந்திய ஒளியில்.. தொட்டியின் பின்னே தெரிந்த ஒரு பெண்ணின் கால்களைக் கண்டு திடுக்கிட்டு.. மேலும் அருகே விரைந்தனர் இருவரும்.

நெஞ்சிலும்,வயிற்றிலும் கத்திக் குத்துப் பட்டு முகம் மற்றும் உடல் முழுக்க ரத்த வெள்ளத்தில் பாதி உயிருடன்.. தனது இறுதி நிமிடத்தை எண்ணிக் கொண்டிருந்தப் பெண்ணின் கைகள் தன்னருகே ஒரு சிற்றுயிரை இறுக அணைத்துப் பிடித்திருந்தது.

முகம் முழுதும் ரத்தக்கறையுடன் முனகிய அப்பெண்ணைக் கண்டதும் ‘வீல்’ எனக் கத்தப் போன ஜமுனாவின் வாயை இறுகப் பற்றி மூடினான் வெற்றி.

பயத்தில் கிடுகிடுவென நடுங்கிய ஜமுனா அவன் தோளை இறுகப் பற்றி அவனோடு ஒன்ற... பாக்கெட்டுக்குள் கை விட்டு தன் செல்ஃபோனை எடுத்தவன், டார்ச்-ஐ ஆன் செய்து.. அந்தப் பெண்ணின் மீது வெளிச்சத்தைப் பரப்பினான்.

உடல் முழுக்க சரமாரியாகக் கத்திக் குத்துப் பட்டிருந்தது. வெற்றியின் செல்ஃபோன் வெளிச்சத்தைக் கொடுத்ததும் ஜமுனா முதலில் நோக்கியது அந்தப் பெண்ணின் கைக்கு அடியில் கிடந்த குழந்தையைத் தான்.

“வெ...வெற்றி.... கு..குழந்தை வெற்றி...” என்றவள் சட்டெனக் குனிந்துக் குழந்தையைத் தன் கையில் ஏந்திக் கொண்டாள்.

மயக்கமோ.. தூக்கமோ... கண் மூடிக் கிடந்தக் குழந்தையைச் சுற்றிப் போர்த்தப்பட்டிருந்தத் துணியைப் படபடவென நீக்கியவள், குழந்தைக்கு ஏதும் அடிபட்டிருக்கிறதாவென ஆராய.. சின்னக் காயம் கூட இன்றி.. அது அத்தனை பாதுகாப்பாய்த் தன் அன்னையால் காப்பாற்றப் பட்டிருந்தது.

“கு..குழந்தை மேல எந்தக் காயமும் இல்ல வெற்றி” - என்று ஜமுனா கூறுகையில் வெற்றி, அந்தப் பெண்ணைக் குப்பையிலிருந்து நிமிர்த்தி... அருகிலிருந்து சுவற்றில் சாய்வாக அமர வைத்திருந்தான்.

இழுத்துக் கொண்டிருந்தத் தொண்டையுடன் இருவரையும் நோக்கிய அந்தப் பெண் தன் குழந்தையைக் கைக் காட்டி ஏதோ சொல்ல முயன்றாள்.

“ரி....ரிலேக்ஸ்.... உங்களுக்கு ஒன்னும் ஆகாது. எப்படியாவது நாங்கக் காப்பாத்திடுவோம், ஜமுனா... என் செல்ஃபோன்ல ஆம்புலன்சுக்குக் கால் பண்ணு” - வெற்றிக் கத்திக் கொண்டிருக்கையில் தன் தோளைப் பற்றியிருந்த அவன் கையை இறுகப் பற்றிய அப்பெண், மறுத்துத் தலையசைத்து.. தன் உயிர் பலம் அத்தனையையும் திரட்டி...

“எ...எப்படியாவது எ...என் குழந்தையைக் காப்பாத்துங்க... என் குழந்தை உயிரோட இருக்கனும்.. எ..எப்படியாவது காப்பாத்துங்க!” என்று கெஞ்சினாள்.

“உங்கக் குழந்தையோடு சேர்ந்து.. உங்களையும் காப்பாத்துவோம், நீங்க இப்போ அதிகமா பேச வேண்டாம்” என்ற வெற்றி “ஜமுனா... கால் பண்ணு” என்று கத்தினான்.

ஒரு கையில் குழந்தையைப் பிடித்துக் கொண்டு, நடுங்கிய கரங்களால் கஷ்டப்பட்டு அவன் செல்ஃபோனில் அவள் ஆம்புலன்சை அழைக்க முயல.. இருவரையும் தடுத்த அப்பெண்..

“நா.....ன்.... நான் உயிரோட இருக்க மாட்டேன்! எப்படியாவது என் குழந்தையைத் தூக்கிட்டு நீங்க இங்க இருந்துப் போயிடுங்க... எங்களைத் தேடி நிறைய பேர் சுத்துறாங்க.. என் குழந்தை அவங்கக் கைல மாட்டுனா.. கொன்னுப் போட்டுடுவாங்க.. போலீஸ் கிட்டப் போக வேண்டாம்.. எ..எங்கயாவது.. தூ..தூ...தூரமா... ஏ..ஏதாவது ஒரு ஆஸ்ரமத்துலக் குழந்தையை சேர்த்துடுங்க... என்.. என் குழந்தையைப் பத்தின விவரம்.. யா..யாருக்கும் தெரிய வேணாம்... ப்ளீஸ்....” - மூச்சை இறுக்கிப் பிடித்துக் கொண்டு... இழுத்துக் கொண்டிருக்கும் தொண்டைக்கு நடுவில்.. அந்தப் பெண் கூறியதைக் கேட்டு அதிர்ந்து நடுங்கிப் போயினர் இருவரும்.

“நாங்கக் கண்டிப்பா உங்கக் குழந்தையைக் காப்பாத்துறோம்! அதுக்கு முன்னாடி உங்களைக் காப்பாத்தியாகனும்!” - எனப் பேச முனைந்த வெற்றியை மீண்டும் தடுத்து... “த..தயவு செஞ்சு நான் சொல்றதைக் கேளுங்க... நா..நான் ரொம்ப நேரம் உயிரோட இருக்க மாட்டேன்.. என் குழந்தையைத் தூக்கிட்டு சீக்கிரம் இங்க இருந்து போங்க.. எங்களைத் தேடிட்டு இருக்கிற ஆளுங்க கண்ணுல பட்டா.. அவங்க என் குழந்தையைக் கொன்னுடுவாங்க!... சீக்கிரம் இங்கயிருந்துப் போங்க.. என் குழந்தையை நீங்க பாதுகாப்பான இடத்துல சேர்த்துடுவீங்கன்னு நா..நான் நம்புறேன்” என்றவள் பெரிதாகத் தொண்டை இழுத்து.. கண் சொருகி.. மயங்கி விழ...

“வெற்றி... வா.. வெற்றி.. போகலாம்.. அந்தப் பொண்ணு அவ்ளோ சொல்லுதில்லையா?, குழந்தையைக் காப்பாத்தியாகனும். வா வெற்றி...” என்று பதறினாள் ஜமுனா.

“போ.......போங்க..” என்று அந்தப் பெண் வெற்றியின் கையைப் பற்றித் தள்ள.. தூரத்தில் எங்கோ ஒலித்த கார் ஹார்ன் சத்தத்தில்... பயந்து... வெற்றியின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு.. விறுவிறுவென முன்னே நடந்தாள் ஜமுனா. அந்தப் பெண்ணை திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அவள் இழுத்த இழுப்புக்குக் கூட நடந்தான் வெற்றி.

பத்து நாட்களுக்கு முன்பு அன்னையை இதே நிலையில் கண்டிருந்த ஜமுனாவிற்கு, மீண்டும் இழுத்துக் கொண்டிருக்கும் நிலையில் இப்பெண்ணைக் காண நேர்ந்ததும், அழுகை பொங்கியது. சென்று விட்ட உயிரையும், சென்று கொண்டிருக்கும் உயிரையும், கையிலிருக்கும் உயிரையும் நினைத்துக் கண்ணீர் பெருகியது. மனித வாழ்க்கை இத்தனைத் துயரங்கள் நிறைந்ததா?

அவள் எதை,எதையோ நினைத்துக் கண்ணீர் விட்ட படி நடக்க, வெற்றியின் மூளையோ பரபரவென வேலை செய்து கொண்டிருந்தது. பார்க்கின் அருகே வெட்டிக் கொல்லப்பட்டவனுக்கும், இந்தப் பெண்ணுக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது. இருவரையும் கொன்றது ஒரே கூட்டமாகத் தான் இருக்க வேண்டும்!, அப்படியிருக்கும் பட்சத்தில்.. இக்குழந்தையைத் தேடி அக்கூட்டம் நிச்சயம் இங்கே தான் சுற்றிக் கொண்டிருக்கும். எப்படியேனும் அவர்கள் கண்ணில் படாமல் குழந்தையைக் காப்பாற்றியாக வேண்டும்.

யோசனையின் நடுவே இருவரும் பஸ் ஸ்டாப்-ஐ எட்டியிருக்க... கூட்டமாய் வந்த பஸ் ஒன்றில் ஜமுனாவை முன் ஏற்றி விட்டுத் தானும் ஏறினான் வெற்றி.

“இது நம்ம ஏரியாக்குப் போற பஸ் கிடையாதே” - ஜமுனா.

“குழந்தையோட வீட்டுக்குப் போனா.. அநாவசியமா எல்லாரும் கேட்குறக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டி வரும். என்ன செய்யலாம்ன்னு யோசிப்போம். முதல்ல நீ உட்காரு” - என்றவன் ஒரு சீட்-ஐ பிடித்து அவளை அமரச் செய்தான்.

அதுவரைக் கண் மூடியிருந்தக் குழந்தைத் திடீரென சிணுங்கத் தொடங்க... குழந்தையைச் சுற்றியிருந்தத் துணியினுள் இருந்த பால் பாட்டிலை எடுத்து அதன் வாயில் வைத்தாள்.

வெகுவாக ஆறிப் போயிருந்த அந்தப் பால், எப்படியோ குழந்தையின் அழுகையைக் கொஞ்சம் குறைத்தது.

குழந்தையுடன் வீட்டிற்குச் செல்வதென்பது இயலாத காரியம். அக்கம்,பக்கத்தார் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் துவங்கினால்.. அது நிச்சயம் குழந்தையின் பாதுகாப்பை சோதிக்கும்.

அந்தப் பெண் அவ்வளவு கேட்டுக் கொண்டதால்.. போலீஸ் ஸ்டேஷன் செல்வதென்பதும் சாத்தியமற்ற ஒன்று. இந்நேரத்திற்கு எந்த ஆசிரமத்தைத் தேடிச் செல்வது! எப்படியேனும் இந்த இரவைக் குழந்தையுடன் பாதுகாப்பாகக் கடத்தியாக வேண்டும்.

சட்டென யோசனை தோன்ற தன் செல்ஃபோனிலிருந்துப் பாண்டியனுக்கு அழைத்தான் வெற்றி.

“பாண்டியன் சார்”

“சொல்லு வெற்றி”

“நீங்க ஃபேமிலியோட இன்னிக்கு திருப்பதி போறதா சொன்னீங்கள்லயா?”

“ஆமாப்பா! ஆன் த வே! ஏன் கேட்குற? லட்டு வேணுமா?”

“சார்.. எனக்கு ஒரு ஹெல்ப்”

“சொல்லு வெற்றி”

“தெரிஞ்ச பொண்ணு ஒருத்தவங்க நைட் தங்க இடம் வேணும். கைல குழந்தை வேற இருக்கு. என் வீட்டுக்குக் கூட்டிப் போக முடியாத சூழ்நிலை. நா..நான் உங்க வீட்ல தங்க வைக்கலாமா?”

“தெரிஞ்ச பொண்ணு! கைல குழந்தை! வெற்றி.... என்னப்பா நடக்குது?”

“சார்...”

“சரி, சரி! எதுவும் கேட்கல. என் வீட்டு ஸ்பேர் கீ ஒன்னு மேல் வீட்டுல தங்கியிருக்கிறவங்கக் கிட்டக் கொடுத்திருப்பேன். அவங்கக் கிட்ட வாங்கிக்க”

“ரொம்ப தேங்க்ஸ் சார்”

“ம்ம், மேட்டர் என்னன்னு நான் நேர்ல வந்ததும் சொல்லு”

“ஓகே சார்” - என்றவன் ஃபோனை கட் செய்து.. அருகில் அமர்ந்திருந்த ஜமுனாவை நோக்கினான். அவள் உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்த்த வண்ணம் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

அதிக பட்சம் 4 மாதங்களிருக்கலாம். நல்ல நிறம்! நெற்றி,கன்னத்தில் கருப்பு மையுடன்.. அத்தனை அழகாயிருந்தது குழந்தை. என்ன விதியோ! பெருமூச்சுடன் ஜமுனாவின் தோளைத் தட்டினான் வெற்றி.

அன்றிரவு பாண்டியன் வீட்டில் அவளையும்,குழந்தையையும் தங்க வைக்கப் போவதாகவும், நாளை காலை சென்னையைக் கடந்து வேறு எங்கேனும் சென்று.. அங்கிருக்கும் ஆசிரமம் எதிலேனும் குழந்தையைச் சேர்த்து விடலாமென்றும் அவன் கூற.. பதிலின்றி சரியெனத் தலையாட்டியவள்.. மீண்டும் குழந்தையை நோக்கலானாள்.

மிகுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பிற்கு அவள் ஆளாகியிருப்பது அவள் முகத்திலிருந்தே தெரிந்தது. எத்தகைய நிகழ்விது! அடுத்தடுத்து அவர்கள் கண் முன்னே இரண்டு உயிர்கள் பறி போயிருக்கிறது. சற்றும் சம்பந்தமில்லாத இவர்களிருவரால் இந்தக் குழந்தைக் காப்பாற்றப்பட வேண்டுமென்பது தான் விதியா?

நினைவு வந்தவனாக சரோஜாவைப் பற்றி ஜமுனாவிடம் விசாரித்தான் வெற்றி. இரவு வெளியில் தங்குவதைப் பற்றி அவரிடம் என்ன கூறுவதென்று.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவரை, அவரது மகன் வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டதாக அவள் கூறவும், சரியென்று தலையசைத்தான். அப்படியானால்... இப்போதைக்கு யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அக்கம்,பக்கத்தில் தங்கியிருப்போரை நாளை ஏதேனும் சொல்லி சமாளித்துக் கொள்ளலாம்!

பாண்டியனின் வீட்டில் அவர்களிருவரையும் தங்க வைத்த வெற்றி, குழந்தைக்குத் தேவையானவற்றை ஜமுனாவிடம் கேட்டு வாங்கி வந்து கொடுத்தான்.

அவளுக்கு குழந்தையைக் கவனித்துக் கொள்வது பழக்கமான ஒன்று தான்! ஆரம்ப காலத்தில் டே கேர்,ப்ளே ஸ்கூல் என அனைத்திலும் அவள் பணி புரிந்திருக்கிறாள். ஆனால், இத்தனை சிறிய குழந்தையைக் கவனிப்பது இது தான் முதல் முறை.

பழக்கமற்றக் கைகள் ஏந்திக் கொண்டிருப்பதில்... பயந்து.. அன்னையின் ஸ்பரிசம் வேண்டி அழுது தீர்த்தக் குழந்தையைச் சமாளிக்க முடியாமல் திண்டாடிப் போயினர்

இருவரும். இரவு முழுதும் உறங்காமல் விழித்திருந்து... ஒருவர் மாற்றி ஒருவர் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துச் சமாதானப்படுத்தி.. எப்படியோ உறங்க வைத்தனர்.

அதிகாலையில் குழந்தையோடு சேர்ந்து கண்ணசைந்து விட்ட ஜமுனாவைக் கண்டு விட்டு... வீட்டைப் பூட்டி விட்டு வெளியே சென்றான் வெற்றி.

அவசர,அவசரமாக நியூஸ் பேப்பரைக் கையில் வாங்கியவன் பரபரவென நேற்றைய சம்பவம் பற்றி வந்த செய்தியைத் தேடினான்.

அவன் யூகித்தது சரி தான்! கொல்லப்பட்ட இருவரும் கணவன்-மனைவி. மேல்ஜாதிப் பெண் கீழ் ஜாதிப் பையனைக் காதலித்ததால் நடந்த ஆணவப் படுகொலை.

இருவரும் திருமணம் செய்து கொண்டு.. குழந்தையும் பெற்றுக் கொண்டு.. ஒளிந்து மறைந்து வாழ்ந்து இத்தனை நாட்களைக் கடத்தியிருந்த நிலையில்.. இருவரும் சென்னையில் வசிப்பதை எப்படியோ கண்டுபிடித்து.. பெண்ணின் தந்தை, தான் பெற்ற மகளென்றும் பாராமல்.. நடு ரோட்டில் வைத்து இருவரையும் ஓட,ஓட வெட்டிக் கொலை செய்திருக்கிறான்.

அடங்காத ஆத்திரத்துடன் பேப்பரைக் கீழே எறிந்தான் வெற்றி.

இது போன்ற ஜீவன்களையெல்லாம் மனித ஜென்மத்திற்குக் கீழ் கொண்டு வர முடியுமா என்ன?, மிருகத்தோடுக் கூட ஒப்பிடக் கூடாது. காட்டு விலங்குகள் இரைக்காக மட்டுமே மற்றொரு உயிரைக் கொல்லும். அது நியதி. ஆனால்.. இவர்கள்.. ஜாதி,மதம் என்கிற பெயரில் மனிதனை,மனிதனே கொன்று குவித்து... ச்சை!

பெற்றுப் பெயர் வைத்து... பாராட்டி,சீராட்டி வளர்ப்பதெல்லாம்.. நடுரோட்டில் வைத்து வெட்டிக் கொல்லத் தானா?, எங்கோ மூலையில்.. குப்பைத் தொட்டியின் பின்னே உயிர் துறக்கத் தானா?, அப்படியென்ன கௌரவம் வேண்டிக் கிடக்கிறது? அப்படி கௌரவத்தைக் காப்பாற்றி வைத்து எதைச் சாதிக்கப் போகிறார்கள்?

இது போன்ற ஜென்மங்களெல்லாம்... சிறுநீரைத் தண்ணீராகக் குடித்து, மலத்தை உணவாக உண்டு.. வாழும் காலம் முழுக்க சிறைபட்டு நாறி,ஊசிப் போய் சாக வேண்டும்! சராசரி மனிதனாய் இந்த அண்டத்தைச் சுற்றி வர.. இவர்களுக்கெல்லாம் கொஞ்சமும் தகுதி கிடையாது! ராக்கெட்டில் ஏற்றி.. தனிக் கிரகத்திற்குப் பார்சல்

செய்து விட வேண்டும்! கௌரவத்தைக் காப்பாற்றியபடி வேற்று கிரகத்திலேயே வாழ்ந்து முடியுங்களென்று!

எரிச்சலும்,கோபமுமாய் வீடு வந்து சேர்ந்தவன், கேள்வியாக நோக்கிய ஜமுனாவிடம்.. தன் கையிலிருந்தப் பேப்பரை நீட்டினான். அவளும் படித்து விட்டுத் தன் வாயில் வந்த அத்தனைக் கெட்ட வார்த்தைகளாலும் பொறுமித் தீர்த்தாள்.

அதன் பின் குழந்தைக்குப் பாட்டிலில் அவள் பால் புகட்ட.. ஆர்வத்துடன் அதைக் குடித்தபடி மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தது.

உறங்கும் குழந்தையைப் பார்த்தபடி இருவரும் முழுதாய் ஐந்து நிமிடத்தைக் கடத்தினர்.

"இப்போ என்ன பண்றது வெற்றி?" - நிமிர்ந்து அவன் முகம் பார்த்து வினவினாள் அவள்.

"தெரியல..."

"............"

"இப்போ போய் நாம குழந்தையை ஆசிரமத்துல விட்டாலும்.. அது எந்த அளவுக்குப் பாதுகாப்பா இருக்கும்ன்னு சொல்ல முடியல. கல்யாணமாகி ஒன்றரை வருஷம் கழிச்சுத் தேடி வந்து வெட்டியிருக்கான் அந்தப் பொண்ணோட அப்பன்! நிச்சயம் அவ புருஷன் வழியா வந்த கீழ் ஜாதி வாரிசைக் கொன்னு போடனும்ன்னு வெறியோட தான் சுத்திட்டிருப்பான்! அவன் முதல்ல தேடுறது சென்னையைச் சுத்தியிருக்கிற ஆஸ்ரமமாத் தான் இருக்கும். அதனால தான் சொல்றேன். ஆசிரமம் நல்ல ஆப்ஷன் கிடையாதுன்னு"

"அப்போ என்ன பண்றது?, போலீஸ் கிட்டயும் போக முடியாது"

"ம்ம்"

"என்ன செய்யப் போறோம் வெற்றி?"

பெருமூச்சுடன் நெற்றியைத் தேய்த்தவனின் விழிகளிரெண்டும் அநியாயத்திற்குச் சிவந்து போயிருந்தது.

"நீ கொஞ்ச நேரம் கூடத் தூங்கவேயில்லையா?"

இல்லையெனத் தலையை மட்டும் ஆட்டினான் அவன்.

இருவரும் மறுபடிக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

“பேசாம இந்தக் குழந்தையை நானே வளர்த்தா என்ன?” - பட்டெனக் கேட்ட ஜமுனாவை வியப்புடன் நோக்கினான் வெற்றி.

“ஏன் அப்படிப் பார்க்குற?”

“இல்ல. இதே யோசனை தான் இப்போ என் மனசுலயும் ஓடுச்சு. இந்தக் குழந்தை நம்மக் கிட்ட.. ஐ மீன்.. என் கிட்டயிருந்தாப் பாதுகாப்பா இருக்கும்ன்னு தோணுச்சு”

“ப்ச், உன்னால தனியா.. 4 மாசக் குழந்தையை வைச்சுப் பார்த்துக்க முடியுமா?, என்ன தெரியும் உனக்கு?, நேத்து நைட் பார்த்தேல?, எவ்ளோ கஷ்டப்பட்டோம்?”

“உன்னால மட்டும் தனியாப் பார்த்துக்க முடியுமா?”

“நான் சமாளிச்சுக்குவேன்”

“எப்படி சமாளிப்ப?, குழந்தை எப்படி வந்ததுன்னு கேட்டா.. என்ன சொல்லுவ?, குழந்தையை வைச்சுக்கிட்டு எப்படி வேலைக்குப் போவ?, எப்படி சம்பாதிப்ப?, எதை வைச்சுக் குழந்தையோட செலவைப் பார்த்துக்குவ?, சும்மா... யோசிக்காம லூசு மாதிரி பேசாத”

“இந்தக் கேள்வியெல்லாம்.. உனக்கும் சரிப்படும் தான?, உன் கிட்ட இதுக்கானப் பதில் இருக்கா?”

“................” - யோசனையுடன் நகம் கடித்துக் கொண்டிருந்தான் அவன்.

“ப்ச், வெற்றி... ஒரு வகைல பார்த்தா.. இந்தக் குழந்தையோட நிலைமையும், என் நிலைமையும் ஒன்னு தான்! ரெண்டு பேருமே அம்மா,அப்பா இல்லாத அநாதைங்களா நிற்குறோம்!, எனக்கு என்னவோ.. நான் என் வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ.. ஒரு பற்றுகோலா ஆண்டவன் இந்தக் குழந்தையை என் கிட்ட அனுப்பியிருக்கிறதாவே நம்புறேன்.. பெண் குழந்தை வேற! என் அம்மாவே எனக்குத் திருப்பிக் கிடைச்சிட்டதா நினைக்கிறேன்! ப்ளீஸ்... என் கிட்டக் கொடுத்துடு வெற்றி.. நான் எப்படியாவதுக் குழந்தையை வளர்த்துக்கிறேன்!”

“ம்ஹ்ம் இப்போ நீ எமோஷனல்-ஆ மட்டுமே யோசிக்கிற! ப்ராக்டிகல்-ஆ இதுல நிறைய பிரச்சனை இருக்கு. உங்கம்மா இறந்துட்ட நிலைல.. இன்னிக்கு உன் பாதுகாப்புக்கே உனக்கு ஒரு ஆள் தேவைப்படுது! இதுல.. நீ.. குழந்தையோட தனியா இருந்து.. அவளை வளர்க்குறது சாத்தியமில்ல. நீ கைக்குழந்தையோட நின்னா...

உன்னைத் தான் ஊர் கேவலமா பேசும். இதுவே நான்-னா.. அவ்ளோ பேச்சுக் கேட்க வேண்டிய தேவை வராது.”

“ஏன் வராது?”

“ஏன்-னா நான் இந்தக் குழந்தையை என் குழந்தைன்னு சொல்லுவேன். யாருக்குப் பொறந்தது, அம்மா யாருன்னு கேள்வி கேட்குற ஆளுங்களை என்னால ஈசி-ஆ சமாளிச்சுட முடியும்! ஆனா... உனக்கு அப்டிக் கிடையாது. உன் நடத்தையையே கேள்விக் குறியாக்கி உன்னைக் காயப்படுத்துவாங்க! குழந்தை வளர்றதுக்கும் அமைதியான சூழலை உன்னால அமைச்சுக் கொடுக்க முடியாது”

“ப்ச், சரி! உன் லாஜிக் ஓகே தான்! ஆனா.. யார் நம்புவா? உன்னைச் சுற்றியிருக்கிற மத்தவங்களை விடு! இது உன் குழந்தைன்னு சொன்னா, கதிர் நம்புவானா?”

“நம்புறதென்ன?, அவன் கேள்வி கேட்குற அவசியம் கூட வராது. ஏன்-னா நான் இந்த ஊர்லயே இருக்கப் போறதில்ல” என்றவன் தொடர்ந்துத் தனக்கு வேலூரில் வேலை கிடைத்து விட்டதைப் பற்றித் தெரிவித்தான்.

“நீ என்னைப் பார்த்துக் கேட்ட அதே கேள்வியையே நானும் கேக்குறேன்! வேலைக்கும் போயிட்டுக் குழந்தையையும் எப்படிப் பார்த்துக்குவ?,” - ஜமுனா

“குழந்தையைப் பார்த்துக்க ஆள் ஏற்பாடு பண்ண வேண்டியது தான்”

“ஓ! அது மட்டும் குழந்தை வளர அமைதியான சூழ்நிலையைக் கொடுக்குமா?, இது தான்... இது தான் குழந்தையைப் பெத்தவங்களுக்கும், அதை ஜஸ்ட் ஒரு பொறுப்பா நினைச்சு வளர்க்குறவங்களுக்கும் இருக்கிற வித்தியாசம்! நீ இதை ஒரு கடமையா பார்க்குற!, வெறும் பாலையும்,சோறையும் ஊட்டி வளர்த்தாப் போதுமா, அன்பு,பாசம்ன்றதெல்லாம் குழந்தைக்குக் கிடைக்க வேணாமா?”

“நான் குழந்தை மேல அன்பு காட்ட மாட்டேன்னு சொல்ல வர்றியா?, உனக்கு என் மேல எப்ப தான் நம்பிக்கை வரும்?”

“நம்பிக்கை வர்ற மாதிரி நீ என்ன பண்ணியிருக்க?”

“ப்ச்”

“குழந்தையைப் பத்திப் பேசும் போது, அவளைப் பத்தி மட்டும் பேசு! நம்ம விஷயம்ன்றது முடிஞ்சு போன ஒன்னு! அதைப் பத்தி நான் பேச விரும்பல”

“............”

“முடிவா என்ன தான் சொல்ற?” - ஜமுனா.

“குழந்தையை உன் கிட்டக் கொடுத்து உன் வாழ்க்கையக் கேள்விக் குறியாக்க முடியாது ஜமுனா. நான் என் கூட குழந்தையை வேலூருக்குத் தூக்கிட்டுப் போறேன்”

“நான் சம்மதிக்க மாட்டேன்.”

“நீ சம்மதிக்கனும்னு இப்போ எந்த அவசியமுமில்ல”

“வெற்றி.. ஒரு ஆம்பள குழந்தையை வளர்க்குறதுக்கும், பொம்பள வளர்க்குறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு டா”

“................”

“அதுக்கு மிகச் சிறந்த உதாரணமா நீ நிற்குறியே!,”

“ஆமா! ஆம்பள எப்படி வளர்ப்பான்னு நல்லாத் தெரிஞ்சவன் தான் நான்!, அதனால தான் சொல்றேன்!, அம்மா,அப்பான்னு ரெண்டு பேரோட அன்பையும் சேர்த்து அந்தக் குழந்தை மேல காட்டி என்னால வளர்க்க முடியும்”

“நான் ஒத்துக்க மாட்டேன் டா”

“ஒத்துக்காத.. உன் சம்மதத்தை இங்க யாரும் கேட்கல” - அவன் கூறிக் கொண்டிருக்கையிலேயே குழந்தை சிணுங்க.. வெற்றியை நோக்கிய ஜமுனா..

“பெருசா நானே வளர்ப்பேன்னு டயலாக் அடிச்சேல?, போ.. போய் பாட்டில்ல இருக்குற அந்தப் பாலைக் குழந்தைக்குக் கொடு” என்று கூறவும்.. சிறிது தயங்கியவன்.. பின் ரோஷத்துடன் பாட்டிலைக் கையில் எடுத்துக் கொண்டு குழந்தையின் அருகே சென்றான்.

அவன் குழந்தையைப் பிடித்திருந்த விதமும், பாட்டிலைப் பற்றியிருந்த அழகும் பார்ப்பதற்கேக் கண்றாவியாக இருக்க.. ஒரு வாய்ப் பாலைக் கூடப் புகட்ட முடியாமல்.. அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தவும் முயலாமல்.. தடுமாறிப் போய் நின்றவனிடமிருந்துக் குழந்தையைப் பறித்துத் தானே புகட்டினாள்.

மடக்,மடக்கெனப் பாலைப் பருகும் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தவனிடம் “நீ எந்த லட்சணத்துல குழந்தையைப் பார்த்துக் கிழிக்கப் போறன்னு இப்பவே தெரிஞ்சுடுச்சு எனக்கு!” என்றாள் முறைப்புடன்.

“ஏய்ய்ய்.. இன்னாடி?, நான் என்ன இதுக்கு முன்னாடி பத்து,பதினைஞ்சு புள்ளைங்களையாப் பெத்து விட்ருக்கேன்?, சின்னக் குழந்தைங்களை தூர இருந்து பார்க்குறதோட சரி! பக்கத்துல போய் தொட்டுக் கூடப் பார்த்ததில்ல!”

“அப்புறம் ஏன் டா வீர வசனம் பேசுன?

“பின்ன?, உன் கைல குழந்தையைக் கொடுத்து உன் வாழ்க்கைய நாசம் பண்ணச் சொல்றியா?”

“இல்லேன்னாலும், என் வாழ்க்கை என்ன அவ்ளோ நல்லாவா போயிட்டிருக்கு?, ஆல்ரெடு நாறிப் போய்த் தான இருக்கு?”

“அப்டின்னா... என் கூட வாடி! ரெண்டு பேரும் சேர்ந்தே குழந்தையை வளர்க்கலாம்” - எரிச்சலும்,கோபமுமாக வாய்க்கு வந்ததைப் பட்டெனக் கூறி விட்டுப் பின்.. சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்து.... அவசரமாக அவள் முகத்தில் பார்வையைப் பதித்து...

“ஏ..ஏ...ஏய்ய்ய்.. நா..நான் த...தப்பான அர்த்தத்துல சொல்லல. தெ..தெரியாம வாய்ல வந்துடுச்சு! மன்னிச்சுக்க” - திக்கித் தடுமாறி அவசரமாக மன்னிப்புக் கேட்டான்.

“....................” - குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டு அமைதியாய் அமர்ந்திருந்தாள் அவள்.

“ஜமுனா.... சாரி.. அதான் தெரியாம சொல்லிட்டேன்னு சொல்றேன்ல?”

“..............”

“ஜமுனா......”

“ப்ச், பேசாம நாம ரெண்டு பேரும் சேர்ந்து குழந்தையை வளர்த்தா என்ன?”

“ம்??????????” - அநியாயத்திற்கு அதிர்ந்த நிலையில் வெற்றி.

“ஜஸ்ட் கார்டியன்ஸ்-ஆ?”

“............”

“ஜோடி-ஆ இருந்துக் குழந்தையை வளர்த்தா.. அநாவசியமா எந்தக் கேள்வியும் வராது! குழந்தையும் பாதுகாப்போட இருக்கும்! பாலும்,சோறும் போட நீ இருக்க! அன்பும்,பாசமும் கொடுக்க நான் இருக்கேன்!”

“இ.....இன்னாடி சொல்ற?”

“இப்போதைக்கு நமக்கிருக்கிற ஒரே ஆப்ஷன் இது தான்! என்னால குழந்தையை விட முடியாது”

“என்னாலயும் தான்”

“நாம தனியாளா இருந்து வளர்த்தா.. ஏகப்பட்டப் பிரச்சனை வரும்”

“ஒன்னா இருந்தா... எல்லாம் சுலபமாயிடும்”

“அப்டின்னா.. நானும் உன்னோட வேலூருக்கு வர்றேன்” - தீர்மானம் செய்துவிட்டத் தீவிரமான முகபாவத்துடன் தன் விழிகளை நேராகப் பார்த்துத் தெளிவாய்க் கூறியவளை... அவன் இன்னதென்று புரியாத முகபாவத்துடன் நோக்கிக் கொண்டிருக்க.. நல்ல எதிர்காலம் அமையப் போகின்ற திருப்தியில்.. அவள் கைகளில் சொகுசாய்ப் படுத்திருந்தக் குழந்தை அழகாய்ச் சிரித்தது.

‘நம்மை யார் தான் கேட்பது.... விதி தானே சேர்ப்பது..

இந்தப் பாசம் பாவம் இல்லை! நேசம் மோசம் இல்லை..

கங்கை என்றும் காய்வது இல்லை...

இளஞ்சோலை பூத்ததா......................................................................

# அத்தியாயம் - 6

ஐந்து வருடங்களுக்குப் பிறகு...

**வே**லூரின் பிரதான வீதியில் அமைந்துள்ள... இரண்டு படுக்கையறை கொண்ட அந்த ஒற்றை வீடு காலை நேர பரபரப்புடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. என்ன தான்.. வருடங்கள் பல கடந்திருந்தாலும்.. வாழ்விலும், வயதிலும் பல மாற்றங்களைச் சந்தித்திருந்தாலும்.. இசையைப் பொருத்தமட்டிலும் வெற்றி,வெற்றி என்பவனின் ரசனை மட்டும் கொஞ்சமும் மாறவில்லை! ஏனெனில் இன்றும்.. அதே இளையராஜா அவன் வீட்டு டிவியில் முழுச் சத்தத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தார்.

**‘என்னோடு பாட்டு பாடுங்கள்! எல்லோரும் சேர்ந்து ஆடுங்கள்..**

**இசைக் கோலங்கள்.. இமை ஜாலங்கள்.. சுகம் தேடுங்கள்....’**

வீட்டிற்குள் நுழைந்ததும் இடது புறம் தெரிந்த சமையலறை வாசலில் சிறிய ‘சிலேட்’ ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அதில் ‘இன்றைய மெனு’ என்கிற தலைப்புடன்..

ப்ரேக் ஃபாஸ்ட்: நெய் ரோஸ்ட்

லஞ்ச்: கார்ன் ரைஸ் வித் சாஸ் அண்ட் சாலட் - என்று எழுதப்பட்டிருக்க.. சற்று உள் நுழைந்து.. அடுக்களையை எட்டி நோக்கினால்.. நெய் வாசத்தின் மத்தியில்.. சுடச் சுட தோசைகளை வார்த்தெடுத்தபடி.. வெற்று மார்பும், ட்ராக் ஷூட்டுமாக நின்றிருந்தது நம் வெற்றியே தான்!!!

“**மீ**........... என்ன செய்ற?, தோசை சுட்டு வைச்சு பத்து நிமிஷம் ஆச்சு, ஆறிப் போச்சுன்னா நீ சாப்பிட மாட்ட” - அடுப்பை அணைத்தபடியே குரல் கொடுத்த வெற்றிக்குப் பதிலாக...

“ஷூ மாட்டிட்டு இருக்கேன் வெட்டி” - தெளிவாய் உச்சரித்த மழலையைக் கேட்டு எரிச்சலுடன் வெளியே வந்தவன்..

“வீடு, ஹோட்டல்ன்னு முழு நேரமும் வேலை பார்த்து பிஸியாவே சுத்திட்டிருக்கிற என்னை, வெட்டி,வெட்டின்னு கூப்பிட்றியா நீ?” - என்ற படி லேசாக அதன் காதைத் திருக..

“எனக்குத் தான் வெற்றின்னு கூப்பிட வர மாட்டேங்குதே வெட்டி” - என்றவளை முறைத்து... “எனக்குத் தெரியும்! அந்தச் சீம சிறுக்கி, சீனாப் பருப்பி தான் என்னைய

வெட்டின்னு கூப்பிடச் சொல்லி உன்னைத் தூண்டி விட்டிருப்பா-ன்னு! பாப்பா.. உனக்கு என்னைப் பிடிக்குமா இல்ல அவளைப் பிடிக்குமா?, இன்னிக்கு எனக்கு ரெண்டுல ஒன்னு தெரிஞ்சே ஆகனும்"

"ப்ச், எனக்கு நெய் ரோஸ்ட்டைத் தான் ரொம்பப் பிடிக்கும் வெட்டி. பசிக்குது..." - என்று அவள் வயிற்றைத் தடவவும் ஓடிச் சென்று தோசையை ஒரு தட்டிலிட்டு அவள் முன்பு கொண்டு வந்து வைத்தான்.

"அம்மு... தோசையை சாப்பிட்டு முடிச்சப்புறம், ஒரு க்ளாஸ் பூஸ்ட் குடிக்கனும். காலைல என்னை ஏமாத்திட்ட!, இப்போ குடிக்கலேன்னா.. வாய்லயே ரெண்டு போடு போடுவேன்" - பக்கத்திலிருந்த அறையிலிருந்துக் கடகடவெனப் பேசியபடி வெளியே வந்த ஜமுனாவின் கையிலிருந்தவற்றைக் கண்டு அவள் குளிக்கச் செல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட வெற்றி, அவளுக்கு முன்பாகத் தான் ஓடிச் சென்று பாத்ரூமுக்குள் நுழைந்துக் கதவைத் தாளிட்டான்.

"டேய்ய்ய்.... கசுமாலம்! அறிவு இருக்குதா இல்லையாடா உனக்கு?, கதவைத் தொற, கதவைத் தொற டா. எனக்கு லேட் ஆகுது" - டம்,டம்மென விடாது கதவைத் தட்டி அவனைத் திட்டித் தீர்த்தவளைக் கேட்டு வெற்றிச் சிரிப்பு சிரித்த வெற்றி.. அவள் தட்டுவதை நிறுத்தாததைக் கண்டு..

"பிக் பாஸ்! டோர் ஓபன் பண்ணுங்க பிக் பாஸ்! பிக் பாஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்" - என்று சத்தமிட... "ச்சை" என்றபடிக் கதவை மிதித்தவள்.. "வெளிய வாடா நாயே.. உன்னை வைச்சுக்கிறேன்" என்று கத்தவும், "வைச்சுக்க, வைச்சுக்க! அதுக்குத் தான் நான் ரொம்ம்ம்ம்ம்ம்ப வருஷமா காத்துனு இருக்குறேன்" என்று பதில் கூறினான்.

"பொறுக்கி" என்று முணுமுணுத்துவிட்டு.. இவையனைத்தும் எனக்கு வழக்கம் தான் என்பது போல் இவர்களிருவரையும் கண்டு கொள்ளாது தோசையை வாயிலடைத்தபடி அமர்ந்திருந்த சிறுமியின் அருகே சென்றுத் தானும் அமர்ந்தாள் ஜமுனா.

அவள் உண்கையில் கீழே விழும் சிறு சிறு தோசைத் துணுக்குகளை எடுத்துத் தட்டிலிட்டபடி "சிந்தாம சாப்பிடு தாஷி" என்றவள் தொடர்ந்து "தமிழ் - ஸ்டோரி டெல்லிங் இன்னிக்கு. நல்லாப் பண்ணிடுவேல பாப்பா?" என்று கேட்டாள்.

"காலைல இருந்து இதையே திரும்பத் திரும்பக் கேட்டு அவளை 4 தடவை ஸ்டோரி சொல்ல வைச்சுட்டடி டீச்சரு!, மீ... நீ ரொம்ப நல்லா படிக்கனும்ன்னு எந்த அவசியமுமில்ல! என்னை மாதிரி படிக்காத மேதைங்க எல்லாம் உலகத்துல

வாழ்றது இல்ல?” - பாத்ரூமிற்குள்ளிருந்து வந்த குரலைக் கேட்டு எரிச்சலுற்றவள்.. “நீ கம்முன்னு இருடா கம்னாட்டி!,” என்று அவனுக்குப் பதில் குரல் கொடுத்து விட்டு “அவன் சொல்றதைக் கேட்காத. நீ நல்லா படிக்கனும் என்ன பாப்பா?” என்றாள்.

“நல்லா படிக்கிறேன்! ஆனா.. இந்த பூஸ்ட் மட்டும் வேணாம்” - பேரம் பேசியப் பிள்ளையை முறைத்துப் பின் கெஞ்சியவள்.. அவள் வேண்டாம் என அடம் பிடித்து அழத் துவங்கவும்.. ஓடிச் சென்று லேப்டாப்பை எடுத்து வந்து அவள் முன்னே வைத்தாள்.

“பாப்பா வீடியோ போடட்டுமா?, வீடியோ பார்த்துக்கிட்டே பால் குடிப்பியாம். ஓகே?” - என ஜமுனா கேட்கவும் சரியெனத் தலையசைத்தது குழந்தை.

அதன் கையில் ஒரு நீள தம்ளரைக் கொடுத்து விட்டு.. மடிக்கணிணியில் பேபி-தாஷி என்ற ஃபோல்டரை ஓபன் செய்து முதல் வீடியோவை ‘ப்ளே’ செய்தாள்.

அது.. தாட்சாயிணி என்கிற தாஷி முதன் முதலில் தவழத் துவங்கிய போது எடுக்கப்பட்ட வீடியோ. டிவி,கட்டில்,மெத்தை,சோஃபா என எதுவுமின்றி.. இரண்டு பாய், நான்கு தலையணைகளுடன் காலியாக இருந்த வீட்டில் குழந்தை தவழ்கையில் எடுத்தது.

“கம் ஆன்... கம் ஆன்... கம் ஆன் பப்பு...” - என்று கைத் தட்டி அழைத்த ஜமுனாவை நோக்கிக் குழந்தை முகம் கொள்ளா சிரிப்புடன் ஆர்வமாய் முன்னே வந்ததை வெற்றி படம் பிடித்துக் கொண்டிருந்தான்.

தவழ்ந்து வந்து.. மண்டியிட்டு அமர்ந்திருந்தத் தன்னிடம் கை நீட்டியக் குழந்தையின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டு “என் பட்டுக் குட்டி வளர்ந்துடுச்சு டா!, என் தங்கப்பிள்ள வளர்ந்துடுச்சு டா” என்று கொஞ்சிய ஜமுனாவிடம் “சரி,சரி ரொம்ப முத்தம் குடுக்காத! என் புள்ள கன்னம் தேய்ஞ்சுடப் போகுது!” - படம் பிடித்துக் கொண்டிருந்த வெற்றி மிரட்டுவதைக் கண்டு அவள் நிமிர்ந்து முறைக்கையில்... வீடியோ நின்று போனது.

அடுத்த வீடியோவில் பனியன்,கைலியுடன் நின்றிருந்த வெற்றி இடது கையில் தாஷியை ஏந்தியபடி, வலது கையில் தண்ணீர் செம்பை வைத்திருந்தான்.

“1.. 2.. 3.. ஸ்டார்ட்” என்று ஜமுனா கூறியதும் அவன் செம்பிலிருந்தத் தண்ணீரைப் பருக.. தாஷி இடை புகுந்து செம்பைப் பற்றியிழுத்து.. தன் வாய்க்குள் செலுத்திக் கொண்டிருந்தது.

“ஹாஹாஹா” -வென சிரித்த ஜமுனாவுடன் சேர்ந்துத் தானும் கலகலவென சிரித்த வெற்றி “நோ நோ மீ.. இது பச்சத் தண்ணீ” - எனக் கூறியபடியே செம்பைப் பிடுங்கியதும்.. அது உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அழத் துவங்க... எதிரிலிருந்த டிவியைக் காட்டி “இதோ.. பாப்பாவுக்குப் பிடிச்ச ஆட் போட்றாங்க.. கிஸ் மீ... க்ளோஸ் யுவர் ஐஸ்...” என்று அதன் கையைப் பற்றிக் கொண்டு வெற்றி டான்ஸ் ஆடத் துவங்கவும்.. ஈ-யெனச் சிரித்தது குழந்தை.

அதற்கடுத்த வீடியோவில் மூங்கில் சோஃபாவின் கீழே வெற்றி அமர்ந்திருக்க.. அவனருகில் சோஃபாவைப் பற்றியபடி தாஷி நின்று கொண்டிருந்தாள்.

“காலைத் தூக்கி இப்டி வைக்கனும் பாப்பா....” என்றபடி அதன் காலைப் பற்றித் தூக்கி மேலே வைத்து ஷோஃபாவில் ஏறுவதற்கு அவன் கற்றுக் கொடுக்க.. மறுமுறை தானே ஏறி அமர்ந்து கொண்டு.. கைத் தட்டிக் கிளுக்கிச் சிரித்தது குழந்தை.

“ஹேஏஏஏஏஏ.... சூ......ப்பர்ர்ர்ர்” என்று கூடச் சேர்ந்துக் கத்தினாலும் “அவளைக் கெடுக்குறதே நீ தான் டா வெற்றி, நீ வேலைக்குப் போனப்புறம் இவ இப்டி ஏறிட்டுத் திரிஞ்சா.. யார் டா சமாளிக்கிறது?, தனியா வீட்ல உட்கார்ந்துக்கிட்டு இவ கூட போராடவே எனக்கு நேரம் சரியா இருக்கு. இனி நான் வேலைக்குப் போறேன். நீ வீட்ல இருந்து இவ கூட மல்லுக்கட்டு” என்று புலம்பிய ஜமுனாவுக்குப் பதிலாக “கொஞ்ச நாள் பொறுத்துக்கோங்க டீச்சர்!, பாப்பா வளர்ந்ததும் நீங்க வேலைக்குப் போலாம்” என்றதோடு முடிந்து போயிருந்தது வீடியோ.

அடுத்த வீடியோவில்.. அடர் நீல நிறத்தில் முழு நீள ஃப்ராக்குடன் நெற்றியில் கிரீடமும், உதடு முழுக்கப் புன்னகையுமாக ஜொலித்தபடி போஸ் கொடுத்த தாஷிக்கு அன்று முதலாவது பிறந்த நாள். அக்கம்,பக்கத்துப் பிள்ளைகளோடு சேர்ந்து கேக் வெட்டிக் கொண்டாடியிருந்தனர் வெற்றியும்,ஜமுனாவும்.

கேக்-ஐத் துண்டுகளாக்கிக் கொண்டிருந்த வெற்றியின் காலைப் பற்றியிழுத்த தாஷியை வாகாகக் கையில் ஏந்திக் கொண்டவன் க்ரீம்-ஐ அதன் நாக்கில் தடவ.. சப்புக் கொட்டிக் கொண்டு உண்டவளைக் கண்டு ஹாஹாஹாவென சிரித்துக் கொண்டிருந்தான் அவன்.

“கேக் சூப்பர்-ஆ பண்ணியிருக்கடா வெற்றி! இன்னும் கொஞ்சம் தாயேன்” என்றபடி பேப்பர் ப்ளேட்டுடன் அருகே வந்த ஜமுனாவை முறைத்து... அவள் கன்னத்தில் க்ரீம்-ஐத் தடவியவனை அவள் கொலை வெறியுடன் நோக்குகையில் நின்றது வீடியோ.

அதன் பின்பு வந்த வீடியோக்கள்... மூவரும் திருப்பதிக்கு சென்று தாஷிக்கு முதல் மொட்டை எடுத்த போது, இரண்டாவது மொட்டை வேளாங்கண்ணியில் எடுத்த போது... மூன்றாவது மொட்டை நாகூரில் எடுத்த போது.. என வரிசையாக ஓடியது.

அவளது மூன்றாவது பிறந்தநாளின் போது.. நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு மெத்தையில் சொகுசாகத் தூங்கிக் கொண்டிருந்தவளை எழுப்பியதிலிருந்துத் தொடங்கியது அடுத்த வீடியோ.

தாஷியின் அருகேக் கண் மூடி சாய்ந்திருந்த ஜமுனாவின் தோளைத் தட்டியெழுப்பிக் கொண்டிருந்தான் வெற்றி. முகத்தில் ஃப்ளாஷ் அடித்ததும் விழித்தவளிடம் “ஏன் டி 12 மணிக்கு கேக் வெட்டலாம்ன்னு சொல்லிட்டுத் தூங்கிட்ட?, எந்திரிடி!” என்று அதட்டி எழுப்பினான்.

“ஃப்ரிட்ஜ்ல இருந்து கேக் எடுத்துக்கிட்டு, அப்டியே என் ரூம்ல இருந்து தீப்பெட்டி,மெழுகுவர்த்தியெல்லாம் எடுத்துட்டு வா” - என விரட்டியவனை முறைத்தவள் “இதையெல்லாம் எடுத்துட்டு வந்து, என்னை எழுப்ப வேண்டி தான?, நானே 50 மேத்ஸ் பேப்பரைத் திருத்திட்டு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் தூங்குனேன்” - வெற்றியின் முகம் வீடியோவில் தெரியாவிட்டாலும், விடாது புலம்பிய ஜமுனாவின் முசுட்டு முகத்தைக் கண்டு மூவரும் இப்போது சிரித்துக் கொண்டிருந்தனர்.

அவள் நகர்ந்ததும்.. உறங்கும் தாஷியை ஃப்ளாஷ் வெளிச்சத்தில் நோக்கியவன் “என் புள்ள தூங்கும் போது எவ்ளோ அழகு...!” எனக் கூறி முத்தமிடுகையில்.. கேக்குடன் வந்து சேர்ந்தாள் ஜமுனா.

அதன் பின்பு அவளை எழுப்பி ஹாப்பி பர்த்டே பாடி சோட்டா-பீம்,சுட்கி பொம்மையைப் பரிசளித்து கேக் வெட்டியதும், தாஷி முகத்தில் தெரிந்த ஆச்சரியம் கலந்த கள்ளம்,கபடமற்ற சந்தோஷம்... வெற்றியையும்,ஜமுனாவையும் வேறு உலகத்திற்கு அழைத்துச் சென்றது.

“நீ அம்முவுக்குக் கேக் ஊட்டு டா வெற்றி” என்று ஜமுனா கூறியதும் கேக் துண்டத்தைக் கையில் எடுத்தவனிடம் “கேமராவை செல்ஃபி மோட்-க்கு மாத்து டா, அப்புறம் நீ தெரிய மாட்ட” என்று அவள் கூறியதும் மாற்றி விட்டு இப்போதுத் தானும் வீடியோவில் தெரிந்தான் வெற்றி.

அவனுக்கும்,தாஷிக்கும் இடையில் நின்றிருந்த ஜமுனாவையும் சேர்த்தணைத்துக் கொண்டு “பாப்பா.. ஆஆஆஆ” என்றபடி அருகே சென்று அவள் வாயில் கேக்கை

ஊட்டாமல் முகத்தில் தடவியவனைக் கண்டு அவள் மெத்தையில் குதித்துச் சிரிக்க.. கையிலிருந்தக் கேக்கின் மீதியை ஜமுனாவின் முகத்தில் பாரபட்சம் பார்க்காமல் அப்பியிருந்தான்.

இப்படியாக அடுத்தடுத்த ஓடிய அத்தனை வீடியோக்களும் மூவரது வாழ்வின் வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. உடலளவில்,மனதளவில்,செல்வநிலையில் அவர்கள் கண்ட ஏற்ற,இறக்கங்களை நினைவு படுத்திக் கொள்ள உதவியது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சென்னையிலிருந்து வேலூருக்கு வந்து சேர்ந்த வெற்றியும்,ஜமுனாவும் தங்களைச் சேர்ந்த ஒருவரிடமும் இதுவரைத் தங்களது இருப்பைக் காட்டிக் கொள்ளவில்லை. உற்ற நண்பர்கள்,உறவினர்கள் என யாரிடமும் ஒருமுறை கூடப் பேச முயற்சிக்கவில்லை. இருவரது வாழ்வின் பெரும்பகுதியையும் தாஷி,தாஷி என்கிற குட்டி ஜீவன் ஆக்கிரமித்துக் கொண்டது.

ஜமுனாவேனும் சென்னையிலிருந்த அக்கம்,பக்கத்தாரிடம் அன்னை இறந்த துக்கம் தாளாது, மாற்றம் வேண்டி வேறு ஊருக்குத் தன் வேலையை மாற்றிக் கொண்டுச் செல்வதாகச் சொல்லி வைத்து விட்டுக் கிளம்பியிருந்தாள். ஆனால் வெற்றி, தன் உயிர் நண்பன் கதிரிடம் கூடத் தன்னைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. சொன்னால்.. தாஷியைப் பற்றித் தேவையில்லாதக் கேள்விகள் வரும் என்பதாலோ என்னவோ, தன்னைப் பற்றிய சுவடே இல்லாத அளவிற்கு மொத்தமாய் ஒதுங்கி விட்டான்.

சரோஜாவிடமும் அதையே கூறி விட்டு சென்னையிலிருந்த வீட்டைக் காலி செய்யுமாறும், அங்கிருக்கும் பொருட்களை விற்று விடும்படியும் சொல்லி விட்டாள் ஜமுனா. அவரிடமும் அதன் பின்பு அவள் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. அவளது அன்னை படுத்த படுக்கையானதிலிருந்து அவளுடன் இருந்த பெண்மணி சரோஜா! அவரிடம் கூடத் தொடர்பில்லாமல் இருப்பது அவளுக்கு உறுத்தலைக் கொடுத்தது தான்! ஆனாலும் தாஷிக்கு வேண்டி.. அவரது உறவையும் தவிர்த்தாள்.

மிகவும் அத்தியாவசியப் பொருட்களோடு ஒரு சிறிய வீட்டில் துவங்கியது இருவரது வாழ்க்கையும்! சேமிப்பு என்ற பெயரில் இருவரிடமும் பெரிதாக எதுவுமில்லாததால் ஆரம்ப காலக் கட்டத்தில் கையில் காசு தங்காமல் மிகவும் சிரமப்பட்டனர்.

வருமானம் என்கிற பெயரில் கணிசமான தொகை கைக்கு வந்தாலும், வரவை மீறிய செலவிருந்தது. முழு நேரமாகக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் ஜமுனாவிற்கும் வேலைக்குச் செல்ல முடியாத நிலை.

சம்பாதிக்கும் அத்தனை பணத்தையும் அவள் கையில் கொடுத்து விடுவான் அவன்! இருக்கும் நிலையைக் கருத்தில் கொண்டு அவள் போடும் பட்ஜெட்டில் தான் குடும்பம் நடக்கும்!

இருவரும் எத்தனையோ விஷயங்களை விட்டுக் கொடுத்தாலும், குழந்தையை மட்டும் எந்தக் குறையும் அண்டாமல் பார்த்துக் கொண்டனர். குழந்தைக்குப் போடப்படும் தடுப்பூசியைக் கூட அரசு மருத்துவமனையில் போட்டுக் கொள்ளாமல், ப்ரைவேட் ஹாஸ்பிடலில் செலவழித்தனர். இப்படியாக சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் அடித்தது லாட்டரியாக வெற்றியை அதிர்ஷ்டம் தேடி வந்தது.

வெற்றி நன்றாகச் சமைப்பவன் என்பது ஏற்கனவே ஜமுனாவிற்குத் தெரிந்தது தான் என்றாலும்.. அவன் கை தேர்ந்த செஃப்-களைப் போன்று இந்த அளவிற்கு சமையலில் கில்லாடியாக இருப்பான் என்பது அவள் சற்றும் அறியாதது. எளிமையான இன்க்ரிடியண்ட்ஸை வைத்துக் கொண்டு அவன் அசத்தும் வெரைட்டிகளைக் கண்ட போது.. அவன் திறமை, அவனை நிச்சயம் வேறு நிலைக்குக் கூட்டிச் செல்லும் என்று நம்பினாள். அவள் நம்பிக்கையை மெய்யாக்குவது போல.. அடுத்தடுத்த சம்பவங்கள் வெற்றியின் வாழ்வில் நடந்தேறின.

தன் தந்தையின் மெஸ்ஸில் செய்வது போன்று.. புதுவிதமான டிஷ்-கள் சிலவற்றை தான் வேலை பார்க்கும் ஹோட்டல் கஸ்டமர்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தான் அவன். அதில் ஒருவர், இவன் செய்தது பிடித்துப் போய் தனது ஸ்டார் ஹோட்டல் செஃப் நண்பரை இங்கேக் கூட்டி வர.. அவரும் அதை உண்டு பார்த்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அதன் பின்பு அவன் கண்டறிந்த மேலும் சில டிஷ்-களைச் சொல்லி.. இன்னும் அவன் மனதில் நினைத்திருக்கும் ஐடியாக்களை எல்லாம் கூறியதும்... அவர் முதலில் விசாரித்தது அவன் என்ன படித்திருக்கிறான் என்பதைத் தான்.

தலையைச் சொறிந்தபடிப் பத்தாவது கூடத் தேறவில்லை என்று அவன் தெரிவிக்கவும்.. 'பின்னே எப்படி இந்த ஐடியாக்கள்' எனக் கேட்டார் அவர்.

புத்தகம்,டிவி, இண்டர்நெட் என அனைத்திலும் தனது ஃப்ரீ டைம்-இல் பாதியை இது சம்பந்தமாகச் செலவழிப்பதாக அவன் கூறவும், 'படிக்காத மேதை' பட்டத்தை

அவனுக்கு அள்ளி வழங்கியவர் தான் வேலை செய்யும் ஸ்டார் ஹோட்டலிலேயே அவனையும் சேர்த்துக் கொண்டார்.

அவரது உதவியுடன் கேட்டரிங்கில் டிப்ளமா பட்டமும் வாங்கினான் வெற்றி (நிச்சயம் படித்து வாங்கிய பட்டமாய் இருக்காது). அதன் பின்பு டெல்லியில் நடந்த நேஷனல் ஃபுட் ஃபெஸ்டிவலிலும் இவனது ஹோட்டல் சார்பாக.. இவன் தயார் செய்த டிஷ்கள் நல்ல வரவேற்பைப் பெற.. அந்த ஹோட்டலில் வேலைக்குச் சேர்ந்த நான்காவது வருடம் அஸிஸ்டெண்ட் செஃப்-ஆக பதவி உயர்வு பெற்றான்.

குழந்தையும் வளர்ந்து பள்ளிக்குச் செல்லத் துவங்கியதால்.. ஜமுனாவும் தனது டீச்சர் வேலையைத் தொடர்ந்தாள். ஐந்து வருடங்களில் அவர்கள் கடந்து வந்த பாதை ஃபேரி டேல் போன்றிருக்க.. இத்தகைய அழகிய மாற்றத்தைத் தங்கள் வாழ்வில் ஏற்படுத்திக் கொடுத்த அந்தக் குட்டி ராட்சசியை இருவரும் போற்றாத நாளே இல்லை!

நிழற்படத்தைத் தவிரத் தனது தாயை ஒரு முறை கூடக் கண்ணில் காணாத வெற்றி, குழந்தையின் அன்பில் தன் தாயைக் கண்டான். நாள் முழுவதும் ஜமுனா அவளைக் கொஞ்சி,மிஞ்சிச் செல்லமாகப் பார்த்துக் கொண்டாலும், இரவு வெற்றி வரும் நேரம்.. "வெட்றி, வெட்றி" என்றழைத்தபடி வாசலருகேயிலேயே தான் நின்றிருப்பாள்.

சிறு குழந்தையாய் இருந்த போதே.. தூரியில் படுத்திருந்தாலும் அவன் வருவது தெரிந்ததும் படபடவென எழுந்தமர்ந்து கொண்டு "பா, பா, பா" என்பாள்.

'பாப்பா உம்மா' - என அவன் கன்னத்தைக் காட்டினால் போதும்! அவனே போதும் பாப்பா என்கிற வரைக்கும் முத்தத்தால் அவனை மூழ்கடித்து விடுவாள். அந்த சமயம் ஜமுனாவிற்கு அவளிடமிருந்து ஒரு முத்தம் கூடக் கிடைக்காது. அவன் வீட்டிலிருக்கும் நேரம் அவன் பின்னால் தான் திரிவாளே தவிர.. ஜமுனா அழைத்தாலும் அவள் புறம் வர மாட்டாள்.

விடுமுறை நாட்களில்.. மதிய வேளையில் ஜமுனா உறங்கிய பின்பு.. அவனுடைய அறையில் அமர்ந்து கொண்டு இருவரும் குசு,குசுவென ஏதோ பேசியபடிச் சிரிக்கும் சத்தம் ஜமுனாவின் முகத்தில் புன்னகையை வரவழைக்கும். அவன் அறைக்குள் எட்டிப் பார்த்தால், குழந்தையின் மடியில் தன் தலையை சாய்த்துக் கொண்டு.. கண் மூடியபடி ஏதோ பேசிக் கொண்டிருப்பான் அவன். 'சின்னக் குழந்தைங்கப் பக்கத்துலக் கூடப் போனதில்ல' எனக் கூறிய வெற்றியா இது! என்று ஆச்சரியப்படும் வகையில்

குழந்தையின் தந்தையாகவே வாழ்ந்தான் வெற்றி. தாட்சாயிணி என்கிறப் பெயர் கூட அவன் வைத்தது தான்! அவனை வளர்த்தப் பாட்டியின் பெயராம்!

ரத்த சம்பந்தம் ஏதுமின்றி யாருக்கோ பிறந்து... விதியால் கைக்குக் கிடைத்து.. தங்கள் வாழ்வில் வரமாய் மாறிப் போன தேவதையை தங்களது சொந்தக் குழந்தையாகவே வளர்த்தனர் இருவரும்.

**வீ**டியோ முடிந்த போது தாஷி பாலைக் காலி செய்திருக்க.. பாத்ரூமிலிருந்து வெற்றியும் வெளி வந்திருந்தான்.

"நீ தான் முதல்ல குளிச்சுட்டேல?, நீ போய் அவளை ஸ்கூல் பஸ் ஏத்தி விடு. எனக்கு நேரமாச்சு" - அவனிடம் கூறியபடியே அவனைச் சுற்றிக் கொண்டு சென்றவளிடம்..

"நீ இந்த வூட்ல அப்டி இன்னா தான் டி வேலை செய்ற?, விடிஞ்சதுல இருந்து இந்தப்பக்கமும்,அந்தப்பக்கமும் நடந்துனு தான் இருக்குற?" எனக் குறை கூறினான் வெற்றி.

"ம்ம், பிள்ளையக் குளிப்பாட்டி ரெடி பண்ணி, அவளுக்குப் பாடம் சொல்லிக் குடுக்குற வேலையெல்லாம் யார் பார்ப்பா?, நீயா பார்ப்ப?, உனக்கு சமைக்கிறதையும்,திங்குறதையும் தவிர ஒரு மண்ணும் தெரியாது"

"அடிங்******! யாராண்ட வம்புக்கு நிக்குற?" - சீறிக் கொண்டு கிளம்பிய வெற்றியின் கையைப் பற்றிய தாஷி "என்னை பஸ் ஏத்தி விட்டுட்டு வந்து நீ சண்டை போடு வெட்டி" என்று அவனைக் கிளப்பிக் கொண்டு முன்னே நடந்தாள்.

"குழந்தை முன்னாடிக் கெட்ட வார்த்தை பேசாத டா நாயேன்னு எத்தனை தடவை சொன்னாலும் மண்டைல ஏறாது! கசுமாலம்" - முணுமுணுத்துக் கொண்டே பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் ஜமுனா.

அதன் பின்பு அவள் தயாராகி சாப்பிட அமர்ந்த போது... பள்ளிப் பேருந்தில் தாஷியை அனுப்பி விட்டு வந்த வெற்றியும், அந்தச் சிறிய டைனிங் டேபிளின் மறு ஓரம் அமர்ந்துத் தோசையை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான்.

தானும் சாப்பிடத் துவங்கிய ஜமுனா "ஆஹா ஆஹா!!! இதல்லவா நெய் ரோஸ்ட் என்பது! ஒரு ஹோட்டல்காரனை வூட்ல வைச்சிருக்கிறதுல இவ்ளோ நன்மை இருக்குன்னு எனக்குச் சத்தியமாத் தெரியாது டா வெற்றி. என்னமா சமைக்கிற?" என்றாள்.

“மூடின்னு தின்னுடி”

“வெற்றியின் வெங்காயச் சட்னிக்கு நிகர் உலகத்தில் எதுவுமில்லை” - அவன் அதட்டியும் அடங்காமல் அடுத்தடுத்து கமெண்ட்களை அள்ளி விட்டவளை பார்த்தபடியே அமர்ந்திருந்தான் வெற்றி.

“இன்னா டா அப்டி பார்க்குற?”

“ப்ச்” என்றவன் அவளை ஒரு மாதிரி நோக்கியபடி பேண்ட் பாக்கெட்டுக்குள் கை விட்டு.. எதையோ எடுத்து அவள் உண்டு கொண்டிருந்தத் தட்டின் அருகே டொக் என வைத்தான்.

தோசையை வாய்க்குள் செலுத்தி விட்டு.. என்னவென்றுக் குனிந்து பார்த்த ஜமுனா.. அங்கிருந்த பொருளைப் கண்டுக் கண்களை அகல விரித்து.. தொண்டையடைக்க விக்கி.. அவசரமாகத் தன் கையருகே இருந்தத் தண்ணீர் ஜக்கை எடுத்து வாய்க்குள் சரித்துக் கொண்டு... அவன் முகத்தை ஆச்சரியத்துடன் நோக்கினாள்.

அவள் அளித்த ரியாக்ஷன் எதையும் கண்டு கொள்ளாமல்.. அலட்டலின்றி அவள் முகத்தைப் பார்த்தபடியேப் பொறுமையாக தோசையை மென்று கொண்டிருந்தான் வெற்றி.

“இன்னா டா இது?” - ஜமுனா.

“பார்த்தாத் தெரியல?? இது பேரு தான் தாலி.”

நக்கலாகக் கூறியவனைக் கண்டுப் பல்லைக் கடித்தவள்...

“அது எனக்கும் தெரியும் டா மொல்லமாரி!, இத்த என்னாத்துக்கு என்னாண்ட குடுக்குற இப்ப?” - என்றாள்.

ஒரு நிமிடம் பதில் கூறாமல்... தோசையைப் பிய்த்து சட்னியில் தோய்த்துக் கொண்டிருந்தவன்.. பின் நிமிர்ந்து அவளைப் பார்த்து...

“இதை நீயாவே உன் கழுத்துல கட்டிக்கிட்டாலும் சரி! இல்ல, என் கையால நான் உன் கழுத்துல கட்டுறதுக்கு சம்மதிச்சாலும் சரி! எப்டியோ.. இது உன் கழுத்துல இருந்தாகனும்..” - என்றான் சட்டமாக.

“எதுக்கு?”

“புரியல”

“அப்படி என்னாத்துக்கு இது என் கழுத்துல இருந்தாகனும்?”

“நேத்துப் பக்கத்து வூட்டு வடுகநாதன் சம்சாரம் உன்னாண்ட இன்னாடி கேட்டுச்சு?”

“அ....அது...”

“தாலி கட்டிக்காம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்ந்து பிள்ளையும் பெத்துக்கிட்டீங்களான்னு கேட்டுச்சா.. இல்லையா?”

“ப்ச், அந்தம்மா மட்டுமா இப்டி கேட்குது?, இந்த 5 வருஷமா என் கிட்டப் பழகுற எல்லாரும் கேட்குற முதல் கேள்வி இது தான்”

“ஓஹோ! அதுக்கு மேடம் என்ன பதில் சொல்வீங்க?”

“நாங்க கிறிஸ்து முறைப்படி மோதிரம் மாத்திக்கிட்டோம்ன்னு விரலைக் காட்டிருவேன். எப்பூடி?” - கண்ணடித்துச் சிரித்தவளிடம்..

“கண்றாவியா இருக்கு டி. எத்தனை பேர் நீ சொன்னதை நம்பியிருப்பானுங்கன்னு நினைக்கிற?” என்றான்.

“நம்பலேன்னா போய்ட்டுப் போறானுங்க. நாம என்னாத்துக்கு டா அதை நினைச்சுக் கவலைப்படனும்”

“நீயெல்லாம் படிச்சு என்னடி பிரயோஜனம்?”

“ஏய்.. என்னாடா?”

“ப்ச், நம்மைப் பத்தி எவன் என்னா பேசுனா என்னன்னு தான் அக்கம்பக்கத்துல இருக்குறவனுங்க வுட்ற கேவலமான லுக்கையெல்லாம் டீல்-ல வுட்டு இத்தினி வருஷத்தையும் கடந்துருக்கோம்! ஆனா... இப்ப அப்டி இல்ல”

“ஏன், இப்ப மட்டும் என்ன வந்தது?”

“குழந்தை வளர்ந்துடுச்சுடி. அக்கம்,பக்கத்துல இருக்கிறவனுங்களுக்கு வர்ற கேள்வியெல்லாம் அவளுக்குத் தோணாதா?, அம்மா-அப்பான்னு அவ நம்மளைப் பேர் சொல்லிக் கூப்பிடாட்டியும், அவளைப் பொறுத்தவரை அந்த ஸ்தானத்துல இருக்கிறது, அவ கூட ஒரே வீட்டுக்குள்ள ஒன்னா இருக்கிற நாம ரெண்டு பேர் தான்! அந்த வடுகநாதன் சம்சாரம் மாதிரி ஏதாவது ஒரு பூட்டக்கேசு அம்முக் கிட்ட கண்டதையும் கேட்டு வைச்சா, அவ மனசு நோகாதா?. நாம இத்தனை வருஷமா அவளைக் கஷ்டப்பட்டு வளர்த்து என்ன பிரயோஜனம்?”

“...........” - பதிலற்று அமைதியாய் அமர்ந்திருந்தாள் அவள்.

“இது ஒத்துவராதுன்னு நினைச்சேனா.. நாம அவளோட அம்மா,அப்பா இல்லன்னு தாஷிக்குப் புரியுற மாதிரி நீயே எடுத்து சொல்லிடு”

அவன் கூறியதும் வெடுக்கென நிமிர்ந்தவள் “நீ ஒரு அநாதைன்னு என் புள்ளக் கிட்ட சொல்லத் தான் நான் அவளைக் கஷ்டப்பட்டு வளர்த்தேனாக்கும்?” என்று கூற...

“யாரோ சிலர் ஏதேதோ கேள்விக் கேட்டு அவளைக் குழப்பி விட்றதுக்கு.. நாமளே.. அவக்கிட்ட உண்மையை சொல்றது பெட்டர் தான?”

“................”

“இல்ல, கடைசி வரைக்கும் அவளுக்கு அவளைப் பத்தின எதுவுமே தெரியக் கூடாதுன்னு நினைச்சேனா... இந்தத் தாலியை எடுத்துக் கட்டிக்கிட்டு அவளோட அம்மாவாவே வாழ்ந்துடு. நானும் அவ அப்பாவாவே வாழ்ந்துட்றேன்”

“.......................”

“யோசிச்சு முடிவு பண்ணு” - என்றவன் கையைக் கழுவி விட்டு எழுந்து செல்ல.. சிறிது நேரம் அசைவற்று அமர்ந்திருந்த ஜமுனா.. பின் தானும் எழுந்தாள்.

யோசனை நிறைந்த முகத்துடன் அடுக்களையிலிருந்து வெளி வந்தவளை வாசலில் தடுத்து நிறுத்தினான் வெற்றி.

“என்ன?” - ஜமுனா

“.............”

“எதுக்கு டா வழியை அடைச்சுட்டு நிற்குற?, தள்ளு” - உர்ரென்ற முகத்துடன் வினவியவளிடம்..

“நான் கேக்குற கேள்விக்கு உண்மையா பதில் சொல்லுவியா?” -எனக் கேட்டான்.

“என்ன கேக்கப் போற?”

“உனக்கு எவனையாவது கன்னாலம் கட்டிக்கினு குழந்தை,குட்டின்னு வாழனும்ன்னு ஆசையிருக்கா?”

“............” - உஷ்ண மூச்சுடன் முறைத்தாள் அவள்.

“இல்ல, அப்டி எதுவும் ஆசையிருந்தா சொல்லிடு. நானும்,என் பொண்ணும் விலகிப் போயிட்றோம். உன் வாழ்க்கைக்கு நிச்சயம் நாங்கக் குறுக்க நிக்க மாட்டோம்” - அணிந்திருந்த ஜீன்ஸ் பாக்கெட்டுக்குள் கை விட்டுக் கொண்டு கீழ்க்கண்ணால் அவளை நோட்டம் விட்டபடி கூறியவனிடம்...

“ஓஹோஓஓஓஓ” என்றபடிப் பல்லைக் கடித்தவள்.. “உனக்கும் அந்த மாதிரி ஆசை இருந்தா சொல்லிடு. நானும்,என் பொண்ணும் எங்கயாவது கண் காணாத இடத்துக்குப் போய் பொழச்சுக்கிறோம் உனக்குத் தொந்தரவு இல்லாம” என்றாள்.

“எனக்கு ஆசையிருந்து என்ன பிரயோஜனம், நீ தான் ஒத்துக்க மாட்டேங்குறியே”

“ம்?????”

“ப்ச், அந்தத் தாலியை நான் உன் கழுத்துல கட்டனும்ன்றது தான் என் விருப்பம். அது உன் மரமண்டைக்குப் புரியுதா? புரியலையா?” - என்று எரிச்சலுடன் மொழிந்தவன்.. விழிகளைப் பெரிதாக விழித்துத் தன்னை நோக்குபவளைக் கண்டு கொள்ளாமல்.. விறுவிறுவென நடந்து சென்று விட்டான்.

**‘நீ வாழத் தானே வாழ்கின்றேன் நானே...**

**நீயின்றி ஏது பூ வைத்த மானே...**

**இதயம் முழுதும் எனது வசம்.... வா..வா.. அன்பே.. அன்பே....’**

- கடந்து 5,6 வருடங்களாக அவர்களது வாழ்வில் ஒரு அங்கமாகி.. தனது இசைப் பணியை செவ்வனே செய்து கொண்டிருக்கும் இளையராஜா பேக்-க்ரவுண்டில் டிவி வழியாக ஒலித்துக் கொண்டிருந்தார்.

**அ**ன்றைய நாள் முழுதையும் யோசனையுடன் கழித்தபடிப் பள்ளியில் நடமாடிக் கொண்டிருந்தாள் ஜமுனா.

இந்த ஐந்து வருடங்களில் குழந்தையைத் தவிர எதைப் பற்றியும் இருவரும் யோசித்துப் பார்த்ததேயில்லை. அதில் அவர்களதுத் தனிப்பட்ட வாழ்க்கையும் அடக்கம்.

ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்ந்தாலும்.. வெற்றியிடமிருந்து ஒரு தவறான பார்வையோ கூட வந்தது கிடையாது. வெள்ளிக்கிழமையானால்.. தலைக்கு ஷாம்பூ போட்டுக் குளித்து மல்லிப் பூ சூடும் போது மட்டும் ஆர்வமாய் அவள் முகத்தை ஒரு

பார்வை பார்ப்பான். அவ்வளவு தான்! அதைத் தாண்டி எதையும் அவளிடம் அவன் வெளிப்படுத்தியதில்லை.

அக்கம்,பக்கத்திலிருப்போர் 'உங்க ஹஸ்பண்ட், உங்க வைஃப்' எனக் குறுப்பிடுவதையெல்லாம் இயல்பாய் ஏற்கவே பழகியிருந்தார்கள் இருவரும். ஒரே வீட்டில் குழந்தையுடன் ஒன்றாய்க் குடியிருப்பவர்களை கணவன்,மனைவி என்று நினைக்காதிருந்தால் தான் ஆச்சரியம் என்றெண்ணிக் கொண்டு.. அந்த மாதிரி குறிப்பிடல்களனைத்தையும் சாதாரணமாகக் கடந்து விட்டார்கள்.

அக்கம்,பக்கத்தாரைச் சமாளித்து இத்தனை வருடங்களைக் கழித்தாயிற்று. வெற்றி சொன்னது போல்.. இனியும் அப்படிக் கடத்த முடியாதே! ஒரே வீட்டில் உடன் இருக்கும் குழந்தை அவர்களது வித்தியாசத்தை உணரத் தொடங்கி விட்டால்.. பட்டக் கஷ்டம் அனைத்தும் பிரயோஜனமின்றிப் போய் விடும்,

திருமணம் செய்து கொண்டு கணவன்-மனைவியாக வாழவில்லையே ஒழிய... இருவருக்குமிடையே நிலவும் 'கெமிஸ்ட்ரி'-யை அவள் உணர்ந்தே இருந்தாள்.

கையைக் கடிக்கும் வருமானத்துடன் குழந்தையோடு வாழ்வைத் தொடங்கிய போது இருவருக்குமிடையே இருந்தத் திட்டமிடல் வருமானம் பெருகிய பிறகும் தொடர்ந்தது. அவள் வேலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்த கால கட்டத்தில், கையில் பணமில்லையென அவனிடம் அவள் வாய் விட்டுக் கேட்டும் நிலையை அவன் ஏற்படுத்தியதேயில்லை. ஒவ்வொன்றையும் அவளிடம் கேட்டுக் கேட்டே செய்தான். ஆரம்பத்திலிருந்து இன்று வரை வீட்டில் சமையல் செய்வது அவன் தான். நீ பெண்,நான் ஆண் என்கிற வித்தியாசத்தை அவன் காட்டியதேயில்லை. ஐந்து வருடத்திற்கு முன்பு அவனிடம் பொறுப்பில்லை,பொறுமையில்லை என்று அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் பொய்யாக்கி... அவனைப் போல் ஒரு ஆணை உலகத்தில் எந்த மூலையிலும் காண முடியாது என்கிற அளவுக்கு மொத்தமாய் மாறிப் போயிருந்தான்.

ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்தபடி குழந்தையை அவள் பள்ளியிலிருந்து அழைத்துக் கொண்டு மாலை வீடு வந்து சேர்ந்தாள் ஜமுனா. அதன் பின் அவளுக்கு உண்ணக் கொடுத்து, படிக்க வைத்து இரவு உணவையும் முடித்த போதும், வெற்றி இன்னும் வந்து சேரவில்லை.

எட்டரை மணியிலிருந்து நொடிக்கொரு முறை வாசலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த தாஷியைக் கண்டுத் தன் செல்ஃபோனில் அவனை அழைத்தாள்.

“என்ன டா இன்னும் வீட்டுக்கு வரல?” - ஜமுனா

“லேட் ஆகும்”

“ஏன் ஒரு மாதிரி பேசுற?”

“என்ன மாதிரி பேசுறேன்?”

“ப்ச், என்ன டா உன் பிரச்சனை?” - எரிச்சல் குரலில் அவள்.

“................”

“டேய்.....”

“நான் குடுத்தத் தாலிய என்ன செய்யலாம்ன்னு இருக்க?” - அவனது ஆழ்ந்த குரல் அவள் செவியை அடைந்து.. மனதை ஏதோ செய்தது.

“............”

“பதில் சொல்லுடி”

“இன்னும் எதுவும் முடிவு பண்ணல” - கெத்தாய்க் கூறினாள் அவள்.

“என்னிக்கு முடிவு பண்ணுவ?”

“ப்ச், எனக்குத் தோணும் போது முடிவு பண்ணுவேன், உனக்கென்ன டா?”

“..............”

“சரி, எப்போ வருவ-ன்னு சொல்லு”

“எனக்குத் தோணும் போது வருவேன். உனக்கென்னடி?” - தானும் எரிச்சலுடன் அவன் கூறிய பதிலில் கோபமுற்றவள்..

“நீ எப்ப வந்தா எனக்கென்ன டா பரதேசி!, உன் பொண்ணு வாசலுக்கும்,வூட்டுக்குமா கால் ஓயுற மாதிரி உன்னைத் தேடி நடந்துனு கிடக்குறா! அதான் கேட்டேன்” - என்று நொடித்துக் கொண்டதும் “அதை முதல்ல சொல்றதுக்கென்ன?, புள்ளக் கிட்ட ஃபோனைக் குடுடி வெளங்காதவளே’ எனக் கிழித்து விட்டுப் பின் தாஷியிடம் பேசி விட்டு ஃபோனைக் கட் செய்தான்.

இரவு வெகு நேரம் அவள் விழித்திருந்தும் அவன் வந்து சேரவில்லை. எனக்கென்ன என்பது போல் உறங்கிப் போனவள்.. நடுராத்திரியில் சன்னமாக ஒலித்தப் பாட்டுச் சத்தத்தில் எழுந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

வீட்டு ஹாலின் கடைசியிலிருந்த சிறிய பால்கனியிலிருந்துச் சத்தம் வந்தது. அருகே சென்று அவள் கதவைத் திறந்து பார்த்த போது.. சிகரெட் ஊதியபடி பால்கனிக் கம்பியில் கை ஊன்றி நின்றிருந்தான் வெற்றி.

“அட நாதாரி! உனக்கு சிகரெட் பிடிக்குறப் பழக்கம் வேற இருக்கா?” - நடுநிசியில்.. முழு அமைதியுடன் இருளில் மிளிர்ந்தத் தெருவை வெறித்தபடி... இளையராஜா இசையில் மூழ்கியிருந்தவன்.. அவளது கரடிக் குரலில் திடுக்கிட்டுத் திரும்பினான்.

“இன்னாத்துக்குடி இப்டிக் கத்துற?”

“இது என்னடா பழக்கம்?, வூட்ல சிகரெட் பிடிக்கிறது? புள்ள பார்த்தா என்னாவும்?”

“அதான் அவ தூங்கிட்டிருக்கிற நேரமா பார்த்துக் குடிக்கிறேன்”

“டெய்லி குடிப்பியா?”

“ம்ஹ்ம்.. கடைசியா போன வருஷம் மார்ச் மாசம் 9-ந் தேதி குடிச்சது”

“ஏன் டா சிகரெட் புடிக்கிற தேதிய கூடவா நியாபகத்துல வைச்சிருப்ப?”

“ஆமா, ஏன்னா... அன்னிக்கு நீ உங்க ஸ்கூல் ஆண்டு விழான்னு பச்சைக் கலர் பட்டுப் புடவை கட்டிருந்த. அதனால நியாபகம் இருக்கு”

அலட்டிக் கொள்ளாமல் அவன் அளித்த பதிலில் திடுக்கிட்ட மனதை அடக்கி..

“டேய்... நான் பச்சைப் புடவை கட்டுனதுக்கு நீ ஏன் டா சிகரெட் புடிக்கிற?”

“அழகா இருந்தேல, அதான்” - மீண்டும் அலட்டிக் கொள்ளாத பதில்.

பல்லைக் கடித்தபடி அவனை நோக்கினாள் அவள்.

கடைசிப் புகையையும் இழுத்துக் கொண்டு சிகரெட்டைக் காலில் இட்டு நசுக்கியவன்.. அதை ஊதியபடியே.. அவளிடம் “நீ என்னாத்துக்கு தூங்காம நடமாடுற?” என்று விசாரித்தான்.

கையைக் கட்டிக் கொண்டு.. நிலப்படியில் சாய்ந்து நின்றபடி.. அவனையே தலை சாய்த்து நோக்கினாள் அவள்.

“இன்னா டி??”

“அன்னிக்கு ஏன் குடிச்ச-ன்றதுக்கு பதில் சொல்லிட்ட! இப்ப ஏன் குடிக்கிற-ன்னு சொல்லலயே” - என்றவளுக்குப் பதில் சொல்லாமல்.. ஒரு நிமிடம் அசைவற்று அவள் முகத்தை வெறித்தவன்.. பின் உதட்டைக் கடித்தபடி வேறு புறம் திரும்பினான்.

ட்ராக் ஷூட்டும், டீஷர்ட்டுமாக நின்றிருந்தவனின் கண்களில் ஏதோ ஒரு அலைப்புறுதல்! அழுத்தமாய் இதழ்களை மூடி வைத்திருந்தான்! கலைந்திருந்தத் தலை முடி.. லேசாகக் காற்றிலாடிக் கொண்டிருந்தது.

“எனக்குத் தெரியும்” - ஜமுனா

“என்ன தெரியும்?”

“இதை நான் என்ன பண்ணப் போறேன்னு உனக்குத் தெரியனும். அதான?” - என்றபடிக் கையிலிருந்தத் தாலியைக் காட்டினாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தவனும் மெல்ல ஆமாம் என்பது போல் தலையசைத்தான்.

நிலப்படியிலிருந்து நகர்ந்து வந்து.. அவன் முன்னே நின்றாள்.

தீர்க்கமாகத் தன் முகத்தை அண்ணாந்து பார்த்தபடி தன் மார்பருகே நின்றிருந்த அவள் முகத்தை குனிந்துத் தானும் நோக்கினான் அவன்.

கையிலிருந்தத் தாலியை அவனிடம் நீட்டியவள் “நான் முடிவு பண்ணிட்டேன்” என்றாள்.

“என்ன?”

“இ..இ..இதை.. நீயே என் கழுத்துல கட்டி விட்ரு..” - அவன் முகம் பார்க்காமல் எதிரே தெரிந்த சுவரை வெறித்தபடிக் கூறியவளைக் கேட்டு.. தலை முதல் கால் வரை ரத்தம் குபு,குபுவெனக் குதித்துக் கொண்டு ஓடியது அவனுக்கு.

‘**** எவ்ளோ அசால்ட்-ஆ சொல்றா பாரு! இத்த இவ கைல குடுத்துட்டு ஒருத்தன், காலைல இருந்து ஒரு வேலையும் ஓடாம.. என்ன செய்யப் போறாளோன்னு நென்ச்சு,நென்ச்சு பைத்தியம் மாதிரி சுத்தினு இருக்குறான்! இவ பாரு, எவ்ளோ கூல்-ஆ.. நோவாம.. இதயத்துல ஓட்டையப் போட்றா!!’

அதுவரை அமைதியின்றி.. அலைப்புறுதலுடன்.. ஆட்டமாடிக் கொண்டிருந்த அவன் ஆன்மா.. சர்வமும் அடங்கி விட்ட... ஆசுவாசத்துடன்... நின்று நிதானமாய் மூச்சு விட்டது.

நிமிர்ந்து... அவளைப் பார்த்து.. ஒற்றை விரலால் அவள் கன்னத்தைத் திருப்பித் தன் முகம் நோக்கச் செய்தவன் "என்ன சொன்ன?" என்று அடங்காத ஆச்சரியத்துடன் வினவினான்.

"ப்ச், இது தான் உன் விருப்பம்ன்னு நீ தான சொன்ன?"

"அதுக்காக மட்டும் தானா?"

"இதோ பாரு, நீ அப்டி,இப்டிப் பேசி எதையும் ட்விஸ்ட் பண்ணப் பார்க்காத, நான் என் முடிவை மாத்திக்கிறதுக்கு முன்னாடி டக்குன்னு இதை என் கழுத்துல கட்டு" - தன் புறம் தாலியை நீட்டியவளைக் கண்டு தோள் குலுங்க.. லேசாக நகைத்து..

"இப்போவா?" - என்றான்.

"ஏன், நாள் குறிச்சு, நல்ல நேரம் பார்த்து.. ஊரைக் கூட்டி வைச்சுக் கட்டலாம்ன்னு நினைச்சிருந்தியா?"

"அ....ப்....டி இல்ல"

"பின்ன என்ன?"

"................"

"நீ ரொம்ப யோசிக்குற! நீ ஏற்கனவே சொன்ன மாதிரி நானே இதை என் கழுத்துலக் கட்டிக்கிறேன்" - என்றபடித் தாலியைப் பிரித்தவளை அவசரமாகத் தடுத்துத் தன் கையில் வாங்கி... அவளை நெருங்கி.. அவள் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டான். இல்லை, போட்டுக் கொண்டிருந்தான் அவன்.

"தாஷிக்காக மட்டும் தான் இதுக்கு ஒத்துக்கிட்டேன்னு பொய் சொல்ல மாட்டேன். எனக்காகவும் தான் ஒத்துக்கிட்டேன்" - முதல் முடிச்சு...

"இதை நீ கட்டுறதால எதுவும் மாறப் போறதில்ல " - இரண்டாவது முடிச்சு.

"5 வருஷத்துக்கு முன்னாடி நீ பேசுனது எதையும் நான் மறக்கல" - மூன்றாவது முடிச்சு.

-அவன் மார்பில் தன் நெற்றி உரசாத தூரம் தள்ளி நின்றிருந்தவள்... பேசிய பேச்சைக் கேட்டுக் கொண்டே சற்று எட்டித் தாலி கட்டி முடித்தவன்.. அவள் முகம் நோக்கினான்.

பாதித் தூக்கத்தில் எழுந்து வந்ததால் சற்று அதிகமாகவே கலைந்திருந்த அவள் தலை முடி ஆங்காங்கு பறந்து கொண்டு அவளுக்கொரு பஃபூன் லுக்-ஐக் கொடுத்திருந்தது. அதைக் கண்டதும் விரியத் தொடங்கியப் புன்னகையை அடக்கி அவன் பார்வையைக் கீழிறக்கினான்.

கொஞ்சம் கோபம், நிறைய பிடிவாதத்துடன் கலவை உணர்ச்சிகளைத் தேக்கி வைத்திருந்த அவளது மை-கலைந்த விழிகள் அவன் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. என் மூஞ்சில இருந்து எதைக் கண்டுபிடிக்க.. இப்டி உத்துப் பார்க்குறா? கமெண்ட் அடித்தது அவன் மனசாட்சி.

அனைத்தையும் தாண்டி.. அவள் அணிந்திருந்த இத்துப் போனப் பழைய நைட்டியின் மீது பாந்தமாய்ப் படிந்திருந்தத் தாலியைக் கண்டவன், மீண்டும் விழியுயர்த்தி அவள் கண்களை நோக்கினான். எதையோ சாதித்து விட்டத் திருப்தியுடன் நிறைந்த பார்வையால் அவளை மூழ்கடிப்பவனின் விழிகள்.. வழக்கம் போல் ஏதோ சேதி கடத்த.. புரியாத பார்வையுடன் நின்றிருந்தாள் அவள்.

மெல்லத் தன் வலது கையை நகர்த்தி அவள் வலது கரத்துடன் இணைத்துக் கொண்டவன், தன் ஐவிரல்களையும் அவள் விரல்களோடுக் கோர்த்து அழுத்தமாய்ப் பற்றினான்.

"என் லைஃப்ல ரெண்டு தடவை தான் நான் உச்சகட்ட சந்தோசத்தை அனுபவிச்சிருக்கேன். ஒன்னு.... என் பொண்ணு முதல் தடவை 'வெட்றி'-ன்னு என் பேரைச் சொல்லிக் கூப்பிட்டப்போ! ரெண்டாவது.. இப்போ.. இந்த நிமிஷம்.. உன்னால....!" - ஆழ்ந்த குரலில் கூறியவனைக் கேட்டு...

மூச்சை உள்ளிழுத்து வேறு புறம் திரும்பியவள், அவன் கைகளிலிருந்துத் தன் கையை விடுவிக்க முயற்சித்தபடி "நீ அவ்ளோ ஃபீல் ஆவற அளவுக்கெல்லாம் இங்க ஒன்னும் பெருசா நடந்துடல!, ஆர்வத்தைக் கொற" என்றாள்.

"இனிமே.. எதையும் நான் குறைச்சிக்கிறதா இல்ல" - அவள் முயற்சியைத் தடுத்து அவள் கையை அழுந்தப் பற்றியபடி அவன்.

நிமிர்ந்து அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு “இந்த சினிமால வர்றா மாதிரி, தாலி கட்டிட்டேன், இனி நீ எனக்குத் தான் சொந்தம்ன்னு டயலாக் பேசிட்டுப் பக்கத்துல வந்து.. கஜ,கஜா,கஜ,கஜான்னு எதுவும் ட்ரை பண்ணிடாத! அன்னிக்கு நீ தண்ணியப் போட்டுட்டு பண்ணுன கலாட்டாவுக்கு நான் குடுத்ததெல்லாம் நியாபகம் இருக்குல்ல?” என்றவளிடம்...

“அன்னிக்கு நான் தண்ணி அடிக்கவே இல்லடி! கதிரு நாதாரி மூக்கு முட்டக் குடிச்சிட்டு என் மேல வாந்தி எடுத்ததால வந்த கப்பு அது” - என்றான் வெற்றி

“நம்புற மாதிரியா டா இருக்கு?”

“ஏய்.. நம்பாட்டிப் போடி”

“எது எப்டியோ நாம இன்னிக்கு இருக்குற மாதிரி தான் என்னிக்கும் இருக்கப் போறோம். இதுல எதுவும் மாற்றம் வந்துச்சுன்னா.. பொட்டி,படுக்கையைத் தூக்கிட்டு நான் பாட்டுக்க வீட்டை விட்டு வெளிய போய்டுவேன். புரிஞ்சதா?”

“ஓஹோ”

“என்ன ஓஹோ?? நாளப் பின்ன எவனாவது சும்மா ரோட்ல போயினு இருக்குற என்னைய ஃபோட்டோ புடிச்சு பலான வெப்-சைட் எதுலயாச்சும் போட்டான்னு வை! அதைப் பார்த்துட்டு வந்து, இப்ப என்னாடி தொழில் பண்ற நீ-ன்னுக் கேட்டு என்னைய குற்றவாளிக் கூண்டுல நீ நிக்க வைச்சுட்டேனா?, எதுக்கும் சேஃபா இருக்கனும்ல? உன்னை ஒரு தடவை நம்பி நான் ஏமாந்ததே வாழ்க்கை முழுசுக்கும் போதும்ன்றப்ப, இன்னொரு தடவையா?, நம்மால முடியாது சாமி” - ஏகத்துக்கும் நக்கல் குரலில் ஆதங்கத்துடன் கூறிக் கொண்டிருந்தவளை அழுத்தமாகப் பார்த்தான் அவன்.

“இந்த 5 வருஷத்துல நான் எவ்ளோ மாறியிருக்கேன்னு உனக்குத் தெரியாதாடி?, அன்னிக்கு இருந்த மாதிரி முட்டாளாவே இப்பவும் இருப்பேனா?, முன்கோபம், நிதானமின்மை-ன்றதெல்லாம் என்னிக்கு என் பொண்ணை கைல தூக்கி வளர்க்க ஆரம்பிச்சேனோ.. அப்பவே விட்டொழிச்சுட்டேன்! ஒவ்வொரு தடவையும் கோபம் வரும் போதெல்லாம்.. நீ ஒரு பெண் குழந்தைக்குத் தகப்பன்! பொறுமையா யோசின்னு எத்தனையோ தடவை எனக்கு நானே சொல்லிருக்கேன் தெரியுமா?, ஏன், இத்தனை வருஷமா என் கூட தான இருக்க?, ஒரு தடவையாவது உன்னைத் தப்பா பார்த்துருக்கேனா? தப்பாப் பேசியிருக்கேனா?”

“சரி நீ மாறிட்ட! அதனால... ம்??, அதனால.. இப்ப என்ன பண்ணனும்ன்ற?” - எரிச்சலுடன் கத்தியவளிடம்..

“ஒன்னும் பண்ண வேணாம். என் கூட.. எனக்குப் பொண்டாட்டியா வாழு. போதும்” - என்று சட்டமாகக் கூறியவனை மூச்சு வாங்கக் கோபத்துடன் நோக்கினாள் ஜமுனா.

“அப்போ.. லவ் பண்றேன்னு சொல்லிட்டு, என் மேல நம்பிக்கை இல்லாம நீ பேசுன வார்த்தைக்கு.. என்னை அசிங்கப்படுத்துனதுக்கு, அவமானப்படுத்துனத்துக்கு, காயப்படுத்துனதுக்கு எந்தத் தண்டனையுமே கிடையாதா?”

“அதான்.. முழுசா 5 வருஷம் அனுபவிச்சிட்டேனே! நீ என் பக்கத்துல இருந்தும் மனசை மறைச்சு... எதையும் வெளிப்படுத்தாம... வாயிருந்தும் ஊமை மாதிரி! இது தண்டனையில்லையா?”

“............” - பதில் பேசாமல் தலை குனிந்தபடி பல்லைக் கடித்துக் கொண்டு நின்றவளிடம்.. “நீ என்ன வேணா பேசிக்கோ” என்றவன்...

நெஞ்சு முழுக்க விறுவிறுவென நிறைந்து வழிந்தக் காதலுடன்.. ஆசையும்,ஆர்வமுமாய் அவளை நோக்கி... சற்று முன்புத் தான் கட்டியத் தாலியைப் பற்றியிழுத்து.. அவளைத் தன்னருகே வரச் செய்து... அவள் கோபமாய் அவனிடம் ஏதோ சொல்ல வருவதைக் கண்டு கொள்ளாமல்.. தன்னோடு சேர்த்து.. இழுத்தணைத்து.. அவள் காதில் அழுந்த இதழ் பதித்து......

“ஐ லவ் யூ.....” என்றான்.

**‘வானம்பாடி பறவைகள் ரெண்டு... ஊர்வலம் எங்கோ போகிறது....**

**காதல்,காதல் எனும் ஒரு கீதம்.. பாடிடும் ஓசை கேட்கிறது........**

**நீ ஒரு காதல் சங்கீதம்..............’**

-இளையராஜா இந்த நிமிடம் அவர்களருகே இல்லாது போனால் தான் நாம் ஆச்சரியம் கொள்ள வேண்டும்!

# அத்தியாயம் - 7

**வி**லகியிருந்த ஜன்னல் திரை வழியாகக் கரம் நீட்டித் தன் கண்ணிமைகளை மெல்ல வருடிய சூரியக் கதிர் வீச்சை சுருக்கிய நெற்றியுடன் உணர்ந்தபடி லேசாக அசைந்தாள் தாட்சாயிணி. கையை நீட்டி சோம்பல் முறிக்கிறேன் என்கிற பெயரில் அருகே படுத்திருந்த ஜமுனாவின் கன்னத்தில் ஒரு இடியை இறக்கி விட்டு.. கொட்டாவியுடன் அவள் கண் விழிக்கையில்.... "குட்மார்னிங் பப்பிஇஇஇஇ" என்றபடிக் கையில் காஃபியும், முகத்தில் சிரிப்புமாய் அவள் முன்பு நின்றிருந்தான் வெற்றி.

அவன் புன்னகையை நொடியில் தனதாக்கிக் கொண்டவள் உதட்டை நெளித்துச் சிரித்துக் கொண்டேத் திரும்பிக் குப்புறப் படுத்துக் கொள்ள... தாஷி இடித்தும் கூட அசையாமல் கண் மூடிக் கிடந்த ஜமுனாவை நோக்கினான் வெற்றி. அவன் கட்டிய தாலியைப் பத்திரமாக மார்புக் கூட்டுக்குள் பதுக்கிக் கொண்டு அழகாய் சயனித்திருந்தவளை சிரிப்பும்,காதலுமாய் பார்த்து வைத்தான்.

**"பொன் மானே... என் யோகம் தான்!**

**பெண் தானோ! சந்தேகம் தான்...!! என் தேவி.....**

**நான் தேடும் செவ்வந்திப் பூவிது................"** - சரியாக என்ட்ரி கொடுத்தார் ராஜா! ராஜா சார் வாழ்க! என்று முணுமுணுத்து விட்டு... கைகளிரெண்டையும் மேலே நீட்டியபடி குப்புறக் கிடந்த நிலையில் மீண்டும் தூக்கத்தைத் தொடரவிருந்த தாஷியை நோக்கி.. "இந்தப் பப்பியை எப்டி எழுப்பனும்ன்னு எனக்குத் தெரியும் டா" எனக் கூறி "ஹேஏஏஏஏஏஏஏஏஏ" எனக் கத்தியபடியே குழந்தையின் மீது தடாலடியாகப் பாய்ந்தான்.

"ஆஆஆஆஆ" - எனக் கத்திய தாஷியை விடாது கிச்சு,கிச்சு மூட்டி.. முகம் முழுக்க முத்தமிட்டு.. தன் மீசைக் குத்தியதில் கத்தியவளை மீண்டும் கிச்சு,கிச்சு மூட்டி கிளுக்கிச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான் வெற்றி. வரிசைப்பற்களும், குழி விழும் கன்னமுமாக வயிறு வலிக்கச் சிரிப்பவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு.

இருவரும் கத்தியதில் அடித்துப் பிடித்து எழுந்த ஜமுனா.. படுக்கையில்.. தனக்கு வெகு அருகே தாஷியைக் கொஞ்சியபடித் தன்னை இடித்துக் கொண்டுப் படுத்திருந்தவனைக் கண்டுத் திடுக்கிட்டு பதறி விலகினாள்.

இது தினம் காலை நடப்பது தான்! வெற்றி ஒரு முரட்டு ஆசாமி என்பதை அவள் அறிவாள்! ஆனால்.. பரதேசி, குழந்தையைக் கொஞ்சும் போது கூட முரட்டுத்தனமாய் தான் நடந்து கொள்வான் என்பதை இப்போது தான் தெரிந்து கொண்டாள்! தாஷி கத்திக் கூப்பாடு போட்டு... பாதி நேரம்.. கண்ணீர் விட்டு அழும் வரை முத்தமிட்டு வம்பு செய்வான்.

ஆனால்.. இதற்கு முன்பு எப்போதும் அவளருகே படுத்திருக்கும் ஜமுனாவை.. ஒன்று, அடித்து எழுப்பி படுக்கையிலிருந்து விலக்கி விட்டுப் பின் குழந்தையின் அருகே படுத்துக் கொண்டு வம்பு செய்வான், அல்லது.. ஜமுனா பிடிவாதமாகக் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தால்.. பாரபட்சம் பாராமல் உருட்டிக் கீழே தள்ளி விட்டுப் பின் பிள்ளையைக் கொஞ்சுவான். இன்று இரண்டுமின்றி வெகு உரிமையாக அவளருகே... அவளை உரசியபடிப் படுத்துக் கொண்டிருந்தவனை.. எழுந்து நின்றுக் கோபமும்,எரிச்சலுமாய் நோக்கினாள்.

அதற்குள் குழந்தையைத் தன் நெஞ்சின் மீது கிடத்தியிருந்தவன்.. தன் கழுத்தைக் கட்டிக் கொண்டுப் படுத்திருந்தவளின் தலையைக் கோதியபடி.. தன்னை முறைத்துக் கொண்டு நின்ற ஜமுனாவை மெல்லிய சிரிப்புடன் நோக்கிப் பின்... உதட்டைக் குவித்து ஒரு முத்தத்தைக் கொடுத்து விட்டு லேசாகக் கண்ணடித்தான்.

பல்லைக் கடித்துக் கொண்டு அவனை முறைத்தவள் எரிச்சலுடன் “ச்ச” என்று விட்டு விடுவிடுவென அறையை விட்டு வெளியேறினாள்.

“பாப்பா எழுந்திருங்க, எழுந்திருங்க” என்றபடி அவளைத் தூக்கிக் கொண்டுத் தானும் எழுந்தவன் கட்டிலை விட்டு இறங்கி அவளைத் தரையில் நிற்க வைத்துத் தலை முடியை சரி செய்தபடி “இன்னிக்கு நம்ம 3 பேருக்கும் லீவ் தான?, போய் உங்கம்மாக் கிட்ட கோவிலுக்குப் போகலாமான்னு கேளு” என்றான்.

கண்கள் பளிச்சிட “வெளிய போறோமா?” என்று மகிழ்ச்சியுற்ற தாஷியும் ஓடிச் சென்று “ஜம்மு, இன்னிக்குக் கோவிலுக்குப் போலாமா?” என்று வினவ.. அவளை திருப்தியுடன் நோக்கினான் வெற்றி.

ஒரு முறை கூட ஜமுனாவை ‘அம்மா’ என்று தாஷியிடம் குறிப்பிட்டதில்லை அவன். ஆனால் அக்கம்,பக்கத்தாரிலிருந்துத் தொடங்கி அவள் படிக்கும் பள்ளி வரை அனைவரும் ஜமுனாவை ‘அம்மா’ என்றே தாஷியிடம் குறிப்பிடப் பழகியிருந்ததால்.. அவன் கூறியதும் இயல்பாகவே ஓடியது குழந்தை. இனி அவளாகவே தங்கள் இருவரையும் ‘அம்மா,அப்பா’ என்றழைத்தாலும் சரி!, தொடர்ந்து பெயர் சொல்லியே

அழைத்தாலும் சரி! இவர்களிருவர் தான் தனது அம்மா,அப்பா என்பது அவள் மனதில் பதிந்ததே போதுமானது.

**தூ**க்கியக் கட்டியக் கொண்டையுடன் சமையலறை வாசலில் நின்று இன்றைய மெனு என்கிற தலைப்பில் சிலேட்டில் எழுதியிருந்தவற்றைக் கண்டு..

“ப்ரேக் ஃபாஸ்ட் ரவா கிச்சடியா?, கிச்சடியெல்லாம் எவன் திங்குறது?” - புலம்பியபடி உள்ளே நுழைந்தாள் ஜமுனா.

பொறுமையாகப் பூண்டு உரித்தபடி நின்று கொண்டிருந்தான் வெற்றி.

“ஏன் டா நீயெல்லாம் பெரிய செஃப்-ஆ இருந்து என்ன பிரயோஜனம்?, ஒரு பூண்டு உரிக்கத் தெரியல உனக்கு?” - திடீரென நக்கலுடன் அவள் குரல் அருகில் ஒலிக்கவும்.. முழுச் சிரிப்புடன் அவளை நோக்கியவன்..

“குட்மார்னிங்டி பொண்டாட்டி” என்றான்.

“பல்லைத் தட்டிடுவேன் டா!” - என்று கத்தி விட்டு “மூஞ்சியைப் பாரு, நல்லா இளிச்சவாயாட்டம் எந்நேரமும் ஈஈஈஈஈ-ன்னு! பொறுக்கி!, நேத்து நைட் பீச்சாங் கையால உன் மூக்குலயே ஒன்னு வுட்டேனே! நீயெல்லாம் இன்னுமா திருந்தல?”

“உன் கிட்ட அடி வாங்குறது எனக்குப் புதுசா டார்லிங்?”

“அட மானங்கெட்டப் பரதேசி”

“புருஷனை ஆசையாக் கூப்பிடாட்டியும் பரவாயில்ல, கொஞ்சமாவது மரியாதையோட கூப்பிடு டி”

“உனக்கு இது போதும்”

“ப்ச், இன்னாடி பேஜார் பண்றதுக்குன்னே கிச்சனுக்கு வந்திருக்கிறியா?”

“இல்ல, நீ பூண்டு உரிக்கிற அழகைப் பார்த்து சொக்கி நிக்கலாம்ன்னு வந்தேன்..”

“ஏய்ய்ய் இன்னாடி?”

“உன்னைச் சொல்லிப் பிரயோஜனமில்ல! உனக்குத் தான் படிப்பறிவு,பட்டறிவுன்னு ஒன்னுமே கிடையாதே”

“உன் வாயை உடைச்சாத் தான் டி நீயெல்லாம் திருந்துவ” - குழம்பு குண்டாவுடன் அவள் மண்டையைப் பிளக்க அவன் எத்தனிக்கையில் அவனைத் தடுத்தவள்..

அவனிடமிருந்தப் பூண்டை வாங்கி.. ஒரு டப்பாவில் கொட்டிப் பின் அந்த டப்பாவை மூடி போட்டு அவன் கையில் திணித்தாள்.

“4.5 தடவை இதைக் குலுக்குனேனா... தோலெல்லாம் தானா உரிஞ்சுடப் போகுது.. இதுக்குப் போய் நேரம் செலவழிச்சுக்கினு வேர்த்து,வழிய நிப்பியா?”

“அடேங்கப்பா! நிஜமாவா டி?”

“பின்ன?, ட்ரை பண்ணிப் பாரு”

E=mc2 எனக் கண்டுபிடித்த ஐன்ஸ்டீன் கூட இத்தனைக் கர்வமாய் இருந்திருக்க மாட்டார். ஒரு மொக்கை மேட்டரை சொல்லி விட்டு கையைக் கட்டிக் கொண்டு மிதப்பாய் போஸ் கொடுத்த ஜமுனாவை ஒரு பார்வை பார்த்து விட்டு அவள் கூறியதைச் செய்தான்.

டப்பாவை இரு கையாலும் பற்றிக் கொண்டு... டப்பாவோடு சேர்ந்துத் தானும் குதித்தபடி ப்ரேக் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தவனைக் கண்டுத் தலையில் அடித்தாள் ஜமுனா. பாடி இத்தாம் பெருசா இருந்தாலும்... இண்டு,இடுக்கு முதற்கொண்டு டாப் டு பாட்டம் சிறுபிள்ளைத்தனம்-ன்றதுத் தாண்டவமாடுது! மூதேவி!

அவன் இரு கைகளையும் நீட்டி ‘வேவ்’ மூவ்மெண்ட் போடத் துவங்குகையில் “ஹேஏஏஏ டான்ஸ் டான்ஸ்” என்றபடி தாஷியும் சேர்ந்து கொள்ள.. ஒரு வழியாக இருவரும் ஆடி முடித்து.. டப்பாவைத் திறந்து பார்க்கையில் ஒரு பூண்டு கூடத் தோல் உரிந்திருக்கவில்லை.

“இன்னாடி இது! பெரிய பருப்பாட்டம் பேசுன?”

முறைத்தவனைக் கண்டு கொள்ளாமல் மீண்டும் டப்பாவை மூடியவள்.. “நீ குடுத்த மூவ்மெண்ட்ஸ் அப்டி” என்று விட்டு.. இப்போது டப்பாவைக் குலுக்கியபடித் தானும் ஆடத் தொடங்கினாள்.

இப்போது தாஷி, ஜமுனாவோடு சேர்ந்து கொள்ள.. “இதெல்லாம் டான்ஸ்-ஆ?, காலுக்கடில கங்கு கிடக்குற மாதிரி இப்டி,இப்டின்னு குதிச்சினு இருக்குறா” என்று நொடித்துக் கொண்டான் வெற்றி.

“ஸ்டாப், ஸ்டாப்! லெட்ஸ் ஓபன் த பாக்ஸ்” என்று தாஷி நிறுத்தியதும் நின்றவள் ‘இப்போ பார்’ என்று விட்டு டப்பாவைத் திறக்க.. ‘எரும மாட்டின் மீது மழை பெய்தது’ போல அதே கன்டிஷனுடன் பல்லிளித்தது பூண்டு.

உதட்டை வளைத்துக் கொண்டு “இன்னாடி சயிண்டிஸ்டு! பெரிய எல்லாம் தெரிஞ்ச ****** மாதிரி டயலாக் அடிச்ச?, காய்ஞ்சு போன பூண்டை சின்னப்புள்ள கூடச் சேர்ந்து டான்ஸ் ஆடின்னு உரிக்கப் பார்க்குறியே! கொஞ்சமாவது அறிவு இருக்கா?” - திட்டத் தொடங்கியவனிடம் இடை புகுந்து..

“காஞ்சு போன பூண்டுன்னு முன்னாடியே சொல்லித் தொலைய வேண்டியது தான விளக்கெண்ண?” - என்றவளைக் கண்டுப் பல்லைக் கடித்தவன்..

“நானும் அப்பால இருந்து பார்த்துனே இருக்குறேன் ****** மரியாதையே இல்லாம பேசுற நீ” - என்று அவள் கையைப் பற்றி முறுக்கத் துவங்க.. மேலும் இங்கே நின்றால்.. இருவரில் யாராவது ஒருவரிடமிருந்துக் குட்டு கிடைக்கும் என்று பயந்த தாஷி ஓடியே விட்டாள்.

“கைய வுட்றா... வுட்றா.... டேய்ய்ய்! உனக்கு ஹெல்ப் பண்ணத் தான வந்தேன்?” - துள்ளிக் குதித்துக் கொண்டுக் கண்களை இறுக மூடியபடிக் கெஞ்சியவளைக் கண்டவனின் பார்வை... அவளைப் பார்க்கப் பார்க்க மாறிப் போனது.

சட்டென அவளைத் தன் புறம் திருப்பி... அவள் கழுத்தில் முகத்தை அழுந்தப் புதைத்து... நீளமான மூச்சொன்றை உள்ளிழுத்தான் அவன்.

அவன் தன் கைகளை இறுகப் பிடித்ததில் சிவந்த நாடி, அவன் செய்கையின் குறுகுறுப்பில் சிவந்த கழுத்து... இவையிரண்டையும் தவிர உடலின் அத்தனை பாகங்களிலும் ரத்த ஓட்டம் தடைபட்டுப் போனது போல் முழுதாய் வெளுத்துப் போய் நின்றாள் ஜமுனா.

கன்றிச் சிவந்த முகம் கண்ணுக்கு முன்னே தெரிந்தவற்றை மங்கச் செய்ய.. சட்டென அவனிடமிருந்து விலகி அடுக்களை செல்ஃபில் தலையை இடித்துக் கொண்டு நின்றாள்.

அவள் விலகியதும் சுயநினைவு பெற்றவனுக்கும், பார்வை மங்கலாகியிருக்க வேண்டும். அடுப்பைப் பற்ற வைக்க வேண்டி ஸ்டவ்வை ஆன் செய்தவன், கண் முன்னேயிருந்த லைட்டரை வெகு நேரமாய்.. நடுங்கிய கரங்களுடன் தேடிக் கொண்டிருந்தான்..

தன்னாலேயே படபடத்து வியர்த்து வழியத் துவங்க.. அடித்துக் கொள்ளும் நெஞ்சுடன் அவனைக் கலக்கமாய் நோக்கினாள் அவள்.

ஒரு வழியாக அடுப்பைப் பற்ற வைத்துப் பாத்திரத்தை அதன் மீது வைத்தவன், அவள் புறம் திரும்பிய போது.. வெகுவாகத் தன்னை சமன் செய்திருந்தான்.

“இன்னாடி ரியாக்ஷன் இது?, ரொம்பத் தான் நடுங்குற?, இதுக்கு முன்னாடி எவனையும் கட்டிப் பிடிச்சதில்லையா?”

மூக்கு விடைக்க அவனை முறைத்துப் பார்த்தவள்.. “ஆனா.. நீ இதுலல்லாம் பெரிய கில்லாடி போல! ரொம்ப இயல்பாத் தொட்ற?” என்றாள் நடுங்கும் குரலை அடக்க முயன்றபடி.

“கில்லாடியா இருந்தா.. நான் ஏன் இத்தினி வருஷமா நீ பக்கத்துல இருந்தும்.. பிரம்மச்சாரியா வாழ்க்கைய கழிச்சினு இருக்குறேன்” - எனக் கூறியபடியே மீண்டும் அவளை நெருங்கியிருந்தான் அவன்.

“இ....இன்னாத்துக்கு டா ப..பக்கத்துல வர்ற கம்னாட்டி?, மூ..மூஞ்சில இன்னாடா அது லுக்கு?, வெள்ளைக்கார பக்தைங்கக் கிட்ட ஜொள்ளு வுட்ற சாமியாராட்டம்? ஏ...ஏ..ஏய்ய்ய் கை,கையை வுட்றா” - பதறிக் கொண்டுத் தன் கையை உறுவிக் கொள்ள முயற்சித்தவளின் மீது.. பார்வை எடுக்காமல்.. அவள் உள்ளங்கையைத் தன் கன்னத்தில் அழுத்தி... அதில் அழுந்தத் தன் இதழ்களைப் பதித்தவன்.. மீண்டும் குனிந்து.. அவள் கழுத்தில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

**‘பறிக்கச் சொல்லித் தூண்டுதே... பவளமல்லித் தோட்டம்....**

**நெருங்க விடவில்லையே.... நெஞ்சுக்குள்ளக் கூச்சம்.....’**

-இந்த நேரத்தில் கூட இடைபுகுந்த ராஜா சார்-ஐக் கண்டுப் புன்னகை பூத்து “சூடேத்துறீங்களே ராஜா சார்” என்று அவன் முணுமுணுக்கையில் அவன் தோளைப் பற்றித் தள்ளி.. விலகி ஓடியிருந்தாள் அவள்.

**மு**ன்னே தாஷியையும்,பின்னே ஜமுனாவையும் சுமந்த படி, வெற்றியின் கைகளில் சீரான வேகத்தில்.. கோவிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது அந்த பல்சர்.

கம்பியைப் பற்றியபடி உர்ரென்ற முகத்துடன் அமர்ந்திருந்தவளை ரியர் வியூ மிர்ரரில் நோக்கியவன் நமுட்டுச் சிரிப்புடன்.. கண்ணாடியைச் சரி செய்ய.. அவன் தன்னைக் கண்டு தான் சிரிக்கிறான் என்பதைக் கண்டு கொண்ட ஜமுனா.. பல்லைக் கடித்தபடி முறைத்தாள்.

சாலையில் ஒரு பார்வையும், மிர்ரரில் ஒரு பார்வையுமாய் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தவன், அவள் முகத்தைக் கண்டு லேசாய்க் கண்ணடிக்க.. தெருவென்றும் பாராமல்.. அவன் தலைமுடியைக் கொத்தாகப் பற்றி ஆட்டு,ஆட்டென்று ஆட்டத் துவங்கினாள் "கசுமாலம், என்னாண்டயே உன் லீலையைக் காட்டுறியா?" என்றபடி.

அவன் தலையோடு சேர்ந்து வண்டியும் ஆட "ஆஆஆஆ" என தாஷியும் "ஏ....ஏ....ஏஏஏஏ" என வெற்றியும் கத்தத் துவங்க.. தன் ஆட்டத்தை நிறுத்தியவள்.. "சும்மா.. பெரிய காதல் மன்னனனாட்டம் சில்றத்தனமா வேலை பார்க்குறதை இத்தோட வுட்ரு. நான் காண்டானேன்னு வை, ஃப்யூச்சர்ல நீ எவளையும் நினைச்சுப் பார்க்க முடியாத அளவுக்கு பெருத்த சம்பவமாப் பண்ணி வைச்சுருவேன்! உஷாரா இருந்துக்க" என்று அடிக்குரலில் சீற...

"ஏய்ய்ய், சரி தான் போடி" என்றவனும் அதன் பின்பு முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டான்.

"இப்போ என்னாத்துக்குக் கோவிலுக்குப் போறோம்?" - ஜமுனா

"காரணமாத் தான்"

"என்ன காரணம்?"

"ஏன் டி உன் கழுத்துல தாலி கட்டி மூனு முடிச்சுப் போட்டிருக்கேன்! இனி என் வாழ்க்கை எந்த லட்சணத்துலப் போகப் போகுதோ! என் உசுருக்குக் கேரண்டி வேணும்னு கேட்டு இந்த மனுஷன் கிட்ட சண்டை போட வந்திருக்கேன்" - என்று கூறியபடியே அந்த சிவன் கோவிலின் முன்பு வண்டியை நிறுத்தினான் அவன்.

கோவிலில் சாமி தரிசனத்தை முடித்து விட்டு மூவரும் வீட்டுக்கு வந்ததும், உள்ளே சென்றவளை நிறுத்தியவன் "நீ இந்தப் பிரசாதத்தை எடுத்துனு போய் அந்த வடுகநாதன் சம்சாரத்துக்கிட்ட குடுத்துட்டு வா!" என்றான்.

"எதுக்கு டா?"

"ஏய்ய் சொல்றதைச் செய் டி" - அவன் கோபமாய் அதட்டியதும் முணுமுணுத்தபடியே நகரப் பார்த்தவளை மீண்டும் தடுத்தவன்.. அவள் கையிலிருந்தக் குங்குமத்தை எடுத்து அவளது வகிட்டில் இட்டு.. "இப்போ போ" என்றான்.

பொன் மஞ்சள் கயிறும், நெற்றி நிறையக் குங்குமமாக தன் வீட்டுக்குள் நுழைந்தவளை திரு.வடுகநாதனின் சம்சாரம் பூங்குழலி வாய் நிறையப் பல்லாக

வரவேற்க, அவர் பார்வை சென்ற இடத்தைக் கண்ட போது ஜமுனாவிற்குப் புரிந்து போனது அவன் ஏன் தன்னை இங்கே அனுப்பி வைத்தான் என்பது!

அவர்களிருவரைப் பற்றி அக்கம்,பக்கத்தார் அரசல்,புரசலாகப் பேசும் புறணிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணிய அவன் முயற்சியை மெச்சியபடி… ‘இந்த வாரம் வெள்ளிக் கிழமை சுமங்கலிப் பூஜை இருக்கு. ஈவ்னிங் மறக்காம வந்துடு” என்ற பூங்குழலியிடம் ஈ-யென இளித்து வைத்து வீடு வந்து சேர்ந்தாள். இந்த லௌட் ஸ்பீக்கர் அவள் கழுத்தில் தொங்கும் தாலியைப் பற்றி இனித் தெரு முழுக்க செய்தி பரப்பி விடும்!

**அ**ன்றிரவு தாஷியை உறங்க வைத்து விட்டு அவளும் கண்ணயரும் நேரம்… “பாப்பா.. தூங்கிட்டாளா?” என்று கேட்டபடி அறைக்குள் நுழைந்தான் வெற்றி.

இருட்டுக்குள் தெரிந்த அவனது வரி வடிவத்தைக் கண்டு அவள் என்ன,ஏதேன்று எழும் முன்னரே.. அவள் தோளைத் தன் இரண்டு கைகளாலும் பிடித்து அவளைத் தடுத்தவன்… கட்டில் மீதேறி அவளுக்கும்,தாஷிக்கும் இடையே வாகாகப் படுத்துக் கொண்டான்.

அவன் செய்கையில் திடுக்கிட்டு எழுந்தமர்ந்தவளிடம் “இனி நானும் உங்களோட தான் தூங்குவேன்” எனக் கூறி விட்டுத் திரும்பித் தன் மகள் மீது ஒரு கையை போட்டுக் கொண்டான்.

“இன்னாடா நினைச்சுட்டிருக்க நீ? ரொம்ப ஓவர்-ஆ பண்ணிட்டிருக்க?” - அடக்கப்பட்டக் கோபத்துடன் அடிக்குரலில் சீறினாள் அவள்.

“எதுவுமே பண்ணல, அதுக்குள்ள ஓவர்-ன்ற?”

“இங்க பாரு, இந்த டபுள்-மீனிங்ல பேசுற வேலையெல்லாம் என்னாண்ட வைச்சுக்காத சொல்ட்டேன்”

“சரி, சிங்கிள் மீனிங்லயே பேசுறேன்! சாத்தினு படுடி! குழந்தையப் பக்கத்துல வைச்சுக்கினு உன்னை ஒன்னும் பண்ணிட மாட்டேன்”

-அசால்ட்டாய் அவன் கூறியதும் கோபமுற்றவள் கட்டிலிலிருந்து எழப் பார்க்க.. சுலபமாய் ஒரு கையில் அவள் தோளைப் பற்றி அவளைப் படுக்கையில் சாய்த்தவன்…

“இதுக்கு மேல நான் எதுவும் பண்றதும்,பண்ணாம இருக்கிறதும் உன் கைல தான் இருக்குது. ரொம்ப ஆசைப்பட்டேனா, இன்னொரு தடவை எந்திரிச்சுப் பாரு” - என மிரட்டியதும்.. பல்லைக் கடித்துக் கொண்டு அசையாமல் படுத்தவளைக் கண்டுச் சிரித்து... குழந்தையின் புறம் திரும்பிப் படுத்துக் கொண்டான் அவன்.

மறுநாள் காலை அவள் கண் விழிக்கையில் நல்ல வேளையாக.. அவன் அருகே இல்லை. எரிச்சலும், கோபமுமாய் அவள் வெளியே வருகையில்... “குட்மார்னிங் பப்பி” என்றபடித் தாஷியைத் தூக்கி அவள் கன்னத்தில் முத்தமிட்டவன்... தன்னைக் கடந்து செல்லவிருந்த ஜமுனாவை நிறுத்தி அவள் கன்னத்திலும் தன் இதழைப் பதித்து “குட்மார்னிங் டி” என்றான்.

“ஹிஹிஹி” - இரண்டு கைகளையும் தன் வாயில் வைத்துக் கொண்டு கேலியாய்ச் சிரித்த தாஷியிடம் “இவளுக்கு முத்தம் குடுக்குறேன்னு நீ பொறாமைப் படாத பாப்பா.. எனக்கு நீ தான் ஃபர்ஸ்ட். அப்பறம் தான் அவ. சரியா?” என்று பேசியபடியே அவன் அடுக்களைக்குள் நுழைந்து விட.. இறுகிய முகத்துடன் எங்கோ வெறித்தபடி விறைத்துப் போய் நின்றாள் ஜமுனா.

**அ**ன்று மாலை பணியில் ஈடுபட்டிருந்த வெற்றிக்குத் தாஷியைப் பள்ளியிலிருந்து அழைத்து வரும்படிக் கேட்டு ஜமுனாவிடமிருந்து ஒரு குறுஞ்செய்தி வந்தது.

‘ஓகே’ என பதிலளித்தவன் ‘நீ எப்போ வருவ?’ எனக் கேட்டக் கேள்விக்கு அவள் பதில் அனுப்பவேயில்லை.

தாஷியை வீட்டில் விட்டு உடை மாற்றி, உண்ணக் கொடுத்து, ‘அம்மா கொஞ்ச நேரத்தில் வந்துடுவா’ எனக் கூறி விட்டு மறுபடி அவன் ஹோட்டலுக்குத் திரும்பி விட்டான்.

ஆனால் எட்டரை மணிக்குப் பக்கத்து வீட்டுப் புனிதாவின் செல்ஃபோனிலிருந்து அவனை அழைத்தத் தாஷி ஜம்மு இன்னும் வரவில்லையென அழுகைக் குரலில் கூற... பதறியடித்துக் கொண்டு வீட்டிற்கு ஓடி வந்தான்.

விடாது செல்ஃபோனில் அவளை அழைத்துப் பார்த்தும், முழு ரிங்-ம் சென்று கட்-ஆனதே ஒழிய, அவனது அழைப்பு ஏற்கப்படவில்லை.

அழுதே கரைந்தத் தாஷியை சமாதானப்படுத்தி உண்ண வைத்து.. அவளுக்குப் பிடித்த கார்ட்டூனைப் போட்டு விட்டுப் புனிதாவை துணைக்கு வைத்து விட்டு.. அவள் பள்ளியை நோக்கி விரைந்தான்.

நிமிடத்துக்கொரு முறை அவன் அழைத்துப் பார்த்தும் ஒரு முறை கூட அவள் அவனது அழைப்பை ஏற்கவில்லை.

அனைவரும் சென்று விட்டதாகக் கூறிய பள்ளி வாட்ச் மேனிடம் தகராறு செய்து.. பள்ளியின் உள்ளே சென்று.. அவள் பாடம் எடுக்கும் வகுப்பறை,லேப் எனத் தேடிக் களைத்தவன் மீண்டும்,மீண்டும் அவளது செல்ஃபோனிற்கு அழைப்பு விடுத்துக் கொண்டேயிருந்தான்.

நேரம் ஒன்பதரையைக் கடந்திருக்க.. அவள் பள்ளியிருக்கும் தெரு முழுதையும்.. திருவிழாவில் தொலைந்து போனக் குழந்தையைப் போல் திக்கற்று அங்குமிங்கும் தேடித் திரிந்து... சோர்கையில்... அவனது செல்ஃபோன் அழைப்பை ஏற்றாள் ஜமுனா.

அதுவரை 'திடுக்.திடுக்' எனப் பயத்தில் ஸ்வரம் தப்பித் துடித்துக் கொண்டிருந்த இதயம்.. ஒரு நொடி நின்று.. மீண்டும் அசுர வேகத்தில் தாளமிடத் தொடங்க.. நாயாய் அங்குமிங்கும் சுற்றித் திரிந்ததில் தொண்டை வரண்டு போய் இருமல் வந்தது அவனுக்கு.

லொக்,லொக் என்ற இருமல்களுக்கிடையில்.. வெளியே எகிறிக் குதித்து விடும் போல் துடித்துக் கொண்டிருந்த நெஞ்சை இறுகப் பற்றிக் கொண்டு மூச்சு வாங்க.. "ஜ...ஜமுனா....." என்றான்.

"............."

"எ...எ..எங்கடி இருக்க?, உனக்கு ஒன்னுமாகலயே?, நல்லா தான இருக்க?, ஹ...ஹலோ.. ஹலோ..... நா..நான் பேசுறது கேட்குதா?"

-பதட்டம் நிறைந்த குரலில் முழுப் பயத்துடன் கூறியவனைக் கேட்டு அவள் மீண்டும் அமைதியைக் கையிலெடுக்க.. ஃபோனைக் காதிலிருந்து எடுத்து டவர் இருக்கிறதா, சௌண்ட் சரியாக இருக்கிறதா என நிமிடத்தில் செக் செய்தவன்.. மீண்டும்...

"ஹ..ஹலோ..." என்றான்.

"ப்ச், எத்தினி தடவ ஹலோ,ஹலோன்னு கூவிட்டிருப்ப?, எனக்கு என்ன ஆகப் போகுது! நான் நல்லாத் தான் இருக்கேன்"

நக்கல் குரலில் அவள் கூறியதும்... தன் வண்டியை இறுகப் பற்றியபடி மண்டியிட்டு அமர்ந்தவன்.. கிஸ்ஸ்ஸ்,கிஸ்ஸ்ஸ் என வெளி வந்து கொண்டிருக்கும் மூச்சுடன்..

“எங்கடி போன?, ஏன் இவ்ளோ நேரம்?, உன் ஸ்கூல் முழுக்க உன்னைத் தேடிப் பார்த்துப் பைத்தியக்காரன் மாதிரி நடுத்தெருவுல நின்னுட்டிருக்கேன் நான்! பாப்பா வேற உன்னைத் தேடி அழுவுறா”

“பாப்பா அழறாளா?, அவளை வூட்ல வுட்டுட்டு நீ இங்க இன்னாடா பண்ணிட்டிருக்க?”

-எரிச்சலுடன் அவள் கேட்டக் கேள்வியில் தன்மானம் சுண்டியெழ.. படக்கென எழுந்து நின்றவன்..

“****! என்னைப் பார்த்தா கேன ***** -ஆட்டம் தெரியுதாடி உனக்கு?, நீ எங்க இருக்க-ன்னு தெரியாம, உனக்கு ஃபோன் பண்ணிப் பார்த்தும் பிரயோஜனம் இல்லாம.... தெரு நாய் மாதிரி ரோட்,ரோட்-ஆ நான் பைத்தியம் புடிச்சுப் போய் சுத்தினு இருப்பேனாம்.. இவ நோவாம ஃபோன் எடுத்துப் பாப்பாவை அழ வுட்டுட்டு நீ என்ன பண்றன்னு கேப்பாளாம்! அவ்ளோ அக்கறை இருக்குறவ எங்க போற-ன்னு புள்ளக்கிட்ட சொல்லிட்டுப் போயிருக்கனும் டி! ********! எங்கடி இருக்க? அதைச் சொல்லித் தொல முதல்ல” - என்று முழுக்குரலுடன் கத்தினான்.

“..................”

“பதில் பேசித் தொலடி ராங்கி! ஆஸ்பத்திரி,அது,இதுன்னு எங்கயாச்சும் இருக்கியா?. அடிகிடி பட்ருச்சா?, சொல்லித் தொலையேன் டி!”

“..................”

“எனக்கு... எனக்கு ரொம்பப் பயமா இருக்கு ஜமுனா.. ப்ளீஸ்...”

“நான் இப்போ வீட்டுக்கு வரனும்ன்னு நீ ஆசைப்பட்றியா வெற்றி?”

“ம்ம்ம்???”

“நான் இப்போ சொல்லப் போற விசயத்துக்கு நீ ஒத்துக்கிட்டேன்னா.. நான் வீட்டுக்கு வர்றேன். இல்லேன்னா.. இப்டியே எங்கயாவது தொலைஞ்சிட்றேன். நான் செத்துட்டதா என் புள்ளக்கிட்ட சொல்லிட்டு நீ மொத்தமா என்னைத் தலை முழுகிடு..”

“ஏன் டி இப்டிப் பேசுற?”

“பதில் சொல்லு வெற்றி”

“நீ என்ன சொன்னாலும் ஒத்துக்கிறேன். வீட்டுக்கு வா ப்ளீஸ்”

“பேச்சு மாற மாட்டியே”

“மாட்டேன். நான் என்ன பண்ணனும் சொல்லு...”

“.................”

“ஜமுனா.......................”

“நம்ம வீட்டு டிரெஸ்சிங் டேபிள்-ல நீ கட்டுனத் தாலியைக் கழட்டி வைச்சிருக்கேன். நீ அதை எடுத்துட்டுப் போய்.. எங்க வாங்குனியோ, அங்கயே திருப்பிக் கொடுத்துடு”

“.......................” - இத்தனை நேரமாய் மனதுக்குள் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்த பய உணர்வு உண்டாக்கிய உள்ளக் கிளர்ச்சியேக் கொஞ்சமும் அடங்கியிராதிருக்க.. அவள் அடுத்தடுத்து இறக்கியப் பேரிடியோ, அவன் கண்ணில் சரசரவெனக் கண்ணீரை உற்பத்தி செய்தது.

அது கன்னத்தில் இறங்கி விடாதிருக்க முயன்றபடி உதட்டைக் கடித்து மூச்சை உள்ளிழுத்து... ஃபோனைக் காதில் வைத்தபடிப் பரிதவிப்புடன்.. வண்டியில் சாய்ந்தவன்..

ஏக்கம்,வருத்தம்,ஏமாற்றம் அத்தனையையும் தன் குரலில் தேக்கி “ஏன் டி?” என்றான்.

“என்ன ஏன்?, எல்லாஆஆஆமே உன் இஷ்டப்படி தான் நடக்கனுமா?, எனக்குன்னு விருப்பு,வெறுப்பு எதுவும் இருக்கக் கூடாதா?”

“நீ சம்மதிச்சதால தான நான் தாலி கட்டுனேன்?”

“தாலி கட்டுறதுக்கு என் சம்மதத்தை எதிர்பார்த்த மாதிரி, மத்த விசயத்துக்கும் ஏன் எதிர்பார்க்க மாட்டேங்குற?”

“அப்டி என்ன பண்ணிட்டேன் உன்னை? உன் சம்மதமில்லாம?”

“நீ என்னைத் தொட்றது எனக்குப் புடிக்கல வெற்றி” - பட்டெனக் கூறினாள் அவள்.

அதீத கோபத்தில் பல்லைக் கடித்தவனின் அனுமதியில்லாமலேக் கண்ணீர் அவனது கன்னத்தில் இறங்கியது.

“அப்பவும்,இப்பவும்.. நீ ஒருத்தி மட்டும் தான் டி ஏன் தான் நான் இந்த உலகத்துல உயிர் வாழ்றேனோன்னு ஃபீல் பண்ண வைக்கிற”

“............” - அமைதியாய் இருந்தாள் அவள்.

வேகத்துடன் மூச்சை உள்ளிழுத்தவன் "உன்னைத் தொடாம என்னால இருக்க முடியாதுடி. என்னன்ற இப்போ?" - கோபமாய்க் கூறினான்.

"அப்போ நான் அந்த வீட்டுக்கு வர மாட்டேன்"

"ஜமுனா........." - இயலாமையுடன் ஒலித்தது அவன் குரல்.

"இப்போ கூட ஏன் புடிக்கலன்னு உன் வாய்ல இருந்து ஒரு கேள்வி வருதா?, இல்ல, கேக்கனும்னாவது உனக்குத் தோணுதா?, உனக்கு எப்பவும் உன்னைப் பத்தி மட்டும் தான் டா நினைப்பு! நீ வேணும்ன்னு நினைக்கிறப்ப, எந்த மறுப்புமில்லாம எல்லாம் கிடைச்சிடனும். நீ வேணாம்ன்னு ஒதுக்கி வைச்சா.. அதுக்கும் மறுப்பு சொல்லாம நான் ஒதுங்கிக்கனும். அப்படித் தான?"

"........................"

"இந்த 5 வருஷத்துல ஒரு தடவையாவது அந்தத் தாலிய என் முன்னாடி நீட்டிக் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்ருக்கியா?, குழந்தைக்காக இது உன் கழுத்துல இருக்கனும்ன்னு சட்டமாப் பேசிட்டு, இப்போ எதுக்கு டா இப்டியெல்லாம் நடந்துக்கிற?"

".............."

"5 வருசத்துக்கு முன்னாடி, நான் உன்னை மிஸ் பண்றேன்னு சொன்னப்போ... என் வாய்ல இருந்து ஏன் அந்த வார்த்தை வந்தது, உன் மேல எனக்கு இருக்கிற ஃபீலிங்க்ஸ்க்கு பேர் என்னன்னு நான் ஆராய்ச்சி பண்ணிப் பார்க்குறதுக்குள்ள.. அடுத்தடுத்து எல்லாக் கஷ்டமும் என் தலைல வந்து இறங்குச்சு.. அந்த சமயம்... அந்த சமயமும்.. நான் உன்னைத் தான் தேடுனேன்! நீ கூட இருந்தா.. தைரியமா இருக்கும்ன்னு லூசுத்தனமா ஒரு நினைப்பு இருந்துச்சு... அது ஏன்னு கூட அப்போ எனக்குத் தெரியல"

"............."

"ஆனா.. நீ.. உன் விருப்பத்தை சொல்லிட்டு, உன் இஷ்டத்துக்கு நடந்துக்கிட்டு, என்னைப் பத்தி எதுவும் தெரிஞ்சுக்காம.. என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு கண்டுக்காம.. உன்னைப் பத்தி மட்டுமே யோசிச்சு.. தேவையில்லாத விசயங்களுக்காக.. முட்டாள்த்தனமா என்னைக் காயப்படுத்துன. என் மேல அடிப்படை நம்பிக்கைக் கூட இல்லாதவன் மேல, ஒரு முரடன் மேல, முன் கோபி

மேல, யோசிக்கிற அறிவே இல்லாதவன் மேல.. என்ன ஃபீலிங்க்ஸ் வேண்டிக் கிடக்குன்னு என்னை நானே திட்டிக்கிட்டேன்."

"..................."

"நீ அப்போ மட்டும் தான் யோசிக்காம நடந்துக்கிட்டன்னு நினைச்சேன், ஆனா.. இப்பவும் அப்டித் தான் இருக்க"

".............."

"கோபப்பட்றதைக் குறைச்சுக்கிட்டுப் பொறுப்பும்,பொறுமையுமா முழுசா மாறிட்ட! ஆனா.. என் விசயத்துல மட்டும் எதுவும் மாறல"

".................."

"ஐ லவ் யூ - ன்னு அன்னிக்கு நைட் ஒரு வார்த்தை சொன்னியே! திரும்ப.. நான் உன்னைக் காதலிக்கிறேனா இல்லையான்னு கேட்டியா?"

"................"

"எனக்குத் தெரியல. நான் உன்னைக் காதலிக்கிறேனா.. இல்லையான்னே எனக்குத் தெரியல. எனக்கு உன் மேல இருக்கிற உணர்வுகள் என்ன மாதிரியானதுன்னு யோசிக்க.. எனக்கு நீ சான்ஸே குடுக்கல! ஒவ்வொரு தடவையும் நான் யோசிக்கத் தொடங்குறதுக்கு முன்னாடியே... நீ அன்பு,காதல்,கோபம்ன்னு அத்தனையையும் படபடன்னு காட்டிட்டுப் போயிட்ற"

"...................."

"என் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுக்காம நீ உன் இஷ்டத்துக்குத் தான் இருப்ப-ன்னா.. என்னால உன் கூட ஒரே வீட்ல வாழ முடியாது டா.

- அவள் அடுத்தடுத்துக் கூறிய அனைத்தும் மூளையைச் சென்றடைந்தாலும், அவள் முதலில் கூறிய 'தாலியைக் கழட்டி வைத்து விட்டேன்' என்கிற வார்த்தை மட்டுமே மனதைக் குடைந்து கொண்டிருந்தது வெற்றிக்கு.

"நிஜமாவே தாலியைக் கழட்டிட்டியா டி?"

"................"

"என்னைக் கொஞ்சம் கூட உனக்குப் பிடிக்காதா?"

“எனக்குத் தெரியல வெற்றி, அதான் சொன்னேனே, என் விருப்பம் என்னன்னு யோசிக்க நீ சான்ஸே கொடுக்கலன்னு”

“சான்ஸ் கொடுக்கிறதுன்னா?, எப்படி?, நான் உன் கண்ல படாம ஒதுங்கியிருக்கனுமா?”

“..............”

“சரி, நீ வீட்டுக்குப் போ. நான் இனி அங்க வர மாட்டேன்” - என்றபடி ஃபோனை கட் செய்தவன்.. புனிதாவிற்கு அழைத்தான்.

தாஷி என்ன செய்கிறாள் என விசாரித்து விட்டு ஜமுனா இன்னும் சற்று நேரத்தில் அங்கே வந்து விடுவாளென்று கூறி.. அவள் வந்ததும் தனக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்புமாறும் கூறி விட்டு.. நின்றிருந்த இடத்திலேயே.. தலையைப் பிடித்துக் கொண்டு வண்டியில் சாய்ந்தமர்ந்தான்.

**அ**வன் இணைப்பைத் துண்டித்ததும் தன் கைப்பேசியையே வெறித்த ஜமுனாவிற்கு.. அவனிடம் கெத்து குறையாமல் பேசியிருந்தாலும், கோபமும்,அழுகையும் கரை புரண்டோடியது.

அதன் பின் சற்றும் தாமதிக்காமல் வீடு வந்து சேர்ந்தவள், அதுவரை தாஷிக்குத் துணையிருந்தப் புனிதாவிற்கு நன்றி கூறி விட்டு.. தன்னைக் கண்டதும் கட்டிக் கொண்டு அழுது தீர்த்தத் தாஷியை சமாதானப்படுத்தித் தூங்க வைத்தாள்.

அவன் வீடு திரும்பவில்லை. எப்படி வருவான்! அவள் அத்தனைப் பேச்சு பேசி வைத்த பிறகு! ஏனென்றே புரியாமல் அழுகை வந்தது! அவனிடம் என்ன எதிர்பார்த்து ஏமாந்து போகிறோம் என்றே தெரியவில்லை! தேவையில்லை என ஒதுக்கி விட்டு அவன் இல்லாமல் வாழ முடியுமென்றும் தோன்றவில்லை. அன்னையை எண்ணி அழுதாள். பின் தன்னைக் கண்டதும் கட்டிக் கொண்டத் தாஷியை நினைத்து அழுதாள். என்னென்னவோ சிந்தனையுடன் சோகமே உருவாக அவள் அந்த இரவைக் கடந்து கொண்டிருந்த சமயம்.. நள்ளிரவில் படபடவெனக் கதவு தட்டப் படும் ஓசை கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

மழை அடித்துப் பெய்து கொண்டிருந்தது. மின்சாரம் துண்டிக்கப் பட்டிருந்ததால் வீடு முழுக்க இருள் சூழ்ந்திருந்தது. செல்ஃபோன் டார்ச்-ஐ ஒளிர விட்டு.. அவள் கதவைத் திறந்த போது.. வாசலில் கொட்டும் மழையில் தொப்பலாக நனைந்த படி.. சிவந்த விழிகளுடன் நின்றிருந்தான் வெற்றி.

“வெற்றி..........................” - அவனைக் கண்ட ஆச்சரியம், அதைத் தொடர்ந்த மகிழ்ச்சி! ஹப்பாடா வந்து விட்டான் என்ற நிம்மதி! இத்தனை நேரமாய்க் காக்க வைத்து விட்டானே என்றக் கோபம் எனத் தன் மனதின் உணர்ச்சிகள் அத்தனையையும் குரலில் தேக்கி அழைத்தவளை இயலாமையுடன் நோக்கினான் அவன்.

தலையைக் கோதியபடி ஒரு நொடி மறுபுறம் நோக்கியவன் பின் மீண்டும் அவள் முகத்தில் பார்வையைப் பதித்து “இ..இதுக்குப் பேரு என்னடி?, ம்?? இப்போ உன் முகத்துல வர்ற உணர்ச்சிக்கு என்ன பேரு?”

“..............”

“பிடித்தம் தான?, காதல் தான?”

“...............”

“நான் அப்படித் தான் டி நினைச்சேன். 5 வருஷமா உன் கூட வாழ்றேன். உன் கண்ணுல தெரியுற உணர்ச்சியைப் படிக்கத் தெரியாதா எனக்கு? அந்த அளவுக்கு முட்டாளாவா இருப்பேன்?, உனக்கு என்னைப் புடிக்கும்ன்னு தெரிஞ்சு தான் தைரியமா உன் கிட்ட தாலியை நீட்டுனேன்”

“................”

“என் மேல இருக்கிற ஃபீலிங்க்ஸ்க்கு என்ன பேருன்னு தெரியலன்னு மனசாட்சி இல்லாம சொல்ற?”

“...............”

அவள் அமைதியைப் பொருட்படுத்தாமல்.. அவனை வெகுநேரமாய்த் துடிக்க வைத்துக் கூறு போட்டுக் கொண்டிருக்கும் விசயத்தை நேராகவே கேட்டான் அவன்.

“தாலி எங்கடி?”

“..........”

“நி....நிஜமாவே கழட்டிட்டியா?”

“...........” - பதிலற்று நின்றவளின் கழுத்தைப் பார்க்கக் கூடப் பயமாக இருந்தது. ஒரு வேளை.. நிஜமாகவே கழட்டியிருந்தாலாயின்.. அதைத் தாங்குமளவிற்கு சக்தியோ.. ஏற்குமளவிற்கு முதிர்ச்சியோத் தனக்கு இல்லையென்றே நினைத்தான் அவன்.

“வாழ்க்கைல எனக்கு எதுவுமே கிடைச்சதில்லடி. நல்ல அம்மா,நல்ல அப்பா, நல்ல படிப்பு, சந்தோசம்,சிரிப்பு எதுவும்...! பெத்துப் போட்டதுமே போய்ச் சேர்ந்துட்டா என்னைப் பெத்தவ! அதுக்கு நான் எப்படி காரணமாக முடியும்? ஆனாலும்.. என் மேல தான் பழி சொன்னாங்க! எங்கப்பன் பண்ணிட்டிருந்தத் தொழில் நான் பொறந்ததால தான் தொங்கிடுச்சுன்னாங்க! ராசியில்லாதவன்னு ஒதுக்கி வைச்சாங்க! ஏன்.. எங்கப்பனே அப்டித் தான் நினைச்சான்! ஒரு நாள் கூட.. மகனேன்னு அந்தாளு தூக்கிக் கொஞ்சுனதில்ல! ஏன், என் பக்கத்துல நின்னு முகம் பார்த்துப் பேசினது கூட கிடையாது! தொழிலே கதின்னு தான் கிடப்பான்! அப்பத்தான்னு ஒரு கெழவி என்னைய சொந்த மகன் மாதிரி வளர்த்துச்சு! அதுவும் பாதிலயே போய்ச் சேர்ந்துடுச்சு.. அதுக்கப்புறம் வாழ்க்கைல எனக்குப் பிடிப்புன்றதே கிடையாது”

“...................”

“எங்கப்பன் மேல இருக்கிறக் கோபத்தை எப்டிக் காட்ட-ன்னு தெரியல! ஸ்கூலுக்குப் போகாம அவாய்ட் பண்ணேன், அவன் காசுல சோறு திங்காம நானே வேலைக்குப் போனேன்.. நிறைய நாள்.. தெருவுல யார் வீட்லயாச்சும் சோறு போடுவாங்க.. வாங்கி சாப்பிட்ருக்கேன்! பிச்சை எடுத்துத் திங்குற மாதிரி தான் இருந்துச்சு, ஆனாலும்.. எங்கப்பன் காசு மட்டும் வேணாம்ன்னு ரோஷமா இருந்தேன்.. ரொம்பக் கேவலமானது டி என்னோட வாழ்க்கை”

“..................”

“என்னை ஒதுக்கி வைச்ச எல்லார்க்கிட்டயும் வாண்டட்-ஆ போய் போய்ப் பேசுவேன்.. கேலி செய்றாங்களேன்னு ஒதுங்கி நின்னா.. என்னைச் சுத்தி யாருமில்லாம.. பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருந்தது! அந்தத் தனிமைக்கு இது எவ்வளவோ பெட்டர்ன்னு தோணுச்சு! அதான் யார் எவ்ளோ கேலி பேசுனாலும்.. பெருசா கண்டுக்கிட்டதில்ல! உண்மையான சந்தோஷம்ன்னு ஒன்னு.. உன்னைப் பார்த்தப்புறம்.. உன் கூடப் பழகனப்புறம் தான் கிடைச்சது.. எனக்கு நீ வேணும்ன்னு மனசு நினைச்சது”

“...........”

“உனக்குத் தெரியாது.. அம்மா இல்லாம வளர்ந்ததாலோ என்னவோ.. பார்க்குற,பழகுற பொன்னுங்க எல்லார்க்கிட்டயும் தாய்மை உணர்வை மட்டுமே மனசு எதிர்பார்க்கும்! உன்னைக் கட்டிப்பிடிக்கனும்ன்னு ஆசைப்பட்டதுக்கு முன்னாடி, உன் மடில படுத்துக்கனும்ன்னு தான் உன்னை பார்க்கும் போதெல்லாம் நினைப்பேன்! இந்த 5

வருஷமும் நீ தாஷியை அணைச்சிட்டுப் படுக்கும் போது கூட.. அதே ஃபீலிங் தான்! அந்த நினைப்புல தான்.. நேத்து உன் பக்கத்துல வந்துப் படுத்தேன்......"

"................"

"பாப்பா... பாப்பா வந்தப்புறம் என் லைஃப் எவ்ளோ அழகானதா மாறிடுச்சுத் தெரியுமா?, அம்மாவோட அன்பு கிடைக்காட்டி என்ன, எல்லாத்துக்கும் சேர்த்து தான் என் மகளோட அன்பு கிடைக்குதேன்னு எத்தனை நாள் பெருமை பட்டிருக்கேன்னு தெரியுமா?, நாம அவளை வளர்க்கிறோம்ன்னு சொல்ற ஸ்டேட்மெண்ட் எல்லாம் ரொம்பத் தப்பு! அவ தான் நம்மள வளர்க்குறா! நாம தான் அவளோட சேர்ந்து வளர்றோம்! ஒவ்வொரு நாளும் எத்தனை விசயங்களைக் கத்துக் கொடுக்கிறா! எவ்ளோ சந்தோசத்தைக் கொடுக்கிறா... என் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுத்ததே நீங்க ரெண்டு பேர் தான்னு நான் நினைக்காத நாளே இல்ல..."

"............."

"5 வருசத்துல எவ்ளவோ கஷ்டத்தை அனுபவிச்சிருக்கோம்! ஆனா.. அது எதுவும் எனக்குக் கஷ்டமாவே தெரியல. ஏன்னா.. நீங்க ரெண்டு பேரும் என் கூட இருந்தீங்க. இதுக்கு முன்னாடி நான் கடந்து வந்த வாழ்க்கைய அர்த்தமில்லாததா மாத்துனீங்க!"

"..................."

"எல்லாமே மாறிடுச்சு! என் லைஃப்ல இனி சந்தோஷம் மட்டும் தான்னு நான் கர்வப்பட்ட சமயமாப் பார்த்து.. இது எல்லாத்துல இருந்தும் என்னை விலகிப் போன்னு சொன்னா.. எப்டி டி?, என்னைச் செத்து போகச் சொல்றதுக்குச் சமமாகாதா அது?"

".................."

"நான் தொட்டா புடிக்கலன்னு மனசாட்சி இல்லாம சொல்ற?, இந்த 5 வருசத்துல அப்டி எத்தனை தடவைடி நான் உன்னைத் தொட ட்ரை பண்ணேன்?, இவ்ளோ வெறுப்பு என் மேல வளர்ற அளவுக்கு?"

"................"

"நான் தப்பு பண்ணியிருக்கேன். உன்னைத் தப்பா பேசியிருக்கேன். எல்லாம்... எல்லாம்.. 5 வருசத்துக்கு முன்னாடி தான். இப்போ.. நான் அப்டி இல்ல."

"...................."

“என்னைப் பார்க்குறப்ப உன் கண்ணுல தெரியுற உணர்வுகளே உன் காதலை சொல்லிடுச்சு டி! நீ சும்மா.. உன் பிடிவாதத்தையும்,கோபத்தையும் விடாம புடிச்சுத் தொங்கிட்டு.. என்னைக் காயப்படுத்தனும்ன்னு நினைச்சேனா.. பண்ணிக்கோ! எத்தனையோ பேர் கஷ்டத்தைக் கொடுத்தப்பவேப் பொறுத்துக்கிட்டேன்! நீயும் உன் பங்குக்குக் கொடுத்துட்டுப் போ... அனுபவிச்சுக்கிறேன்”

“..............”

“ஆனா.. என்னால உன்னை விட்டோ, தாஷியை விட்டோ போக முடியாது. இனி வர மாட்டேன்னு ரோஷமா உன் கிட்ட ஃபோன்ல சொல்லிட்டேன். ஆனா.. என்ன பண்றதுன்னு சத்தியமா தெரியல.. உங்களுக்காகத் தான் என்னைச் சுத்தியிருந்த எல்லாரையும் விட்டு விலகி வந்தேன்.. இப்போ உங்களையும் விட்டுப் போகனும்ன்னா எங்க போறதுன்னு எனக்குத் தெரியல..........”

-விடாது மழையில் நனைந்தபடிக் கடகடவென வாய்க்கு வந்ததைக் கொட்டித் தீர்த்தவனைக் கண்டு... அவள் மனதிலிருக்கும் அத்தனை காதல் உணர்வுகளும் ‘இத இத இதத் தான் எதிர்பார்த்தேன்’ எனக் கூறியபடி அடித்து,பிடித்துக் கொண்டு முன்னே வர... கையைக் கட்டிக் கொண்டு நிலப்படியில் சாய்ந்து நின்றவள்..

“இப்டியே வசனம் பேசிக்கிட்டே எவ்ளோ நேரம் மழைல நனையுறதா உத்தேசம் உனக்கு?” என்றாள்.

சட்டென நிமிர்ந்து அவள் முகம் பார்த்தான் வெற்றி. அந்த இருளில்.. டார்ச் வெளிச்சத்தில் பளபளத்த அவள் விழிகளையும், இதழோரம் அடக்கப்பட்டப் புன்னகையையும் கண்டவனுக்கு... அவ்வளவு நேரமுமிருந்த பாரம் குறைந்து... மனம் லேசானது. வம்பிழுக்கிறா! ராட்சசி!

“நீ தான வீட்டுக்குள்ள வரக்கூடாதுன்னு சொன்ன?”

“வராதன்னு சொன்னா அப்டியே போய்டுவியா?, 5 வருஷத்துக்கு முன்னாடிக் கூடத் தான் போன்னு விரட்டுனேன்! போனியா?, இல்லேல்ல?”

“..............”

“உள்ள வா டா” - அதட்டியவளிடம்...

“ம்ஹ்ம்.. எனக்கு இன்னொரு பதிலும் தெரியனும்” - என்றான்.

“என்ன?”

“உன்னைத் தொடக்கூடாதுன்னு ஏன் சொன்ன?”

“..................”

“சொல்லுடி”

“............”

“நிஜமாவே பிடிக்கலையா?”

“ப்ச்”

“ப்ச்-ன்னா?, என்னடி அர்த்தம்?”

“இப்போ நீ உள்ள வருவியா மாட்டியா டா?”

“நீ என்னைக் கட்டிப்புடிச்சாத் தான் நான் உள்ள வருவேன்” - பிடிவாதமாகக் கூறியபடி அவள் முன்னே வந்து நின்றான் அவன்.

“முடியாதுன்னு சொன்னா?”

“இப்டியே வெளிய போய்டுவேன்”

“சரி போடா” - கொஞ்சமும் அசராமல் பதில் கூறியவளை முறைத்து விட்டு, விறுவிறுவென வெளியே நடந்தவனை... “டேய்.... டேய்.. டேய்....” என்று கத்தியபடியே அவனைத் தொடர்ந்து மழையில் ஓடி வந்தாள் ஜமுனா.

மூச்சு வாங்க... அவன் கையைப் பற்றி நிறுத்தியவள்.. பற்றியக் கையை விடாமல்..

“நடுராத்திரி.. ரோட்ல நின்னுக்கிட்டு ஏன் டா உயிரை வாங்குற?”

“யாரு நான்?. நான் உன் உயிரை வாங்குறேனா?, என்னிக்கோ பண்ணின தப்பையெல்லாம் இன்னும் மனசுல வைச்சுக்கிட்டு மோசமாப் பழி வாங்கி என் உயிரை எடுத்துட்டிருக்கிறது நீ தான் டி”

“சரி, நான் தான்! என் மேல தான் தப்பு! இனி அப்டிப் பேச மாட்டேன். ஓகே?, வா உள்ள..”

“மாட்டேன். நீ என்னைக் கட்டிப்புடிச்சாத் தான் உள்ள வருவேன்”

“டேய்ய்ய்ய்”

“நீ சரிப்பட்டு வர மாட்டடி! அப்பவும்,இப்பவும் என்னைய உன் பின்னாடி அலைய விட்டுப் பார்க்குறது தான் உன் ஆசை”

“ரொம்பப் பேசாத டா”

“கையை விட்றி, நான் போறேன்”

“ஷ்ஷ்ஷ்... ரொம்பக் குளிருது டா வெற்றி, ப்ளீஸ்... வா உள்ள போலாம்”

“அப்டின்னா என்னைக் கட்டிப்புடிச்சுக்கோ”

பல்லைக் கடித்துக் கொண்டு நின்றவளைக் கண்டு.. உதட்டைப் பிதுக்கி விட்டு முன்னே செல்லப் பார்த்தவனை அவசரமாகத் தடுத்து.. அவனை இறுகக் கட்டிக் கொண்டு..

அவன் மார்பில் தன் முகத்தை அழுந்தப் புதைத்து.. “ப்ளீஸ் டா.. வெற்றி... வா... உள்ள...” என்றவளைச் சிரிப்பும்,கோபமுமாய் நோக்கியவன்... உள்ளம் நிறைந்தத் திருப்தியுடன் அவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டான்.

“இப்போவாவது போலாமா?” - தலை நிமிர்த்திக் கேட்டவளின் நெற்றியில் இதழ் பதித்தான்.

“இங்க பாரு, இதான் சாக்குன்னு நீ உடனே ஆரம்பிக்காத” - பொறிந்து தள்ளியவளைக் கண்டு கொள்ளாமல் இப்போது முகம் முழுக்க முத்தமிட்டான்.

“நீயெல்லாம் திருந்தவே மாட்ட டா” - கோபமாய்க் கத்தியவளிடம்...

“ப்ச், இப்ப என்ன?, நான் உனக்கு முத்தம் கொடுக்கப் போறேன். உனக்கு விருப்பமா, இல்லையா சொல்லுன்னு நான் கேட்கனுமா? போடிங்க....”

“டேய்ய்ய்... நாதாரி.....” - பல்லைக் கடித்தவளைப் பொருட்படுத்தாமல்.... அவள் முகத்தை இரு கைகளால் ஏந்தி.... அவள் விழிகளை ஆசையுடன் பார்வையால் வருடி.. அவள் இதழ் நோக்கிக் குனிந்தவனைத் தள்ளி விட்டு வீட்டுக்குள் ஓடியே விட்டாள் அவள்.

**‘பொன் வானம்... பன்னீர் தூவுது இந்நேரம்...**

**அட எண்ணம் மீறுது.. வண்ணம் மாறுது.. கண்ணோரம்........’**

# அத்தியாயம் - 8

“டேய் வெற்றி...”

காலை நேர பரபரப்பில் பிஸியாக வேலை செய்து கொண்டிருந்தவனை செல்ஃபோனில் அழைத்திருந்தாள் ஜமுனா.

“சொல்லு டி”

“உன்னால எனக்கு எவ்ளோ கஷ்டம் தெரியுமா டா?”

“அப்டியா?, என்ன-ல்லாம் கஷ்டம்ன்னு நைட் பத்து மணிக்கு மேல சொல்லு. பொறுமையாக் கேட்குறேன். இப்போ எனக்கு வேலை இருக்கு. ஃபோனை வை”

“ப்ச், டேய்.. ஒழுங்காக் கிளம்பி தாஷி ஸ்கூலுக்கு வந்து சேரு. உன் பொண்ணு ஏதோ பெரிய சம்பவமாப் பண்ணி வைச்சிருக்கா போல. ஸ்கூல்-லயிருந்து எனக்கு ஃபோன் வந்தது”

“ஏன் என்ன பண்ணுனா?, அவளுக்கு ஒன்னுமில்லையே!”

“அவளுக்கென்ன? நல்லாத் தான் இருக்கா!, இவளால தான் ஒரு பையன் நெத்தி வீங்கிப் போய்.. வுடாமக் கண்ணீரை சிந்தினு இருக்குறானாம்”

“ச்ச அவ்ளோ தானா?, பூலான் தேவி மாதிரி என் பொண்ணை வளர்த்துட்டிருக்கேன் பார்த்தியா! என்னை நினைச்சா எனக்கேப் பெருமையா இருக்கு டி”

“நான் கெட்ட வார்த்தை பேசுறதுக்கு முன்னாடி, மரியாதையா நீயே கிளம்பிரு”

“ப்ச், பொதுவா பேரண்ட்ஸ் மீட்டிங் எல்லாம் நீ தான அட்டெண்ட் பண்ணுவ?, தம்மதூண்டு மேட்டர்க்கு எதுக்குடி என்னையக் கூப்பிட்ற?”

“டேய்.. அடி வாங்குனப் பையனோட பேரண்ட்ஸூம் வந்திருக்காங்களாம். தப்புப் பண்ணது நம்ம பொண்ணு. எனக்கு சங்கடமா இருக்குடா. நீயும் இருந்தா.. ஏதாவது பேசி சமாளிக்கலாம். ப்ளீஸ்.. வா டா”

-கெஞ்சிக் கேட்டுக் கொண்டவளை மதித்து அவனும் தாஷியின் பள்ளிக்குக் கிளம்பினான்.

பிரச்சனை இது தான். தனது ஸ்நாக்ஸ் பாக்ஸிலிருந்த பாதாம் பருப்பைத் தெரியாமல் எடுத்துத் தின்றதற்காக.. ஒரு சிறுவனின் கையை முறித்துத் தாஷி

பாப்பா கீழே தள்ளியதில்.. அந்தப் பையன் சுவரில் மோதிக் கொண்டு நெற்றியை வீங்க வைத்திருந்தான்.

“வெட்டி நீ ஜம்முக் கைய முறுக்குற மாதிரி நானும் சும்மா இவன் கைய மட்டும் தான் முறுக்குனேன், அவனா தான் போய் சுவத்துல முட்டிக்கிட்டான்” - என்று தாஷி தன் தரப்பு வாதத்தை முன் வைத்த போது இருவருக்கும் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வதென்றேப் புரியவில்லை.

வெற்றியை ஒரு காட்டுமிராண்டிக் கணவனைப் போல் சித்தரித்து, ஜமுனாவை அவனிடம் தினம்,தினம் அடி வாங்கிச் சாகும் பாவப்பட்டப் பெண்ணினமாக அந்த அறையிலிருந்தோர் எண்ணிக் கொள்ள.. “டேய்.. இன்னாங்கடா, இன்னாத்துக்கு டா என்னைய முறைச்சுப் பார்க்குறீங்க?” என்று முணுமுணுத்த வெற்றி... சங்கடமான முகத்துடன்..

“அ....அ..அது சும்மா விளையாட்டுக்குப் பண்றது மேடம்” என்றான்.

“நீங்க விளையாட்டுக்குப் பண்றீங்களோ, சீரியஸ்-ஆ பண்றீங்களோ! குழந்தைங்க நாம பண்றதைத் தான் சார் ஃபாலோ பண்ணுவாங்க! அவங்க முன்னாடி எப்பவும் கேர்ஃபுல்-ஆ இருங்க” - என்ற அர்ச்சனையோடு இவர்களை ஒதுக்கிய பிரின்சிபால் தாஷியை அந்தச் சிறுவனிடம் மன்னிப்புக் கேட்குமாறுக் கூற... அவள் நிமிர்ந்து வெற்றியின் முகம் பார்த்தாள்.

‘அய்யோ இப்போ சாரி கேக்காட்டிச் சும்மா வுட மாட்டானுங்களே’ என்று எண்ணிக் கொண்ட வெற்றி அந்தச் சிறுவனை நோக்கி..

“அவளோட ஸ்நாக்ஸை நீ திருடி சாப்பிட்டது தப்பு தான?” - என்று வினவினான்.

“தப்பு பண்ணது உங்க பொண்ணு! என் பையனை ஏன் சார் மிரட்டுறீங்க?” - பையனின் அம்மா இடையில் கத்துவதைக் கண்டு கொள்ளாமல்..

“நீ சொல்லு தம்பி” என்றவன் தொடர்ந்து “நீ திருடி சாப்பிட்டதால தான தாஷி கோபப்பட்டா?, அவளுக்குத் தெரியாம எடுத்து சாப்பிட்டதுக்குப் பதிலா, நீ அவக்கிட்ட நேராவே கேட்டுருந்தா.. அவளே கொடுத்திருப்பா” - என்றவனின் காதில்..

“இவன் க்ளாஸ்ல இருக்கிற எல்லாரோட ஸ்நாக்ஸையும் எடுத்துத் தின்பான் வெட்டி, அதனால நான் இவன் கேட்டாலும் குடுக்க மாட்டேன்” என்று தாஷி முணுமுணுக்க.. கைப்பிடித்து அவளை அடக்கியவன்..

“நீ தெரியாம எடுத்து சாப்பிட்டதால தான் இந்தப் பிரச்சனையே வந்தது. அதனால நீ தாஷிக் கிட்ட ஃபர்ஸ்ட் சாரி கேளு. அப்புறம், தாஷி உன்னை அடிச்சதுக்கு சாரி கேட்பா” என்றான்.

திருதிருவென விழித்தபடி அவன் தன் தாயைப் பார்க்க அவளோ உறுத்து விழித்து நோ என்றாள். அவளைத் தொடர்ந்து அவன் அவனது தந்தையை நோக்க.. அவரோ ‘சாரி கேளு’ என்றார்.

பரவாயில்லை! அம்மா சரியில்லன்னாலும் அப்பன் நல்லவன் தான் போல!

“சாரி தாஷி” - அவன் கூறியதும் தாஷியும் “சாரி அஸ்வத்” என்றாள்.

ஒருவழியாகப் பஞ்சாயத்தை முடித்துக் கொண்டு அனைவரும் வெளி வருகையில் அந்தச் சிறுவனின் கையில் வெற்றி ஒரு சாக்லேட்டைக் கொடுக்க.. அவன் அன்னையோ “அஸ்வத், கிவ் இட் பேக்” என்று சிடுசிடுத்தாள். அதற்குள் அவன் தந்தை இடைபுகுந்து “வாங்கிக்கோ டா” என்றவன் “சாரி மிஸ்டர்.வெற்றி!, அவ கொஞ்சம் கோபத்துல இருக்கா” என்றான்.

“டெய்லி காலைல பத்து நிமிஷம் தியானம் பண்ண சொல்லுங்க சார்! கோபம் குறைய வாய்ப்பிருக்கு” - என்ற வெற்றியை அந்தப் பெண் முறைத்துப் பார்க்க.. நமுட்டுச் சிரிப்புடன் ஜமுனாவையும்,தாஷியையும் இழுத்துக் கொண்டு நகர்ந்து விட்டான்.

“பெண்கள் சில்லறைகள்-ன்றது எவ்ளோ சரியான வாக்கியம்” - வெற்றி

“ஆமா! ஆண்கள் மட்டும் ரூபா நோட்டு”

“ஏய்... ஆண்கள் அன்பின் அரக்கர்கள் டி”

“வாயை மூடு! உன்னால என் மானம் போனது தான் மிச்சம்! குழந்தை முன்னாடிக் கெட்ட வார்த்தை பேசாத, அடிச்சு விளையாடாதன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்!”

“சரி வுட்றி வுட்றி!, இனி மாத்திக்கிறேன்”

“..........” - பதில் சொல்லாமல் முறைத்துக் கொண்டு நடந்தவளைக் கண்டுச் சிரித்துத் தாஷியைத் தூக்கிக் கொண்டவன்..

“என் புள்ள என்ன அதுவா போய்-ஆ வம்பு பண்ணுச்சு!, இப்டித் தான் மீ இருக்கனும்! தப்புப் பண்ணா.. மண்டையைப் பொளக்கனும்! சரியா?” - என்றான்.

“டேய்ய் நாயே.. புள்ளையக் கெடுக்குறதே நீ தான் டா! மொதல்ல அவளை இறக்கி விடு கீழ! சின்னப்புள்ள மாதிரி இன்னும் தூக்கி வைச்சுக்கிட்டு!”

“எனக்கு அவ எப்பவும் சின்னப்புள்ள தான் டி!” என்றவன் தொடர்ந்து தாஷியிடம் “நான் அவளைத் தூக்காம உன்னை மட்டும் தூக்குறேன்ல, அதான் அவளுக்குப் பொறாமை” என்றான்.

“ஏய்.. குழந்தைக்கிட்ட என்னடா பேசுற?” - என அதற்கும் குதித்தவளிடம் “இனிமே நாம தாஷி முன்னாடி கொஞ்சிப் பேசிக்கலாம். அப்போ தான் அவ பப்ளிக்ல நம்ம மானத்தை வாங்காம இருப்பா” என்று விட்டு “நான் உன்னை இனி டார்லிங்ன்னு கூப்பிடுவேன், நீ என்னை மாமா-ன்னு கூப்பிடனும். சரியா?” என்றான்.

“எங்க ஒரு தடவை கூப்பிடு பார்ப்போம், டார்லிங்ங்ங்ங்” - வெற்றி

“மாமாஆஆஆஆ” - கன்னத்தை ஒரு புறமாகத் தூக்கிக் கொண்டு புருவத்தை உயர்த்தி அவள் அழைத்த விதம் படு கண்றாவியாக இருக்க..

“அப்டியே அம்மா,தாயே-ன்னு கூடச் சேர்த்துக்க! நீ ஒவ்வொரு தடவை கூப்பிடும் போதும் பாக்கெட்ல இருந்துப் பத்து ரூபா எடுத்துப் போட்றேன்”

“ஏய்ய் என்ன நக்கலா?”

“பின்ன என்னடி?, எப்பப் பாரு.. மூஞ்சிய உர்ருன்னு வைச்சுக்கினு முசுடு மாதிரி சுத்தினு இருக்குற! ஆசையா என்னைப் பார்க்குறது, வெட்கத்தோட சிரிக்குறது.. இந்த மாதிரி.. சராசரி பொண்ணுங்களுக்கு வர்ற எக்ஸ்ப்ரஷன் ஏதாவது உனக்கு வருதா டி?, ச்சை! என்ன மூஞ்சியோ!”

“ஏய்ய், இப்டித் தான் நான்! அதுக்கு இப்போ இன்னா பண்ணனும்ன்ற?”

“நீ ஒன்னும் பண்ண வேணாம் டி! நான் தான் அடுத்த 4 நாளைக்கு டெய்லி நைட் பாதாம் பால் குடிக்கலாம்ன்னு இருக்கேன்”

“ஏன்?”

“ஏன்னா... சனிக்கிழமை நைட் முக்கியமான மேட்டர்க்கு ப்ளான் பண்ணியிருக்கேன்.. அதான்..”

-அலட்டிக் கொள்ளாமல் போகிற போக்கில் அசால்ட்டாகக் கூறியவனைக் கண்டுப் பல்லை கடித்தாலும்.. சட்டென மறுபுறம் திரும்பிக் கொண்டவளுக்கு.. அநியாயத்திற்குச் சிரிப்பு வந்து தொலைத்தது.

அன்றிரவு சண்டை போட்டு சமாதானமாகியதிலிருந்து இப்படித் தான் உளறிக் கொண்டிருக்கிறான். பேசிப் பேசி வம்புக்கு இழுத்தாலும்.. பெரிதாக அவளிடம் உரிமை எடுத்துக் கொள்ளவில்லை. விருப்பு,வெறுப்பு என்று அவள் அதிகமாய்ப் பேசி வைத்ததில் உண்டானத் தயக்கமோ என்னவோ! ஆனாலும்.. நம்ப முடியாது! அவளது பேச்சிற்கு மதிப்புக் கொடுத்து இவன் அவ்வளவு சீக்கிரம் அடங்கிவிடும் ஆள் கிடையாது.

**அ**ன்று ஜமுனாவிற்கு மட்டும் விடுமுறையென்பதால் தாஷியையும்,வெற்றியையும் அனுப்பி விட்டு.. வீட்டைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தாள்.

சமைப்பதிலும்,உண்பதிலும் மட்டும் தான் அவன் கில்லாடி! சமையலறையைத் தவிர வீட்டின் எந்த பாகத்தையும் அவனால் சுத்தமாகப் பராமரிக்க முடியாது. அப்பனைக் கொண்டு பிள்ளையுமிருந்தது! அதனால் பொதுவாக 'க்ளீனிங்' வேலைகளெல்லாம் ஜமுனாவின் தலையில் தான் விழும்! தாஷி வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்துத் தான் அவள் இதையெல்லாம் செய்ய முனைவது! அவள் மட்டும் வீட்டிலிருந்தால்.. அவள் போடும் குப்பையைப் பொறுக்குவதிலேயே நாள் ஓடி விடும்.

ஒவ்வொரு அறையாகச் சுத்தப்படுத்தி முடித்துப் பின் குளித்து அவள் அக்கடாவென ஹால் ஃபேனின் முன்பு அமர்ந்திருந்த சமயம்.. வெற்றி வந்து சேர்ந்தான். பொதுவாக அவன் பகல் நேரத்தில் வீட்டிற்கு வரும் ஆள் கிடையாது! அவ்வப்போதுத் தாஷியை அழைத்து வரும் படிக் கேட்டால் கூட.. பெரும்போராட்டத்திற்குப் பிறகு தான் ஒத்துக் கொள்வான். அப்படியிருப்பவன் இன்று தானாக வீட்டிற்கு வந்திருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன்...

"என்னடா இந்நேரத்துக்கு வூட்டுக்கு வந்துருக்கிற?, வேலை முடிஞ்சதா?"-என்றாள்.

"இல்ல" - என்றவன் ஃபிரிட்ஜைத் திறந்துத் தண்ணீர் பாட்டிலை எடுத்து வாயில் சரித்தபடி அவள் புறம் திரும்பினான்.

"இன்னாடி அப்டிப் பார்க்குற?, ஏன்? நான் வரக்கூடாதா?"

"நான் கெஞ்சிக் கேட்டாக் கூட ஓவர்-ஆ பண்ணிப்ப! இப்போ என்ன நீயாவே வந்திருக்க?"

“ப்ச்” என்றபடி பாட்டிலை மூடியவன் “நம்ம பிரசாத்தைப் பார்த்தேன் டி” என்றான்.

“யாரு?, பொன்னி அண்ணன் பிரசாத்தையா?, அவன் எப்படி டா இங்க வந்தான்?, என்ன சொன்ன நீ அவன் கிட்ட?” - பரபரப்பாய்க் கேட்டபடி அவனருகே சென்று நின்றாள் ஜமுனா.

“நம்மைப் பத்தி எதுவும் நான் சொல்லிக்கல”

“பின்ன?”

“எங்கப்பனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சாம். கால் ஒடிஞ்சு போய் படுத்தப் படுக்கையா இருக்கானாம். அதைச் சொல்லிட்டிருந்தான்”

-எங்கோ பார்த்தபடி அசுவாரசியமாகக் கூறியவனிடம் என்ன சொல்வதென்றேத் தெரியவில்லை அவளுக்கு.

“நீ போய்ப் பார்க்க வேணாமா?” - மெல்ல வினவினாள்.

“ச்சி! அந்தாளு செத்தாக் கூடக் கொள்ளி போடக் கூடாதுன்னு நினைச்சு வைச்சிருக்கேன். இதுல, நான் போய்.. அந்தாளுக்குக் கால் உடைஞ்சிடுச்சேன்னு இரக்கப்பட்டுப் பக்கத்துல உட்கார்ந்து சேவகம் பண்ணுவேனாக்கும்?”

“நீ பேசுறது ரொம்பத் தப்பு டா வெற்றி. என்ன இருந்தாலும் அவர் உன் அப்பா”

“ரொம்ப ஸ்டாண்டர்ட் டயலாக் டி இது. வேற ஏதாவது சொல்லு”

“முன்னாடியாவது தறுதலையா சுத்திட்டிருந்த! அதனால அந்தாளைக் கரிச்சுக் கொட்டினு இருந்த! இப்ப தான் நல்லா வந்துட்டியே! போய்ப் பார்க்கலாம்ல?”

“.........”

“அவரு உனக்குப் அன்பு,பாசத்தைக் குடுக்கல,படிப்பைக் குடுக்கலன்றதெல்லாம் இருக்கட்டும்! இந்தப் பொறப்பைக் கொடுத்துருக்காரு இல்லையா! அதுக்கான கடமையையாவது நீ செய்யனும் டா வெற்றி”

“பார்ப்போம்”

“யார் அவர் கூட இருந்து பார்த்துக்கிறாங்களாம்?”

“வேற யாரு! புகழ் மாமா தான்”

“ம்ம்.. நீ ஒழுங்காப் போய் பார்த்துட்டு வா டா வெற்றி”

“பார்க்கலாம்”

“என்ன பார்க்கலாம்?”

“நான் யோசிக்கனும்டி. இத்தினி வருஷமா அந்தாளு மேல கொத்தா நான் வளர்த்து வைச்சிருக்கிற வெறுப்பைத் தாண்டி, என்னால அவர் முகத்தைப் பார்க்க முடியுமா?, நல்லாயிருக்கீங்களான்னு பேச முடியுமா?, உதவி வேணும்ன்னா கேளுங்கன்னு சொல்ல முடியுமான்னு நான் யோசிக்கனும்”

“இதெல்லாம் ரொம்ப ஓவர் டா! அப்பாவுக்கு உடம்பு முடியலன்னு பதட்டப்படாம, அவரைப் பார்க்கப் போலாமா,வேணாமான்னு பொறுமையா யோசிப்பானாம்! என்ன ஜென்மமோ நீ”

“நான் பதட்டப்பட்டுப் பதறிட்டு ஓடுற அளவுக்கு அந்தாளு எனக்கு எந்த நல்லதும் பண்ணல”

“பழசையே பேசிட்டிருக்காத டா! இன்னிக்கு இருக்குற நிலைமைய எப்படி சமாளிக்கிறதுன்னு யோசி”

“பார்ப்போம்” - என்றவன் உடை மாற்றி விட்டு சோஃபாவில் தஞ்சம் புக.. “வேலைக்குப் போகலையா டா?” என்று விசாரித்தாள் ஜமுனா.

“ம்ஹ்ம் மூட் இல்ல”

“அடேங்கப்பா! சரி, சாப்ட்டியா?”

“இல்ல டி”

“போய்ச் சாப்பிடு”

“ப்ச், வேண்டாம்!”

“நீ ஓவர்-ஆ பண்ற! இரு, இன்னிக்கு உனக்காக நானே ஒரு ஸ்பெஷல் ரெசிபி ரெடி பண்ணிக் கொண்டு வர்றேன்” - என்றபடி அடுக்களைக்குள் நுழைந்தவள்.. அடுத்த அரைமணி நேரமாய்க் காணாமல் போய் விட.... ஏதேதோ யோசனையுடன் டிவி முன்பு அமர்ந்திருந்தவன் திடீரென நினைவு வந்து...

“ஏய்ய்ய்” என்று குரல் கொடுத்தான்.

“ம்ம்ம்” - சன்னமாய் வெளி வந்தது அவள் குரல்.

என்ன பம்முறா! சமைக்கிறேன்ற பேர்ல கைய,கிய சுட்டுக்கிட்டாளா! அடித்துப்பிடித்து எழுந்து வந்தவன்.. சமையலறையில் நுழைகையில்.. காய் நறுக்கியபடி நின்று கொண்டிருந்தாள் அவள்.

“இன்னாடி பண்ற?, இந்த வேகத்துலக் காய் வெட்டி.. என்னிக்கு டி சமைச்சு முடிப்ப?”

“ப்ச், பொடிப் பொடியா வெட்டனும் டா வெற்றி! அதான் டைம் எடுக்குது”

“அப்டி இன்னாடி பண்ணப் போற?”

“வெஜ் ஆம்லேட்”

“ஏன் டி ரெண்டு நிமிஷ வேலைக்கு, அரைமணி நேரமா அடுப்படில வேர்த்து ஒழுக நின்னுன்னு இருக்குற?, நவுர்றி அந்தாண்ட....”

“ஏய் ஏய்.. இது என் டிஷ். நான் தான் செய்வேன். நீ தூரப் போ” - கத்தியைக் காட்டி மிரட்டியவளைக் கண்டுத் தலையில் அடித்துக் கொண்டுத் தள்ளி நின்றான்.

கையைக் கட்டிக் கொண்டு சுவரில் தலை சாய்த்து நின்றவன், அவள் காய் வெட்டும் கர்ணக் கொடூர அழகை ரசிக்க முயன்றான்.

‘இன்னிக்கு மட்டுமில்லடி! என்னிக்குமே உனக்கு.. சுட்டுப் போட்டாலும் சமையல் வராது’

மனதுக்குள் எண்ணிக் கொண்டவனுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வர.. அதை அடக்கிக் கண்ணால் சிரித்தபடி அவளையே நோக்கியவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

கலைந்த முடியும்,கண்ணில் சிரிப்புமாய்.. நெளியும் உதடுகளுடன்.. கைக்கட்டி நின்றவனைக் கண்டு... உள்ளம் சாமரம் வீச.. நொடியில் இதயம் குளிர்ந்து போய்.. ‘சில்’ காற்றொன்றை குப்பென அவள் முகத்தில் அடிக்கச் செய்தது.

**‘சிரிக்கும் விழிகளில்.. ஒரு மயக்கம் பரவுதே.....**

**வார்த்தைகள் தேவையா.....’** - எப்போதும் வெற்றிக்காக மட்டுமே பேக்-க்ரவுண்டில் வரும் இளையராஜா.. இப்போது ஜமுனாவுக்காக ஜென்சியை அழைத்து வந்தார்.

தடுமாறியப் பார்வையை மறைக்க முயன்றபடிக் கீழே குனிந்தவளின் கரங்கள்.. ஏகத்துக்கும் ஆட்டமாட.. மெல்ல மெல்ல விரிந்த சிரிப்புடன் அவள் முகத்தை.. அது பிரதிபலிக்கும் அவள் மனதின் அழகை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

பின் அவளருகே சென்று.. பின்னிருந்து அவள் கையைப் பற்றிக் கடகடவெனக் காய்களைத் துண்டமாக்கினான். அவள் மனதையும்!!

விறுவிறுவென வேலை செய்தவனை திகைப்பும்,வியப்புமாய் அவள் திரும்பிப் பார்க்கையில்...அவனும் அவளை நோக்கித் தனக்கு வெகு அருகே தெரிந்த அவள் கண்களிடம்.. தன் தாடையை உயர்த்தி 'என்ன' என்று வினவினான்.

விழி அசையாமல் தன்னையே நோக்குபவளின் கண்கள் என்ன கூறியதோ... இமை தாழ்த்தி.. அவள் இதழ்களை நோக்கி விட்டுப் பின் மீண்டும் அவள் கண்களில் பார்வையை நிலைக்க விட்டான்.

அவன் செய்கையில் தன்னாலேயே தழைந்து விட்டக் கருமணிகள்.. கன்னத்தில் பூக்கத் தொடங்கிய ரோஜாக்களை உணர்ந்த சமயம்... அவள் காதோரத்தைத் தன் ஐவிரல்களால் பற்றிக் குனிந்து.. அவள் கன்னத்தை வருடிப் பின் அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான் அவன்.

தானாகக் கதவடைத்துக் கொண்ட அவள் விழிகளுக்குள்.. அவன் பிம்பம் மட்டுமே முழுதாக நிறைய.. கையிலிருந்தக் கத்தியை இறுகப் பற்றினாள் ஜமுனா. ஏனோ.. அழுகை வந்தது.

அவளது உடல்,பொருள்,ஆவி அனைத்திலும் இனி அவன் ஒருவன் மட்டுமே நிறையப் போகின்றான் என்கின்ற திருப்தி மனதையும்,உடலையும் லேசாக்கியது. அன்னை,தந்தை உறவிற்குப் பிறகுக் கணவனாய் வருபவனை மட்டுமே தனக்கான உடைமையாய் எண்ணும் பெண் மனம் மிகவும் விசித்திரமானது.

மூடிய விழிகளிலிருந்துத் துளியாய் வெளி வந்தக் கண்ணீரை உணர்ந்து.... தன் தோளில் சாய்ந்து நின்றிருந்தவளின் கன்னத்தை வருடி மீண்டும் குனிந்தான் அவன்.

"என்னடி??" - அநியாயத்திற்குக் குழைந்து வந்தது அவன் குரல்.

"என்ன?" - விழியில் வழிந்த நீரை அவன் டீ-ஷர்ட் காலரில் துடைத்தபடி அவள்.

"இப்ப எதுக்கு இந்தக் கண்ணீர்?"

“சொல்ல மாட்டேன்”

“ஏய்ய்” - அவன் அதட்டி அவள் பின் கழுத்தைப் பற்றித் தூக்கித் தன் முகம் காணச் செய்ததும்... விழிகளை நிமிர்த்தி அவனை நோக்கியவள்..

“நீ ஏன் இப்டில்லாம் பண்ற?” என்றாள்.

“எப்டில்லாம் பண்றேன்?”

“ப்ச்”

“பிடிக்கலன்னு சொல்லு. இனிப் பண்ண மாட்டேன்”

“பிடிக்கல” - பட்டெனக் கூறி விட்டுக் கண்ணால் சிரித்தவளிடம் குனிந்து.. அவள் கண்களில் முத்தமிட்டு “இப்போ?” என்றான்.

“பிடிக்கல”

அவள் கன்னங்களில் இதழ் பதித்து “இப்போ?” என்றான்.

மீண்டும் தன் கன்னத்தில் மலரத் தொடங்கிய சிவப்புப் பூக்களைக் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தி அவள் “பிடிக்கல” - என்ற போது.. குரல் வெகுவாக உள்ளே சென்றிருந்தது.

சிரிப்பும்,காதலுமாய் அவள் கன்னங்களைத் தன் இரு கைகளால் பற்றி அவள் நெற்றியில் முத்தமிட்டு அவன் “இப்போ? என்ற போது... பெரிதாய் சிரிப்பில் விரிந்த இதழ்களை மறைத்து அவன் மார்பில் முகம் புதைத்து “ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு” என்றவளிடம் “அப்டின்னா ஐ லவ் யூ சொல்லு” என்றான்.

“டேய்ய்...”

“ஏன் டி முறைக்குற?, நான் உன்னைக் காதலிக்கிறேன், நீ என்னைக் காதலிக்கிறியான்னு கேட்க நான் ஒன்னும் 5 வருசத்துக்கு முன்னாடி இருந்த வெற்றி இல்ல. உனக்கு இப்போ ஆப்ஷனே கிடையாது.”

“அடப்பாவி”

“சொல்லுடி ப்ளீஸ்”

“ஐ லவ் யூ” - முறைத்தபடி கூறியவளிடம்..

“அவ்ளோ தானா?” - என்றான் பதிலுக்கு அவனும் முறைத்துக் கொண்டு.

அதுவரை அவன் மீது சாய்ந்து நின்றிருந்தவள், நிமிர்ந்து.. தன் கைகளிரெண்டால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டுத் தன் காதல் முழுதையும் முகத்தில் நிரப்பி... “நான் போ,போ-ன்னு விரட்டும் போதெல்லாம் என்னை விட்டுடாம, என் கிட்டத் திட்டு வாங்கி,அடி வாங்கி.. என் வீம்பு,பிடிவாதம் அத்தனையையும் பொறுத்துக்கிட்டு.. இப்போ வரை அதே காதலோட,ஆசையோட என் கிட்ட நிற்கிற உன்னை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு டா வெற்றி. அம்மா இறந்தப்போக் கடைசி நிமிஷம் நீ என் கையோட சேர்த்து அவங்கக் கையைப் பிடிச்சப்பவே எனக்குத் தெரியும். நீ என் வாழ்க்கை முழுக்கக் கூட வரப் போற-ன்னு! பாப்பாவுக்காகவும்,எனக்காகவும் இந்த 5 வருஷத்துல எவ்ளோ மாறியிருக்க? உன்னை லவ் பண்ணாம எப்படி டா இருக்க முடியும்?, நான் உன்னைக் காதலிக்கிறேன்.. ரொம்ப... ரொம்ப..!” - உணர்ச்சிவசப்பட்டுக் கண்கள் முழுக்கக் கண்ணீருடன் கூறியவளை இறுக அணைத்துக் கொண்டவனும் “ஐ லவ் யூ டூ” என்றான்.

**த**ன் சம்சாரம் மற்றும் பிள்ளையோடு சேர்ந்து சென்னையை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தான் வெற்றி என்கிற வெற்றிச் செல்வன்.

பிரசாத்தை வேலூரில் சந்தித்த பிறகு மறுநாளே அவனுக்குக் கதிரிடமிருந்து அழைப்பு வந்து விட்டது. இத்தனைக்கும் அவன் பிரசாத்திடம் தனது அலைபேசி எண்ணைக் கூடப் பகிர்ந்து கொள்ளவில்லை.

அவன் வேலை செய்யும் ஹோட்டலைக் கண்டுபிடித்து எப்படியோ அவனைத் தொடர்பு கொண்ட கதிர், திட்டாதக் கெட்ட வார்த்தையில்லை.

“ஒரே பால் பாட்டிலை மாத்தி,மாத்தி உறிஞ்சுக் குடிச்சிக்கினு ஒன்னா வளர்ந்தவனுங்க டா நாம! நான் இருக்கேனா,செத்தேனான்னு கூடத் தெரியாம இத்தினி வருஷத்தை ஓட்டிட்டியே டா!, கம்னாட்டி! அப்டி என்னடா பண்ணேன் நான் உனக்கு?, என்னாண்ட கூடச் சொல்லிக்காம நீ ஓடிப் போற அளவுக்கு! உனக்கு இன்னா தான் டா பிரச்சனை?, உங்கப்பன் மேல இருக்குறக் கோவத்துல என்னைய ஏன் டா ஒதுக்கி வைச்சிருக்கிற?, அந்த மாலதியைக் கன்னாலம் கட்டிக்கினு நான் அனுபவிக்காதக் கஷ்டமே இல்லடா மச்சி!, அவளும்,அவ அம்மாகாரியும் சேர்ந்துக்கினு என்னைய பாடாப் படுத்துறாளுங்கடா! எப்டியாவது வந்து என்னைக் காப்பாத்து டா” - என்று விடாமல் பேசியவனிடம்.. சத்தியமாகத் தன்னைப் பற்றி என்ன கூறுவதென்றேத் தெரியவில்லை அவனுக்கு.

“வூட்டுக்கு வந்துட்டுக் கூப்பிட்றேன் மச்சி” - என்று அவசரமாக அழைப்பைத் துண்டித்தவன் நேராக ஜமுனாவின் முன்பு வந்து நின்றான்.

“கதிருக்கு நான் வேலை செய்ற இடம் தெரிஞ்சுடுச்சு டி! இனியும் நாம ஒளிஞ்சு வாழ முடியும்ன்னு தோணல எனக்கு”

“ப்ச், நாம ஏன் டா ஒளிஞ்சு வாழனும்?”

“பின்ன?, உனக்கும்,எனக்கும் எப்டி 5 வயசுல புள்ள வந்ததுன்னு கேட்டா, இன்னாடி சொல்றது?”

“5 வயசுன்னு அவ நெத்தில எழுதியா ஒட்டிருக்கு?”

“இன்னாடி சொல்ற?”

“நாம ரெண்டு பேரும் 5 வருஷத்துக்கு முன்னாடியே கல்யாணம் பண்ணிக்கிட்டுப் புள்ளையும் பெத்துக்கிட்டோம்ன்னு அள்ளி விட வேண்டியது தான்”

“நம்புவாங்களா?”

“ஏன் நம்ப மாட்டாங்க?, அம்மா இறந்து போய் அநாதையா நின்னவளை நான் தான் கட்டிக்கிட்டேன்னு சொல்லு!, அங்க இருந்தா தேவையில்லாத பேச்சு வரும்ன்னு தான், இங்க வந்து பொழச்சுன்னு இருக்குறோம்ன்னு சொல்லு. எங்களுக்குக் குழந்தையும் இருக்குன்னு சேர்த்துச் சொல்லிடு. பிரச்சனை முடிஞ்சது”

“அப்டின்ற?”

“ஆமா டா! அதுக்கு மேல எவனும் ஆராய்ஞ்சு பார்க்க மாட்டானுவ! அவ,அவனுக்கு ஆயிரம் பிரச்சனை இருக்கும் போது, நம்மைப் பத்தி தான் யோசிச்சின்னு இருப்பானுவளா?, நான் சொன்னதை நீ அப்டியே கதிர் கிட்ட சொல்லு”

“சரி டி ரௌடி.”

“உங்கப்பாவைப் பார்க்க என்னைக்கு டா போற?”

“ப்ச்”

“வெற்றி.. என்னிக்குனாலும் நீ போய்த் தான் டா ஆகனும்”

“நான் மட்டுமில்ல. நீயும் தான்”

“நானுமா?”

“பின்ன?, சரோஜாம்மா கூட நீ பேச வேணாமா?, அது மறுபடி கனகா-க்கா வூட்டு மாடில குடி வந்திருக்காம். மகன்,மருமக,பேரன்,பேத்தின்னு எல்லாம் நீயிருந்த வூட்ல தான் இருக்காங்களாம்”

“அப்டியா?, யார் டா சொன்னா?” - ஆர்வமாய் வினவியவளிடம்

“கதிர் தான்” என்றான்.

“சரோம்மா ஃபோன் நம்பர் கிடைக்குமா டா?, கதிர் கிட்ட வாங்கிக் குடேன். பழைய நம்பருக்கு ரொம்ப நாளா ட்ரை பண்ணியும் கிடைக்கல.”

“ஃபோன்ல எதுக்கு?, நேர்லயே பேசலாம். நீ தான் எங்கப்பனுக்கு நான் ஒரு நல்ல மகனா நடந்துக்கனும்ன்னு ஆசைப் பட்றியே!”

“அதுல என்னடா தப்பு இருக்கு?”

“..........”

“ஆக்சுவல்-ஆ உனக்கு அவர் மேல என்னா கோபம்?, அவர் பொம்பளைங்க சகவாசம் வைச்சுக்கிட்டதாலயா?, ஏன் டா அவரும் சராசரி மனுஷன் தானடா?, அவரோட தேவைக்கு அவர் போயிருக்கிறாரு! இதுல நீ ஏன் இவ்ளோ கோபப்பட்ற?”

“என்னடி லூசு மாதிரி பேசுற?”

“ப்ச், டேய்.. கல்யாணத்துக்கு முன்னாடியோ, இல்ல உங்கம்மா உயிரோட இருக்கும் போதோ.. அவர் இந்த மாதிரி போறவர்ன்னு அவர் மேல ஒரு கம்ப்ளைண்ட் இருந்ததா?, இல்லை தான?, பழக்கப்பட்டுட்ட ஒரு விசயத்தை.. பொண்டாட்டி இறந்து போனப்புறம்.. எப்டி கண்ட்ரோல் பண்றதுன்னு தெரியாம.. இப்டி தேடிப் போயிட்டார். உன்னால செக்ஸ் இல்லாம ஒரு நாள் இருக்க முடியுதா?, அர்த்த ராத்திரில நான் அக்கடான்னு தூங்கினு இருந்தாலும், எழுப்பி விட்றேல?”

-அவள் கூறியதும் குடித்துக் கொண்டிருந்த பானம் புரையேற லொக்,லொக் என இருமியவன் “ச்சை! பொண்ணு மாதிரியா டி பேசுற நீ?, கொஞ்சம் கூடக் கூச்ச,நாச்சமே இல்லாம இவ்ளோ பச்சையாப் பேசுற?” என்று எரிந்து விழுந்தான்.

“ஏன் பொண்ணுங்க இதைப் பத்திப் பேசுனா தப்பா?”

“இப்போ அதுவா பிரச்சனை?”

“உங்கப்பா பெரிய உலகக் குத்தம் எதையும் பண்ணிடல டா வெற்றி”

“ஏய்ய், அந்தாளுக்கு அவ்ளோ தேவை இருந்திருந்தா.. கௌரவமா ஒருத்தியைக் கல்யாணம் கட்டின்னு வந்து வூட்ல குடி வைச்சிருக்கனும் டி! அதை வுட்டுட்டு கண்டவளுங்கக் கிட்டப் போய் பல்லிளிச்சிட்டு நிப்பானா?”

“பொண்டாட்டிய வர்றவ உன்னையக் கொடுமை படுத்திடுவாளோன்னு அவருக்குப் பயம் இருந்ததா நீ தான டா சொன்ன?”

“ஆமா... கொடுமை பண்றதுக்கு புதுசா ஒருத்தி தான் வரனுமா?, இந்தாளு போதாதா?”

“டேய்.. அவ்ளோ கோபம் இருக்கிறவன், நீ அவர்க்கிட்ட நேராவே இதெல்லாம் எனக்குப் பிடிக்கலன்னு சொல்லியிருக்க வேண்டியது தான டா?”

“முகத்தைப் பார்த்துப் பேசிக்கிற அளவுக்கு நாங்க பாசப்பிணைப்போட இருந்தோம்ன்னு நினைச்சியாக்கும்?”

“ப்ச், எது எப்டியோ... அவர் காலமும் ஓடிப் போச்சு! அவர் காசுல திங்க மாட்டேன், தூங்க மாட்டேன்னு ரோஷமா இருந்த நீயும், உன் முயற்சியாலயே முன்னாடி வந்துட்ட!, இனி என்ன டா?, யார் துணையுமில்லாம.. கால் ஒடைஞ்சு போய் கடைசி காலத்துலக் கஷ்டப்படுறவரை ஒரு தடவை நேர்ல பார்த்து.. உன் கடமையைப் பண்ணிட்டு வந்துடு!”

“சரி, அப்டின்னா நாம 3 பேரும் சென்னை போவோம்” - என முடிவெடுத்துத் திட்டமிட்டு இதோ இன்று சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

சென்னையில் நிறைய மாம்ஸ்,அத்தைஸ்,பாட்டி,தாத்தா என அனைவரும் இருப்பதாகக் கூறி தாஷியைப் பயணத்திற்குத் தயார் செய்திருந்தாள் ஜமுனா.

நேரில் வந்து இறங்கிய வெற்றி மற்றும் ஜமுனாவை சொட்டைத் தலையுடனும், தொப்பை வயிறுடனும் வரவேற்ற கதிரைக் கண்டு.. அடக்கமாட்டாமல் சிரித்தான் வெற்றி.

“இன்னாடா பரதேசி, மாலதியும்,அவங்கம்மாவும் சேர்ந்துக்கினு நீ திங்குற சோத்துல ஸ்லோ பாய்சன் கலக்குறாளுங்கன்னு சொன்ன?, தொப்பை,கிப்பையெல்லாம் வைச்சு ஆளு.. அரசமரத்துப் பிள்ளையார் கணக்கா இருக்கியே டா”

கலாய்த்த வெற்றியை முறைத்துப் பின் “அவளுங்க 2 பேர் டார்ச்சர் தாங்க முடியாம டெய்லி குடிக்கிறேன் மச்சி. அதான் தொப்பை வந்துடுச்சு” என்று விட்டு... “நீ எப்டிடா

இருக்க?, மச்சி.. வாடா.. கட்டிப்புடிச்சுக்கலாம்" என்றபடியே அவனை ஆரத் தழுவிக் கொண்டு.. "உன்னை ரொம்ப ரொம்ப மிஸ் பண்ணேன் டா வெற்றி" என்ற கதிருக்கு லேசாகக் கண் கூட கலங்கியது.

"மன்னிச்சிரு மச்சி! என் சூழ்நிலை அப்புடி! உன்னைத் தினம்,தினம் நினைச்சுப்பேன் தெரியுமா?, நீ என்னைய நினைப்பியா டா?" - வெற்றி

-என்னவோ நீண்ட வருடங்களாய்ப் பிரிந்திருந்தக் காதலர்கள் ஒன்று சேர்ந்ததைப் போல இருவரும் விட்டப் பீலாவைக் கண்ட ஜமுனா எரிச்சலுற்று...

"சீன்-ஐக் குறைங்க டா சாவுகிராக்கிங்களா" என்று கத்தியதும்..

திடுக்கிட்டு அவள் புறம் திரும்பிய கதிர் "டீ...டீ..டீச்சர்! சாரி! நண்பனைப் பார்த்த சந்தோசத்துல உங்கள மறந்துட்டேன்! அவ ஒரு ராங்கி, திமிர்ப்புடிச்ச ஜிகிடின்னு இவன் உங்களைத் திட்டாத வார்த்தை இல்ல! ஆனா.. அதையெல்லாம் மறந்துட்டு.. உங்களுக்காக எங்களையெல்லாம் வுட்டுப் போனான்றதை நினைச்சா... எனக்கு.. எனக்கு..."

"ஏன் டா திக்குற?, உனக்கு.. உனக்குக் காண்டாகுதா?"

"ஆமா! பின்ன! நீ என்ன அவ்ளோ பெரிய அப்பாடக்கரா? ஒரே தட்ல சோறு துன்னு, ஒரே கட்டில்ல தூங்கி, ஒன்னா ஒன்னுக்குப் போனப் பசங்களையே பிரிச்சு விட்ருக்க?"

"ஏய்ய்ய்.. பின்னாடியே சுத்துது நான் இல்ல. உன் ஃப்ரெண்ட். இன்னா டா கமுக்கமா அமுக்கின்னு நிக்குற?, உன்னால முடியலன்னு உன் ஃப்ரெண்டை வுட்டுக் கலாய்க்கப் பார்க்குறியா?, மூஞ்சி தேய்ஞ்சிடும்! சொல்லி வை" - பேட்டை ரௌடியாக மிரட்டியவளைக் கண்டு...

"இவளுக்கு மாலதியே தேவல போல மச்சி! எப்புடிடா சமாளிக்குற?" - வெற்றியிடம் வினவினான் கதிர்

"ஏய்ய்ய் வாய மூட்றா பரதேசி!, செல்லம்... நீ வூட்டுக்குள்ள போ டா... நான் இந்த நாயைத் துரத்தி வுட்டுட்டு வர்றேன்"

"யாரை டா நாய்-ன்ற?"

“உன்னை இல்ல மச்சி!,” என்ற வெற்றி தொடர்ந்து “ஏய்ய் பாப்பா எங்கடி?” எனக் கேட்டுத் தன் வீட்டிலிருந்து வெளியே வந்தவன்.. டீக்கடை வாசலில் அமர்ந்திருந்த மணியின் அருகே நின்றிருந்தத் தாஷியைக் கையசைத்துக் கூப்பிட்டான்.

“உன் பொண்ணா மச்சி?” எனக் கேட்டு “பாப்பா... மாமா கிட்ட வா” என்றபடி அவளைத் தூக்கிக் கொஞ்சியவன் “அப்டியே உன்னை மாதிரி இருக்கு டா வெற்றி!, பெரிய கண்ணு, நெத்திய மறைக்குற முடி! ஆனா... சிரிக்கும் போது உங்க ரெண்டு பேர் மாதிரியும் இல்லையே டா” - என ஆராய்ச்சி செய்யத் தொடங்கியதும் அவனைத் தடுத்து...

“இவளுக்கு ஜமுனாவோட பாட்டி சாயல் மச்சி” என்றவன் “பாப்பா... அம்மாக் கிட்டப் போ. சாப்பிட்டு வந்து மாமா கூட விளையாடு” என்று அவளை அனுப்பி வைத்தான்.

அதன் பின் தெருவிலிருந்த ஒவ்வொருவரின் வீட்டிற்கும் சென்று நலம் விசாரிப்பதிலேயே நாள் கழிந்தது.

கதிர் - மாலதிக்கு மூன்றரை வயதில் ஒரு பையன் இருந்தான். மாலதி பணக்காரப் பெண் என்பதால்.. கதிர் மற்றும், அவனது குடும்பத்தை அவள் பெரிதாக மதிக்காததுக் கதிரைக் கோபத்திற்குள்ளாக்கியிருந்தது. சண்டையும், சமரசமுமாக அவனது வாழ்க்கை ஓடம் சராசரிக்கும் கீழ் ஓடிக் கொண்டிருந்தது.

கதிரின் தங்கை செல்விக்குத் திருமணமாகி அவள் விழுப்புரத்தில் செட்டிலாகியிருந்தாள். ஜமுனாவும்,வெற்றியும் திரும்பி வந்த செய்தி கேட்டு அவளுக்கு மிகவும் சந்தோஷம். கூடிய விரைவிலேயே இருவரையும் வந்து பார்ப்பதாகக் கூறியிருந்தாள்.

இருவரையும் ஜோடியாகக் கண்ட மாலதிக்கு அத்தனை ஆச்சரியமில்லை! ஜமுனாவிற்கு வெற்றியைப் பிடிக்குமென்பதை அவள் ஐந்து வருடத்திற்கு முன்பே கணித்திருந்தாள்.

ஜமுனா திரும்பியதில் பேராச்சரியமும்,பெரு மகிழ்ச்சியும் அடைந்தது சரோம்மா தான். அதிலும் அவள் திருமணம்,குழந்தையெனக் குடும்பமாகத் திரும்பி வந்தது கண்டு சிறிது கோபித்துக் கொண்டாலும், அதன் பின்பு தாஷியை வாரி அணைத்துக் கொண்டார். “பாப்பா அப்படியே உன் அம்மா சாயல் ஜம்மு” என்றபடி!

சென்னை வந்திறங்கியதும் இருவரும் முதலில் சென்றது வெற்றியின் வீட்டிற்குத் தான். கால் காயம் ஓரளவிற்கு ஆறி.. புகழின் உதவியுடன் நடக்கத்

தொடங்கியிருந்தார் சதாசிவம். அவர் ஒரு சர்க்கரை நோயாளி என்பதால் தான்.. பட்ட சின்னக் காயம் கூட அவரைப் பெரிதாகப் படுத்தி விட்டிருந்தது.

உடல் மெலிந்து,கழுத்து நீண்டு உள்ளே சென்று விட்டக் கண்களுடன் பாவமாய்க் காட்சி தந்தவரைக் கண்டுத் தன் அன்னையின் நினைவு வந்தது ஜமுனாவிற்கு.

வெற்றியின் மீது கோபப் பார்வையை வீசி "நான் இல்லன்னு ஃபீல் பண்றேன்! இவன் இருந்தும் கண்டுக்காம இருக்குறான்" என்று முணுமுணுக்க.. அவன் தோளைக் குலுக்கியபடி நகர்ந்து விட்டான். நின்று அவரிடம் நலம் விசாரிக்கக் கூட இல்லை. போகிற போக்கில் பார்த்ததோடு சரி!

ஜமுனா தான் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு.. இருவருக்கும் திருமணமானதைக் கூறிக் குழந்தையை அவரருகே அனுப்பினாள்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு வெற்றியைக் கண்டும் பெரிதாக ரியாக்ட் செய்யாத சதாசிவம், வெற்றியின் குழந்தையை மகிழ்ச்சியுடன் அள்ளிக் கொண்டார். அதிலும் தாட்சாயிணி எனத் தன் அன்னை பெயரை அவன் குழந்தைக்குச் சூட்டியிருப்பதைக் கேட்டு அகமகிழ்ந்து போனார்.

"நீங்க எங்கம்மா சாயல்ல தான் இருக்கீங்க குட்டி" என்று தாஷியைக் கொஞ்சியவரை எந்த வரிசையில் சேர்ப்பதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

என்ன தான் அவர் வெற்றியிடம் நேரில் பேசா விட்டாலும், அவன் திரும்பி வந்ததே அவருக்குப் பெரிய திருப்தியைக் கொடுத்திருந்தது. ஐந்து வருடங்களாய்.. தன்னந்தனியாய் வாழ்ந்தவருக்குக் கடைசி காலத்தை நினைத்துப் பயம் வந்ததோ என்னவோ... புகழிடமும்,அவன் நண்பர்களிடமும் விடாது அவனைப் பற்றி விசாரித்துச் சோர்ந்து கொண்டிருந்தார்.

கடைசியில் அவன் அவரைத் தேடி வந்தது அவருக்கு அப்படியொரு ஆசுவாசத்தைக் கொடுத்தது. அவர் மகனிடம் பேசவில்லை! மருமகளிடமும் அவ்வளவாகப் பேசிக் கொள்ளவில்லை. ஜமுனாவிடம் வளவளத்ததெல்லாம் புகழேந்தி மட்டும் தான்.

ஆனாலும் அவள் எழுந்து செல்வதற்கு முன் அவரைத் தடுத்தவர்.. வெற்றி தனது 'முதலியார் மெஸ்'-ஐ எடுத்து நடத்த வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்து விட்டுக் குழந்தையுடன் ஒதுங்கிக் கொண்டார்.

"நல்லவன் தான்ம்மா அவன்! பொண்டாட்டி மேல எவ்வளவோ ஆசை வைச்சிருந்தான்! இடைல இருந்த ஆளுங்க அதை,இதைச் சொல்லி அப்பன்,மகன்

உறவை ஆகாம பண்ணிட்டானுங்க!, இந்தப் பையனும் வளர்ந்தப்புறம் எது,எதையோ நினைச்சுக்கிட்டு அப்பனை வெறுக்க ஆரம்பிச்சுட்டான்! ஹ்ம்ம்ம், நடந்த எதையும் மாத்த முடியாது! யாரு தப்பு,யாரு சரின்னு தீர்ப்பு சொல்றதால ஒரு பிரயோஜனமும் இல்ல. இனி நடக்கப் போறதை நல்லவிதமா யோசிச்சோம்ன்னா எல்லாருக்கும் நல்லது. மெஸ் அவன் உழைப்போட சின்னம். கடையை எடுத்து நடத்தச் சொல்லி நான் வெற்றிக்கிட்ட எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துட்டேன்...பிடி குடுக்க மாட்டேங்குறான். நீ அவனுக்குக் கொஞ்சம் சொல்லிப் புரிய வைம்மா" - என்று புகழேந்தியும் நண்பனின் சார்பாக ஜமுனாவிடம் பேச.. அதை அப்படியே வெற்றியிடம் கூறினாள் ஜமுனா.

"இதோ பாரு! பெத்த அப்பன்,கடமை ****-ன்னு ஏதேதோ பேசி நீ தான் என்னை இங்க வரத் தூண்டுன! வந்தாச்சு! பார்த்தாச்சு! அந்தாளும் இப்ப எழுந்து நடமாட ஆரம்பிச்சுட்டாரு. இத்தோட நாம வந்த வேலை முடிஞ்சது. சீக்கிரம் பொட்டி,படுக்கையைக் கட்டிட்டு ஊருக்குக் கிளம்புற வழியைப் பாரு." - காட்டுக்கத்தலாய் வெற்றி.

"டேய்.. மகனுக்கு உண்டான கடமைகளைக் கூட சரியாச் செய்யாம ஒதுங்கி நின்னு, நீ இருக்கியா,செத்துட்டியான்னுக் கூடத் தெரியாத அளவுக்கு உன் மேல அக்கறையில்லாம இருந்த இந்த மனுஷன் தப்பானவராகவே இருந்துட்டுப் போகட்டும்! அது எதையும் நான் மாத்திப் பேசல! நீ கடந்து வந்தக் கஷ்டம் எல்லாமே.. ரொம்பப் பெருசு தான்! ஆனா.. அவர் உனக்கு செஞ்சதையே நீ அவருக்கு செய்யனும்ன்னு என்ன இருக்கு?, மத்த விசயங்கள்ல எப்டியோ, சின்னதா ஆரம்பிச்ச ஹோட்டல் தொழிலை இன்னிக்கு எவ்ளோ பெருசா வளர்த்திருக்கிறாரு?, எத்தனை நாள் கஷ்டப்பட்டாரோ இந்த நிலைமைக்குக் கொண்டு வர்றதுக்கு?, அவரோட உழைப்பெல்லாம் பிரயோஜனமில்லாம போகப் போகிற மாதிரி தான் இருக்கு நீ நடந்துக்கிறது"

"ஏன் பிரயோஜனமில்லாம போகப் போகுது?"

"அவரால முடியலயாம் வெற்றி. சுகர் பேஷண்ட் வேற! மனுஷன் ரொம்ப நொந்து போயிருக்கார். முன்ன மாதிரி ஹோட்டலைப் பார்த்துக்க முடியலன்னு வேதனைப்பட்றார்"

"அதுக்கென்ன?, கூடவே ஒருத்தரை வைச்சிருக்கிறாரே ஃப்ரண்ட்ன்னு?, அவரைப் பார்த்துக்கச் சொல்லு"

“ப்ச், அவருக்கு மட்டும் வயசு கம்மியாவா இருக்கு?”

“அப்டின்னா.. ஹோட்டல் நல்லா போயிட்டிருக்கும் போதே.. யாருக்காவது வித்துடச் சொல்லு”

“நீ பேசுறது சரியில்ல வெற்றி. யாரோ ஒருத்தர்க் கிட்டத் தூக்கிக் கொடுக்கத் தான் இத்தினி வருஷமா மனுஷன் உழைச்சாரா?”

“அது அவர் பிரச்சனை. எனக்கும் அந்த ஹோட்டலுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல”

“டேய்ய்.. பாவமா இருக்கு டா அவரைப் பார்த்தா.. உனக்குக் கொஞ்சம் கூட இரக்கமே வரலையா?”

“அந்தாளுக்கு என் மேல இரக்கம் இருந்துச்சா?”

“நீ பழசையே பேசி இருக்குற மனுஷனை சாகடிக்குற வெற்றி”

“போய்ச் சேரட்டும்! அந்தாளு இருக்குறதால யாருக்கு லாபம்? இல்லாம போறதால யாருக்கு நஷ்டம்?, வயசாகி நோய்,நொடி வந்து படுத்துட்டா.. செஞ்ச தப்பெல்லாம் இல்லைன்னு ஆயிடுமா?, அந்தாளு பண்ணுன பாவத்துக்குத் தான், இப்டி அநாதையா படுத்துக் கிடக்குறாரு! இதோ பாரு.. இன்னொரு தடவை அந்தாளுக்கு சப்போர்ட் பண்ணிப் பேசிக்கிட்டுப் பக்கத்துல வந்த.. புள்ளையைத் தூக்கிட்டு நான் ஊருக்குப் போயிடுவேன்”

“போடா பரதேசி! அந்தாளு எனக்கு அப்பனா உனக்கு அப்பனா?, எப்டியோ போய்த் தொலைங்க! எனக்கென்ன?” - கோபத்தில் பொறிந்துத் தள்ளி விட்டு சரோஜாம்மாவின் வீட்டிற்குச் சென்று விட்டாள் ஜமுனா.

குழந்தையை அவனிடம் விட்டு விட்டுக் கோபத்தில் அவள் அங்கேயே இரவு தங்கி விட.. எரிச்சலும் பொறுமலுமாய் மறுநாள் காலை எழுந்தவன்.. கையில் பூஸ்ட் கலந்தப் பாலுடன் தாஷியை எழுப்பினான்.

சோம்பல் முறித்தபடி எழுந்தவள் வெற்றியின் கையிலிருந்தப் பால் தம்ளரைக் கண்டுத் திடுதிடுவென ஓடியே விட்டாள்.

“ப்ரஷ் பண்ணிட்டு வா மீ, பால் குடிக்கலாம்” - என்று கூறியபடியேத் திரும்பியவன் அவள் அறையில் இல்லாததைக் கண்டு “இவ, அவங்கம்மாவை விடப் பெரிய ராட்சசியாச்சே!” என்று புலம்பியபடி “மீ.... ஒழுங்கா வந்துப் பாலைக் குடி” - எரிச்சலுடன் கத்திக் கொண்டு வெளி வந்தவன்.. தாஷியின் அருகில் நின்றிருந்தத்

தந்தையைக் கண்டு முகத்தை இறுக்கி வைத்துக் கொண்டு தரையைப் பார்த்தபடி நின்றான்.

அவன் கையிலிருந்தப் பால் தம்ளரைக் கவனித்து "தாட்சியம்மா பால் சாப்டப் போறீங்களா?" என்று கேட்டபடியேக் குழந்தையைக் கையில் தூக்கினார் சதாசிவம்.

"இல்ல, எனக்கு பூஸ்ட் பிடிக்காது. நான் குடிக்க மாட்டேன்" - சமத்தாய் மறுத்தவளைக் கண்டுச் சிரித்து "பூஸ்ட் வேண்டாம். அய்யா உனக்கு வேற பால் கொண்டாரேன், அது ரொம்ப ருசியா இருக்கும். நீயே ஆசையா வாங்கிக் குடிப்ப பாரேன்" எனக் கூறியபடியே விந்தி விந்தி சமையலறைக்கு அவளுடன் நடந்தார்.

அவளை சமையல் மேடையில் அமர வைத்து விட்டு பாதாம்,முந்திரி,பிஸ்தா என ஏதேதோ போட்டு அரைத்துப் பாலில் விட்டுக் கொதிக்க வைத்து.. ருசியான மசாலா பால் ஒன்றை அவளிடம் நீட்ட.. ஆர்வமாய் வாங்கிக் குடித்ததுக் குழந்தை.

நின்ற இடத்திலிருந்தே இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த வெற்றிக்குத் தந்தையின் போக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

எப்புடி இந்தாளு மாறுனான்? புள்ள மேல வேற இவ்ளோ பாசமா நடந்துக்குறான்! போய்ச் சேர வேண்டிய காலத்துல சொந்தம்ன்னு சொல்லிக்க யாரும் இல்லாம போயிடுமோன்னு பயப்பட்றானோ! பெத்தப் புள்ளைய ராசியில்லாதவன்-னு ஒதுக்கித் தள்ளிட்டு.. காசு கொடுத்து கண்டவளுங்கக் கிட்ட ***** போனப்ப தெரியல, ஒரு நாள் எல்லாம் அடங்கிக் கட்டையை நீட்டுவோம்ன்னு! என்ன ஜென்மமோ!

அவன் புலம்பியபடி நின்றிருக்கையில் சமையறையிலிருந்துத் திரும்பி வந்த சதாசிவம் அவன் முகம் பாராமல்...

"விளம்பரத்துல காட்டுறாங்கன்னு கண்ட,கண்டதையும் வாங்கிப் புள்ளைக்குக் கொடுக்காம.. நல்லா சத்தானதா செஞ்சு கொடுக்கனும்" என்று அறிவுரை வேறு வழங்கவும்.. முற்றிலும் எரிச்சலுற்றவன்..

"ஆடு பகை! குட்டி உறவாம்" என்று முணுமுணுத்து விட்டு விறுவிறுவென நகர்ந்தபடி "இத்த என்ன பண்றது?" என்று கையிலிருந்ததைக் காட்டிச் சத்தமாக புலம்ப... "உங்கப்பனையே குடிக்கச் சொல்லும்மா, இன்னும் நாலடி சேர்த்து வளரட்டும்" எனக் கூறிச் சிரித்து விட்டுப் போனார்.

நடந்து கொண்டிருந்தவன் நின்று, வியப்புடன் அவர் புறம் திரும்புகையில் அவர் உள்ளே சென்றிருந்தார். யோசனையுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தவனை தாஷியின் குரல் கலைத்தது.

“ஜம்மு,ஜம்மு எனக்கு அய்யா ஒரு டேஸ்ட்-ஆன மில்க் குடுத்தார் தெரியுமா?, அது பூஸ்ட் மாதிரி இல்ல. ரொம்ம்ம்ம்ம்ம்ப யம்மி!”

-அப்போது தான் வீட்டிற்குள் நுழைந்த ஜமுனாவிடம் தாஷி நடந்தவற்றைக் கூறிக் கொண்டிருக்க.. எரிச்சல் மாறாமல் அவளை நோக்கிய வெற்றி...

“வாடி உங்கொப்பன் மவளே! அங்கயே ஒரேடியா இருந்துட வேண்டியது தான?, இன்னாத்துக்கு இங்க வந்த இப்ப?” - என்று எகிறினான்.

“ஏன்?, இருப்பேனே ஒரேடியா அங்கயே!! என்னாத் தப்பு அதுல?” - அவன் முகம் பாராமல் ரோஷத்துடன் பதிலளித்தவள் தாஷியிடம் “பாப்பா.. உனக்குத் தாத்தாவைப் பிடிச்சிருக்கா?” என்றாள்.

“ம்ம், ரொம்ம்ம்ம்ப ரொம்ம்ம்ம்ம்ப!, ஆனா.. ஏன் என்னை தாட்சியம்மா, தாட்சியம்மான்னு கூப்பிட்றாரு?”

“ஹாஹா.. அந்தத் தாத்தாவோட அம்மா பேரும் தாட்சாயிணி தானாம்! அதான் உன்னை அப்டிக் கூப்பிட்றாரு”

“ஓஹோ!! ம்ம், அப்புறம் சொல்ல மறந்துட்டேனே! நேத்து நைட் தாத்தா இந்தச் செயினை எனக்குப் போட்டு விட்டார்” - எனக் கூறி அவள் கழுத்திலிருந்ததைக் காட்டினாள்.

அப்போது தான் வெற்றியும் அதை நோக்கினான். இந்தாளு ரொம்ப ஓவர்-ஆ போறானோ!

ஓரக்கண்ணால் அவனை நோட்டம் விட்டபடி “பாப்பா... தாத்தா நல்லவராத் தான இருக்காங்க! பேசாம நாம இங்கேயே இருந்துடலாமா?” - என்று அவள் கூறி முடிப்பதற்குள்..

“செருப்புப் பிஞ்சிடும்” எனச் சீறினான் வெற்றி.

அவன் கத்தியதில் தானும் கோபம் கொண்ட ஜமுனா “நான் இங்க தான் டி இருப்பேன்! நீயும்,உங்கொப்பனும் எங்க போகனுமோ போங்க” என்றுத் திட்டி விட்டு.. குழந்தையைத் தூக்கி கொண்டுச் சென்று விட்டாள்.

“எங்கயோ போங்கன்னு சொல்லிட்டு ஏன் டி புள்ளையத் தூக்கிட்டுப் போற?” என்று அவன் விடாது கத்தியதை அவள் பொருட்படுத்தவேயில்லை.

அடுத்து வந்த இரண்டு நாட்களுமே தாஷியையும்,சதாசிவத்தையும் கண்டு புகழேந்திக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வெற்றி இங்கிருந்து சென்ற இத்தனை வருடங்களையும் ஏனோ,தானோ எனக் கழித்துக் கொண்டிருந்த சதாசிவம் தன் பேத்தியைக் கண்டதும் பத்து வயது குறைந்தது போல் துள்ளலுடன் நடந்து கொண்டது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஜமுனாவிற்கும் ஆச்சரியம் தான்! ராசியில்லாதவன் என வெற்றியைக் கேலி செய்யும் கூட்டம், இன்று அவனது நடை,உடை,செயல், மனைவியையும், பிள்ளையையும் நடத்தும் விதம் என அனைத்தையும் கண்டு.. அவனை மிகவும் மரியாதையாக நடத்தியது. ஆளாளுக்கு தாஷியிடம் அவர்களிருவரது சாயல் இருப்பதாகச் சொன்னதும்... அதிலும் சதாசிவம் ஒருபடி மேலே போய் தாட்சாயிணிப் பாட்டியே மறுபிறவி எடுத்து வந்திருப்பதாகச் சொன்னதும்.. அவளுக்குச் சிரிப்பைக் கொடுத்தது! ஆனால்.. ஒரு வகையில்.. எல்லாம் நன்மைக்கு தான்! அவள், அவர்களது குழந்தையாகவே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டாளே!

வெற்றி மட்டும் தான் முழு நேரமும் யோசனையாகச் சுற்றிக் கொண்டிருந்தான். இந்தப் பிரபஞ்சத்திலேயே அவன் வெறுப்பது சதாசிவம் ஒருவரைத் தான்! ஆனாலும் அந்த மனிதன்.. தாஷியிடம் ஒன்றி.. சந்தோஷ முகத்தோடு வலம் வருவதைக் கண்ட போது.. இந்த மகிழ்ச்சியை நிலைக்க விடாமல்.. தன்னால் அவரிடமிருந்து அவளைப் பிரித்துக் கூட்டிச் செல்ல முடியுமா என்று ஐயம் கொண்டான்.

அவர் கேட்டுக் கொண்டதைப் போல் ஹோட்டலைத் தான் எடுத்து நடத்துவது ஒத்து வருமா என்று கூட யோசித்தான். காரணம்.. அவனிடம் விடாது புலம்பும் புகழேந்தி ஒரு புறம்! நான்கு நாட்களாக அவனருகில் கூட வராமல்.. கோப முகத்துடனே வலம் வரும் ஜமுனா ஒருபுறம்!

**அ**றைக்குள் அமர்ந்து கொண்டுக் கையிலிருந்தத் துணிகளை மடித்தபடி முசுட்டு முகத்துடனிருந்த ஜமுனாவின் முன் சென்று நின்றான் வெற்றி.

“ஏய்ய்ய்” - வெற்றி

“என்ன?”

“பேச மாட்டியா?”

“என்ன பேசனும்?, நீ தான் என்னைய இங்கயே இரு, நானும் என் புள்ளையும் மட்டும் ஊருக்குப் போறோம்ன்னு ஒதுக்கி விட்டுட்டியே” - கோபத்துடன் கேட்டபடித் துணிகளை அசுர வேகத்தில் மடித்துக் கொண்டிருந்தவளிடம்..

“கோவப்படாத டி! ரொம்ப அழகா வேற இருந்துத் தொலைக்குற!” - என்றான்.

நிமிர்ந்து கேவலமாய் ஒரு பார்வையைச் செலுத்தினாள் அவள்.

“அப்புறம் ஏடாகூடமா ஏதாவது பண்ணனும்ன்னு தோணும். நம்ம வீடு மாதிரி இல்ல! இங்க எந்நேரமும் ரெண்டு பெருசுங்க வேற இருக்குங்க!”

“ஓஹோஓஓ! அப்டின்னா.. நீ இங்க இருக்க மாட்டேன்னு சொல்றதுக்கு இது தான் காரணமா?”

“இது.........வும் தான்”

“அடச் சை! நாதாரி”

“என்ன ச்சை?, நமக்கு ரொமான்ஸ் பண்ண பெஸ்ட் ப்ளேஸ்-ஏ கிட்சன் தான்! ஆனா இங்க நீயோ,நானோ கிட்சன்-க்குள்ள எண்டர் ஆக வேண்டிய அவசியமே இருக்காது. ஏன்னா.. எங்கப்பனோ, புகழ் மாமாவோ தான் சமைப்பாங்க”

“ஹேய்.. உங்கப்பா சமைப்பாரா டா?”

“ம்ம்ம்ம், சமைக்கத் தெரியாமலா ஹோட்டல் தொழில் நடத்துறான்?, தள்ளு வண்டில இட்லி,தோசை சுட்டு வித்து இந்தத் தொழிலை ஆரம்பிச்சவன் அந்தாளு”

“ஹ்ம்ம், அப்டில்லாம் கஷ்டப்பட்டு என்ன பிரயோஜனம்?, வளர்ந்து நிற்குறத் தொழிலைக் கட்டிக் காப்பாத்த ஆள் இல்ல அவருக்கு! பாவம்”

“எங்க சுத்துனாலும் ஏன் டி அங்கயே வர்ற?”

“இதோ பாரு, உனக்கு என் கூடப் பேசப் பிடிக்கலேன்னா... வெளிய போ! சும்மா இருக்கிறவக் கிட்ட வம்பு பண்ணிக்கிட்டு” - எரிச்சலுடன் மொழிந்து விட்டுத் திரும்பி அமர்ந்தவளை ஒரு நொடி முறைத்துப் பின்.. அவள் மடியிலிருந்தத் துணிகளையெல்லாம் தள்ளி விட்டு.. கட்டிலில் ஏறி.. அவள் மடியில் முகம் புதைத்து.. இடையைக் கட்டிக் கொண்டான் அவன்.

அவன் செயலில் வியந்து “ஏய்ய்ய் இன்னாடா?” என்று விசாரித்தாள் ஜமுனா.

“ப்ச், எனக்கு ஒரே குழப்பமா இருக்கு டி”

“என்ன குழப்பம்?”

“வாட்ட,சாட்டமா இருந்த மனுஷன் இப்டி ஓய்ஞ்சு,ஒடிஞ்சு போய் இருக்கிறதைப் பார்க்கக் கொஞ்சம் பாவமாத் தான் இருக்கு. ஆனா.. அவர் கேக்குறதைச் செய்ய மனசு வர மாட்டேங்குதே டி”

“இதுக்குப் பேரு தான் ஈகோ”

“ஏய்ய்ய்”

“இல்ல,இல்ல! டேய்... வெற்றி.. நீ என்ன மாதிரி மனநிலைல இருக்கன்னு எனக்குப் புரியுது டா! நீ தாலி கட்டுனதும்.. உடனே சேர்ந்து வாழனும்ன்னு சொன்னப்ப, எனக்கும் இப்டித் தான் இருந்தது! இவன் சொன்னா.. நாம தலையாட்டிடனுமான்னு!”

“ஏய், எதை எதோட டி கம்பேர் பண்ற?”

“எல்லாம் ஒன்னு தான்! ஈகோ-ன்னு சொல்லிட முடியாது! நம்மளக் காயப்படுத்துனவங்களுக்கு எந்த வலியையும் திருப்பிக் கொடுக்க முடியாம.. உடனே அவங்க விருப்பத்துக்குத் தலையாட்டிட்றதான்னு வர்ற... ஒரு மாதிரியானப் பிடிவாதம்! புரியுது எனக்கு.....”

“...............”

“ஆனா.. வெற்றி! அவர் தாஷி கூட பாசமா இருக்குறதைப் பார்க்கும் போது.. அவர் கொஞ்சம் நல்லவரோன்னு தோணுதுடா”

“அந்தாளு நல்லவரோ,கெட்டவரோ.. அது எனக்கு அநாவசியம்”

“சரி, நீ அவரைப் பத்தி நினைக்க வேண்டாம். தாஷியைப் பத்தி யோசி. இங்க இருந்தா சதாசிவம் அய்யா,சரோஜா பாட்டி, புகழ் தாத்தா, கதிர் மாமா,மாலதி அத்தை, செல்வி சித்தின்னு ஏகப்பட்ட சொந்தங்களோட வளரும் டா நம்ம பாப்பா! அங்க நாம ரெண்டு பேரைத் தவிர யார் இருக்கா?, உங்கப்பா தாஷியை மிஸ் பண்றாரோ இல்லையோ.. நாம அங்க போனதும்.. தாஷி இந்த சூழ்நிலையை ரொம்ப மிஸ் பண்ணுவா டா! வந்து ஒரு வாரமாச்சு. ஒரு வேளை சாப்பாடு கூட நான் ஊட்டல. புகழ் மாமா, சரோம்மா தான் மாத்தி,மாத்தி ஊட்றாங்க! அவ இந்த ஒரு வாரமா.. உன்னையும், என்னையும் எதுக்குமே எதிர்பார்க்கக் கூட இல்ல! பட்டாம்பூச்சியாட்டம் சுத்திட்டிருக்கா”

“………………..”

“யோசி டா வெற்றி! பாப்பாவுக்காக ப்ளீஸ்”

**ஜ**முனா கூறியதற்காக மட்டுமன்றித் தனக்காகவும் கூட தந்தையின் ஹோட்டல் தொழிலை எடுத்து நடத்த முடிவு செய்தான் வெற்றி. ஓய்ந்து போயிருப்பவரைக் கண்ணால் கண்ட பிறகு, இவர் எப்படிப் போனால் எனக்கென்னவென்று.. கிளம்பிப் போய் விட முடியுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. எங்கிருந்தாலும் மனதின் மூலையில் உறுத்திக் கொண்டேயிருக்கும். அவர் தான் மகனுக்கான கடமையைச் செய்யாது போனார். அவனேனும் தந்தைக்கானக் கடமையைச் செய்யட்டுமே! யாருக்கு என்ன பாதகம் வந்து விடப் போகிறது! சொல்லப் போனால் புண்ணியம் தான்!

முடிவு செய்ததை அவன் ஜமுனாவிடம் தெரிவிக்க.. அவள் மகிழ்ச்சியுடன் அவனது தந்தை மற்றும் புகழேந்தியிடம் விசயத்தைப் பகிர்ந்து கொண்டாள். வெளிப்படையாக சந்தோஷத்தைக் காட்டா விட்டாலும்.. சதாசிவத்திற்கு ஏகக் குஷியென்பது.. அவர் தாஷியை அழைத்துக் கொண்டு வாக்கிங் செல்வதிலேயேத் தெரிந்தது.

அதன் பின் இருவரும் ஒருமுறை வேலூர் சென்று தங்களது வேலையை ராஜினாமா செய்தனர். தாஷியின் பள்ளியும் சென்னைக்கு மாற்றப்பட்டது.

‘முதலியார்’ மெஸ்ஸின் மூன்று ப்ராஞ்ச்களையும் சமாளிக்கக் கதிரையும் தன் உடன் தொழிலில் இழுத்துக் கொண்டான் வெற்றி. மாலதியின் அன்னையை முடித்துக் கட்டுவது எப்படி - என யோசித்தபடியே மூன்று வேளை தின்று,தூங்கித் தெண்டமாகத் திரிந்தவனைத் தன்னுடன் தொழிலில் சேர்த்திருந்தான்.

வெற்றியின் முடிவில் சதாசிவத்தை விட புகழேந்திக்குத் தான் ஏக மகிழ்ச்சி! அவனதுத் திறமையை சிறு வயதிலிருந்துக் கண்டவராயிற்றே! புதிது,புதிதாக ஏதேனும் செய்து நிச்சயம் தொழிலை மேம்படுத்துவான் என்று நம்பிக்கையிருந்தது அவருக்கு.

அடுத்த சில மாதங்களில் ஜமுனாவும் வேலைக்குச் சேர்ந்திருந்தாள். பாடம் சொல்லிக் கொடுக்கும் போது மட்டும் தான் தாஷி அவளருகே வருவாள். மற்றபடி உண்பது, உறங்குவது, விளையாடுவது அத்தனையும் சரோஜாவிடமும்,சதாசிவத்திடமும் தான்!

இத்தனை வருடங்களாக.. வேலூரிலிருந்த வரை குடும்பம்,குழந்தையாக மூவரும் ஒவ்வொரு நாட்களையும் மகிழ்ச்சியாகக் கடத்தியிருந்தனர் தான். ஆனால்.. உறவும்,சுற்றமும் நிறைந்த இந்தச் சூழல் கொடுக்கும் திருப்தியென்பது.. அங்கிருந்த போது கிடைத்த மகிழ்ச்சியை விடப் பன்மடங்கானது.

தான் பிறந்து வளர்ந்த இடத்தில்.. தன்னைச் சார்ந்த உறவுகளுடன் மறுபடி ஒன்றாக இணைந்தது.. இருவருக்கும் அளவிட முடியாத நிம்மதியைக் கொடுத்தது. சேர வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டதைப் போல் திருப்தியாய் உணர்ந்தனர். அவர்களது எண்ணம் போல் வாழ்க்கை மிக மிக அழகானதாக மாறியிருந்தது.

**ச**ரியாக மூன்று மாதத்திற்குப் பிறகு... அன்றிரவு அவர்களது வீட்டு மொட்டைமாடியில் கையில் பால் தம்ளருடன் நின்றிருந்தான் வெற்றி.

“சாரி டா! பாப்பா தூங்க லேட் பண்ணிட்டா” - என்றபடியே மூச்சு வாங்கப் படியேறி வந்த ஜமுனாவிடம் ஒரு பால் தம்ளரைத் திணித்து விட்டு...

“மெதுவா வர வேண்டியது தான?, எதுக்கு இவ்ளோ அவசரம்” என்றான் வெற்றி.

“நீ திட்டுனேனா??”

“ஆமா, நீ எனக்கு ரொம்பப் பயப்படுறவ தான்!”

கண்டு கொள்ளாமல் பாலை உறிஞ்சினாள் ஜமுனா.

“ஆனா ஒன்னு டா வெற்றி.. உங்கப்பா உன்னை விட பெரிய சமையல்காரர் டா! மனுஷன் இந்த பாதாம் பால்ல அப்டி என்ன சீக்ரெட் இன்க்ரிடியண்ட் போட்றாரோ தெரியல”

“ஆமா, நீ தான் பாராட்டிக்கனும்”

“டேய், உனக்குப் பொறாமை டா! நேத்து கொத்துப் பரோட்டா போட்டாரு பாரு!, கிட்சன்ல அவர் பக்கத்துலயே உட்கார்ந்து சுடச்சுட வாங்கி சாப்ட்டோம் நானும் தாஷியும். தெரியுமா?”

“ஹ்ம்ம், இப்டியே அடுத்தவன் சமைக்கிறதை வாங்கித் தின்னே காலத்தை ஓட்டு! ஏன் டி, நீ எப்ப தான் டி சமையல் கத்துப்ப?”

“நான் ஏன் டா கத்துக்கனும்?, அப்புறம் நீ எதுக்கு இருக்க இந்த வீட்ல?, ஆனாலும்.. வெற்றி.. உன் முட்டை தோசையை ரொம்ப மிஸ் பண்றேன் டா”

“வுடு, வுடு.. நாளைக்கு நான் சமையல்கட்டுல இறங்குறேன்! எங்கப்பனை விட நான் தான் பெரிய குக்-ன்னு உன்-ட்டப் பேர் வாங்குறேன்”

“ஹாஹாஹா.. அப்டின்னா.. நான் சொன்ன மாதிரி உனக்குப் பொறாமை தான் போல, என் ராசாஆஆஆஆ” - அவன் கன்னம் பற்றிக் கொஞ்சியவளின் கையைப் பற்றித் தடுத்து.. அவளை மேலும்,கீழும் நோக்கியவன்...

“சேலை கட்டிட்டு வா-ன்னு சொன்னேன்ல? என்றான்.

“ச்சி! இங்க வைச்சா?, போடாங்.....”

“ஏன்?, மொட்டை மாடி,குளுகுளுக் காத்து! இந்த சிச்சுவேஷனுக்கு என்ன டி குறை?”

“ம்ம், அக்கம்பக்கத்துல இருக்கிறவனுக்கு ஃப்ரீ ஷோ காட்ட சொல்றியா? போடா”

“ஹ்ம்ம்ம், தாலியைக் கழட்டிட்டேன்னு ஏமாத்தி அன்னிக்கு என்னை நீ மழைல நனைய விட்டப்போ.. வாசல்ல வைச்சுப் போட்டோமே ஒரு கிஸ்ஸூ! அதெல்லாம் உனக்குத் தப்பா தெரியலயாடி?? ஆனாலும்..... இப்போ-ல்லாம் நீ ரொம்பப் பண்ணிக்கிறடி! அர்த்தராத்திரில அடிச்சு எழுப்புனாலும்.. அசையவே மாட்டேங்குற”

“வாயை மூடு டா”

“ஏய்ய் கடைசியாக் கேக்குறேன் உன்னால இன்னிக்கு முடியுமா முடியாதா?”

-எரிச்சலுடன் அவன் கத்திக் கொண்டிருக்கையில் “ஹே.. அங்க பாரு... கதிரும்,மாலதியும்” என்று கைக் காட்டினாள் ஜமுனா.

“ஹாஹாஹா.. இவனுங்க சேட்டு வூட்டு மாடில குஜால் பண்றதை இன்னுமா வுடல?” - நக்கல் குரலில் சிரித்துக் கொண்டிருந்தவளிடம்..

“அவங்களும் நம்மள மாதிரி சும்மா காத்து வாங்க வந்திருப்பாங்கடி” என்றான் வெற்றி.

“நாம?? காத்து வாங்க???”

“ம்ம்ம்” - என்றபடி அவள் விரல்களைப் பற்றியவனின் தலையில் கொட்டி வைத்து..

“அப்புறம் எதுக்கு டா பாய்,தலகாணியெல்லாம் போட்டு வைச்சிருக்க?” என்றாள்.

“ஏய்ய் நீ வர்றதுக்கு முன்னாடி வரைக்கும் மனசுல எந்த நினைப்பும் இல்லடி!, எங்கப்பன் பாதாம்பால்ல என்னத்தக் கலந்தானோ! எக்குத்தப்பாத் தோணுது” - தலையை உலுக்கிக் கொண்டவனைக் கண்டு அவள் கலகலவென சிரிக்கும் சமயம்..

“வெட்றிறிறிறிறிறி.....” என சன்னக்குரலில் அழைத்துக் கொண்டுத் தன் டெடி பியருடன் மேலே வந்தாள் தாஷி.

“ஏய்ய்ய் கஷ்டப்பட்டுத் தூங்க வைச்சுட்டு வந்தா.. நீ என்னடி அதுக்குள்ள எழுந்துட்ட?”-ஜமுனா

“ஏய், புள்ளயைத் திட்டாதடி!” என்று மனைவியை அதட்டியவன் “நீங்க வாங்க மீ...” எனக் கூறி அவளைத் தூக்கியதும்.. “அவ ஒன்னும் தூங்க வைக்கல! நானா தான் தூங்குனேன்” என்று அன்னையைப் பற்றிக் குறை கூறினாள் தாஷி.

“ஏன் டி நான் அரை மணி நேரமாக் கதை சொல்லி, உன்னைத் தட்டிக் கொடுக்கல?” - மீண்டும் கத்தத் துவங்கிய ஜமுனாவைத் தடுத்து “ஓகே! ஓகே! சண்டை வேண்டாம்! பாப்பாவும்,ஜம்முவும் சமாதானம்! ஓகே?” என்ற வெற்றி “வாங்க,வாங்க க்ரூப் ஹக் பண்ணிக்கலாம்” என்றதும் இருவரும் அவனருகே நெருங்கி.. கைகளை ஒருவர் மீது ஒருவர் போட்டுக் கட்டிக் கொண்டனர்.

அதன் பின்பு தாஷியைத் தன் நெஞ்சில் போட்டுக் கொண்டு.. அவள் தலை கோதியபடியே சாய்ந்து படுத்து விட்டான் வெற்றி. “கண்ணே... கலைமானே....” எனப் பாட்டு வேறு!

“கர்ணகொடூரமா இருக்கு. தயவு செஞ்சு பாடாதடா ப்ளீஸ்ஸ்ஸ்” - கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சியபடி அவனருகே சாய்ந்தவளைக் கண்டுச் சிரித்துக் கொண்டே கத்திப் பாடினான் அவன்.

சிறிது நேரத்திலேயே தாஷி தூங்கிப் போக.. அவளைச் சரியாகப் படுக்க வைத்து விட்டு.. மனைவியின் தோளைப் பற்றித் திருப்பியவன்.. “ஸ்டார்ட் பண்ணலாமா?” எனக் கேட்டபடி அவள் அருகே சரிய...

“வெய்ட் வெய்ட்” என நிறுத்திய ஜமுனா.. “ஆக்சுவலி எனக்கு ஒரு சந்தேகம் இருக்குடா” என்றாள்.

“என்ன சந்தேகம்?”

“எனக்கு இப்போ-ல்லாம் நிறையத் தூக்கம் வருது. காலைல கா∴பி குடிச்சா வாமிட் வேற! க்ளாஸ் எடுத்துட்டிருக்கும் போது.. அப்பப்போ தலை சுத்துற மாதிரியான ∴பீல் வேற!” என்றவள்.. வாயையும்,கண்ணையும் பெரிதாக விரித்துத் தான் அடுத்து சொல்லப் போகும் வார்த்தைக்காகக் காத்திருந்த வெற்றியிடம்.. “ஒருவேளை இது... அதுவா இருக்குமோ??” எனக் கண்ணைச் சுருக்கிய சமயம்....

“எ....என்னடி சொல்ற????????”- எனச் சந்தோசத்தில் பரபரத்தபடியேத் தன் மனைவியின் கை விரல்களை இறுகப் பற்றிய வெற்றிக்குத் தலை,கால் புரியவில்லை.

**நீயில்லையே... இனி நானில்லையே.... உயிர் நீயே!!**

**நீ பாதி.. நான் பாதி கண்ணே!**

-இணைந்திருப்பார் இளையராஜா! இன்றும்! என்றும்! எப்பொழுதும்! நாம் வாழும் காலம் முழுமைக்கும்!

**மகிழ்ச்சியும்,நிம்மதியுமாய் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மூவரையும் (soon to be 4) காண்கையில் நம் முகத்தில் தோன்றும் புன்னகை, இந்த அகண்ட வானில்.. எங்கோ ஓர் மூலையில்... நிலையற்று நின்று.. ஏக்கமாய் இப்புவியை நோக்கிக் கொண்டிருக்கும் அந்த இரு ஜீவன்களின் முகத்திலும் நிச்சயம் தோன்றியிருக்கும் என்கிற நம்பிக்கையோடு நாமும் விடைபெறுவோம்!**